# அம்மா பிள்ளை



சிவசங்கரி

# பதிப்புரை

உறவால் ஏற்படும் பாசங்களில் தாய்ப்பாசமே தலை சிறந்தது. இப்பாசத்தின் காரணத்தால் மகன் செய்யும் தவறுகளைக்கூட தாய் எண்ணியே பார்ப்பதில்லை. சில சமயங்களில் இந்த தவறுகள், அவள் இதயத்தில் இன்ப உணர்வைக்கூட சுரக்கச் செய்கின்றன.

இவ்வாறு வளர்க்கப்படும் மைந்தன் பிற் காலத்தில் தன் மனம் போனவாறெல்லாம் நடக்கத் துணிகிறான். இதற்குத் தன் தாயையும் உடந்தை யாக்கிக் கொள்கிறான். தன் மகனின் தவறான போக்கிற்கு அனுசரணையாக இருக்கும் அவள், அதனால் ஏற்படும் விபரீதங்களை உணரும் போது தான் அவளுக்கு விழிப்பு ஏற்படுகிறது. காலம் கடந்து ஏற்படும் விழிப்பால் என்ன பயன்? சக்தியற்ற அந்த நிலையில் தன் குடும்பத்தின் பின்னர் தோன்றும் சந்ததியாவது நல்ல முறையில் வளர்க்கப் பட்டு, வாழ்வில் நலம் பெற வேண்டும் என அவள் விரும்புகிறாள். இந்நாவலின் கருவூலமாக இக்கருத்துக்களே அமைந்துள்ளன.

ரங்கம்மாளும் அவள் மகன் ராஜாவும் நம் கண்முன் உலவி வரும் உயிர்ச் சித்திரங்கள். வாழ்க்கையில இத்தகைய பாத்திரங்களை நாம் சந்திக்கிறோம். நாவலாசிரியை சிவசங்கரி அவர்கள் தாய்ப்பாசத்தின் முரண்பட்ட போக்கால் ஏற்படும் விபரீதங்களை இந்நாவலில் படம் பிடித்துக் காட்டுகிறார். குழந்தைகளை வளர்க்கும் போது அவர்கள் செய்யும் தவறுகளை, தாய்ப் பாசத்தை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு அத் தவறுகளைத் திருத்துவதில் ஒரு தாய் உன்னிப்பாகவும் கண்டிப்புடனும் இருக்க வேண்டும் என்பதை இந்நாவல் வலியுறுத்துகிறது.

இந்தச் சிறந்த நாவலை வெளியிட இசைவு தந்த சிவசங்கரி அவர்களுக்கு அன்பு கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கங்கை புத்தக நிலையத்தார்.

16966
329350

# அம்மா பிள்ளை

## 1

"டே யாருடா அங்க?"

பூஜை அறையிலிருந்து வெளியே வந்து, கழுத்தில் கசகசத்த வியர்வையை புடவைத் தலைப்பால் துடைத்தவாறு கூடத்து நாற்காலியில் வந்தமர்ந்த ரங்கம்மா இரண்டாவது தரம் குரல் கொடுப்பதற்குள் ஏழுமலை கக்கத்தில் துண்டை இடுக்கிக் கொண்டு ஓடி வந்தான்.

இரண்டு கைகளையும் மார்பிற்குக் கீழ் மடித்து, அடக்கத்துடன் அவள் முன் நின்று "அம்மா" என்றான்.

இப்படி பவ்யமாக நிற்காது, தோளில் தொங்கும் துண்டுடனும், நிமிர்ந்த பார்வையுமாய் அவன் ரங்கம்மாவின் கண்களில் பட்டுவிட்டால், போயிற்று. அன்றைக்கு அவனுக்குக் கிட்டத்தட்ட சீட்டுக் கிழிந்த மாதிரிதான்...

"என்னடா... இன்னு இன்னு உடம்புல கொழுப்பு ஏறிப்போச்சா? பெரியவங்க முன்னால நிக்கறோமே, அடக்க ஒடுக்கமா இருப்பம்ன்ற நினைப்பு இல்லாம என்னடா மரம் மாதிரி நிக்கறே? அதென்னடா மரியாதை இல்லாம, அப்படியொரு சிரிப்பு? ம்? உங்கப்பன் தாத்தன் எல்லாம் எங்க எதிர்ல

வரவே தயங்குவாங்க.. 'டே'ன்னு குரல் கொடுத்தா மின்னல் கணக்கா வந்து, கை கட்டி வாய் பொத்தி நிழல் மாதிரி பின்னால நின்னுகிட்டு, நாம சொல்றத தலையால நிறைவேத்தக் காத்திட்டிருப்பாங்க... நீ என்னடான்னா கண்டவன் பேச்சை கேட்டுக்கிட்டு தறுதலையா திரியறே... நாலு வார்த்தை படிச்சிட்டோம்னு திமிருடா உனக்கு... அதானே? அந்தப் படிப்பக் கொடுத்ததும் எம் பணம்தான், இப்படி உலக்கையாட்டம் உன் உடம்ப வளர்த்திருக்கறதும் எம் பணம்தான்... நினைப்புல வச்சுக்க... உன்னைச் சொல்லிக் குத்தம் இல்லேடா... எங்க பணத்துக்கு அப்படியொரு ராசி... ஹாம்... சோறு போடறவங்களை மதிக்கத் தெரியாத நீங்கள்ளாம் எங்க உருப்படப் போறீங்க? ஒழி... என் கண் முன்னால நிக்காம தொலைஞ்சிப்போ ..''

எங்கேயோ ஆரம்பித்து,எங்கேயோ முடிப்பாள். கூடயார் யார் நிற்கிறார்கள் என்கிற அக்கறை துளி இல்லாமல், என்னமோ பண்ணக்கூடாத மாபாதகத்தைச் செய்துவிட்ட மாதிரி வாயில் வந்ததைச் சொல்லி ஏசுவாள்...

ஏழுமலை என்று இல்லை, வீட்டில் இருக்கும் சமையல்காரர், இதர வேலைக்காரர்கள், பண்ணை ஆட்கள் யாரானாலும் சரி, இவள் கூப்பிட்டதும், ஏன் என்றதும் என்னவாக உடனே வந்து நிற்காமலோ, அல்லது ''எதுக்குங்க?'' என்று எதிர் கேள்வி கேட்டுவிட்டாலோ, தீர்ந்தது, அன்றைக்கு அவர்களை உண்டு இல்லை என்று ஆக்கிவிட்டுதான் ரங்கம்மா மறுவேலை பார்ப்பாள்.

அதுதான் ரங்கம்மாளின் குணம்.

அவளுக்கு இருப்பது நாக்கு இல்லை, சவுக்கு...

பிறந்ததிலிருந்து இன்றுவரை கழுத்துவரை பணம் காசில் மூழ்கிக் குளிக்கும் திமிரோ, இல்லை, தட்டிக் கேட்க ஆள் இல்லாமல் தனிக்காட்டு ராணியாக வளைய வரும்



துணிச்சலோ, அதுவும் இல்லை என்றால் பண்ணையையும், இதர பொறுப்புகளையும் தானே ஒண்டிப் பெண் பிள்ளையாய் திறம்பட நிர்வகிக்கும் கர்வமோ—ஏதோ ஒன்று... மொத்தத்தில் அவள் அந்த வீட்டுக்கு மட்டுமல்ல, தெருவுக்கே ஏன், அந்த எடையாளம், கிராமத்துக்கே எஜமானியாக இருந்து வருவது என்னமோ உண்மைதான்...

ரங்கம்மா வருகிறாள் என்றால் வயசானவர்கள் கூட முடிந்ததோ முடியவில்லையோ எழுந்து நிற்பார்கள், அழுத பிள்ளை கப்பென்று வாய் மூடும், அத்தனை கெடுபிடி.

நாற்காலியில் அமர்ந்து... கண்ணாடியைக் கழற்றி துடைத்து மீண்டும் மாட்டிக் கொண்ட ரங்கம்மா ஏழுமலையை ஏறிட்டாள்.

''சுப்பையாவ வரச் சொல்லி இருந்தமே வந்திட்டாரா?''

''வந்து அரைமணி ஆச்சுங்க...''

''ம்ம்... கணக்குப்பிள்ளைய கரும்புத் தோட்டத்து கணக்குப் புஸ்தகங்கள எடுத்துக்கிட்டு வாசலுக்கு வரச் சொல்லு.''

''சரிங்க''

திரும்பியவனை ரங்கம்மா அழைத்தாள்.

''டே... எரு மூட்டை எடுக்க பைரவன் வரேன்னு சொல்லி இருந்தானே வந்து எடுத்திட்டுப் போயிட்டானா?''

''இன்னும் இல்லீங்க''

''ரங்கம்மாவின் முகத்தில் சட்டென்று கோபம் வெளிச்சம் போட்டது.

''வரலியா?... மணி எட்டாகப் போகுது... விடிகாலை வந்து எடுத்துட்டுப் போனாதானே, வெயில் உச்சிக்கு

வர்றதுக்கு முன்னால மளமளனு வேலை ஆகும்? கத்தரில பிஞ்சு இறங்கிடுச்சு... நேத்தே செஞ்சிருக்க வேண்டிய காரியத்த இன்னிக்கும் செய்யாட்டிப் போனா என்ன அர்த்தம்? அவன் மனசுல என்னதான் நினைச்சிட்டு இருக்கான்? ம்? திமிர் பிடிச்ச கழுதை... வரட்டும் பேசிக்கிறேன்..."

"இல்லீங்க... வந்து..."

"என்னடா வந்து... போயி?"

"காலைல வேலைக்கு வந்தப்ப மாணிக்கம் சொன்னான் 'பைரவனோட சம்சாரத்துக்கு பிரசவ வலி கண்டிடுச்சுனு'... ஒரு வேளை அவனை கூட்டிகினு ஆஸ்பத்திரிக்கு..."

அவன் முடிக்கும் முன் ரங்கம்மா பாய்ந்தாள்.

"ஆமாடா... இவன் சம்சாரம்தான் உலகத்துல இல்லாத அதிசயமா பிள்ளை பெறப் போறா... இவன் இப்படி தலைல வச்சிகிட்டு கூத்தாட்றத்துக்கு... அவளுக்கு வலி எடுத்தா, இவனுக்கு என்னடா? பொண்டாட்டி தலைப்ப புடிச்சுகிட்டு திரிஞ்சா, சோறு தன்னால வீட்டுல பொங்கிடுமா?... இவங்கள எல்லாம் வெக்கற எடத்துல வெக்கணும் அப்பத்தான் ஒழுங்கா இருப்பானுங்க... நீ என்ன பண்றே, சுப்பிரமணிய கூட்டிக்க... ரெண்டு மூட்டை காம்ப்ளெக்ஸ் உரத்தை எடுத்துக்கிட்டு கத்தரி தோட்டத்துக்குப் போங்க... அங்க முனுசாமி கிழவன் இருப்பான்... சுப்ரமணியும் அவனுமாகூட நாலு ஆளுங்கள வச்சுகிட்டு உரத்தவச்சு முடிக்கட்டும். நீ முனுசாமி கிட்ட வெவரத்த சொல்லிட்டுப் போனமா, வந்தமானு வந்து சேரு... என்ன?"

"சரிங்க..."

"ஒடு நிக்காத... போறப்ப பெருமாளு கிட்ட எனக்கு காபி கொண்டாரச் சொல்லிட்டுப் போ..."



அவன் பின்கட்டுக்குச் சென்றதும் அறையை பெருக்கிக் கொண்டிருந்த வேலைக்காரியை ரங்கம்மா விரட்டினாள்.

"என்னடீ பண்றே கால் மணியா! பேச்சு கேட்டுகிட்டு நிக்கறத விட்டுட்டு வணங்கி காரியத்தப் பண்ணு... தம்பி, 'ரூமெல்லாம் ஒரே தூசி'னு நேத்து கத்திட்டு இருந்தான்... மருமகள கூட நிக்கச் சொல்லிட்டு மத்தியானமா அறைய தட்டிப் பெருக்கி மெழுகு-என்ன? ஆமா-நாலு நாளாவே சட்டி சட்டியா சோறும், குழம்பும், கேட்டு வாங்கி வீட்டுக்கு எடுத்திட்டுப் போறியாமே... என்னடீ இது! புருஷன் இல்லாத குடும்பத்த கஷ்டப்பட்டு நா காபந்து பண்ணிட்டு வர்றது உனக்குப் பிடிக்கலையா? நின்னே இவளை ஒரு வழி பண்ணிடுவம்னு தீர்மானிச்சிட்டியா?"

துடைப்பத்தை பின்னால் மறைத்தபடி நிமிர்ந்த தனம் பதைத்தாள்.

"அய்யய்யோ... பெரிய பெரிய வார்த்தையா சொல்றீங்களேம்மா... நீங்க நல்லா இருந்தாத்தானே நாங்க அரை வயிறு கஞ்சியாவது குடிச்சிகிட்டு வாழ முடியும்... ரெண்டு நாளா எம் புருஷனுக்கு உடம்பு சொகமில்லே... வீட்டுல படுத்திட்டு இருக்கு... வாய் கசக்குது, கஞ்சி புடிக்கலைனு சொல்லிச்சு... எனக்கு இங்க குடுக்குற சோறு, குழம்ப நா சாப்பிடாம அதுங்கிட்ட கொண்டு கொடுக்கறேன்..."

"கஞ்சி புடிக்கலைனா, பொழுதோட எழுந்து சோறாக்கி வச்சிட்டு வர்றது... இல்லே வேலை முடிஞ்சு போனதும் வெக்கறது..."

"வெக்கலாம்தாங்க... ஆனா, ஒரு வாரமாவே இங்க வேலை ஜாஸ்தியா இருக்கு... காலைல சுருக்கல்ல வந்து வீட்டு வேலைங்களை செஞ்சிட்டு, அரிசி அரைச்சுப் போட்டிருக்கிறத கத்தும் டண்ணை உட்கார்ந்தா பொழுது சாய்ஞ்சிடுது வீட்டுக்குப் போவ-அதான்..."

ரங்கம்மா அலட்சியமாய் சூள் கொட்டினாள்...

"நாலு பொம்பளைங்க ஒரு வாரமா செய்யறீங்கனு பேரு. ஆனா, பத்து மூட்டை அரிசிய சுத்தம் பண்ற வேலை இன்னும் முடியல என்னடீ பொம்பளைங்க நீங்க?... நான் பூரா வெத்தலைய போட்டுக்கிட்டு, அரட்டை அடிச்சுக்கிட்டு இருந்தா வேலை வளராம என்ன செய்யும்? கைய நீட்டி காசு வாங்கறமேன்னு உடம்புல ஒரு பதைப்பு வேணாம்? அதெல்லாம் அந்தக் காலத்து ஆளுங்களோட போச்சு...சரி...சரி .. நிக்காத வேலையக் கவனி..."

தயங்கியபடி நின்ற தனம் "அம்மா..." என்று மெதுவாக அழைத்தாள்

"என்ன?"

"நொய் தரேன்னு சொன்னீங்க... இன்னிக்குத் தந்தா, காய்ச்சல் கண்டிருக்குற ஆம்பளைக்கு உங்க பேரச்சொல்லி பத்து நாள் நொய்க்கஞ்சி கொடுப்பேன்..."

ரங்கம்மா கண்களை இடுக்கிக் கொண்டாள்.

"கடைல நொய் என்னா வெல விக்கிதாம்?"

"தெரிலீங்க..."

"என்ன வெலனு விசாரிச்சிட்டு வா... அதுக்கு கிலோவுக்கு நாலணா கொறச்சலாவே நா தரேன்... என்ன?"

"......"

எதிர்பார்ப்போடு நின்றிருந்தவள் முகம் ஏமாற்றத்தில் சூம்பிப் போனதை புரிந்துகொள்ள முடிய ரங்கம்மா அதட்டினாள்

"என்னடீ பதிலைக் காணோம்... வேலைக்குக் கொடுக்காம இனாமா அள்ளிவிட இங்க தோட்டத்துலியா பணம் காய்க்குது? உன் வேலைக்குச் சம்பளம் சாப்பாடு



போட்டுத்தறோம் இல்லே? அப்பால என்ன? இன்னிக்கு உனக்குக் கொடுத்தா நாளைக்கு இன்னும் பத்து பேர் கை நீட்டுவாங்க... எல்லாருக்கும் வாரி விட்டுவிட்டு நாங்க வயத்துல ஈரத்துணி போட்டுகிட்டு நிக்க முடியுமா? சொல்லு?"

விழிகளில் கசிந்த நீரை அடக்கிக் கொண்டு பதில் கூறாமல் தனம் குனிந்து பெருக்கத் துவங்க, முப்பது வருஷங்களாக ரங்கம்மாவின் அதட்டல், உருட்டல்களை லட்சியம் பண்ணாமல் சலையற்றாரராக இருக்கும் பெருமாள் காபியுடன் வந்து நின்றார்.

"என்னய்யா, புது எருமை இன்னிக்காவது ஒழுங்கா கறந்துச்சா?"

"கறந்ததுங்க மூணு லிட்டர்..."

காப்பியை ஆற்றிக் குடித்த ரங்கம்மா காலி டம்ளரை அவரிடமே நீட்டினாள்.

"வேளைக்குத் தப்பாம நாலு லிட்டர் கறக்கும்னு சொல்லி அந்தத் தங்கவேலு புரோக்கர் தலைல கட்டிட்டான... பத்துநாளு ஒழுங்கா கறந்தது... அப்புறம் பாதிநாளு கராறு... மீதி பாதி நாளு மூணைத் தாண்டறதில்லே... வர வர எல்லாரும் ஏமாத்தக் கத்துக்கிட்டாங்க... ஆமா, தம்பி எழுந்திட்டானா? எங்க, ஆனந்திய கண்ணுல காணோம்? பூஜை செய்யறப்ப வந்திடுவாளே... காலைல சாமி அறையக் கூட மங்கை பொண்ணுதானே மெழுகி கோலம் போட்டுக்கிட்டு இருந்தா, எங்க அவ?"

"தம்பி இன்னும் எழுந்துக்கலைங்க ... சின்னம்மா காலைல வந்து காபி சாப்பிட்டாங்க... அப்புறம் நானும் அவங்களைப் பாக்கல..."

ரங்கம்மாவுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

K

மருமகள் ஆனந்தி இந்த வீட்டுக்கு வந்துவிட்ட ஒன்னரை வருஷங்களில் தினமும் சரியாய் ஐந்தரை மணிக்கு எழுந்து விடுவாள்.

சாமி அறையைத் துடைத்து, கோலம் போட்டு, பால் கறந்து வாங்கி, ஆள் பறித்து வைக்கும் பூக்களை மாலையாகக் கட்டி குளிக்கச் செல்பவள், ரங்கம்மா பூஜை செய்யும் போது சந்தனம் அரைக்க, கற்பூரத் தட்டை எடுத்துக் கொடுக்க என்று தயாராய் பக்கத்திலேயே நிற்பாள்.

இன்று சாமி அறையில் அவளைக் காணோமே.

'வீட்டில்' இல்லையா?

இருக்காதே. 'விலகி' பத்து நாட்கள்தானே ஆகின்றன.

உடம்பு சரியில்லையோ?...

நேற்று இரவு பார்த்தபோது நன்றாகத்தானே இருந்தாள்?

முந்தின நாளை நினைத்த கணத்தில் இரவு இரண்டு மணிக்குப் பிள்ளை வீடு திரும்பியதும், போதை அதிகமாக இருந்ததில் வழக்கத்தைவிட தள்ளாட்டமாகக் காணப் பட்டதும், ஏதேதோ உளறியபடி நாற்காலி, ஸ்டூலை உதைத்து மனைவியை திட்டி அடிக்க முனைந்து, கலாட்டா பண்ணியவனை ஏழுமலை ஆனந்தி உதவியோடு அமுக்கிப் படுக்க வைத்ததும், ஞாபகத்துக்கு வந்தன...

நேற்று கலாட்டா அதிகம்தான்.

சரி, அதற்கு என்ன பண்ணுவது?

அவன் ஆம்பிளை... சின்ன வயசுக்காரன், பணம், இளமை, இருக்கும் எந்த வீட்டில்தான் இப்படி இல்லை?

இதைப் பெரிசு பண்ணலாமா?



அரை நிமிஷம் அப்படியே நின்று முந்தின இரவை அசைபோட்டு, வழக்கம்போல், ஒன்றுமே நடக்கவில்லை என்று தன்னைத்தானே சமாதானம் செய்துகொண்டு பெருமாளை அனுப்பிவிட்டு, வாசலில் காத்திருந்த குத்தகைக் காரர் சுப்பையாவை சந்திக்க ரங்கம்மா எழுந்தபோது, ஆனந்தி உள் அறையிலிருந்து வெளியே வந்தாள்.

"அட—என்னாச்சு உனக்கு, ஆளக் கண்ணுலேயே காணோம்! என்ன பண்ணிட்டு இருந்தே இத்தனை நேரமா அ?"

"..........."

"கேக்கறது காதுல விழல?"

ஆனந்தி மெதுவாகப் பார்வையை நிமிர்த்தி ரங்கம்மாளை அழுத்தமாக ஏறிட்டாள். பின் சின்னக் குரலில் பேசினாள்.

"பெட்டில துணிகள எடுத்து வச்சிட்டு இருந்தேன் அத்தே..."

"என்னத்துக்கு?"

"அப்பா வீட்டுக்குப் போக..."

ரங்கம்மா கண்களை விரித்து வியந்தாள்.

"திருவண்ணாமலைக்கா? திடும்னு இப்ப அங்க என்னா வச்சிருக்கு? என்னண்ட ஒரு வார்த்தை சொல்லாம என்னடீ திடீர் முடிவு இது? இப்பத்தானே மூணு மாசம் முன்னாலே போயி நாலு நாள் தங்கிட்டு வந்தே? சும்மா அங்கேயும், இங்கேயுமா வோலாட்டம் போட்டுக்கிட்டு இருந்தா குடும்பத்த ஒழுங்கா நடத்த முடியுமா?"

ஆனந்தி சில நொடிகளுக்கு மௌனித்து விட்டுப் பதில் கூறினாள்.

"இந்த முறை திரும்பி வர்றதா இல்லே அத்தே ..."

தெளிவாகக் காதில் விழுந்த வார்த்தைகளை நம்ப மாட்டாத அதிர்ச்சியுடன் "என்னது... என்னது?" என்று வினவிய வண்ணம் மருமகளை நெருங்கி அவள் தோளைப் பிடித்து ரங்கம்மா உலுக்கினபோது, அவள் குரல் ரொம்பவும் உரக்க ஒலித்தது.

## 2

நெல்லிக்குப்பத்தில் வசதியான குடும்பத்தில் பிறந்து வளர்ந்த ரங்கம்மா, எடையாளம் கிராமத்து மிராசு குடும்பத்தைச் சார்ந்த புருஷோத்தமனுக்கு கழுத்தை நீட்டி அவர்கள் இல்லத்து மருமகளாக வலது காலை எடுத்து வைத்தபோது அவளுக்கு வயசு பதினெட்டு.

புருஷோத்தமன் பிறவியிலேயே ரொம்ப சாதுவான மனிதர். ஒரு வருஷ காலத்திற்குள்ளேயே, புருஷனின் இந்தச் சாது குணமும், மற்றவர்கள் அதை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதையும், புரிந்து கொள்ள முடிய மெள்ள மெள்ள நிலபுல விவகாரங்களில் பொறுப்பை ரங்கம்மா ஏற்க ஆரம்பித்தாள்.

கல்யாணமான இரண்டாம் வருஷம் ரங்கம்மா—புருஷோத்தமனுக்கு தலைச்சன் மகளாக அமுதா பிறந்தாள். நல்ல சிகப்பு, தலை கொள்ளாமல் முடி, கறுப்பு திராட்சைப் பழங்களாகக் கண்கள்...

"எம்மகளுக்கென்ன... ராஜாத்தி... அழகுல ராணி... பணங்காசுக்கும் பஞ்சம் இல்ல... நாளைக்கு அவ வளர்ந்து ஆளாகறதுக்கு முன்னாலியே அவனவன் 'எனக்கு... எனக்கு'ன்னு க்யூல நிக்கப்போறான் பாருங்க..." என்று இறுமார்ந்து ரங்கம்மா பெருமை பேசியதைத் தகர்க்கிற



மாதிரி நாலாம் மாசம் திடுதிடுப்பென்று இரண்டே இரண்டு நாள் போன பேதியில் குழந்தை கண்களை மூடினாள்.

"முளைச்சு அரை இலை விடறத்துக்கு முன்னால கல்யாணத்தப்பத்தி என்ன இமிராப் பேசினா? அதான் ஆண்டவன் மண்டையிலே ஓங்கிப் போட்டுட்டான்" என்று ரங்கம்மாவுக்குப் பின்னால் எல்லாரும் ஏசினாலும், அவளின் பந்தாடிவிடும் ஸ்வபாவத்துக்கு பயந்து கொண்டு முகத்துக்கெதிரில் 'என்ன அநியாயம்டியம்மா இது!' என்று மூக்கைச் சிந்தி புலம்பினார்கள்.

மறு வருஷம் நீலகண்டன், அவனைத் தொடர்ந்து ஒன்னரை வருஷ இடைவெளியில் முத்துக்குமாரும் பிறந்துவிட, கொஞ்சம் அடங்கியிருந்த ரங்கம்மாவின் தற்பெருமை மீண்டும் தலை தூக்க ஆரம்பித்தது.

"எனக்கென்னடி குறைச்சல்? ராம, லக்ஷ்மணன் மாதிரி ரெண்டு பிள்ளைங்க...நாளைக்கு உட்கார வச்சு அம்மா அம்மானு தாங்கமாட்டாளுங்களா? எல்லாத்துக்கும் கொடுத்து வச்சிருக்கனும். ஆசைப்பட்டுட்டா மட்டும் ஆச்சா? என் பின்னால அவ அவ 'ஐயோ—புள்ளைங்களைப் பாரேன்'னு பொருமி தள்ளறது எனக்குத் தெரியும்தான்... அதுக்கு என்ன பண்ணறது—போன ஜன்மத்துல புண்ணியம் பண்ணி இருக்கேன் அனுபவிக்கிறேன். இவளுகளும் இப்ப செஞ்சிட்டு அடுத்த பிறவியில் அனுபவிக்கட்டுமே யார் தடுக்கறாங்க?"

ஓயாமல் பேசின ரங்கம்மாவின் வாயை மூடுவதற்காகவே நடந்த அந்த விபத்து மகா கோரமானது? எதிரிக்கும் கூட நடக்கக் கூடாதது...

மூத்தவனுக்குப் பத்தும், இளையவனுக்கு எட்டும் நடக்கையில், பள்ளியில் பாண்டிச்சேரிக்கு உல்லாசப் பயணம் கூட்டிப் போக, ரங்கம்மாவும் தன் பசங்களை 'பத்திரம் பத்திரம்' என்று பத்து தரம் எச்சரித்துவிட்டு அனுப்பினாள்...

ஆனால், என்ன எச்சரித்து என்ன?

கடற்கரையில் எல்லோரும் நீரில் இறங்கி அளைந்து விளையாடி இருக்கிறார்கள்.. நீலகண்டன் அளவுக்கு மீறின தைரியத்துடன் வாத்தியார் காணாத நிமிஷத்தில் சரசர வென்று பத்தடிகள் முன்னேற, சற்றும் எதிர்பாராமல் பிசாசாய் வந்த அலை அவனைத் தலை குப்புற கவிழ்த்து தன்னோடு இழுத்துக் கொண்டு போக, அண்ணன் நிலை குலைந்து ஆழத்துக்குப் போவதைப் பார்த்துவிட்டு தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்என்கிற பழமொழிக்கு ஏற்ப தம்பி முத்துக்குமார் ''அண்ணா'' என்று அலறியபடி யோசிக்காமல் பின்னோடு பாய—கண்மூடித் திறக்கும் நாழிகையில் இரண்டு பசங்களும் பொங்கி ஆர்ப்பரித்த கடலுக்குப் பலியானதுதானே கடைசியில் நடந்தது?

'போய்விட்டு வரோம்மா' என்று லட்சணமாய் விடை பெற்றுக் கொண்டு போன பிள்ளைகள் கடலோடு போய் விட்டார்கள் என்று கேள்விப்பட்டதும் மயங்கி விழுந்து, பின் அலறி அடித்துக் கொண்டு பாண்டிச்சேரிக்கு வந்து, சாயங்காலம் ஒரு பிணமும் மறுநாள் காலை இன்னொரு பிணமும் கரையில் ஒதுங்கினதும் அவைகளோடு வேனில் ரங்கம்மா எடையாளத்துக்கு வந்த இறங்கினபோது அவளுடைய காட்டமான பேச்சையும் பீற்றல்களையும் மறந்து, கிராமமே அவளுக்காக அழவே செய்தது.

பின்னே?

மனிதராகப் பிறந்த எவராலும் தாங்கக்கூடிய துக்கமா அது?

அடுத்து வந்த வருஷங்களில் ரங்கம்மா கொஞ்சம் மாறித்தான் போனாள். தொடர்ந்து இரண்டு குறைப் பிரசவங்கள் ஆகி, ''இன்னும் ஒரு வருஷத்துக்காவது நீங்க உண்டாகாம இருக்கறது நல்லது'' என்று வைத்தியர்

K



கூறின பிறகு, வெளியில் வாசலில் வர கூச்சப்பட்டவள் மாதிரி அதிகம் வீட்டுக்குள்ளேயே இருக்க முற்பட்டாள்...

ஒரு வருஷம் இரண்டாகி, மூன்றாவதைத் தொட்ட போது வாரிசே இல்லாமல் போய்விடுமோ என்கிற பயம் எழ, கணவனை கூட்டிக் கொண்டு சென்னைக்கு வந்து பிரபலமான பெண் வைத்தியரைப் பார்த்தாள்.

''கோளாறு எதுவும் இருக்கிறதா தெரியல.. எதுக்கும் ஒரு தரம் டி அண்ட் ஸி பண்ணி, கர்ப்பப் பையை சுத்தம் செஞ்சிடலாம். அப்படியும் பலன் இல்லாட்டி, மத்த பரிசோதனைகளை பண்ணிப் பார்த்திடலாம்'.

டாக்டரின் கூற்றை ஏற்று, ரங்கம்மா டி அண்ட் ஸி சிகிச்சையை செய்துகொண்டு கிராமத்துக்குத் திரும்பின பின் அடுத்து வந்த மாசங்களுக்காக நம்பிக்கையோடு காத்திருக்க ஆரம்பித்தாள்.

அவளுடைய நல்லகாலம், என்னவோ மூன்று மாசம் போவதற்குள் தலை சுற்றல், வாந்தியுமாய் கர்ப்பம் உறுதிப் பட்டுப்போக, வெகுநாட்களுக்குப் பிறகு உண்டானதால் வைத்தியரின் ஆலோசனைப்படி கூடுமான வரை படுக்கையிலேயே இருந்து ஓய்வாகப் பொழுதைக் கழித்தாள்.

கருவில் குழந்தை நன்றாக புஷ்டியாக வளர வேண்டும் என்பதற்காக பசும்பாலில் குங்குமப்பூ, ஏலக்காய், சர்க்கரைப் போட்டு கண்டக் காய்ச்சி டம்ளர் டம்ளராய் குடித்தாள். சென்னையிலிருந்து புருஷனை விட்டு ஆப்பிளும், மாதுளம் பழங்களும் வாங்கி வரச் சொல்லி நிதமும் சாப்பிட்டாள். வளரும் குழந்தைக்கு நல்லது என்று யாரோ சொன்னார்கள் என்று பிஸ்தாவும், பாதாமும் தட்டுத் தட்டாக விழுங்கினாள்.

இவைகளோடு மறக்காமல் தெய்வங்களிடமும் வேண்டிக் கொண்டாள். நல்லபடியாய் குழந்தை பிறந்ததும்

மைலம் முருகனுக்கு பால் அபிஷேகம் செய்து வெள்ளியில் வேல் சாற்றுவதாக வேண்டிக் கொண்டாள்.

கூடவே, மூத்ததுகளை பறிகொடுத்துவிட்ட பயம் அவளை விரட்ட, ஆயுசோடு பிள்ளை இருந்தால் அவனுடைய திருமணத்தை மார்க்கண்டேயனுடைய சந்நதியில் திருக்கடவூரில் செய்வதாகப் பிரார்த்தித்து மஞ்சள் துணியையும் முடிந்து வைத்தாள்.

இந்த முறை ரங்கம்மாவை விதி சதி செய்யவில்லை.

பத்து மாசங்கள் முடிந்ததும் பூரணமான வளர்த்தியுடன் அத்தனை போஷாக்கும் உடம்பில் பிரதிபலிக்க குண்டு கொழுக்கட்டையாய ராஜா என்கிற ராஜசேகர் பிறந்தான்.

சும்மா சொல்லக்கூடாது. ராஜா பார்க்க ராஜாவாகத் தான் இருந்தான் என்பதோடு, ஒரு ராஜ குமாரன் வளரும் விதத்திலேயே வளர்க்கப்பட்டான் என்பதும் உண்மை.

பணம் இருந்தது, மனம் இருந்தது... அப்புறம் என்ன?

முதலில் பட்ட கசப்பான அனுபவங்கள் தந்த வலி, பயத்தின் காரணமாய் துவக்கத்தில் ரொம்ப ஆட்டம் போடாமல் இருந்த ரங்கம்மா நாட்கள், மாதங்களாகி, முதல் வருஷத்தைத் தொட்டபோது மறுபடியும் பழையபடி தற்பெருமையும், பீற்றலும் கொண்டவளாகவே மாறிப் போனாள்.

அதுவும், ஐந்தாம் மாசம் தவழ்ந்து, ஏழாம்மாசம் ம்மா, ப்பா என்று வார்த்தைகளைச் சொல்லி, பத்தாம் மாசம் நடந்து, ஒரு வயசு பூர்த்தி ஆவதற்குள் குடுகுடுவென்று இங்கும் அங்கும் ஓடும் பிள்ளையாக ராஜா வளர ரங்கம்மா தேன் குடித்த நரியாகத் துள்ளிக் குதித்தாள்.

ஆண்டு நிறைவுக்கு அம்மாவின் இடுப்பில் குழந்தையைப் பார்த்துப் பழகியவர்கள் 'பிள்ளை எங்கே?' என்று கேட்டு



'அதோ... அங்க பாருங்க' என்று கால் முளைத்து ஓடும் பிள்ளையைக் காண்பிக்க, 'அட' என்று அவர்கள் மூக்கில் விரலை வைத்ததும் திருஷ்டி பட்டுவிடுமோ என்கிற பயத்தையும் மீறிக்கொண்டு 'என் பிள்ளை,—அவன் சமர்த்து யாருக்கு வரும்?' என்கிற பெருமிதம் ரங்கம்மாவினுள் அலை பாய்ந்தது.

விசேஷத்துக்கு வந்தவர்கள் திரும்பிச் சென்றதும் வேலைக்காரியைவிட்டு வாசலிலிருந்து அவர்கள் காலடி மண்ணை எடுத்து வரச்செய்து பிள்ளையை உட்கார வைத்துச் 'சுற்றி', 'கொள்ளிக்கண் பட்டுப்போக' என்று முணுமுணுத்து தூ தூ என்று துப்பி, திருஷ்டி கழித்தாள். கறுப்புக் கயிற்றில் முடிச்சுப்போட்டு மந்தரிக்கச் சொல்லி கழுத்து, கை இடுப்பு என்று ஒரு இடம் விடாமல் பிள்ளைக்குக் கட்டினாள்.

வேண்டிகொண்டபடி குடும்பத்தோடு மைலத்திற்குச் சென்று முருகனுக்கு குடம் குடமாய்ப் பால் அபிஷேகம் பண்ணி, மறக்காமல் கடலூர் நகைக் கடையில் வேல் செய்யச் சொல்லி சாற்றினாள்.

ராஜா வளர, வளர, இந்த மாதிரி துடிப்பான, புத்தி சாலியான, அழகான குழந்தை எவளுக்குப் பிறப்பான் என்கிற கர்வமும் கூடிப் போனதில், பிள்ளையே உலகமாக மாறி வாழ முற்பட்டதோடு, அவன் வாயைத் திறந்து 'அம்மா இது வேண்டும்' என்று கேட்டு முடிப்பதற்குள் அதைக் கண்முன் கொண்டுவந்து நிறுத்துவது ரங்கம்மாவின் வழக்கமாயிற்று.

பிள்ளை தும்மினால் உசத்தி. அழுதாலும் உசத்தி. முரண்டு பண்ணி எட்டி உதைத்தாலும் 'ஆஹா—இந்த மாதிரி செய்ய எந்தக் குழந்தைக்குத் தெரியும்' என்கிற பூரிப்புதான்.

பத்துமாசக் குழந்தையாய் இருக்கும்போது சாப்பிட ராஜா வெகுவாகப் படுத்த, அவன் கவனத்தை ஈர்க்கும்படி

யாரையாவது எதையாவது வேடிக்கை செய்யச் சொல்லி ரங்கம்மா சோற்றை ஊட்டுவாள்.

ஒரு முறை கோவில் உற்சவத்தில் கரக ஆட்டக்காரர் ஒருவர் பிரமாதமாகச் சுழன்று சுழன்று ஆட, அதில் லயித்துப் போன ராஜா ஒரு பருக்கை மிச்சம் வைக்காமல் சாப்பிட, அன்றிலிருந்து வீட்டு ஆள் ஒருவனை இரண்டு வேளையும் பூச் சுற்றின பானையை தலையில் வைத்துக் கொண்டு மகன் சாப்பிடும் வேளையில் கரகம் ஆடச் சொல்லி ரங்கம்மா உத்தரவு போட்டாள் என்றால், மகனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய அவள் எந்த அளவுக்குத் துணிந்தாள் என்பது விளங்கும்.

இரண்டாம் வயசில் ராஜா சிங்கம் பார்க்க விரும்பின தால் அந்த வாரமே அவனை சென்னைக்குக் கூட்டிச் சென்று மிருகக் காட்சி சாலையில் சிங்கம் காட்டிவிட்டு வந்தாள்.

நாலு வயசு நடக்கும்போது யானை வளர்க்கவேண்டும் என்று ராஜா அடம்பிடிக்க, பத்து நாள் போல கோவில் யானையைத் தன் வீட்டுத் தோட்டத்தில் கட்டிப் போட வைத்து, அதன் முழுச்செலவையும் ரங்கம்மா ஏற்றுக்கொண்டு, பிள்ளைக்கு அந்த மோகம் அடங்கி புத்தி வேறு ஒன்றில் சென்ற பிறகு 'பெரிய நன்கொடை'யுடன் அதைத் திருப்பி கோவிலுக்கு அனுப்பினதும் உண்டுதான்.

ஏழாவது வயசில் ஸினிமா ஒன்றில் நீச்சல் குளத்தைப் பார்த்துவிட்டு தானும் அந்த மாதிரி ஒன்றில் குளிக்க வேண்டும் என்று ராஜா விரும்ப, சென்னை நீச்சல் குளங் களில் மகனை தனியாக விடப் பயந்து கொண்டு, வீட்டை ஒட்டின தென்னந்தோப்பில் நாலு மரங்களை வெட்டச் சொல்லி, பத்தடிக்கு இருபதடி நீள அகலத்தில் மூன்றடி ஆழத்தில் ஒரு குளம் கட்டச் சொல்ல, உட்பக்கத்தைச் சிமிண்டால் பூச வைத்து, ஒரு வாரம் போல பயிர்களை வாடப் பண்ணிவிட்டாவது அந்தத் தண்ணீரைக் குளத்தில்



நிரப்பி, மகனை குளிக்கச் சொல்லி, பார்த்து சந்தோஷப் பட்டவள் ரங்கம்மா..

இப்படி தலைகால் புரியாமல் பிள்ளையை அவள் வளர்ப்பது குறித்து ஏகமாய் கவலை எழ, ஒரு நாள், துணிச்சலை வரவழைத்துக் கொண்டு புருஷோத்தமன் மனைவி குஷியான மனநிலையில் இருக்கும்போது— ''ராஜாவுக்கு நீ ரொம்ப இடம் கொடுக்கறேனு எல்லாரும் பேசிக்கறாங்க.. ரங்கம்.. இது நல்லதுக்கு இல்லேனு எனக்கும் தோணுது.. நாளைக்கு மகன் நல்லவிதமா, வாழ்ந்தாத்தானே நமக்குப் பெருமை? இப்ப நீ கொடுக்கற செல்லமே அவன் கெட்டுப் போக வழி காட்டிடுமோன்னு எனக்குப் பயமா இருக்கு.. ஜுரம் வந்தா பாதாம் அல்வா வும் பாயாசமுமா கொடுப்பாங்க? தேவைப்பட்டா கசப்பு மருந்து கொடுத்து ஊசி போட்டுத்தானே குணப்படுத்தணும்? நா என்ன சொல்ல வரேன்னா..''

அன்றைக்கு அவர் முடிக்கும் முன் காட்டமாக ரங்கம்மா குறுக்கே வெட்டினாள்.

''எவனோ போக்கத்தவன் பொறாமையால என்னவோ சொன்னான்னா, நீங்களும் சுயமா சிந்திக்காம என்னண்ட புகார் பிடிக்கறீங்களே? வெக்கமா இல்லே? இளவரசன் கணக்கா பொறந்திருக்குற மகன் அருமை தெரியாம ஏன் தான் இப்படி எடுப்பார் கைப்பிள்ளையா, மூடமா, இருக் கீங்களோ? தத்.. போங்க முதல்ல எழுந்து போய் வாய கழுவிக் கிட்டு வாங்க...''

அன்றைக்குத்தான் முதலும் கடைசியுமாய் புருஷோத் தமன் பிள்ளையைப்பற்றி தைரியத்துடன் மனைவியிடம் பேசியது...

# 3

"என்னங்க..."

அன்றைய தினம் எவ்வளவு கரும்பு வெட்டியது, ஆலைக்கு எத்தனை அனுப்பப்பட்டது, வரவு என்ன— போன்ற விவரங்களை புத்தகத்தில் கணக்குப்பிள்ளை குறித்திருந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த புருஷோத்தமன் தலையை நிமிருமுன் இரண்டாவது "என்னங்க" இன்னும் அழுத்தமாக வந்தது...

"என்ன ரங்கம்?"

"தொண்டை தண்ணி வத்திப் போயிடுச்சு, நீங்க பதில் பேசறதுக்குள்ள..."

"பாதி கூட்டல்ல இருந்தேன். அதான் உடனே 'ஏன்'னு கேக்க முடியல..."

"நல்லா கூட்டினீங்க போங்க, சின்னப் பிள்ளையாட்டம்... பாதில நிறுத்திட்டு, என்னண்ட பேசின பிறகு திரும்பக் கூட்டினா என்ன ஆயிடுமாம்?"

பதில் கூறாது, புத்தகத்தில் புருஷோத்தமன் கவனத்தைச் செலுத்த, ரங்கம்மா 'ப்ச்' என்றாள்.

"ஏதாவது கேட்டா பதில் பேசாம அழுக்கா இருந்திடுவீங்க. இல்லேன்னா நெருப்புக்கோழியாட்டம் கணக்குப் புத்தகத்துல தலைய புதைச்சிப்பீங்க... உங்களத் தெரியாதா எனக்கு?"

இந்த ரீதியில் ஆரம்பித்தால் லேசில் நிறுத்த மாட்டாள் என்றைக்கோ, எப்போதோ நடந்த வேண்டாத சம்பவங்களை எல்லாம் உருட்டிப் பிரட்டத் தொடங்குவாள்; அப்புறம் அன்றைய ராத்திரி சிவராத்திரிதான் என்கிற பயம் எழ



புருஷோத்தமன் கணக்குப் புத்தகத்தை அவசரமாய் மூடி வைத்தார்.

"என்ன வேணும் ரங்கம்.. இப்ப சொல்லு..."

"ஒண்ணுமில்லீங்க... இந்தப் பள்ளிக்கோடத்துல நடக்கற அடாவடிய நினைச்சாத்தான் எனக்குப் பத்திகிட்டு வருது..."

"அப்படி நீ எரிச்சல் படற அளவுக்கு என்னதான் நடந்திருச்சு?"

"என்னதான் நடக்கலை? ஒரு பையன் கண்ணுக்கு லட்சணமா இருக்கக்கூடாது. அவனைப் பெத்தவங்க வசதி படைச்சவங்களா இருக்கக்கூடாது. வெள்ளை சொள்ளையா துணி போட்டு அனுபவிக்கக்கூடாது... மொத்தத்துல பளிச்சுனு ஒருத்தன் இருந்திடக்கூடாது. மீறி இருந்திட்டாப் போச்சு... வாத்தியாருங்களே அவனைக் கூப்பிட்டு 'என்னடா... உன் பணத்திமிரையா காட்டுறே? உங்கப்பன் கிட்ட பணம் இருந்தா அது உங்களோட. பள்ளிகோடத்துல காட்டாதே'னு கண்டிக்க வேண்டியது... த்தூ... என்னா வாத்தியாருங்களோ, என்னா பள்ளிக்கோடமோ... எல்லாம் வயித்துல பல்முளைச்சதுங்க... இத விட்டா நமக்கும் வேறகதி இல்ல, பாருங்க....."

நீளமாய் ரங்கம்மா பேசினதில், பாதியைத்தான் புருஷோத்தமனால் புரிந்து கொள்ள முடிந்தது.

"என்ன சொல்றே நீ ரங்கம்? பள்ளிக்கோடத்துக்கு பளிச்சினு ராஜா உடை உடுத்திப் போனதுக்கு வாத்தியாரு திட்டினாரா?"

ரங்கம்மா கேலியாய்ச் சிரித்தாள்...

"அட... உங்களுக்குக் கூட புரிஞ்சிரிச்சே, விடிய விடிய ராமாயணம் கேட்டப்புறம் சீதைக்கு ராமன் என்னடி ஆகணும்னு இல்லே வழக்கமா கேப்பீங்க..."

அவளது இண்டலைக் காதில் வாங்காமல் புருஷோத்தமன் பேசிய போது குரலில் லேசாக எரிச்சல் எட்டிப் பார்த்தது.

"இப்ப சொல்ல வந்ததை சொல்லப் போறியா, இல்லியா? வேண்டாத பேச்சைத்தான் பேசப் போறேனா நா படுக்கறேன், எனக்குத் தூக்கம் வருது..."

"உன்னைச் சொன்னா கோபம் பொத்துக்கிட்டு வருதாக்கும்... இதுக்கு ஒண்ணும் குறச்சல் இல்லே...சரி கேட்டுக்கங்க... நடந்ததை அப்படியே சொல்றேன்—இன்னிக்கு நம்ம ராஜா, போன தரம் மெட்றாஸ்ல வாங்கினமே அந்தத் துணியப் பள்ளிக்கோடத்துக்கு ஆசையா போட்டுகிட்டுப் போனான்... நல்லா இருக்குப்பானு பாராட்டாச்சும் பரவாயில்லே, அந்த கோணமூஞ்சி வாத்தியார் என்ன பண்ணாராம் தெரியுமா— அத்தனைப்பசங்களுக்கு முன்னால இவனை கூப்பிட்டு 'உங்கப்பனுக்கு பணம் இருந்தா அத உங்க வீட்டோட வச்சுக்க... இப்படி பள பளனு உடுத்திகிட்டு வந்து மத்த பசங்ககிட்ட உன் பணத்திமிர காட்டாதே'னு சொன்னாராம் ...சே...இவரெல்லாம் வாத்தியாரு...படிச்ச மனுஷனுக்குள்ள இருக்கற ஆத்தாமையப் பாரேன்..."

சென்ற வாரம் சென்னையில் ரங்கம்மா மகனுக்கென ஆசையாய் வாங்கின உடையை ஒரு தரம் மனதில் புருஷோத்தமன் நினைத்துப் பார்த்தார்.

பட்டுத்துணியால் ஆன பைஜாமா செட் அது. ஜிப்பாவின் எம்ப்ராய்டரி வேலை செய்தது போதாமல், மேலே மாட்டிக் கொள்ளவென வெல்வெட்டால் ஆன 'வேஸ்ட் கோட்' கூட உண்டு.

யாரோ சேட் வீட்டுப்பிள்ளைப்போட்டுப் பார்த்தாளாம்—எங்கே கிடைக்கும் என்று விசாரித்துகே கையோடு அங்கு சென்று, எக்கச்சக்க விலை கொடுத்து வாங்கிக் கொண்டு வந்து விட்டாள்.



அந்த உடையையா பள்ளிக்கூடத்துக்குப் போட்டு அனுப்பினாள்?

"என்னங்க, நா பாட்டுக்குப் பேசிட்டே இருக்கேன். நீங்க ஒண்ணுமே சொல்லாம இருக்கீங்களே?"

"என்ன சொல்லணும் ரங்கம்?"

"'என்ன செய்யணும்'னு கேளுங்க... நாளைக் காலைல மொத வேலையா பள்ளிக்கோடத்துக்குப் போயி, அந்த கோண மூஞ்சு வாத்தியாரண்ட 'என்னய்யா... புத்தி கித்தி பெரண்டு போச்சா? என்னத்துக்காக ஏடாகூடமா பேசறீங்க... விதி என் பிள்ளைக்கு நல்ல வாழ்க்கையை கொடுத்திருக்கு அதுக்காகப் பொறாமைப்படாம, வாத்தியாரா லட்சணமா நடந்துக்கங்க'னு கண்டிச்சு சொல்லிட்டு வாங்க... என்ன?"

புருஷோத்தமன் விரல்களால் தலை முடியைக் கோதி, தாவாவை ஒருதரம் நீவி விட்டுக் கொண்டார்.

"சும்மா இருக்கிறவனை வலியக் கூப்பிட்டு தாறுமாறா பேசறவர் அந்த நாராயணசாமி வாத்தியார் இல்லியே, ரங்கம்!"

"அப்ப?... அப்ப? நானும் என் புள்ளையுமா சேர்ந்து கதை கட்டி விடறோமனு சொல்றீங்களா?"

"அதில்லே... இவன் என்ன செஞ்சானோ அவர் அப்படி கண்டிக்கறத்துக்கு..."

ரங்கம் அவரை முடிக்க விடாமல் பாய்ந்தாள்.

"தெரியுமே... உங்க குணம்தான் எனக்குத் தெரியுமே! சொந்த மனுஷாளுங்களைவிட அன்னியருக்காகத்தானே வரிஞ்சு கட்டிகிட்டுப் போவீங்க, வாரிக் கொட்டுவீங்க. தெரிஞ்சும் பேச வந்தேன் பாருங்க... புத்திய..."

கோபத்தோடு கத்த ஆரம்பித்தவளை ஷ்...ஷ்... என்று புருஷோத்தமன் அடக்கினார்.

K

"இப்ப என்ன பண்ணணும்னு சொல்றே? நாளைக்கு பள்ளிக்கோடத்துக்குப் போய் நாராயணசாமி வாத்தியாரண்டே பேசணும், அதானே?"

"பேச வேணாம்... நறுக்குனு உரைக்கிறாப்பல கண்டிக்கணும்..."

"சரி... கண்டிச்சிடறேன்..."

"இனிமே அனாவசியமா தம்பி வழிக்கு வராதீங்கனு கறாரா செல்லிடணும்."

"சொல்லிடறேன்..."

"ஏதாவது இப்படி அப்படி விஷமம் பண்ணாகூட அதப் பெரிக பண்ணாம வகைக்கோணாறுனு விட்டுடச் சொல்லுங்க..."

அவன் போட்ட பட்டியல் அனைத்துக்கும் சரி, சரி என்று தலை அசைத்துவிட்டு, பொழுது விடிந்ததும் கொல்லைக் காட்டுக்குப் போகும் வேலையைக்கூடச் செய்யாமல் புருஷோத்தமன் நாராயணசாமி வாத்தியாரைத் தேடிக் கொண்டு அவர் வீட்டுக்கே சென்றார்.

வாசலில் நின்று குரல் கொடுத்ததும் ஓட்டமாய் வந்து "வாங்க" என்று அழைத்து திண்ணையில் உட்காரச் சொல்லி, அவர் வேண்டாம் என்று தடுத்தும் கேளாமல் மனைவியை காப்பியை கலந்து எடுத்து வரச் சொல்லி நாராயணசாமி நீட்டினார்.

"நீங்க ஏன் நிக்கறீங்க... உட்காருங்க..."

"பரவாயில்லேங்க... ஏதாச்சும் கேக்கணும்னா ஆள் அனுப்பி இருக்கலாங்களே... நானே வந்திருப்பேனே... வீணா உங்களுக்கு சிரமம் எதுக்குங்க..."

"சிரமம் ஒண்ணும் இல்லே... இந்த வழியா போற ஜோலி இருந்திச்சு... அப்படியே உங்களையும் பார்த்திட்டுப் போகலாம்னு..."



மேற்கொண்டு எப்படித் தொடருவது என்று புரியாமல் தயங்கின புருஷோத்தமன் கொஞ்சம் நிதானித்துவிட்டு மெதுவாக வினவினார்.

"நேத்து ராஜாவ எதுக்காச்சும் இட்டுனீங்களா?"

நாராயணசாமி சங்கடத்துடன் நெளிந்தார்.

"அது வந்துங்க..."

"எதுவானாலும் தைரியமாச் சொல்லுங்க... நீங்க உண்மையைத் தவிர வேறு ஒண்ணும் பேசமாட்டீங்கனு எனக்குத் தெரியும்..."

"இட்டனீங்க... வந்து... நாலு நாளாவே நெதைக்கும் ராஜா பள்ளிக்கோடத்துக்குப் புதுசு புதுசா துணி போட்டுக்கிட்டு வரான்... அதுவும் நேத்து பட்டுத் துணில, வெலெப் பாடெல்லாம் பண்ண ட்ரெஸ் போட்டுக்கிட்டு வந்து ஒவ்வொரு பையன் கிட்டயும் போயி 'பாத்தியா எப்படி இருக்குது, உன் கிட்ட இது மாதிரி இருக்கா?'னு கேட்டு சீண்டிகிட்டு இருந்தான். கிழிசலைத் தெச்சு தினமும் உடுத்திட்டு வர்ற அந்த ஏழைப் பசங்க முகம் ஏக்கத்துல துவண்டு போச்சுங்க. இது நல்லதுக்கு இல்லேனு தோணிச்சு... அதான் ராஜாவக் கூப்பிட்டு 'உன் துணி ரொம்ப நல்லா இருக்கு. ஆனா கூட படிக்கிற பசங்களுக்கு நமக்கு இப்படித் துணி இல்லியேன்ற ஏக்கம் வந்திடும்; அதனால பள்ளிக் கோடத்துக்குப் போடாம, சாயங்காலமா அப்பா, அம்மாவோட வெளில போறப்ப போட்டுக்க'னு சொன்னேங்க... அதுக்கூட நல்ல வார்த்தையா, நாளைக்கு ராஜா யாருடைய வயித்தெரிச்சலும் தாக்காம நல்லா வாழணும்ன்ற அக்கறைல தாங்க சொன்னேன். சொன்னது தப்புன்னா..."

புருஷோத்தமன் கையை நீட்டி எதிரில் இருந்தவர் தோளைத் தட்டிக் கொடுத்தார்.

"நீங்க செஞ்சது நாத்துக்கு நாறு சரி... படிக்க வர்ற எடத்துல கவனம் பூரா படிப்புலதான் இருக்கணுமே தவிர, துணி, தின்பண்டம், விளையாட்டு இதுலெல்லாம் போகக் கூடாது... நீங்க இருக்கறபடியே இருங்க... யாருக்காகவும் உங்கப் போக்கை மாத்திக்காதீங்க... என்ன?"

ஒரு நிமிஷம் அப்படியே உட்கார்ந்திருந்தபின் புருஷோத்தமன் தொடர்ந்தார்.

"ராஜா எப்படிப் படிக்கறான்? ஏழாவது க்ளாஸுக்கு வந்திட்டானே?"

நாராயணசாமி மென்று விழுங்கினார்.

"அட, பயப்படாமச் சொல்லுங்க..."

"சுட்டிக்கையான பையன்தான்... ஆனா, முனைப்பா படிக்க மாட்டேங்கறான்... சதா விளையாட்டுலேயே புத்தி போகுது..."

"என்ன செய்யலாம்?... வேணா ட்யூஷன் வச்சுப் பாக்க லாமா?"

"நானே சொல்லணும்னு நினைச்சேன்... வாரத்துக்கு நாலு நாள் ட்யூஷன் வச்சா உதவியா இருக்கும்னே தோணுது.."

"செய்யுங்க... அப்ப நா வரட்டுமா?"

புருஷோத்தமன் விடை பெற்றுப் போக, தன்னைக் கண்டால் ராஜாவுக்கும் முக்கியமாய் அவன் தயாருக்கும் ஆகவில்லை என்பதைப் புரிந்துகொள்ள முடிய, கணக்கு வாத்தியார் அன்பரசுவை ட்யூஷனுக்கு நாராயணசாமி ஏற்பாடு பண்ணினார்.

ஆனால், வாரத்தில் நாலு தரம் என்று பேர்தானே ஒழிய, வாத்தியாரின் தலையைக் கண்டாலே 'அம்மா வயத்த வலிக்குது' என்றோ, 'ஹா தலை வலி பொளக்குதே'



என்றோ, 'காய்ச்சல் வராப்பல கண்ணெல்லாம் எரியுதும்மா' என்றோ எதையாவது கூறி, முக்கால்வாசி நாட்கள் வீட்டுக்கு வரும் வாத்தியாரை திண்ணையோடு உட்கார வைத்துவிட்டு, பாடம் எடுக்காமலேயே திருப்பி அனுப்பியதுதான் கடைசி யாய் நடந்தது.

மீறி, புருஷோத்தமன் பிள்ளையை அழைத்து 'என்னடா' என்று அதட்டத் துணிந்தால் 'என்னத்துக்காக அவனை மிரட்டறீங்க? எல்லாம் படிச்ச வரைக்கும் போதும்.. பெரிய படிப்பா படிச்சி இப்ப அவன் என்ன சாதிக்கணும்? நீங்க படிச்சிங்களா, இல்ல உங்க அப்பாரு படிச்சாரா? நீங்கள்ளாம் நிலம் நீச்சைப் பார்த்துக்கிட்டு ஊர் மெச்சறாப்பல இல்லியா? எம் மகனும் அப்படி இருந்தா போதும்... உட்கார்ந்து சாப்பிட் டாலே பத்து தலைமுறைக்கு சொத்து காணும்...இன்னும் கஷ்டப்பட்டுப் படிச்சு மாடா உழைக்கணும்னு என் மகனுக்குத் தலை எழுத்தா என்ன? விடுங்க...சும்மா அவனை ஏதாச்சும் குத்தம் சொல்லிக் கிட்டே இருக்காம. அவன் போக்குக்கே விட்டுடுங்க" என்று பிள்ளைக்கு எதிரிலேயே ரங்கம்மா வக்காலத்து வாங்கத் துவங்க, கொஞ்ச நாட்களில் வாத்தியார் ட்யூஷன் எடுக்க வருவது நின்றது; தான் படிக்கவில்லை; மகனையாவது பெரிய படிப்பு படிக்க வேணும் என்கிற புருஷோத்தமனின் கனவும் அல்பாயுசிலேயே கலைந்தது.

பத்தாவது வரையிலும் வருஷா வருஷம் பள்ளிக்கு நன்கொடை கொடுத்தும், கை நீட்டினவர்களுக்கு அள்ளித் தந்தும் ராஜாவை அடுத்த வருஷத்துக்கு தூக்கிப் போட வைப்பது நடந்தது.

பிறகு... 'எனக்குப் படிக்க இஷ்டம் இல்லேம்மா... கைத்தொழில் ஏதாச்சும் கத்துக்க விருப்பபடறேன்' என்று அவன் சொல்ல, தனக்கு சம்மதம் இல்லாவிடினும் மகனின் ஆசையே பெரிது என்று ரங்கம்மா அதற்கு சம்மதிக்க,

பாண்டிச்சேரியில் இருந்த ஒரு பாலிடெக்னிக் கல்லூரியில் ராஜா சேர்ந்தான்.

இது ஒரு ஆறு மாசத்துக்கு...

ஏதாவது படிக்கிறானா, இல்லை ஊர் சுற்றிக் கொண்டு பொழுதைக் கழிக்கிறானா என்பதைக்கூட தெளிவாகப் புரிந்து கொள்ளும் முன், நினைத்து நினைப்பில்லாமல் ஹ்ருதய வலியில் புருஷோத்தமன் கண்களை மூட, வீட்டில் அம்மாவுக்குத் துணை வேண்டும் என்பதாலும் சொத்துக்களின் பொறுப்பை ஏற்கவேண்டும் என்பதாலும் கல்லூரி படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு எடையாளத்துக்கே ராஜா வந்து சேர்ந்தான்.

# 4

பத்து நாட்களாகவே சரியான வேலை...

பொங்கல் என்றால் சும்மாவா?

அறுவடையாகி வந்த நெல்லில் வீட்டுக்குத் தேவையானதை எடுத்து அடுக்கி, மிச்சத்தை விற்பனைக்காக கமிட்டியில் போட்டு, பொங்கல் வைக்கவென பச்சரிசி குத்தி தயார் பண்ணி; பண்ணை, வீட்டு ஆட்களுக்கு புதுத் துணிகளை எடுத்து; வீடு, மாட்டுக் கொட்டகை, பம்புஷெட்டு என்று ஒரு இடம் விடாமல் அத்தனையும் வெள்ளை அடித்து துப்புரவு செய்து, வாசலிலிருந்து உள் நடை வரை தரையை சாணம் போட்டு மெழுகி, தோரணம் மாவிலை கட்டி, நாலு நாளும் விருந்து சமைக்கச் சொல்லி, வீட்டு மனுஷர்களிலிருந்து பண்ணை ஆள் வரை சாப்பிட்டார்களா என்று கவனித்து...

ஏ அப்பா...



வருஷா வருஷம் இந்தப் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடி முடிப்பதற்குள், சுலபமாய் இரண்டு சின்னக் கல்யாணங்களைக்கூடப் பண்ணி விடலாம்பா. அத்தனை வேலைகள்.. அத்தனை செலவுகள்...

பத்து நாட்களாய் கவனத்தை வேறு எதிலும் செலுத்த முடியாதபடி பொங்கல் முழுமையாய் ஆக்ரமித்துக் கொள்ள, எல்லா அமர்க்களமும் ஒரு வழுசாய் ஓய்ந்த நிலையில் கணக்குப் புஸ்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு கூடத்து ஊஞ்சலில் வந்து அமர்ந்தாள் ரங்கம்மா.

கண்ணாடியைக் கழட்டித் துடைத்து மாட்டிக்கொண்டவள் புத்தகத்தைப் பிரித்தாள்.

முதலில் வரவை மேலோட்டமாக ஒரு பார்வை பார்த்து முடித்தபின் செலவுப் பகுதிக்கு வந்தாள்.

வெள்ளை அடிக்க—715 ரூ.

ட்ராக்டர் டீசல்—210 ரூ.

பண்ணை ஆட்கள் கூலி—318 ரூ.

சின்னத் தம்பிக்குக் கொடுத்தது—500 ரூ.

6ம் தேதியிலிருந்து வரிசையாகப் படித்துக் கொண்டே வந்தவள் பதினோராம் தேதி மீண்டும் சின்ன தம்பிக்குக் கொடுத்தது ரூ 1500 என்று குறிப்பிட்டிருக்க, கொஞ்சம் நிறுத்தி, ஆயிரத்து ஐநூறு வாங்கும்படி ராஜாவுக்கு என்ன செலவு இருக்கும் என்று ஒரு நிமிஷம் யோசனை பண்ணி, 'அ! எதுவானால் என்ன? தம்பிக்கு இல்லாததா?' என்று மாமூலாகத் தான் செய்து கொள்ளும் சமாதானத்துடன் மீண்டும் புத்தகத்தில் கவனத்தைப் பதித்தாள்.

பதினைந்தாம் தேதி...

பொங்கல் இனாம் வகையறாக்களைக் குறிப்பிட்ட கையோடு சின்னதம்பிக்கு இரண்டாயிரம் என்று மறுபடி

கணக்குப்பிள்ளை எழுதியிருக்க, இந்த முறை புருவங்கள் முடிச்சுப் போட்டுக் கொள்ள ரங்கம்மா யோசித்தாள்.

பத்து நாட்களுக்குள் மூன்று முறை பணம் வாங்கி செலவழிக்கும் அளவுக்கு ராஜாவுக்கு என்ன முடை?

மோட்டார் சைக்கிள் ரிப்பேர், ரிப்பேர் ஆகிவிட்டதா?

பொங்கலுக்கு புதுத்துணி எடுத்த செலவா?

யோசித்த வரைக்கும் திட்டவட்டமாய் எதுவும் புரியாமல் போக, ஏதோ ஒரு உந்துதலில் முதல் தேதியிலிருந்து ராஜா கணக்குப் பிள்ளையிடம் எத்தனை பணம் வாங்கியிருக்கிறான் என்று பார்த்தாள்.

ஒன்றாம் தேதி ரூ. 500

நாலாம் தேதி ரூ. 1250

தொடர்ந்து இதுவரை பார்த்த மூன்று முறைகள் ஆக மொத்தம் ரூ. 5750

அடேயப்பா... பதினைந்து நாட்களில் எதற்காக இத்தனை வாங்கியிருக்கிறான்?

சாதாரணமாக மகனின் அன்றாட கை செலவுகளுக்கென ரங்கம்மாவே நூறு, இருநூறு என்று கொடுத்துவிட்டு, முக்கியமான மேல் செலவுகளுக்கு மட்டும் கணக்குப் பிள்ளையிடம் வாங்கிக் கொள்ளச் சொல்வது வழக்கம்.

இதுவரை மாசம் மிஞ்சிப் போனால் ஆயிரம் ரூபாய் வரைக்கும்தான் கணக்குப் பிள்ளையிடம் ராஜா வாங்கி இருக்கிறான்.

இப்படி ஆயிரக்கணக்கில் இவளிடம் சொல்லாமல் வாங்கி இருப்பது இதுதான் முதல்தரம்..

அப்படி என்ன எனக்குக்கூடத் தெரியாமல் அவனுக்கு செலவு இருக்கிறது?

பைக் வாங்க வேண்டும், சென்னைக்குப் போக வேண்டும்—என்று எந்தக் கோரிக்கையுடன் மகன் வந்து



நின்றாலும் இது நாள் வரை ரங்கம்மா எதுக்குத் தம்பி—என்று சொன்னவள் இல்லை என்பதால், தன்னிடம் தெரிவிக்காமல் பிள்ளை எதுக்குப் பணம் வாங்கியிருப்பது லேசாக உறுத்த, குரலை உயர்த்தி ''கணக்கு'' என்று அழைத்தாள்.

அரை நிமிஷத்தில் கணக்குப்பிள்ளை வீரராகவன் வாசற்படியருகில் வந்து நின்று தலையை நீட்டினார்.

''அங்க நின்றுகிட்டு ஆமை மாதிரி தலைய மட்டும் நீட்டினா? இப்படி வாங்க...''

அருகில் வந்து நின்றவரை ரங்கம்மா அழுத்தமாக ஏறிட்டாள்.

''பதினாறு தேதித்தான் ஆவுது, அதுக்குள்ளார அஞ்சு ட்ரிப் தம்பி பணம் வாங்கிட்டானா என்ன?''

''ஆமாங்கம்மா...''

''என்ன ஆமாங்கம்மா? ஆயிரமும் இரண்டாயிரமுமா வாங்கி இருக்கான், அது குறிச்சு என்னண்ட நீங்க ஒரு வார்த்தை சொல்லலியே!''

கோபத்துடன் ரங்கம்மா அதட்ட, வீரராகவன் மென்று விழுங்கினார்.

''முன்னே ஒருக்கா, தம்பி அடிக்கடி பணம் கேக்குறாரும்மா... காரணம் கேட்டா சொல்லமாட்டேங்கறாரு—னு சொன்னப்ப, 'வயசு வந்த பையனை நொண நொணனு பிடுங்காதிங்க.. ஐநூறு ரூபா வாங்கறதுக்கு உங்ககிட்ட ரசீதா கொடுக்கணும்னு திட்டினீங்க...அதான்...''

பழியைத் தன்மேலேயே அவர் திருப்பி விடவும் ரங்கம்மா பட்டென்று கத்தினாள்.

''அ..அ உங்களைத் தெரியாதா எனக்கு? ஏதாச்சும் கண்டுபிடிச்சுக் கேட்டா, பழிய அடுத்தவங்க மேலே போட்டுடற உங்க சாமர்த்தியம் எனக்குத் தெரியாதா என்ன?

பொறுப்பா பதில் சொல்ல எங்கிட்டத்தான் பழகப் போறீங்களோ? மாசம் ஐநூறு ஆயிரம் வாங்கறதும் பதினைஞ்சு தேதிக்குள்ளாரயே ஆறாயிரம் வாங்கறதும் ஒண்ணாயிடுமா? தலைமுறை தலைமுறையா உட்கார்ந்து அனுபவிக்கிறீங்களே காட்டியும், துளி அக்கறை, பொறுப்பு எதுவும் இல்ல. ஏதுடா, ஆம்பிளை இல்லாத குடும்பமாச்சே, அப்பப்பா கண்ணை விழிச்சுக்கிட்டு இருந்து தகவல் சொல்லி விசுவாசத்தோட இருப்போம்ன்ற எண்ணமெல்லாம் சொல்லிக் கொடுத்து வர்றதில்ல கணக்கு. தானா வரணும்.. ஹூம்... எல்லாம் என் தலை எழுத்து... போங்க .. போய் வேலையப் பாருங்க..."

என்றைக்கும் இல்லாத அதிசயமாய் அன்று ரங்கம்மா விசுவாசம், பொறுப்பு, தகவல் சொல்வது என்றெல்லாம் பேச, தன் இடத்துக்குப் போகத் திரும்பின வீரராகவன் நின்றார். ஒரு நிமிஷம் போல சொல்லலாமா, வேண்டாமா, என்று தவித்துவிட்டு, சற்றுமுன் எஜமானி பேசின வார்த்தைகள் தந்த தைரியத்தில் 'அம்மா' என்று அழைத்தார்.

"என்னய்யா?"

"இல்ல வந்து..."

"சொல்ல வந்ததை சட்டு புட்டுனு சொல்லிட்டுப் போய்ச் சேருங்க... எனக்கு தலைக்கு மேல வேல கிடக்கு...";

"இல்ல வந்து..."

"அட— சொல்லப் போறீங்களா, இல்லியா?"

"இல்ல... கொஞ்ச நாளா சின்னத் தம்பியப் பத்தி என்னென்னவோமோ காதுல வந்து விழுது... வந்து—"

ரங்கம்மா சரக்கென்று தலையை நிமிர்த்தினாள்.

"என்னய்யா விழுது?"



வீரராகவன் எச்சிலைக் கூட்டி விழுங்கினார். ஆரம்பித்தாகிவிட்டது இனி நிறுத்துவது சாத்தியமில்லை...

"கேக்கறது காதுல விழல?"

"வந்தும்மா... பாண்டிச்சேரில மாலினி, மாலினினு ஒரு நாட்டியக்காரியாம்... கொஞ்சநாளா... தம்பி...வந்து அவகூட..." அவரை முடிக்க விடாமல் ரங்கம்மா சீறினாள்.

"வாய மூடுங்க... என்ன தைரியம் இருந்தா பெத்தவ என்னண்டயே வந்து இப்படி வத்தி வப்பீங்க .. பணம் அதிகமா வாங்கினத ஏன்யா சொல்லலைனு கேட்டா, அதுக்காக இப்படி இல்லாததையும், பொல்லாததையுமா சொல்வீங்களா த்தூ... நீங்களும் ஒரு குடும்பஸ்தர் தானே? வெட்கமாயில்லே, இப்படி கண்டவங்க சொல்றத நம்பிகிட்டு வந்து என் முன்னால் நின்னு பல்லு மேல் நாக்கும் பட பேசறத்துக்கு?"

வீரராகவன் அவமானத்தில் குன்றிப் போனார். சற்று முன் விசுவாசம் வேண்டாமா என்று எஜமானி கேட்டதை உண்மையான பேச்சு என்று நம்பிக்கொண்டு கேள்விப் பட்டதை வெளியிட்டது தவறு என்பது புரிய தலையைக் குனிந்து கொண்டார். குரலைத் தழைத்து கிசுகிசுப்பாய் பேசினார்.

"மன்னிக்கணும்மா... நீங்க கேட்டதும் எதையோ... தெரியாத்தனமா..."

மேலே பேச முடியாமல் வார்த்தைகள் தொண்டையிலேயே சிக்கிக் கொண்டன.

"சரி...சரி போங்க... என்கிட்ட உளறின மாதிரி யார் கிட்டவாவது தத்து பித்துனு பேசினீங்கனு தெரிஞ்சா நா பொல்லாதவளா ஆயிடுவேன்... ஆமா...";

அதட்டி உருட்டி அவரை அனுப்பிவிட்டாலும் அன்று முழுவதும் வேறு எந்த காரியத்திலுமே சிந்தனை கொள்ளாமல், பிள்ளையைச் சுற்றியே கோலாட்டம் போட்டது

K

அத்தனை பணம் அவனுக்கு எதற்கு?

மாலினியா? யார் அவள்?

நாட்டியக்காரி என்றாரே? உண்மையாய் இருக்குமோ?

ராஜாவையே கேட்டுப் பார்த்து விடலாமா?

என்னவென்று கேட்பது?

அத்தனை பணம் எதற்கு தம்பி என்று கேட்கலாம் சரி, கணக்கு சொன்ன விவரத்தை எப்படித் துணிந்து கேட்பது?

இஷ்டம் இருந்தால் ராஜா பிடிகொடுத்துப் பேசுவான். இல்லாவிட்டால் முகத்தை தூக்கி வைத்துக்கொண்டு நாலு நாட்கள் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் 'உம்'மென்று இருப்பான்.

அய்யய்யோ. வேண்டாம், வேண்டாம்...

இந்தக் கணக்கு ஒரு எடுப்பார் கைப்பிள்ளை. யாராவது பொறாமை காரணமாய் எதாவது சொன்னால் அதை சத்தியம் என்று நம்பிவிடும்...

இந்த மாலினி விவகாரமும் அந்த வகையில் எந்த போக்கத்தவனாவது இளப்பி விட்டதாகத்தான் இருக்கும்...

அதனால், அதைப்பற்றி தம்பியிடம் பேசுவது அனாவசியம்...

முடிந்தால், அவன் நல்ல மனநிலையில் இருந்தால், பணத்தைப்பற்றி மட்டும் கேட்டுப் பார்க்கலாம்...

தனக்குத்தானே, கேள்வி கேட்டு, பதில் கூறி, சமாதானமும் அடைந்த பின்னர் எங்கோ போய்விட்டு இரவு ஒன்பது மணிக்கு மேல் சாப்பிட வந்து உட்கார்ந்த மகனின் அருகில் ரங்கம்மா அமர்ந்தாள்.



ராஜாவின் கண்கள் லேசாக சிவந்திருந்தன. புதுசாய் ஏதோ வாசனை...

"உனக்குப் பிடிச்ச இடியாப்பமும், குர்மாவும் செஞ்சிருக்கு; இன்னும் கொஞ்சம் வச்சிக்க தம்பி" என்று உபசாரம் பண்ணிவிட்டு "என் தம்பி கண்ணும் மூஞ்சியும் ஒரு மாதிரி இருக்கு?" என்று அவள் வினவ, ராஜா அலட்சியமாய்ச் சிரித்தான்.

"எப்படி இருக்கு?"

"என்னமோ ராக்கண் விழிச்ச வேலை பார்க்கறவனாட்டம், ரெண்டு கண்ணும் கோவைப்பழமா இல்ல செவந்து கிடக்கு!"

"பைக்குல வர்றப்ப எதிர்காத்து அடிச்சது இல்ல, அதான் சிவந்திருக்கும்... இன்னும் கொஞ்சம் குர்மா வையுங்க. பாவம் ஆசையா செஞ்சிருக்கீங்களே..."

தன் கையாலேயே பரிமாறின ரங்கம்மா கொஞ்சம் மௌனித்து, பெருமாள் அருகில் இல்லை என்பதை நிச்சயப் படுத்திக் கொண்ட பின்னர் மெள்ள கேட்டாள்.

"மத்தியானமா கணக்கு வழக்குங்களைப் பார்த்திட்டு இருந்தேன் தம்பி...இந்த மாசம் நீ ஐயாயிரத்துக்கும் மேலயே வாங்கிட்டதா கணக்கு எழுதியிருக்காரு...அந்த அளவுக்குச் செலவு பண்ற பிள்ளை நீ இல்லேன்னு தோணிச்சு. பைக்குல ஏதாச்சும் ரிப்பேரா தம்பி?"

வாய்க்கருகில் எடுத்துப்போன இடியாப்பத்தை ராஜா தட்டில் போட்டான்.

"ஏம்மா, நா உங்ககிட்ட சொல்லாம வாங்கிகிட்டதுல உங்களுக்குக் கோவமா?"

"சேச்சே.. அதில்ல தம்பி..."

"தொகை பெரிசா வாங்கிட்டதுல வருத்தமா?"

"அட என்ன தம்பி நீ..."

ராஜா முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு குறுக்கிட்டான்.

"நீங்க ஆட்சேபணை எதுவும் சொல்லமாட்டீங்கன்ற தைரியத்துலதாம்மா வாங்கிக்கிட்டேன். ஸ்நேகிதங்க எல்லாருமா ஒன்னா சேர்ந்துகிட்டு ரெண்டுதரம் பாண்டிச்சேரிக்குப் போனதுக்கு தேவைப்பட்டுச்சு.. உங்களுக்குப் பிடிக்கலையா..."

பிள்ளை அதிக வருத்தத்தோடு பேச, ரங்கம்மா மனசு பொறுக்காமல் அவசரமாய் தட்டிக் கொடுத்தாள்.

"என்ன தம்பி விளக்கம் எல்லாம் கொடுத்துகிட்டு.. உனக்கு இல்லாததா? விடு இத்தோட அந்தப் பேச்சவிடு... இன்னும் கொஞ்சம் இடியாப்பம் வெக்கட்டுமா?"

அன்றைக்கு அத்துடன் பேச்சை முடித்துவிட்டாலும், காரணம் புரியாமல் சின்னதாக உள்ளுக்குள் என்னமோ நெருட அந்த வெள்ளிக்கிழமை தரகர் நல்லுசாமியை அழைத்து வரச் சொல்லி "பிள்ளை தலை எடுத்திட்டான். எனக்கும் வயசாச்சு தள்ளலை...மருமக ஒருத்தி காலா காலத்துல வந்து பொறுப்புக்களை எத்துக்கிடறது நல்லதுதானே?" என்று கூறி, கையோடு நல்ல இடத்துப் பெண்களின் ஜாதகத்தைத் தேர்ந்தெடுத்துப் பொருத்தம் பார்க்கும்படி பணித்தாள்.

## 5

என் பிள்ளைக்கென்ன—சரியான இளவரசன்—பெயரில் மட்டுமல்ல குலம், கோத்திரம், பணம், அந்தஸ்து உருவம் எல்லாவற்றிலுமே அசல் ராஜகுமாரன்தான். இத்தனை



நாள் இவன் திருமணத்துக்கு என்ன அவசரம் என்று நான் தான் முனைப்பாக இல்லை. 'உன் பிள்ளைக்குக் கல்யாணம் எப்போது?' என்ற கேள்வியுடன் வந்தவர்களிடம் பிடி கொடுத்துப் பேசவில்லை. 'இப்போதும்' என்று பச்சைக் கொடி காட்டிவிட்டேன். இனி, பெண்ணைப் பெற்றவர்களெல்லாம் நான், நீ என்று அடித்துப் பிடித்துக் கொண்டு முண்டப் போகிறார்கள். அந்தப் பெரிய பண்ணைப் பெண், இந்த மிராசுமகள் என்று ஊர்பட்ட ஜாதகங்களை தூக்கிக் கொண்டு வந்து தரகர் நல்லுசாமி என்னை உட்கார விடாமல் தொணதொணக்கப் போகிறார். நிச்சயம், கண்ட இடங்களைப் பற்றி எல்லாம் நல்லுசாமி பேச இடம் கொடுத்து விடக்கூடாது.

பணம், அந்தஸ்து, அழகு, குணம் நிறைந்த பெண்களில் நல்லதாக நாலைத் தேர்ந்தெடுத்து பெண் பார்க்கப் போக ஒப்புக்கொள்ள வேண்டும். ராஜா நல்ல அழகு - அதனால் அவனுக்கு வருபவளும் சிகப்பாக நிறைய தலைமுடி உள்ளவளாக இருக்க வேண்டும். ரங்கம்மாவின் மருமகள் என்று சொன்னால் இரண்டாம்தரம் நிமிர்ந்து பார்க்கிற மாதிரி இருக்க வேண்டும். ராஜா கார் ஒன்று வேணும் என்று ரொம்ப நாளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறான். பெண்ணைப் பெற்றவரிடம் புதுசாய், நல்ல வண்டியாய் எங்கள் அந்தஸ்துக்குத் தகுந்த மாதிரி வாங்கித் தந்து விடுங்கள் என்று உறுதியாய் கூறிவிடவேண்டும். பெண்ணுக்கு நாலு கல் வைர அட்டிகை முக்கியம். என்னுடையதை, எனக்குப் பிற்காலம் மருமகளுக்குத்தான் தரப்போகிறேன் என்றாலும் இப்போது அவளைப் பெற்றவர் தன் பங்குக்கு வைர அட்டிகை, வளையல்கள் போட்டால்தான் எடுப்பாக இருக்கும், பின்னே? எடையாளம் பெரிய பண்ணை வீட்டுக்கு மருமகளாக வருவது என்றால் சும்மாவா?

அப்புறம்...

K

தரகரை அழைத்து என் மகனுக்கேற்ற மருமகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வாருங்கள் என்று சொன்ன நாளாய் ரங்கம்மாவுக்குள் என்னென்னவோ கற்பனைகள்...

இப்படி வண்ண வண்ணமாய் கனவு கண்டு கொண்டிருந்ததை நனவாக்கும் நிறுவில் தரகர் இரண்டு வாரங்களாகியும் எட்டிக்கூடப் பார்க்காமல் இருக்க, 'என்னடா இது!' என்கிற வியப்பே ரங்கம்மாவுக்கு உண்டானது.

உள்ளூர் பெண்கள் அத்தனை உயர்வாக இல்லை, என்று மெட்ராஸ், கிட்ராஸ் பக்கம் பெண்களைத் தேடிக் கொண்டு போய்விட்டாரா?

பட்டணத்தில் வளர்ந்து படித்த பெண்ணா?

பட்டணத்துப் பெண் என்றதும் ரங்கம்மா கொஞ்சம் யோசித்தாள்.

நம் சூழ்நிலைக்கு அவள் சரிப்பட்டு வருவாளா?

பார்க்கலாம்—தரகர் லிஸ்டு போட்டுச் சொல்லட்டும். எல்லா விவரங்களையும் கேட்டு புகைப்படத்தையும் பார்த்த பின்னர் நமக்கு எது தோதுபடும் என்று தீர்மானிக்கலாம்.

மேற்கொண்டு பதினைந்து நாட்கள் சென்றும் தரகர் வந்து எந்தச் சேதியும் சொல்லாமல் இருக்க, இனியும் தாள மாட்டாததுபோல நல்லுசாமிக்கு ஆள்விட்டு அனுப்பினாள் ரங்கம்மா.

இவள் இரண்டுதரம் சொல்லி அனுப்பின பிறகு வந்து ஊஞ்சலருகில் தயக்கத்துடன் நின்ற தரகர் முகத்தில் துளி பரபரப்போ, மகிழ்ச்சியோ இல்லை.

"உட்காருங்க... என்ன ஆளையே காணோம்...வெளியூர் போயிருந்தீங்களா?"

"அ.. அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க..."



"போன வாரமே வருவீங்கன்னு எதிர்பார்த்தேன்..."

ரங்கம்மாவின் கேள்விக்குப் பதில்கூறாமல் தரகர் தலையை குனிந்து கொள்ள—முதல் முறையாக எதற்காக இந்த மனுஷர் இந்தத் தயக்கம் தயங்குகிறார் என்கிற பயம் ரங்கம்மாவுக்குள் எட்டிப் பார்த்தது.

அவராக ஏதாவது பேசுவார் என்று எதிர்பார்த்தபடி சில நிமிஷங்களுக்கு அப்படியே உட்கார்ந்திருந்தவள், அப்படி அவர் எதுவும் பேசத் துவங்காமல் இருக்க, தானே பேச்சை எடுத்தாள்.

"போன மாசம் உங்ககிட்ட ஒரு சுப காரியத்தைப் பத்திப் பேசினேன்..."

"......."

"அது சம்பந்தம்மா ஏதாவது விசாரிச்சீங்களா? தம்பி ஜாதகத்தோடு எத்தனை ஜாதகம் சேர்ந்துச்சு? பொண்ணைப் பெத்தவங்களைப் பார்த்துப் பேசினீங்களா? விவரமா நீங்களா வந்து பேசுவீங்கன்னு எதிர்பார்த்திட்டிருந்தேன். உங்களுக்கு வேற ஏதாச்சும் முக்கியமான ஜோலி இருந்திச்சு போல..."

இப்போதும் நல்லுசாமி தலையைக் குனிந்துகொண்டே அமர்ந்திருக்க, பொறுமை இழந்த ரங்கம்மா சுள்ளென்று விழுந்தாள்.

"அட என்னாச்சு உமக்கு? கல்யாணப் பெண்ணாட்டம் ஏன் இப்படி தலை குனிஞ்சிட்டு உட்கார்ந்திருக்கீர்? சட்டு புட்டுனு விஷயத்தைச் சொல்லப் போறீரா இல்லையா? ம்?"

நல்லுசாமி நிமிர்ந்தார். எச்சில் கூட்டி விழுங்கினார். இனியும் தாமதித்தால் ரங்கம்மா பின்னிவிடுவாள் என்கிற பயத்தோடு பரிதாபமாய் விழித்தார்.

"என்னத்துக்காக ஆடு திருடின கள்ளனாட்டம் இருக்கிறீர்? வாயில் என்ன? புகையிலையா?"

"வந்தும்மா... நா... வந்து... நீங்க அன்னிக்கு என்னக் கூப்பிட்டு நல்ல எடமா பாருனு சொன்ன உடனேயே, காரியத்துல எறங்கத்தான் செஞ்சேன். ஆனா..."

"என்னய்யா ஆனா, ஆவனான்னு இழுக்குறீர்?"

நல்லுசாமி தோளில் கிடந்த துண்டால் முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டார்.

வறண்டுவிட்ட உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டார்.

"வந்தும்மா..."

"அட... என்னய்யா உங்களோட பெரிய ரோதனையாப் போச்சு... விஷயத்த சொல்லப்போறீரா இல்லியா? என்னவோ ஏதோனு எனக்கு இப்பவே தேகம் நடுங்குதுயா...?"

"அம்மா—நா சொல்லப் போறதக் கேட்டு நீங்க என்னண்ட கோபிக்கக் கூடாது. நானா எதையும் கற்பனை பண்ணிச் சொல்லல... கேள்விப்பட்டதைதான் சொல்லப் போறேன்... நீங்க வீணா என்மேல வருத்தப்படக் கூடாது..."

ரங்கம்மா முன்னால் சாய்ந்து உட்கார்ந்தாள்.

"என்னத்துக்காக இத்தன நீளமா பீடிகை போடுறீர்? என்னத்த கேள்விப் பட்டீர்—இப்படித் தயங்குறீர்? ம்?"

"அம்மா... வந்து... ராஜா தம்பியோட ஜாதகத்த இத்தனை நாளா அவசியம் ஏற்படாததால கையில் எடுத்துப் பார்க்கல... நீங்க சொன்ன பிறகுதான் பார்த்தேன்... வந்து"

"செவ்வாய் தோஷம் ஏதாச்சும் இருக்காயா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே..."

"அப்புறம்"



"குறைஞ்சபட்சம் ரெண்டு மனைவிகளாவது இருப்பாங்கனு ஜாதகம் சொல்லுது..."

ரங்கம்மா கண்களை விரித்துக் கொண்டு எதிரில் இருந்தவரை ஏறிட்டாள். பின், 'பூ' இதுதானா என்கிற மாதிரி சிரித்தாள்.

"சரியான போக்கத்த மனுஷய்யா நீர்... ஒண்ணுமே இல்லாதத பெரிசு பண்ணிகிட்டு... ராஜாவோட அப்பா ஜாதகம் கூடத்தான் ரெண்டாவது தாலி கட்டுவார்னு சொல்லிச்சுனு சொன்னாங்க... அறுவதாங்கல்யாணம் நடத்தப்ப எனக்குத்தான் அவரு ரெண்டாவது தாலி கட்டினார்... நல்ல மனுஷய்யா நீர்... சரி... சரி வேண்டாத பேச்சுக்களை பேசிட்டு நிக்காம பொண்ணுகளப் பத்தின வெவரங்களச் சொல்லுங்க..."

நல்லுசாமி மீண்டும் தயங்ினார்.

"அம்மா, நா சொல்றதைக் கேட்டு நீங்க வருத்தப்படக் கூடாது..."

"திரும்பி ஆரம்பிச்சுட்டீரா?"

"அதில்லம்மா வந்து கடலூர் லோகநாதன் வீட்டுக்கு அவரோட மூத்த மகள நம்ம ராஜாத் தம்பிக்குக் கேக்கலாம்னு போயிருந்தேன்..."

ரங்கம்மா கண்களை இடுக்கிக் கொண்டாள்.

"யாரு? ஆயில் மில்ஸ் வைச்சிருக்காரே அந்த லோகநாதன் தானே?"

"அவரேதான்... மூத்தமக காலேஜ்ல மூதவருஷம் முடிச்சப்புறம் படிப்ப நிப்பாட்டிட்டா... நல்ல பொண்ணு... அழகு... குணவதி... நம்ப ராஜா தம்பிக்கு ஏத்த எடம்னு போனேன்... ஆனா....

என்ன என்பதுபோல ரங்கம்மா சரக்கென்று நிமிர்ந்தாள்.

"லோகநாதனைப் பார்த்து விவரம் இப்படினு சொன்னேன். அவரு என்னடான்னா... வந்து... 'அந்த பிள்ளை வேணாம் வேற எதாச்சும் நல்ல எடமா சொல்லுங்க'னு முகத்துல அறைஞ்சா மாதிரி சொல்லிட்டாரு..."

கேட்டதை நம்ப முடியாமல் ரங்கம்மா முதலில் திகைத்தாள். பின்னர் கோபத்துடன் கேட்டாள்.

"என்னது? ராஜா தம்பிய வேணாம்னுட்டாரா? ஏன்?"

"அதுவந்தும்மா..."

"இப்ப நீர் இழுத்துப் பறிக்காம பேசப் போறீரா இல்லியா?"

"ராஜாத் தம்பியப் பத்தி அவர் அத்தனை சுத்தியா கேள்விப்படலியாம்."

"என்னது... என்னது?"

குரலை உயர்த்தி ரங்கம்மா அதட்ட, பயத்தில் நல்லுசாமி எழுந்து நின்று கொண்டார்.

"இதுக்குதாம்மா நா முதல்லியே—நீங்க கோவிக்கா தீங்கனு சொன்னேன்..."

"என்ன சொன்னீர், இன்னொரு தரம் சொல்லும்..."

நல்லுசாமி குரலை வெகுவாகத் தாழ்த்தி விட்டார்...

"தம்பியப் பத்தி என்னென்னவோ சொல்றாங்கம்மா..."

"என்ன சொன்னாங்க?"

"........"

"சொல்லப் போறீரா இல்லியா?"

"இந்தச் சின்ன வயசுலேயே குடிக்கறாராம்...நல்ல சகவாசம் இல்லியாம். பாண்டிச்சேரில மாலினி மாலினினு ஒரு நாட்டியக்காரியாம்... அவளோட..."



அவர் முடிக்கும் முன், ரங்கம்மா குறுக்கிட்டு "நிறுத்தும்" என்று கத்தினாள்

"என்ன திமிர் இருந்தா அந்த லோகநாதன் எம்மகனைப் பத்தி நாக்குல பல்லுபட இந்த சீரில பேசுவான்? ஏ? அவனுக்குப் பணம் இருந்தா, அது அவனோட... இவனை மாதிரி நாலு மில் காரங்களை நா வாங்கக்கூடியவ. தெரியும் இல்லே? புதுப் பணக்காரன் இல்லை, வேற எப்படிப் பேசுவான்? என்னமோ சொல்லுவாங்களே அல்பனுக்குக் காலம் வந்தா அர்த்த ராத்திரியிலே குடை பிடிப்பான்னு... அந்தக் கதையா இல்ல இருக்கு... என்ன பரம்பரை நம்மளது... நம்ம தம்பியப் பார்த்து... அடப்பாவி நல்லா இருப்பானா அவன்? குடும்பம் விளங்குமா?"

இரண்டு கைவிரல்களையும் சொடுக்கி ஆவேசத்துடன் சாபம் கொடுத்த ரங்கம்மா... ஊஞ்சலிலிருந்து எழுந்து இப்படியும், அப்படியும் நடந்தாள். கோபம் தணியாமலேயே கத்தினாள்.

"இவன் மகளை விட்டா என் மகனுக்கு வேற பொண்ணே கிடைக்க மாட்டாளா, என்ன? இவனைவிட பெரிய எடமாப் பார்த்து நாம கல்யாணம் பண்ணி, அந்தச் சேதி கடலூர் வரைக்கும் போயி அவன் காதுல அறையணும். முகத்த எங்க கொண்டு வச்சிக்கிறதுன்னு அவன் தவிக்கணும்... அப்பத்தான் எனக்கு நிம்மதி... அந்தாளுதான் பொறாமையில உளறினான்னா, நீரும் விவஸ்தைக் கெட்டு என்னண்ட வந்து சொல்றீரே... சரி அந்தப் பேச்ச விடும். விழுப்புரத்தில கோவிந்தராஜன் இருக்காரில்ல... அவர் மகள ஒரு தரம் மணகுள விநாயகர் கோவில்ல வச்சுப் பார்த்தேன்... கண்ணுக்கு லட்சணமா இருக்கா... நமக்கு ஏத்த இடம்... அங்க போய் ஜாதகம் வாங்கிவாரீரா?"

"வாங்கப் போறேம்மா... அங்கயும்."

அரை குறை வாக்கியத்தில் நல்லுசாமி நிறுத்த, ரங்கம்மா அவரை வெறித்தாள்.

"அங்கயும் கூடுறா கதைதாம்மா. "கிளிய வளர்த்து பூனை கையில கொடுக்கச் சொல்றீங்களே, நீங்களும் ரெண்டு பொண்ணுங்களுக்கு அப்பன்தானேனு இன்னும் காட்டமா கேட்டுட்டாங்கம்மா..."

அடுத்து வந்த அரைமணியில் மன்னார்குடிப்பட்டு ராமசாமி, நெல்லிக்குப்பம் கோதண்டம், திண்டிவனம் சுந்தரம், சென்னை கல்யாணராமன், சேலம் பத்மநாபன்—என்று தங்கள் சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பெரிய இடமாக ரங்கம்மா வினவ, அத்தனைக்கும் தான் ஏற்கனவே சொன்ன பதிலையே நல்லுசாமி கூற, ஒரு வழியாய் உண்மை நெஞ்சைத் தாக்க, ரங்கம்மா அரண்டு போனாள்.

"பணம் இருந்தா ஆச்சா? யார்கிட்ட இல்ல பணம்? மக, நிம்மதியா வாழறது இல்லே முக்கியம்? குடிகார பிள்ளையக் கட்டி வச்சிட்டு, வாழ்நாள் பூரா அழுதிட்டு இருக்கச் சொல்றீங்களா?னு கேக்கறாங்கம்மா"

"எந்தத் தைரியத்தில படி ஏறி வந்து அந்தப் பையனுக்கு எங்க மகளை கேக்கறீங்க? குடி, ரேஸ், பொம்பளைன்னு இன்னும் ஒரு பழக்கத்தை எடையாளம் பையன் பாக்கி வைக்கலைங்கறது உமக்குத் தெரியுமா, தெரியாதா?-னு கத்தறாங்கம்மா."

"பிள்ளையா வளர்த்திருக்குறாங்க அந்தம்மா— கோவில் மாட்ட இல்ல வீட்டுல செல்லமாப் பெத்து வளக்கறாங்க... அதுக்கு ஏத்த எடமா பாருங்க... இங்க வராதிங்க'னு விரட்டிடாங்கம்மா..."

"நம்ம தம்பியப் பத்தி நா என்னென்னமோ கணிச்சிருந்தேன். சின்னப் புள்ளை விளையாட்டா இருக்காருனு எண்ணி இருந்தது தப்புனு நாலு எடத்துக்குப் போய் விசாரிக்கக் கொண்டு புரியுது. இதெல்லாம் கேட்டா நீங்க தாளமாட்டீங்கன்னுதான் உங்களப் பார்க்க வராம நானே தவிச்சிட்டு இருந்தேன்."



ரங்கம்மாவின் மௌனம் துணிச்சலைத் தர, கேள்விப் பட்டதை எல்லாம் ஒன்று விடாமல் கொட்டிவிட்டு, தப்பித் தோம், பிழைத்தோம் என நாகர் புறப்பட்டுப் போக சாமி அறையில் கதவை சாற்றிக் கொண்டு, ரொம்ப நேரத்துக்கு அன்று ரங்கம்மா அழுது தீர்த்தாள்.

பிறகு, கொஞ்சம் தெளிந்து மறுநாளே தான் என்ன செய்யவேண்டும் என்கிறதை தீர்மானித்து, வெளியில் வந்து, முகத்தைக் கழுவிக்கொண்டவள் "பெருமாளு காபி கொண்டா" என்று குரல் கொடுத்தாள்.

## 6

"கணக்கு..."

"........"

"டே... ஆருடா அங்க...?"

இந்த முறை ஏழுமலை அவசரமாய் வாசப்பக்கத்திலிருந்து எட்டிப் பார்த்தான்.

"கணக்குப் பிள்ள எங்கடா?"

"ஸ்டோர் ரூம்புல இருக்காரும்மா... கூப்பிடவா?"

"என்ன செஞ்சிட்டிருக்காரு?"

"பைரவன் வந்திருக்கான்... மல்லாட்டைல பூச்சி விழுந்திருக்கு. அதுக்கா வேண்டி மருந்து எடுத்துக் கொடுத்துட்டு இருக்காரு..."

"சரி சட்டுபுட்டுனு எடுத்துக் கொடுத்திட்டு இங்க வரச் சொல்லு... முக்கியமான ஜோலி ஒண்ணு இருக்கு..."

''இதோ சொல்லிடறேம்மா...''

எழுமலை நகர, தரையை லேசாக உதைத்து ஊஞ்சலை ஆட்டிய ரங்கம்மா, சொல்ல வேண்டியவைகளை, செய்ய வேண்டியவைகளை மனசில் ஒருதரம் நினைத்துப் பார்த்தாள்.

''அம்மா கூப்டீங்களா?''

கணக்குப்பிள்ளை வீராகவன்.

''ம்ம்... மருந்து கொடுத்து வைரவனை அனுப்பிட்டீங்களா?''

''அனுப்பிட்டேம்மா...''

''பச்சுவமா பைய அடிக்கச் சொன்னீங்களா?''

''சொல்லிட்டேம்மா...''

''ம்ம்... உட்காருங்க''

தலை போகிற வேலையாக இருந்தாலொழிய எஜமானியம்மாள் தன்னை உட்காரச் சொல்லமாட்டாள் என்பதை அனுபவத்தில் உணர்ந்திருந்த வீரராகவன் ''இருக்கட்டும்மா..., நீங்க விஷயத்தச் சொல்லுங்க...'' என்றார்.

ரங்கம்மா குரலைத் தழைய விட்டாள்.

''தம்பிக்கு கல்யாணம் பண்ணி வக்க முடிவு செஞ்சு, இது சம்பந்தமா தரகர் நல்லுசாமி கிட்ட பேசினது உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்.''

ரங்கம்மா நிறுத்த வீரராகவன் பதில் கூறாமல் நின்றார்.

நல்லுசாமியிடம் 'நல்ல பெண்ணாய் பார்த்து வாருங்கள். என்று ரங்கம்மா சொன்னது மட்டும் இல்லை, ஒரு மாசம் போல அவர் இங்கு அங்கு அலைந்து ஒவ்வொரு வீட்டிலும் இவர்களுக்காக கரியைப் பூசிக் கொண்டதுகூட அவருக்குத் தெரியும்.



அவருக்கு மட்டுமென்ன, அந்த எடையாளம் சுற்றுப்புற கிராமங்கள், சொந்தக்காரர்கள் எல்லார் நடுவிலேயும் இப்போது பரவலாக பேசப்படும் வம்பே இதுதானே!

நமக்கு மட்டும்தான் ஒரு சமாசாரம் தெரியும் வேறு யாருக்கும் தெரியாது என்று அறி புத்திசாலித்தனத்தோடு இருப்போம். ஆனால், நம்மைத் தவிர பாக்கி அனைவருக்கும் அந்தச் சேதி எப்பொழுதோ தெரிந்திருக்கும். இன்னும் சரியாகச் சொல்ல வேணும் என்றால், சம்பந்தப்பட்ட குடும்பநபர்களுக்குத்தான் அவர்கள் குடும்பத்தைப் பற்றின சேதி கடைசியாக வந்து சேரும். அதற்குள் ஊர் முழுவதும் இண்டு இடுக்கு விடாமல் சமாசாரம் சந்தி சிரித்திருக்கும்.

ரங்கம்மாவும் இன்று இந்த நிலையில்தான் இருந்தாள்.

என்னமோ ராஜாவைப் பற்றி தரகர் நல்லுசாமி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிவிட்டார். இது அனாவசியமாக ஊருக்குள் பரவுவதற்குள் பெற்றவளாகிய தான் ஆக்கபூர்வமாக ஏதாவது செய்து அந்த வம்பை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்ற துடிப்பில், கண்களை கட்டிவிட்ட குதிரையாக அவள் இருக்க, அந்த நிலையை நன்கு உணர முடிந்தும், அதை வெளிப்படையாக காட்டிக் கொள்ளாமல் அவள் சொல்லப் போகும் விவரத்தைக் கேட்க, கையைக் கட்டிக்கொண்டு வீரராகவன் பவ்யமாக நின்றார்.

''அட கேக்கறேன் இல்ல? பதில் சொல்லாம நின்னா எப்படி? தம்பி கல்யாண விஷயமா நா தரகர் கிட்ட பேசினது தெரியும் இல்ல?''

''தெரியும்மா...''

''அவரு திரும்பி வந்து என்னண்ட சொன்ன பதிலும் தெரியுமா?''

வீரராகவன் மௌனம் சாதித்தார்.

"அட, பதில் சொல்லுமே"

"கடலூர்காரங்க இந்த சம்பந்தம் வேணாம்'னு சொல்லிட்டாங்கனு தெரியும்; மத்தபடி விவரம் எதுவும் தெரியாதுங்க..."

அப்பட்டமாக அவர் பொய் ஒன்றைச் சொல்ல அதை நம்பின ரங்கம்மா முகத்தில் திருப்தி தெரிந்தது.

"அவங்க இடக்கிங்க... புதுப்பணம் வந்த திமிர் பிடிச்சவங்க... நா என்ன யோசிக்கறேன்னா, நமக்கு இல்லாத சொத்தா, பத்தா வசதியா? இந்த வீட்டுக்கு மருமகளா வரவ கொண்டு வந்துதான் நம்ம வீடு நிறையணுமானு! அவ கொண்டு வர்ற சீர் செனத்திகள எங்கெட்டு அடுக்கறதுன்றது தான் நமக்கு யோசனை... என்ன கணக்கு நா சொல்றது?"

வீரராகவன் தயங்காமல் தலையை ஆட்டினார்.

"அதனால நா என்ன நினைக்கறேன்னா, நம்ம வீட்டுக்கு வரப்போறவ குணவதியா, கண்ணுக்கு லட்சணமா இருந்தா மட்டும் போதும்—அவ பணக்காரியா இருக்க அவசியம் இல்லேனு... என்ன கணக்கு நா நினைக்கறது?"

"ரொம்பச் சரியான நினைப்புங்க..."

"நம்ம அந்தஸ்த்துக்கும், பணத்துக்கும் ஆசைப்பட்டுக் கிட்டு பெரிய எடங்க போட்டா போட்டி போட்டுக்கிட்டுதான் வரும்... ஆனா, நிதானிக்கறப்போ அது தேவையில்லேனு பட்டுச்சு அதான், நேத்து தரகர் வந்தப்ப அவரண்ட கூட தீர்மானமா சொல்லிட்டேன் 'எங்களுக்கு இருக்கறதே பத்து தலைமுறைக்கும் போதுங்க அதனால பெரிய எடம் வேணாம் பணங்காசு இல்லாட்டியும் நல்ல குணவதியாப் பாருங்கனு... என்ன நா சொல்றது?"

வீரராகவன் பேசாமல் நிற்க, ரங்கம்மா தொடர்ந்தாள்.



16966 3293ம01

"ராத்திரி கரண்டு நின்னுபோய் தூக்கம் வராம என்னமோ குருட்டு யோசனை பண்ணிக்கிட்டு இருந்தேனா, எனக்கு திடும்னிட்டு திருவண்ணாமலை அண்ணாரு நினைப்பு வந்திருச்சி..."

"யாருங்க நம்ம சாம்பமூர்த்தி அண்ணனையா சொல்றீங்க?"

"அவரேதான்..."

இப்போது ரங்கம்மா உற்சாகத்தோடு பேச முற்பட்டாள்

"நல்ல குடும்பம். எனக்கு அண்ணன் முறை ஆகணும்.. அவருக்குக்கூட அஞ்சு பொம்பளை பசங்க இருக்கு இல்லே கணக்கு?"

ரங்கம்மா தொட்டுக்காட்டும் சாம்பமூர்த்தியையும், அவர் குடும்பத்தையும் மனசுக்குள் வீரராகவன் கொண்டு வந்தார்.

ரங்கம்மாவுக்கு தூரத்து உறவுதான் என்றாலும் இது நாள்வரை அந்தஸ்து காரணமாய் ரொம்ப கிட்டத்தில் வர விட்டதில்லை.

திருவண்ணாமலையில் விவசாயம் பார்த்துக்கொண்டு வாழ்கிறார். நிலபுலன்கள் அதிகம் என்று சொல்ல முடியா விட்டாலும், என்றுமே இல்லை ஒன்றும் ஒதுக்கித் தள்ள முடியாது.

பெரிய குடும்பஸ்தர். ஐந்து பெண்கள். இரண்டு பிள்ளைகள்.

ஆனால் பெண் ஒவ்வொன்றும் தேய்த்து வைத்த வெங்கல குத்து விளக்கு மாதிரி பளபள வென்று இருக்கும்.

மூத்தப்—பெண்ணுக்கு பதினேழோ என்னமோதான் வயது

"ஆச்சு—பொண்ணுங்க தபதப'னு வளர்ந்திருச்சுன்னா அதுங்களுக்கு கல்யாணம், கார்த்தினு—செஞ்சு முடிக்கறத்

துள்ளுள்ள சாம்பு பாடு கிண்டாட்டம்தான்" என்று சமீபத்தில் ஒரு திருமணத்தில் பார்த்தபோதுகூட சாம்பமூர்த்தியைச் சுட்டிக்காட்டி இதர உறவினர் பேசிக் கொண்டிருந்ததை வீரராகவன் அறிவார்.

அந்தக் குடும்பத்துப் பெண்ணுக்கா ரங்கம்மா குறி வைத்திருக்கிறாள்?

"சாம்புவோட மூத்த மகள ரெண்டு மாசம் முன்னால ராஜாராமரெட்டியார் வீட்டுக் கல்யாணத்துல பார்த்தேன். லட்சணமா இருக்குறா. பள்ளிக்கூடப் படிப்பை முடிச்சிட்டு சும்மாதான் வீட்டோட இருக்காளாம். அடக்க ஒடுக்கமா தெரியுறா... நீங்கப் பார்த்திருக்கீங்க இல்ல கணக்கு? நம்ப தம்பிக்கு அவளை முடிச்சிட்டா என்னம்?"

"தங்கம்மா முடிச்சிடலாமா... நல்ல குடும்பம், அழகு குணம், ரெண்டுலேயுமே அந்த ஆனந்திப் பொண்ணு சோடை போகலை..."

ரங்கம்மா பெருமிதத்துடன் சிரித்தாள். என்னை என்ன லேசுபட்டவனு நினைச்சீங்களா—என்கிற திமிர் அந்தச் சிரிப்பில் கலந்திருந்தது.

"நேத்து இந்த யோசனை வந்ததுமே, காலைல பூஜை பண்றப்போ, முருகனுக்கு பூப் போட்டுப் பார்த்தேன். முருகன் உத்தரவு கொடுத்திட்டான். அதான் நினைச்சத உடனே நடத்திடுவோம்ற ஆசைல உங்கள வரச் சொன்னேன்..."

ரங்கம்மா ஊஞ்சல் ஆட்டுவதை நிறுத்தினாள். முன்னால் சாய்ந்து கண்களை இடுக்கிக்கொண்டு பேசினாள்.

"நீங்க என்ன பண்றீங்க. இன்னிக்கு நாள் நல்லா இருக்கு... அதனால உடனே புறப்பட்டு திருவண்ணா மலைக்குப் போய் அண்ணனைப் பார்த்துப் பேசுங்க... நா உங்கள அனுப்பிச்சதா காட்டிக்க வேணாம்... என்ன இருந்தாலும் நாம பிள்ளை வீட்டுக்காரங்க பாருங்க... அப்புறம்



ரொம்பத்தான் தலைக்கு மேல ஏறிப்பாங்க... 'இந்த மாதிரி ரங்கம்மா பணம் காசு இருக்குற எடம் வேணாம். தம்பிக்கு கட்டி வைக்கிற பெண் அழகா குணவதியா இருந்தா போதும்'னு நாகரண்ட சொல்லிவுட்டு இருந்தாங்க. எனக்கு உடனே உங்க மக நினைப்புதான் வந்தது. பெரிய எடம், எதுக்கும் பஞ்சமில்லை... விஷயம் வெளில தெரிஞ்சா நா நீனு ஓடி வருவாங்க... அதுக்குள்ளாற நீங்க முந்திக்கங்க... உறவு முறையைச் சொல்லிகிட்டு நீங்க காரியத்த முடிச்சிடலாம். 'சாம்பு அண்ணன் குணம் யாருக்கும் வராது'னு எங்கம்மா அடிக்கடி சொல்லுவாங்க... அதனால் உடனடியா வந்து பேசி முடிச்சிடுங்க... அந்த பெண்ணை வைச்சுக்கிட்டு எப்படி கரை ஏத்துவோம்னு நீங்க தவிக்கிறது எனக்குத் தெரியும். அதான் காதுல போட்டு வைப்பமேனு ஓடி வந்தேன்'னு சொல்லுற விதத்துல சொல்லி, அவர சம்பந்தம் பேச வரப்பண்ணிடுங்க... என்ன?"

இது நடக்குமா, ராஜாவைப் பற்றின விவரங்களை சாம்பமூர்த்தி கேள்விப்பட்டிருந்தால் எப்படி சமாளிப்பது என்கிற தயக்கத்துடன் வீரராகவன் நிற்க, அந்தத் தயக்கம் புரிந்த மாதிரி குரலை கிசுகிசுப்பாக்கிக் கொண்டு ரங்கம்மா பேசினாள்.

வேண்டாதது எதையாவது நினைச்சு கலங்காதீங்க... இந்த கடலூர்காரங்க வம்பு பேச்சு அவங்களுக்கு கண்டிப்பா தெரிஞ்சிருக்காது... ஒரு வேளை அரசல் புரசலா காதுல விழுந்திருக்கிறதா காட்டிக்கிட்டாங்கன்னா அப்படியெல்லாம் இல்லவே இல்லே—எங்க பிள்ளை தங்கம்—னு ஒரே அடியா போடுங்க... மீறிப் பேசினாங்கன்னா 'இந்தக் காலத்துல இதெல்லாம் சகஜம். பெரிய எடம்னா இப்படி ஏதாச்சும் இருக்கத்தான் செய்யும். துளி இருக்கிறத கூட வயித்தெரிச்சல் பட்ற அடுத்தவங்க, பேசிப் பேசி பத்தாக்கிடுவாங்க... இதப் பெரிசு பண்ணாதீங்க. நாளைக்கு உங்க மக எங்க வீட்டுக்கு வந்துட்டா, தம்பியும் வீடே சொர்க்கம்னு இருந்திடு

மாட்டாராறு பதமாப் பேசி அவங்களை வழிக்குக் கொண்டு வந்திடுங்க... என்ன? வேறு யாரையும் அனுப்பாம உங்களை அனுப்பறத்துக்கு நீங்க பக்குவமா நடந்துப்பீங்கன்ற நம்பிக்கைதான் காரணம். புரியுதா? பொறுப்பா நடந்துக்கங்க... என்ன பேசுவீங்களோ, எப்படிப் பேசுவீங்களோ எனக்குத் தெரியாது கணக்கு. வர்ற முகூர்த்தத்துல நிச்சய தாம்பூலம் நடத்திடணும். கல்யாணத்த ஒஹோனு நடத்தி, நம்ம தம்பியப்பத்தி வீணா அவதூறு பேசினவங்க வாய அடைக்கணும். இதான் எனக்கு முக்கியம்... என்ன புரியுதா?"

ரங்கம்மாவின் பதட்டத்தையும், அவசரத்தையும் நன்றாகவே புரிந்துகொள்ள முடிய, அன்றே வீரராகவன் திருவண்ணாமலைக்குப் புறப்பட்டுப் போனார்.

ரங்கம்மா விரும்பிய விதத்திலேயே சாம்பமூர்த்திக்கு ஆசை காட்டிப் பேசி, அவரை மயங்க வைத்தார்.

''இல்லிங்க அது ரொம்பப் பெரிய எடம்... நமக்கு சரிப்படுமா? நாளைக்கு அவங்க எதிர்பார்க்குற சீர் செனத்தி செய்யாட்டி வீணா வருத்தம்தான் வரும். தவிர பையனோட நடத்தைப்பத்தி... வேணாங்க... அகல கால் வக்கறது வேணாங்க..'' என்று சாம்பமூர்த்தி தயங்கியபோது ''போங்க— இதையெல்லாம் பெரிசுபடுத்திக்கிட்டு... ரத்த சம்பந்தம், உறவு முறை விட்டுப் போகக்கூடாதுனு அம்மாவே நினைக்கிறப்போ, அந்தஸ்து சீருனு.வேண்டாததைப் பேசறீங்களே! தம்பி அடிப்படைல ரொம்ப நல்லதுங்கங்க... சின்ன வயசு, பணம்—எல்லாமா சேர்ந்து கொஞ்சம் துள்ள வைக்குது. யார் வீட்டுல இப்ப இதெல்லாம் இல்ல? பொறுப்பு வந்தா தன்னால சரியாயிடுவாங்க' என்று அடித்துப்பேசியவர் கூடவே, நிச்சய தாம்பூலத்துக்கு சாம்பமூர்த்தி வைக்க வேண்டிய சீர்பணமா லட்ச ரூபாயை ரங்கம்மாவே தந்துவிடுவதாகச் சொன்னதையும், கல்யாணச் செலவு பூராவும் பிள்ளை வீட்டுக்காரர்களுடையதுதான் என்பதையும், பெண்ணுக்கு வைர ...ட்டிகை. வளையல் போடக் கூட ரங்கம்மா தயாராக



இருப்பதையும் எடுத்துவிட, அடிக்கற அடியில் அம்மிக் கல்லே நகரும் என்பார்களே—சாம்பமூர்த்தி சாதாரண மனிதர்தானே, மசியாமலா இருப்பார்!

## 7

''ஆனந்தி...''

''வந்திட்டேன் அத்தே...''

''என்ன செஞ்சிட்டு இருக்கே உள்ளே?''

''தலைக்கு குளிச்சிட்டிருந்தேன்...''

''நல்லா குளிச்சே போ... அரைமணியாச்சி உள்ளார போயி கதவ சாத்திக்கிட்டு... உங்கப்பன் வீட்டுலேயும் இப்படித்தான் குளிப்பியா?''

பதில் கூறாமல் ஆனந்தி நிற்க, ரங்கம்மாவே தொடர்ந்தாள்.

''இங்க குஷியா அரைமணி குளிக்கிற மாதிரி அங்க முடியுமா? ஏழு பசங்க... அத்தனையும் காலா காலத்துல குளிச்சி... பள்ளிக்கோடத்துக்குக் கிளம்பணும். தவிர மூத்த மகன்றதால உங்கம்மாக்காரிக்கு சமயல்கட்டுல உத்தாசை பண்ண வேண்டியிருக்கும்.... இந்தச் சொகுசெல்லாம் உன் பொறந்த வீட்டுல செல்லுபடியாகுமா?... என்ன நான் சொல்றது?''

இதற்கும் ஆனந்தி பேசாதிருக்க, ரங்கம்மா அரை நிமிஷம் சும்மா இருந்துவிட்டு கேட்டாள்.

''தம்பி எழுந்திட்டானா?''

"இன்னும் இல்லே அத்தே..."

"அவன் விழிக்கிற நேரம், இங்க அங்க போய் நிக்காம, கிட்டயே இருந்து, கையோட சூடா போர்ன்விடா கலந்து கொண்டுகிட்டுவா. அஞ்சு நிமிஷம் கூட ஆயிடுச்சுன்னா, அவனுக்குக் கோபம் வந்திடும் ஆமா. கேக்கணும்னு நினைச்சேன். நேத்து நா மைலம் கோவிலுக்குப் போயிருந்தப்போ தம்பிக்கு கோவம் வராப்பல நீ நடந்துகிட்டியா, என்ன? தம்பி ஏகத்துக்கு உன்னண்ட சத்தம் போட்டான்னு பெருமாளும், தனமும் சொன்னாங்களே!"

ரங்கம்மா நினைவுபடுத்தவும் முதல் நாள் நடந்த நடப்புகளை ஆனந்தி மீண்டும் நினைத்துப் பார்த்தாள்.

ராத்திரி ஒரு நாளைப்போல பன்னிரண்டு ஒன்று என்று வீடு திரும்புவதோடு அதற்குமேல் வடகத்தை வறு துவையல் அரை என்று விரட்டுவதும், தொடர்ந்து அர்த்த ராத்திரியை கடந்து விட்ட ஜாமத்தில் இவளை உறங்க விடாமல் ஒருமணி நேரம்போல வம்புக்கு இழுப்பதும், சீண்டுவதும் தாளமாட்டாமல் இருக்க மாமியார் இல்லை. மைலம் கோயிலுக்குப் போயிருக்கிறார்—மனசு விட்டுப் புருஷனிடம் ஏதாவது பேசவென்றால் இதுதான் சரியான சந்தர்ப்பம். தவிர காலை நேரங்களில் மட்டுமே குடிபோதை இல்லாமல் தெளிவுடன் இருக்கிறார்-ஆக மனதில் இருக்கும் குறைகளைப் புருஷனிடம் கூற இதைவிட நல்ல சமயம் கிடைக்காது என்று மனக் கணக்குப் போட்டுக் கொண்டு தூங்கி எழுந்தவனிடம் போர்ன் விடாவை நீட்டி, "என்னங்க உங்ககிட்ட..." என்று ஆரம்பித்தது தப்புக் கணக்காகி விட்டது.

போர்ன்விடாவை உறிஞ்சிய ராஜா முகத்தைச் சுளுக்கினான்.

"கல்யாணமாகி ஆறுமாசமாகப்போவுது இன்னமும் திட்டமா போர்ன்விடா கலக்க உனக்கு வரல... ஒருநாள்



சூடு அதிகமா இருந்து, உதட்டைப் பொசுக்குது... இன்னொரு நா வெதுவெதுனு பூனை மூத்திரமாட்டம் இருக்குது... இன்னிக்கு சர்க்கரை அதிகம்... பாணகமா இருக்குதுனு சொன்னா மறுநாளைக்கு இனிப்பே இல்லாம, கஷாயமா கொடுக்கிறே...ம்? இந்த சின்ன காரியத்தக் கூடவா கவனமா உன்னால செய்ய முடியல?...எங்கம்மா கொடுத்தாங்கன்னா கச்சிதமா இருக்கும். தெரியாட்டி அவங்காத்தான் கேட்டுக்கயேன்...நானும் நாலுதரம் சொல்லிட்டேன்... நீ என்னடான்னா காதுலியே வாங்க மாட்டேன்றே..."

ஒன்றுமே இல்லாம போர்ன்விடா விஷயத்துக்கு நீளமாய் கணவன் லெக்சர் அடிக்க சரி இன்று இவர் மன நிலை சரியாக இல்லை, இப்போது எந்தப் பேச்சையும் எடுப்பது தவறு என்று தனக்குத்தானே முடிவு செய்து கொண்ட ஆனந்தி பேசாமல் இருந்தாள்.

காலி டம்ளரை மனைவியிடம் நீட்டிய ராஜா, "என்னமோ சொல்ல வந்தியே, என்ன?" என்று தானாகப் பேச்சை எடுத்ததும், இப்போது என்ன செய்வது என்று ஆனந்தி பேசாமல் இருந்தாள்.

"ம்?"

"போர்ன்விடாவ கொடுத்திட்டு 'என்னங்க'—னு ஆரம்பிச்சியே..."

"ஒண்ணும் இல்லீங்க..."

"ப்ச்... இதான் எனக்குப் பிடிக்காது. சொல்ல வந்தத சொல்லிடணும்... மூடி மறைக்கறது தப்பு."

கணவன் தந்த தைரியம் ஆனந்தியைப் பேச வைத்தது.

"வந்துங்க... நிதமும் ராத்திரி லேட்டா வரீங்களே... இது உடம்புக்கு நல்லதில்லேன்னு..."

பேசியவளை ராஜா நிமிர்ந்து பார்த்தான்.

"இவ்வளவுதானா, இன்னும் இருக்கா?"

அந்தக் குரலிலோ, கண்களிலோ கோபத்தின் சாயல் பளபளக்காமல் இருக்க, வாஸ்தவமாகவே கணவன் தான் சொல்ல வருவதைக் கேட்டக விரும்புகிறான் என்கிற மகிழ்ச்சியில் ஆனந்தி வேகமாய் பேசினாள்.

"கண் விழிக்கிறது மட்டுமில்லீங்க, தினமும் நீங்க குடிக்கிறது கூட எனக்குப் பிடிக்கலீங்க. உடம்பு கெட்டுப் போயிடுமோன்னு கவலையா இருக்கு. அத்தை வேற, 'ஆறு மாசமாச்சு. இன்னும் மாசம் தப்பாம உட்கார்ந்துடறே'ன்னு அறுத்துக்கறாங்க... பொழுதோட வீட்டுக்கு நீங்க வந்திட்டீங்கன்னா, எல்லாத்துக்கும் வசதியா..."

வெட்கம் ஆளை அமுக்க கடைசி வார்த்தைகளை மிகுந்த தயக்கத்தோடு ஆனந்தி பேசி நிறுத்த, ராஜா முடிஞ்சிடுச்சா இன்னும் பாக்கி இருக்கா?" என்றான் அடிக்குரலில்.

உரிமையோடு கணவனிடம் பேசிவிட்ட ஆனந்தி அந்தக் குரலில் காணப்பட்ட கடுமையில் பயந்துபோனாள்

"என்னங்க நா ஏதாச்சும் தப்பா..."

அவள் முடிக்கும் முன்னர் ராஜா உறுமினான்.

"சேச்சே.. நீங்களாவது தப்பா ஏதாச்சும் பேசுறதாவது? அதெல்லாம் இல்லீங்க, இன்னும் என்னென்ன புகார் படிக்கணுமோ, ஒரு வழியா முடிச்சிடுங்க கேட்டுக்கறேன்..."

"......"

"என்னடி, உன் மனசுல என்னதான் நினைச்சிட்டு இருக்கே.. ம்? போனாப் போறதுனு இடம் கொடுத்தா, தலைக்கு மேலியே ஏறிக்கறே? ராத்திரி நா லேட்டாதான் வருவேன் — என் இஷ்டம் போலத்தான் குடிப்பேன்...



எங்கம்மாவே இதுநாள் வரைக்கும் ஒண்ணும் சொல்லாம இருந்திருக்காங்க, நேத்து வந்த நீ, எனக்குப் புத்தி சொல்ல வந்திட்டியா? அடி சக்கை. நல்ல திமிருதாண்டி. உன்னை வைக்கிற எடத்துல வக்கணும். அப்பத்தான் புத்தி வரும். இனிமேலேந்து பன்னிரெண்டு இல்ல, விடிஞ்சுதான் வீட்டுக்கு வரப்போறேன்... நீயும் தூங்காம எனக்காகக் காத்திருக்கணும். புரியுதா? நா ஆம்பிளை என்ன வேணா செய்வேன். நீ பொட்டச்சி...நா காலால இடற வேலையை தலையால செஞ்சிட்டு, வாய மூடிட்டுக் கிடக்கணும்... புரியுதா? இன்னொரு ட்ரிப் வாயத் திறந்தே, நடக்கறதே வேற ஆமா..."

வீடு பூராவும் கேட்கும்படி கத்திவிட்டு ராஜா படுக்கையில் சாய்ந்து கொள்ள, பீறிட்டு எழுந்த அழுகையை அடக்கத் தெரியாமல், தலையை குனிந்தபடி ஆனந்தி ஓட்டமாய் பின்கட்டைப் பார்க்க ஓடிவிட்டாள்.

அரைமணியில் குளித்து, தயாராகி, புதிதாய் வாங்கியுள்ள அம்பாஸிடர் வண்டியை எடுத்துக்கொண்டு வெளியே போனவன், சொன்னமாதிரியே அன்று வீடு திரும்பும்போது விடிகாலை மணி இரண்டு.

நல்ல வேளையாய் மாமியார் வீட்டில் இல்லை. நடந்த பேச்சு வார்த்தை அவருக்குத் தெரியவேண்டாம் என்று ஆனந்தி நினைத்திருந்ததில் பெருமாளும், தனமும் மண்ணை வாரிப் போட்டு விட்டார்கள்.

"என்ன ஆனந்தி—நா கேட்டது காதுல விழுந்துச்சு இல்ல? நேத்து தம்பிக்குக் கோவம் வர்ற மாதிரி நீ என்ன செஞ்சே?"

"ஒண்ணுமில்ல அத்தே.. தினமும் ராத்திரி லேட்டா வர்றீங்களே, உடம்பு கெட்டுப்போயிடப் போகுதேனு சொன்னேன்... அதைக் கேட்டுதான் அத்தானுக்குக் கோவம் வந்திருச்சு..."

ரங்கம்மா எரிச்சலுடன் முகத்தைக் கோணினாள்.

''வயசுப்பிள்ளை, ஸ்நேகிதங்களோட இங்க அங்க போயிட்டு வர்றது சகஜம் தானே... இதுப்போயி யாராச்சும் பெரிசு பண்ணுவாங்களா? ஆனாலும் உனக்குத் தைரியம் தாண்டிம்மா... புருஷனை நிமிர்ந்து பார்த்து 'ஏன் லேட்டா வர்றீங்க'னு? கேட்டிருக்கிறியே — என் பிள்ளை யாகக் கொண்டு ரெண்டு வார்த்தையோட விட்டுடுச்சு.— இன்னொருத்தர் வீட்டு ஆம்பிளையா இருந்தா 'பொட்டச்சி உனக்கு என்னா திமிருடீ'னு வாயிலியே போட்டிருப்பான்... ஹூம்... அடக்க ஒடுக்கமான பொண்ணுனு நம்பித்தான், பணங்காசு இல்லாட்டியும் பரவாயில்லே'னு உன்னைக் கட்டி வச்சேன்... என் நம்பிக்கையப் பொய்ச்சிடாத... அதான் நா சொல்வேன்... சரி... சரி... பேசிட்டு நிக்காம தம்பி எழுந்திட்டானானு பாரு... போ...''

திரும்பி நடந்தவளை ரங்கம்மா ''ஏய் நில்லு'' என்று நிறுத்தினாள்.

''இங்க வா...''

ஆனந்தி கிட்டத்தில் வந்தாள்.

''வைரத்தோடுல எண்ணெய் எறங்கின மாதிரி கறுப் பாருக்குதே... தோட்டை போட்டுகிட்டே எண்ணைய் தேய்ச்சு குளிச்சியா என்ன?''

''இல்ல அத்தே...கழட்டி வச்சிட்டுதான் குளிச்சேன்... நீங்க கூப்பிட்டதும் போட்டுகிட்டு வந்தேன்...

''அதென்னமோ ...புதுசா செஞ்சாமாதிரியே இல்ல... டளபளப்பு குறைஞ்சி கறுப்பு அடிக்குது...நல்ல வைரம் தானே...?''

''சிங்கப்பூர் ப்ளூ ஜாக்கர்னு ஆசாரி சொன்னார் அத்தே... வீட்டுல வச்சு அப்பாவே கிட்ட உட்கார்ந்து கட்டினாரு...''



ரங்கம்மா உதட்டைப் பிதுக்கினாள்.

''பார்த்தா அப்படியொண்ணும் உசத்தியா எனக்குத் தெரியல...தோட்ட கழட்டி, வெந்நீரில சோப்பப் போட்டு ஊறவைச்சி தேய்ச்சுப்பாரு... சுத்தமா துடைச்சிட்டு, விபூதியப்போட்டு பாலீஷ் வர்ற மாதிரி தேய்... அப்பவாவது பளிச்சினு இருக்குதானு பார்ப்பம்.''

தலை ஆட்டிவிட்டு உள்ளே போன ஆனந்தி கணவன் புரண்டு கொடுப்பதைப் பார்த்துவிட்டு சமயல் அறைக்குச் சென்று போர்ன்விடாவை கலந்து எடுத்து வந்து, அவன் அருகில் நின்று 'என்னங்க' என்று மெதுவாய் குரல் கொடுத்தாள்.

இரண்டாவது தரம் கூப்பிட்ட பிறகு கண்களைத் திறந்த ராஜா, அவளை சில நொடிகளுக்கு வெறித்து விட்டு கண்களை மீண்டும் மூடிக் கொண்டான்.

கொஞ்சம் காத்து பார்த்தபின், திரும்ப 'என்னங்க' என்று ஆனந்தி அழைக்க, ''சட், தூங்கவிட மாட்டேங் கறியே'' என்ற முணுமுணுப்புடன் ராஜா எழுந்து உட்கார்ந்தான்.

''போர்ன்விடாங்க...''

''அப்படி வைச்சிட்டுப் போ...''

அவன் சொன்னான் என்பதற்காக உடனே போய் விடாமல் டம்ளருடன் அங்கேயே ஆனந்தி நிற்க, ''சரியான தொணதொணப்பு'' என்றபடி போர்ன்விடாவை ராஜா கையில் வாங்கிக் கொண்டான்.

ஒரு வாய் குடித்தவன், அதை விழுங்காமல் மீண்டும் டம்ளரிலேயே துப்பிவிட்டு ''தூ'' என்றான் எரிச்சலுடன்.

''நேத்துகானே அத்தனை தரம் படிச்சி சொன்னேன் திரும்ப இன்னிக்கு வெதவெதனு கொண்டாந்திருக்கியே

K

உன் மனசுல என்னதான் நினைச்சிட்டிருக்கே?"

"இல்லீங்க... சூடாதான் கலந்தேன்... கொண்டு வந்து பத்து நிமிஷம் ஆனதுல ஆறிடிச்சுங்க..."

"ஆமா ஏதாவது நொண்டிச் சாக்கு சொல்லிடுவியே! தத்... மனுஷன் குடிப்பானா இத அம்மா எங்க? கூடத்துலதானே இருக்காங்க... அம்மா... அம்...மா... ஆ.."

உரக்க ராஜா கத்திய மறு நிமிஷம் வேகமாய் கதவைத் திறந்து கொண்டு "என்ன தம்பி" என்று கேட்டபடி ரங்கம்மா உள்ளே வந்தாள்.

"இங்க பாருங்கம்மா... இத தொட்டுப் பாருங்க.."

நீட்டிய டம்ளரைத் தொட்ட உடனே ரங்கம்மா முகம் சுளித்தாள்.

"என்ன தம்பி இது சூடே இல்லாம .."

"அதாம்மா நானும் கேக்கறேன்... தினமும் இதே ரோதனைதான். ஒரு நாள் வாய்... பொசுங்கும் இன்னொரு நாள் இப்படி! இந்த அளவுக்குக்கூடவா ஒருத்தியால கவனக் குறைச்சலா இருக்க முடியும் "

ரங்கம்மா மருமகள் பக்கம் திரும்பினாள்.

"ஏண்டி... இந்த சின்ன காரியத்தக் கவனமா செய்யறது கூடவா உனக்கு வணங்கல? என்னடி வளர்த்திருக்காங்க உன்னைப் பெத்தவங்க? பொம்பளைன்னா ஒரு பதவிசு வேணாம்? தம்பியும் எத்தனை ட்ரிப் சொல்லிடுச்சு...ம்? வரட்டும் உங்கப்பா... கேட்டுக்கங்க பொண்ணோட வட்சணத்த-னு சொல்லிடறேன்.. மரமாட்டம் நிக்காத... போய் வேற கலந்து எடுத்திட்டு வா."

டம்ளரோடு ஆனந்தி போனதும், அவள் காதுபடவே ரங்கம்மா புலம்பினாள்.



"பெரிய எடத்துப் பொண்ணுனா திமிரா இருக்கும்னு இவளத் தேர்ந்தெடுத்துக் கட்டி வச்சேன்... இவளானா இப்படி வணங்காமுடியா இருக்குறாளே! நா என்னடா தம்பி பண்ணுவேன், நா ஒருத்தி இருக்கறப்பவே இவ இந்த ஆட்டம் போடுறாளே, நாளைக்கு எனக்கு ஏதாச்சும் ஆயிடுச்சுன்னா, உன்னை யாரு கண்ணும் கருத்துமா பாத்துப்பாங்க. அதை நினைச்சாதான் பகீர்னுது..."

அறையை விட்டுக் கூடத்தைத் தாண்டும் ஆனந்தியின் காதுகளில் இந்தப் புலம்பல் விழுந்தாலும் அதற்காக அவள் கலங்கவில்லை.

இந்த ஆறு மாசத்தில் இந்தமாதிரி நாடகக் காட்சிகளை அவள் நிறையவே பார்த்துவிட்டாள்.

பணக்கார அம்மா, ஒற்றைச் செல்லப் பிள்ளை என்பதால் இத்தகைய சம்பவங்கள் இருக்கும் என்பதை எதிர்பார்த்துதானே அந்த வீட்டில் காலடி வைத்திருந்தாள்!

மாறிவிடுவார்கள் — அன்பு, அக்கறையினால் இவர்களை மாற்றிவிடலாம் என்ற அழுத்தமான நம்பிக்கையுடன் அத்தனையும் பொறுத்துப் பொறுத்து போனவளுடைய பொறுமைக்கும் ஓர் எல்லை இருக்க, திருமணமாகி ஒன்றரை வருஷங்கள்போல ஆன ஒருநாளில்தான் இனித் தாள முடியாது என்கிற தீர்மானத்துக்கு வந்தவளாய் ஆனந்தி தன் மாமியாரை நிமிர்ந்து பார்த்து "என் அப்பா வீட்டுக்குப் போகப் போறேன் ஆனால் திரும்பி வரும் உத்தேசம் எனக்கு இல்லை" என்றாள் தெளிவாக...

# 8

"இந்த முறை நா திரும்பி வர்றதா இல்லே அத்தே"

தெளிவாகக் காதில் விழுந்த வார்த்தைகளை நம்ப மாட்டாத அதிர்ச்சியுடன் "என்னது, என்னது?" என்று வினவிய வண்ணம் மருமகளை நெருங்கி அவள் தோளைப் பிடித்து ரங்கம்மா உலுக்கியபோது, அவள் குரல் ரொம்பவும் உரக்க ஒலித்தது.

இந்தக் கத்தல் வாசலுக்கும், கொல்லைக்கும் கேட்டிருக்க வேண்டும்.

என்னமோ, ஏதோ என்று தாழ்வாரத்திலிருந்து கணக்குப்பிள்ளை ஓடிவர, பெருமாள் கையில் கரண்டியுடன் என்ன சேதி என்கிற பார்வையுடன் எட்டிப் பார்த்தான்.

கைகளை ஆனந்தியின் தோள்களிலிருந்து எடுக்காமலேயே மீண்டும் ரங்கம்மா கத்தினாள்

"எங்க அப்ப சொன்னதை இன்னொருதரம் சொல்லு பார்க்கலாம்.

ஆனந்தி பார்வையை சுழட்டி எதிரில் நின்ற கணக்குப் பிள்ளையையும், பக்கவாட்டில் எட்டிப்பார்க்கும் பெருமாளை யும், ஒருதரம் ஏறிட்டுவிட்டு இவர்களுக்கு எதிரில் குடும்ப சமாசாரத்தைப் பேசுவது தவறு என்கிற எண்ணத்துடன் வாளாதிருந்தாள்.

"ஏண்டீ... கேக்கறது காதுல விழல?"

ஆனந்தி நிதானமாகப் பதில் சொன்னாள்.

"விழுந்துச்சு அத்தே... ஆனா..." தயங்கியவள் பெருமாள் பக்கம் திரும்பி "இங்க என்ன வேடிக்கையா காட்டறாங்க.. உள்ளப்போயி வேலையக் கவனியுங்க"



என்று கூறிவிட்டு அதே வார்த்தைகளை கணக்கப்பிள்ளை யைப் பார்த்து கூற இயலாதவளாய் மௌனம் சாதித்தாள்.

அவளுடைய தயக்கத்தின் காரணம் புரிந்தவராய், அருகில் நின்ற கணக்குப் பிள்ளை அவசரமாய்த் தானே திரும்பிப் போக முயல, ரங்கம்மா அதட்டினாள்.

"நில்லுங்க கணக்கு, நீங்க பல வருஷமா எங்களோட இருந்து இந்த வீட்டுல ஒருத்தரா ஆயிட்டவரு.. நேத்து வந்த இவ சொல்றத கேட்டுகிட்டு நீங்க ஏன் ஓடறீங்க.. என்கூட நின்னு இவ ஏன் இப்படி உளர்றானு விசாரியுங்க.."

பேசியவள் ஆனந்தி பக்கம் திரும்பினாள்.

"இப்ப சொல்லு .. செத்த மின்னால என்ன சொன்னே?"

கணக்குப் பிள்ளைக்கு ரங்கம்மாவே அதிகாரம் கொடுத்து நிறுத்திய பிறகு இனியும் தான் தயங்குவதில் அர்த்தம் இல்லை என்பது புரிய ஆனந்தி "இன்னும் எத்தனை தரம் சொல்லணும் அத்தே...நா எங்கப்பா வீட்டுக்குப் போகப் போறேன்" என்றாள்.

"அப்பறம்? மேலே இன்னும் வேற ஏதோ சொன்னயே?"

திரும்பி வர உத்தேசத்தோட போகலைனு சொன்னேன்"

ரங்கம்மா இரண்டு கைகளையும் தட்டி முகவாயில் வைத்துக் கொண்டாள்.

"அட, நாசகாரபாவி... என்னா தைரியம் இருந்தா மாமியார்காரி என்னண்ட இப்படிப் பேசுவே? ம்? இந்த ஊரே ரங்கம்மான்னா பயப்படுது ..ஆனா உனக்கு நானும், என் பிள்ளையும் இன்னுக் கிரையாயிட்டமா? ம்?"

"......"

"ஏண்டி... புத்தி கித்தி பெசகிடுச்சா? நேத்து ராத்திரி படுக்கப் போறப்ப கூட நல்லாதானே இருந்தே?"

"நா தெளிவாத்தான் இருக்கேன் அத்தே..."

"அப்ப, சுயபுத்தியோடத்தான் அப்பன் வீட்டுக்குப் போறேன். திரும்பி வரமாட்டேன்னு சொல்றே?"

"ஆமா"

"அடி செருப்பால... இங்க உனக்கு என்னடி கொறை, அப்பன் வீட்டுக்கு ஓடறதுக்கு? பால் பழம் கம்மியா, உடுத்த துணி பத்தலியா, வயத்துக்கு சோறு போடாம காய அடிக்குறோமா, இல்ல முட்டிதேய வேலை வாங்குறோமா? என்ன குறை இருக்குனு பொறந்த வீட்டுக்கு கிளம்பிட்ட நீ?"

ஆனந்தி குனிந்து விரல்களையும், நகங்களையும் ஆராய்ந்தாள். சரிந்து விட்ட தலைப்பை தோளுக்குக் கொணர்ந்து இழுத்துச் செருகினாள்.

"நீங்க சொன்ன விஷயங்கள்ல எனக்கு எந்தக் கொறையும் இல்லதான் அத்தே..."

"அப்புறம்?"

கண்களை இடுக்கிக் கொண்டு ரங்கம்மா வினவ ஆனந்தி சன்னமான குரலில் பதில் கூறினாள்.

"என் புருஷன் சரியில்லே அத்தே... இது நா சொல்லித் தான் உங்களுக்குத் தெரியணுங்கறது இல்ல... ஊர் உலகத்துல உள்ள மத்த கணவங்க மாதிரி அவரும் பொறுப்பா நடந்துக்குவார்னு எதிர்பாத்துதான் ஒன்னரை வருஷமா பல்லைக் கடிச்சுக்கிட்டு இருந்தேன். ஆனா, அவர் திருந்துறதாகவும் தெரியல.. அவர் செய்யற தப்ப புரிஞ்சுகிட்டு நீங்களும் அவரை கண்டிக்க முன் வரதாவும் தெரியல. அதான், சரி நமக்கு சரிபட்டுவராத இடத்துல மனசு நிம்மதி இல்லாம



கெடந்து அல்லல் படறத விட, பெத்தவங்க வீட்டுல போய் நிம்மதியா இருந்திடலாம்னு..."

அவள் முடிக்கும் முன்னர் ரங்கம்மா குறுக்கிட்டாள். வாயில் புறங்கையால் 'லவல' என்று தட்டிக் கொண்டே... "ஐயோ... ஐயோ.. இந்த அநியாயத்த கேட்பார் இல்லியா? என்னா கனைக்கு உவ பாட்டுக்கு கன்னா பின்னானு மரியாத இல்லாம பேசிட்டே போறா, நீங்க சும்மா நின்னு கேட்டுட்டு இருக்கீங்களே... ஐயோ நா என்ன பண்ணுவேன்?" என்று உரக்கப் புலம்பினாள்.

ஆனந்தியின் பேச்சால் வீரராகவனும் திடுக்கிட்டுப் போயிருந்தது உண்மை.

அந்த அளவுக்குப் பேச, செயலில் காட்ட அவளுக்குத் துணிச்சல் இருக்கும் என்று எதிர்பார்க்காததில் ஸ்தம்பித்துப் போயிருந்தவர், ஒரு தரம் கனைத்துத் தன்னை ஒரு நிலைப் படுத்திக் கொண்டார்.

ஆனந்தியைக் கனிவுடன் ஏறிட்டார்.

"பெத்த தகப்பனாட்டம் கேக்கறேன், ஆனந்தி, ஏம்மா இப்படியெல்லாம் பேசறே? இப்படி எடுத்தேன் கவிழ்த்தேன்னு பேசி, நடக்கக் கூடிய பொண் நீ இல்லே... உடம்பு சரியில்லியாம்மா? இந்த வீட்டுல உன்னை யாராச்சும், ஏதாச்சும் சொன்னாங்களா? ராத்திரி தம்பி ரொம்ப கோவமா திட்டி கிட்டி பண்ணிடுச்சா?... அந்த வருத்தத்துலதான் இப்படிப் பேசிறியா? வேணாம்மா... இதெல்லாம் நல்லதுக்கு இல்ல... என்ன வருத்தம்னாலும் அதை விழுங்கிட்டு, வழக்கம்போல உன் வேலைகளை பார்க்கப்போம்மா... விடுனா நாலும் இருக்கத்தான் செய்யும், இதக்கூடவா உனக்கு நா சொல்லித் தரணும்?"

நிதானமாக நிஜமாகப் பரிவுடன் அவர் பேசியதும், அந்த அன்பில் நெகிழ்ந்து போன ஆனந்தியின் கண்களில் லேசாக நீர் பூக்கள் பூத்தன.

அவன் அழுவதை விட்டொழிந்து ஒரு வருஷத்துக்கு மேலேயே ஆகிறது துக்கமென்று எதற்கெடுத்தாலும் நெஞ்சம் உருகி, கண் வழியாக தன் துக்கத்தைக் கொட்டிய நாட்கள் எல்லாம் மாறி, அவன் இறுகிப்போய் பல மாசங்கள் ஆகி விட்டன. ஆனாலும், உண்மையான கரிசனத்துடன், "உன் வாழ்க்கை அனாவசியமாக வீணாகிவிடக் கூடாதே" என்கிற அக்கறையுடன் கணக்கப்பிள்ளை பேசினதும் அவனையும் மீறிக் கொண்டு மனசு நெகிழ்ந்துதான் போயிற்று.

இரண்டு தரம் கண்களைச் சிமிட்டி, ஊறின நீரை அடக்கினவன், பதட்டப்படாமல் பேசினான்.

"என்ன மன்னிச்சிடுங்க மாமா... நீங்களோ வேறு யாருமோ எது சொன்னாலும், கேக்கற நிலைல நா இல்லே... குனிஞ்சு குனிஞ்சு எனக்கு முதுகு வலிக்குது... இனியும் தழையச் சொன்னா ரெண்டா உடைஞ்சிடுவேன்! நிச்சயம் அம்மாவுக்கும், பிள்ளைக்கும் நா புறப்பட்டுப்போன பிறகாவது புத்தி வந்தா சந்தோஷப்படுவேன்."

"எ - என்னடீ... சொன்னே? புத்தி வரணுமா? எங்களுக்கா? போனா போவுதுனு பார்த்தா, ரொம்பத்தான் துள்ளறியே... அப்பன் வீட்டுக்குப் போப்போறியா; எப்படீனு பார்த்திடறேன். அழுத்தி நாலு கொடுத்து ஒரு அறைல போட்டு பூட்டி வைச்சு, சோறு தண்ணி இல்லாம காயவச்சா, எப்படீ டீ எங்கள மீறிக்கிட்டு உங்கப்பன் வீட்டுக்குப் போவே."

"ரெண்டு நாள் மிந்தியே இந்தத் தீர்மானத்துக்கு வந்து எங்கப்பாவுக்கு 'இந்த வீட்டுல என்னால இனி வாழ முடியாது வியாழக்கிழமை வந்து கூட்டிக்கிட்டுப் போங்க'னு எழுதி போட்டிருக்கேன் அத்தே... எப்படியும் இன்னிக்கு எங்கப்பா வந்திடுவாரு..."

ஆனந்தியின் செய்கை ஒவ்வொன்றும் மேம்மேலும் ஆத்திரத்தைக் கிளப்பிவிட, என்ன செய்வது என்று புரியாத



கோபத்துடன் ரங்கம்மா அவள் மேல் பாய்ந்து தலை முடியை உலுக்கி,ஒங்கிக் கன்னத்தில் இரண்டு அடிவைத்தாள்.

அப்படியும் ஆத்திரம் தணியாமல் இருக்க, ராஜாவின் அறைக்குள் ஓடி "ஐயோ... அந்த குடியே மூழ்கிட்டு இருக்கு இங்க நிம்மதியா நீ... தூங்கறேயே... தம்பி எழுந்திரு" என்று உலுக்க, போதை கலையாத கண்களுடன் ராஜா விழித்தான்.

"என்னம்மா... தூங்கவிடாம ஆர்ப்பாட்டம் பண்றீங்க?"

"நம்ம குடும்ப கௌரவமே காத்துல பறந்திட்டிருக்கு, நீ தூக்கத்தப்பத்தி பேசறியே தம்பி... உம் பொண்டாட்டி தகப்பன் வீட்டுக்குப் போறாளாம்... திரும்ப வரதா உத்தேசம் இல்லியாம்... நிமிர் பிடிச்சு என்னென்னமோ பேசறா... வந்து நாலு தட்டு தட்டி 'உள்ளப்போடி'னு அதட்டு தம்பி... எழுந்திரு..."

கேட்டதை நம்ப முடியாமல் ராஜா திருதிருத்தான்.

"ஆனந்தி அவ அப்பன் வீட்டுக்குப் போறாளா? திரும்பி வர மாட்டாளா? ஏனாம்?"

"புருஷனும், மாமியாரும் சரி இல்லியாம்... நாம புத்தி கெட்டு அலையறோமாம். துணிச்சலா என்னண்டயே பேசறா தம்பி..."

"அ?" போர்வையை விலக்கி எழுந்த ராஜா கூடத்துக்கு வந்தபோது கோபம் அவன் முகத்தில் நன்றாகவே வெளிச்சம் போட்டிருந்தது.

ஆனந்தியை இழுத்து ஒரு புரட்டுப் புரட்டி, 'என்னடீ பொட்டச்சி நாயே-எங்க என்னண்ட இன்னொருதரம் அத்தனையும் சொல்லு பார்க்கலாம்?' என்று கேட்க விரும்பியதைச் செயலில் காட்ட முடியாமல், அவனை

நெருங்கி ''ஏய்'' என்று கூந்தலைப் பிடித்த அதே நிமிஷத்தில் திருவண்ணாமலையிலிருந்து முதல் பஸ் பிடித்து புறப்பட்ட சாம்பமூர்த்தி வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தார்.

பெற்றவருக்கு முன் மகளை கைநீட்டி அடிக்க முடியாமல், ராஜா 'ஓ'வென்று கத்தினான்.

''இப்பத்தான் வர்றீங்களா? வாங்க மாமா.. வந்து உங்க அழகான பொண்ணோட திமிர் பேச்சை நீங்களும் காது கொடுத்துக் கேளுங்க. பொண்ண வளர்த்திருக்கீங்களா? இல்ல பிசாசையா? ம்? அடக்கம், பணிவு, மரியாதை எதுவுமே இல்லாம என்ன ஜன்மம் இவ? முதல்ல இவள இழுத்துகிட்டுப் போய்ச் சேருங்க... சனியன் ஒழிஞ்சதுனு நாங்க தலைக்கு முழுகிட்டு நிம்மதியா இருப்போம்''.

மருமகளை அதட்டி, உருட்டி வீட்டோடு தங்க வைக்கும் தொனியில் மகன் பேசுவான் என்று எதிர்பார்த்த ரங்கம்மா அவன் 'இவளை இழுத்துகிட்டுப் போங்க...' என்று சொல்லவும் திடுக்கிட்டாள்.

''தம்பி வந்து...''

''நீங்க சும்மா இருங்கம்மா... குப்பைய கொணாந்து கோபுரத்துல வைச்சோம் இல்ல, அதான் இந்த ஆட்டம் போடுறா.. சீ நாயே-னு விரட்டிவிட்டா தன்னால புத்தி வரும்...''

இப்போது சாம்பமூர்த்தி பதட்டமாக குறுக்கிட்டார்.

''என்ன நடந்துச்சுனு விவரமா சொல்லாம நாய், பேய் குப்பைங்கறது நல்லா இல்ல மாப்பிள்ளை... ஏம்மா ஆனந்தி நீயாவது சொல்லேம்மா... என்ன நடந்துச்சு நீ இந்த முடிவுக்கு வர?''

''எல்லா விவரத்தையும் நா நம்ப வீட்டுக்குப் போய் சொல்றேப்பா... இங்க ஒண்ணையுமே கேக்காதீங்க...''



இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு அவள் கெஞ்ச ரங்கம்மா சீறினாள்.

''இது என்னடி புது நாடகம்.. தைரியம் இருந்தா என்னதான் அப்படி தாங்க மாட்டாம நடந்திருச்சுனு இங்கேயே சொல்லேன், நாங்களும் தெரிஞ்சிக்கறோம்...''

''எனக்கு உங்க பிள்ளையோட வாழப் பிடிக்கல...''

''அதான், என்னு கேக்கறேன் இல்ல.. இங்க முள்ளுப் படுக்கை விரிச்சா உன்னைப் படுக்க வைக்கிறோம்?''

ஆனந்தி சட்டென்று வெடித்தாள்.

''அதுகூட தேவலை அத்தே... உடம்பு வலியோட போயிடும்... ஆனா... உங்க பிள்ளை இருக்கார் பாருங்க... அவுரு மனசை நோக அடிக்கிறதுல மன்னன். ஒரு நாளைப் போல் குடிச்சிட்டு பன்னிரெண்டு மணிக்கு வர்றதும் இல்லாம அந்த மாலினியோட என்னென்ன செஞ்சார்னு விளக்கமா சொல்லி அவ 'இப்படி பண்ணுவா, அப்படி பண்ணுவா நீயும் செய்'னு என்னைக் கட்டாயப்படுத்தி 'மாலினி இருப்பு மாதிரி ஒன்னும் இல்லே... போன வாரம் மெட்றாஸ்ல ஒரு பொண்ணோட இருந்தேன்... அவ என்ன பண்ணா தெரியுமா?'னு புருஷன் பெண்டாட்டி நடுவுல மட்டும் அந்தரங்கமா இருக்க வேண்டிய சமாசாரங்களை எல்லாம் கண்ட கண்ட தெரு நாய்களோடு அனுபவிச்சிட்டு வந்து என்னண்ட விவரமா சொல்லி, அவங்க மாதிரியே நானும் வெட்கம் மானம் எதுவும் இல்லாம நடந்துக்கணும்னு கட்டாயப்படுத்தி... என்னை... என்...என்னை.''

பேச்சு வராமல் அவள் விசும்ப முற்பட, சாம்பமூர்த்தி அலறினார்.

''வேணாம்... சொல்லாத ஆனந்தி... மேக்கொண்டு ஒருவார்த்தை பேசினாலும் என் நெஞ்சு வெடிச்சிடும்மா... இவங்க அளவுக்கு நமக்குப் பணம் காசு இல்லாட்டியும்,

மானம் இருக்கு, பண்பு இருக்கு... இன்னும் அத்தனையும் நாம் துடைச்சிப்போட்டுடல. வேணாம்மா... அசிங்கமான பேச்சு எதுவும் நமக்கு வேணாம்; சொல்லாத...''

ஆனந்தி கொஞ்சம் நிதானப்பட்டு, அதிர்ந்து நின்றிருந்த மாமியார் பக்கம் திரும்பினாள்.

''நிம்மதியாச்சா அத்தே.. எல்லாத்தையும் தெரிஞ்சுக்கிட்டீங்க இல்ல? இவரோட வாழ முயற்சி பண்ணி, முடியாம பிறந்த வீடு போக நா தீர்மானிச்சது ஏன்னு புரிஞ்சிக்கிட்டீங்க இல்லே இந்த நிலையிலேயும் ஒண்ணு சொல்றேன் அத்தே... உங்க பிள்ளை மனசு மாறி நல்ல ஆம்பிளையா என்னோட மட்டும் குடுத்தனம் நடத்த சம்மதிச்சா இப்பவே என் முடிவ மாத்திக்க நா ரெடி... ஆனா, அவர் அப்படி மாறுவாருன்றதும் அவருக்குத் தகுந்த புத்திமதிகள நீங்க சொல்லுவீங்கன்றதும் சந்தேகம்தான்... அதனால நா புறப்படறேன்... நீங்களும் திருந்தி உங்க பிள்ளையும் திருந்த வழி பண்றது உங்க கைலதான் இருக்கு. அத மறக்காதீங்க... நா வரேன் அத்தே...''

சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு, உள்ளே சென்று இரண்டு பெட்டிகளுடன் வந்து 'வாங்கப்பா போவோம்'' என்று ஆனந்தி நடந்தபோது அவளைத் தடுத்து நிறுத்த யாருக்கும் துணிச்சல் வரவில்லைதான்.

## 9

ஒத்தையடிப்பாதை.

இரண்டு பக்கமும் காய்ந்து சருகாய்ப்போன நெற்கதிர்கள் நிறைந்த வயக்காடு.

கண்ணுக்கெட்டின வரையில் மனித சஞ்சாரமே இல்லை.



மதிய வெயில் மண்டையைச் சுட்டுப் பொசுக்க, ரங்கம்மாவுக்குப் பயமாக இருக்கிறது.

கண்களை சுழட்டி இப்படியும் அப்படியும் பார்க்கையில், அந்தத் தனிமையும், அந்த வறட்சியும் ஆளை பயமுறுத்துவது புரிகிறது.

படபடக்கும் மனசை தைரியப்படுத்திக் கொண்டு மெள்ள நடக்க ஆரம்பிக்கிறாள்.

பாளம் பாளமாக வெடிப்பு கண்டபூமி காலை அழுத்தமாய் ஊன்ற முடியாமல் குத்துகிறது.

பத்தடி நடந்திருப்பாள் திடுமென்று சின்னதாக ஒரு முனகல்...

யார் முனகுவது...

திடுக்கிட்டுத் திரும்பினாள், யாரும் இல்லை.

மீண்டும் நாலடி நடக்கும் முன்னர் அதே முணு முணுப்பு...

இப்போது இதுவே உரக்கக் கேட்பதோடு, நாலைந்து பேர்களாய் சேர்ந்து பேசுகிற மாதிரியும் படுகிறது.

யார்? யார்?

பார்த்துக்கொண்டே இருக்கையில், காய்ந்துபோன நெல்மணிகள் அத்தனையும் வாய்களாக, உதடுகளாக மாறுகின்றன.

''ஓடிப்போயிட்டா...ஓடிப்போயிட்டா...''

மெது மெதுவாக எழும் ஓசை, நிமிஷ காலத்தில் ஜவ்வைக் கிழிக்கும் பயங்கர ஒலியாய் மாற, தாளமாட்டாமல் காதுகளை இரண்டு கைகளாலும் பொத்திக்கொள்ளும் ரங்கம்மா அரண்டு ஓட முற்பட்டு, கல்ஒன்று தடுக்க இடறி மல்லாந்து விழுகிறாள்.

"ஐயோ...ஓ.."

விழிப்பு கண்டு விட்டது.

திடுக்கென்று எழுந்து உட்கார்ந்து மலங்க மலங்க விழித்த போது, இது நாழிகை கண்டது அத்தனையும் கனவு என்பது புரிந்தது.

உடம்பு வியர்வையில் தொப்பலாய் நனைந்திருந்தது, காதுக்குள் இன்னமும் இரைச்சல் கேட்டது.

கைவிரல்களில் நடுக்கம். மார்புக் கூட்டுக்குள் பறவைகளின் படபடா...

மெள்ள எழுந்தாள். அவிழ்ந்துவிட்ட தலைமுடியைத் தட்டி முடிந்து, மேலாக்கை சரிசெய்து கொண்டாள்.

ஜன்னலில் வைத்திருந்த பானையிலிருந்து ஒரு டம்ளர் நீர் எடுத்துக் குடித்தாள்.

அப்பாடி...

கனவின் பாதிப்பு லேசாக அடங்கிவிட்டாலும், படுக்கப் பிடிக்காமல் கூடத்துக்கு வந்து ஊஞ்சலில் அமர்ந்தாள்.

சுவர் கடிகாரம் மணி இரவு இரண்டேகால் என்றது.

எதேச்சையாய் திரும்பியவளின் பார்வையில் ராஜாவின் அறைக் கதவு இடுக்கு வழியாகப் பரவிய வெளிச்சம் விழ ரங்கம்மா புருவங்களை உயர்த்தினாள்.

இன்னுமா விழித்துக் கொண்டிருக்கிறான்?

பத்து பத்தரைக்கு சாப்பிட்டுவிட்டு அறைக்கதவை தாளிட்டுக் கொண்ட பிள்ளை உறங்காமல் இன்னும் என்ன செய்கிறான்?

புருவங்கள் முடிச்சுப் போட யோசித்தபோது, நீளமான பெருமூச்சு ஒன்று அவளுள் இருந்து வெளிப்பட்டது.



நீங்களும் வேண்டாம், உங்கள் சம்பந்தமும் வேண்டாம் என்று ஆனந்தி வீட்டைவிட்டுப் போய்விட்ட இந்த நாலு மாசங்களாய் கேவலம் பெண்பிள்ளை அவளே அந்தப்பாடு படும்போது ஆம்பிளை, அவன் மனசு எத்தனை வேதனைப் படும்...

தெரு, ஊர், பக்கத்து கிராமங்கள், தெரிந்தவர்—உறவினர் என்று எல்லார் மத்தியிலும் நாலு மாசமாய் லோல்படுவது இந்த சமாசாரம்தானே?

—எடையாளத்துப் பண்ணை மருமக வீட்டை விட்டுப் போயிட்டாளாமே, நிஜமாவா?

—ஏன் போகமாட்டா? பணம் இருக்கிற தைரியம் ரங்கம்மாவுக்கு. இளமைத் திமிர் அந்தப் பயலுக்கு...ஆட்டி வைச்சாங்க... அந்தப் பொம்பளை பொறுத்துப் பொறுத்து பாத்திட்டு வேணாஞ்சாமி...ஆளை விடுங்கனு ஓடிடுச்சு...

—அதுக்காகத் தாலி கட்டின புருஷனை விட்டு ஓடணுமா?

—பின்னே ஒருத்திய வச்சு ஒழுங்கா குடுத்தனம் பண்ணக் கூடியவனாவா அவன் இருக்கான்?

—அட ஒரு ஆம்பிளைனா அவங்கிட்ட நாலும்தான் இருக்கும், பொட்டச்சு அனுசரிச்சுப் போக வேணாமா?

—அ? அது அந்தக் காலம்... மரியாதயக் கொடுத்து மரியாதைய வாங்கறது இந்தக் காலம்.

—ப்ச் நீ ஆயிரம் சொல்லு எனக்கென்னமோ அந்த ஆனந்தி பொண்ணு செஞ்சது தப்பாத்தான் படுது...

—உன்ன மாதிரி நாலு பேர் சரினு சொல்லக்கொண்டு தான் ரங்கம்மா, ராஜா மாதிரி ஆளுங்க இந்த ஆட்டம் போடறாங்க. பணம் இருந்தா ஆச்சா? குணம் வேணாம் மனுஷனுக்கு?

K

—போய்யா, போக்கத்த பேச்ச பேசிக்கிட்டு...பணம் இருந்தா எதையும் சாதிச்சிடலாம், வாங்கிடலாம்... நினைப்புல வச்சுக்க...ஆனந்தி போனா என்ன, இன்னொரு சிவத்தி வந்திடமாட்டாளா?

—எவனெவனோ வந்து கும்மாளமடிக்கட்டும்—பெரிய எடத்து வெவகாரம் நமக்கு எதுக்கு? விடு...விடு...நீ வேலயக் கவனி.

சுனத்துபேட்டில், கோயிலில், சடைத்தெருவில் என்று ஒரு இடம் விடாமல் நாலு மாசமாய் பெரிய பண்ணை வீட்டு விவகாரம்தான் அத்தனை பேர்கள் வாயிலும் விழுந்து புறப்பட்டு சிரிப்பாய் சிரிக்கிறது...

முதல் பத்து, பதினைந்து நாட்களுக்கு சேதி வெளியில் வராமல் ரங்கம்மா எப்படியோ அமுக்கித்தான் வைத்திருந்தாள்.

ஆனால் காற்றுக்குக்கூட காது, வாய் இருக்கும் இந்த நாளில் எத்தனை நாட்களுக்குப் பொத்தி வைக்க முடியும்?

அடுத்து வந்த ஒரு மாதத்துக்குள் ஊர் உலகத்துக்கும் பளிச்சென்று தெரிந்துவிட, தெருவில் தலையைக் காட்டினாலே எல்லாரும் தன்னைப் பற்றித்தான் முதுகுக்குப் பின்னால் கிசுகிசுக்கிறார்கள் என்பது புரிந்துபோனது. இன்னும் பத்து நாட்கள் போவதற்குள் 'என்ன ரங்கம்மா' மருமகதான் விவரம் புரியாம நடந்துகிட்டா, நீயுமா சும்மா இருக்கிறது? ஆள் அனுப்பி மருமகளைக் கூட்டி வரச் சொல்லு' என்று ஊர்ப் பெரியவர்கள் வீட்டுப் படியேறி வந்து புத்தி சொல்லும் அளவுக்கு விஷயம் வளர்ந்து நின்றது.

இந்த வீட்டுச் சோற்றை ஒண்ணரை வருஷமாய் தின்று திமிர் ஏறிப் போனதில், யாரையும் மதிக்காமல் அவள் நடந்து கொண்டதற்கு நான் ஏன் தழைய வேண்டும்—என்று முதலில் பிடிவாதமாக ரங்கம்மா இருந்தாலும்,



ஊர் பேச்சுக்கு மதிப்பளிக்க வேண்டி, ஆனந்தி பிறந்த வீட்டுக்குப் போய்விட்ட இரண்டாம் மாசம் கணக்குப் பிள்ளை வீரராகவனைத் திருவண்ணாமலைக்கு அனுப்பவே செய்தாள்.

ஆனால்—

"என் புருஷனை நேரடியா வரச் சொல்லுங்க... அவங்க வந்து: 'இனி நா குடிக்கமாட்டேன், வேத்து பொம்பளை கூட சகவாசம் வச்சிக்க மாட்டேன்'னு தன் வாயால சொல்லட்டும், அடுத்த நொடியே நா அங்கே வந்திடறேன். ஆனா, அவங்க வராம நா அந்த வீட்டுப் படி ஏற மாட்டேன். நாளைக்கு என் வீட்டுக்காரர் நாலுபேர் மதிக்க வாழணும். நல்ல மனுஷன்னு பேர் எடுக்கணும்ங்கற ஆசைலதான் நா இப்படி வைராக்கியமா இருக்கேன். இதை அத்தைக்கும், அவங்களுக்கும் புரியும்படியா எடுத்துச் சொல்லுங்க மாமா..."

ஆனந்தி தீர்மானமாகச் சொல்லி அனுப்பிய சேதியை தயங்கித் தயங்கி வீரராகவன் ரங்கம்மா, ராஜாவிடம் எடுத்துரைக்க அன்று அந்த வீட்டில் சின்னதாய் பூகம்பம் வெடித்தது.

"போனாப் போவுது ...ஊர் பெரியவங்க வார்த்தைக்கு மதிப்பு கொடுப்பம்னு, என் அந்தஸ்து, கௌரவம் எதையும் பாராட்டாம நா நடந்துகிட்டதுக்கு, எனக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும். ஒடுகாலி நாய் எக்கேடு கெட்டா எனக்கு என்னன்னு அலட்சியமா இருக்காம, ஆள் விட்டு வாடிம்மானு உபசாரம் செஞ்ச என் புத்திய ஜோட்டால தான் அடிச்சுக்கணும்...நாய்...திமிர் பிடிச்ச நாய்... இவ இந்த வீட்டுக்கு வராட்டி உலகம் அஸ்தமனம் ஆயிடும்ன்ற இருமாப்பா? வேணாம். அவ வரவே வேணாம்... அங்கேயே அந்தத் தரித்திரம் பிடிச்சக் கூட்டத்துல ஒருத்தியா கிடந்து சீரழியட்டும். என் பிள்ளைக்கு என்ன? ராஜா...அவனுக்கு

K

"இன்னொரு கல்யாணத்த செஞ்சு வச்சு, 'நீ எதுக்கும் கவலைப்படாதடா கண்ணு'ன்னு சொல்லப் போறேன்... ஆமா, அப்பத்தான் அந்த பொட்டச் சிறுக்கிக்கு புத்தி வரும்..."

வாய் ஓயாமல் நாலு நாட்கள் கத்தித் தீர்த்த ரங்கம்மா கொஞ்சம் சமாதானமாகிவிட்ட மாதிரி தோன்றினாலும், ராஜா மட்டும் இந்த சம்பவத்தால் சுத்தமாக அடிபட்டுப் போய்விட்ட இறுதில், ஊமைக் கோட்டானாக வளைய வந்தான்.

அதிகமாய்ப் பேசுவது, சிரிப்பது எல்லாம் குறைந்து போன கையோடு, வீட்டில், ஏன் அந்தக் கிராமத்திலும் கூடத்தான், தங்கப் பிடிக்காதது போல விடிகாலையில் கிளம்பிப் போனால், நடுஜாமத்தைத் தாண்டியே வீட்டுக்கு வந்தான்.

இதையோ, அல்லது இரண்டு நாட்களுக்கு ஒரு முறை கணக்குப் பிள்ளையிடமிருந்து ஆயிரம், இரண்டாயிரம் என்று பணம் வாங்குவதையோ, ரங்கம்மா ஆட்சேபிக்காததோடு 'ஐயோ பாவம் என் பிள்ளை—ஊமை காயத்தோடு நடைப் பிணமாய் நடமாடுகிறான். எங்காவது போய் வருவதில் கொஞ்சம் பாரத்தைக் குறைக்க முடிந்தால் தாராளமாகச் செய்யட்டும்' என்று பரிவுடன் தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டதும் தொடர்ந்து நடக்க இயலாமல், பத்து நாட்களாய் ராஜாவின் நடவடிக்கைகளில் திடுமென மாற்றம்.

வெளியில் போவது குறைந்து, சதா சர்வகாலம் கதவைத் தாளிட்டுக்கொண்டு தனிமையில் பொழுதைக் கழிக்க ஆரம்பித்தவன் முகத்தில் எந்நேரமும் ஒரு ஏக்கம்... வேதனை...

என்ன ஆயிற்று?



இரண்டுதரம் பேச்சு எடுத்தும் அவன் பிடி கொடுக்காமல் ஒற்றை வார்த்தையில் பதிலைக்கூற, ரங்கம்மா ஏதும் புரியாமல் தவித்துத்தான் போனாள்.

இப்போதும், ராத்திரி இரண்டு மணி அளவில் உறங்காமல் விளக்கைப் போட்டுக்கொண்டு ஏதோ அவஸ்தையுடன் மகன் விழித்திருப்பது வேதனையைத் தர, ரங்கம்மா எழுந்து மெல்ல பிள்ளையின் அறைக்கதவிடம் சென்றாள்.

கதவு தாளிடப்படவில்லை.

தள்ளியதும் திறந்து கொண்டது.

படுக்கையில் ராஜா இல்லை.

ஜன்னலோரமாய், கையில் சிகரெட், தீவிரமான யோசனையுடன்... ராஜா...

"தம்பி"

ராஜா திடுக்கிட்டுத் திரும்பினான்.

தாயை அந்த நேரத்தில் அங்கு எதிர்பார்க்காததால் கண்ணை விரித்தவன், சட்டென்று சிகரெட்டை கீழே போட்டு மிதித்து அணைத்துவிட்டு என்ன என்பதுபோல ஏறிட்டான்.

"உடம்பு சரியில்லியா ராஜா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லேம்மா..."

"ரங்கம்மா அவன் அருகில் வந்து தலை முடியை வாஞ்சையுடன் கோதிவிட்டாள்.

"சொல்லுப்பா..."

"......"

"நா உங்கம்மா இல்லியா! என்னண்ட மனசுவிட்டு பேசக் கூடாதா? போனவளை நினைச்சு கலங்கறியா?"

ராஜா இல்லை என்று தலை அசைத்தான்.

''யாராச்சும் எதுவாச்சும் சொன்னாங்களா?''

''ம்ஹூம்''

''அப்புறம்? மனசுல என்னத்தையோ வச்சிகிட்டு, என்னண்ட சொல்லமாட்டேங்கறே, எப்படி, தம்பி? நீ சந்தோஷமா இல்லாட்டி, எனக்கு ஒரு வாய் சோறுகூட உள்ள இறங்கமாட்டேங்குது... நீதான் என் உலகம் — உசிரு... எல்லாம்... தெரியுமில்லே? சொல்லு. அம்மாகிட்ட தயங்காம சொல்லு... எதுவானாலும் அத நிறைவேத்தி வக்கறது என் பொறுப்பு...''

ஏதோ சொல்ல நினைத்து, வாயைத் திறந்த ராஜா வேண்டாம் என்று தீர்மானித்த மாதிரி திரும்பி நின்று கொண்டான்.

''சொல்லு ராஜா''

''ஒண்ணுமில்லம்மா... என்ன தனியா விட்டுட்டு நீங்க போங்க...''

''இல்ல... நீ சொன்னாதான் நா நகருவேன், தயங்காமச் சொல்லுப்பா... எதுவானாலும் நா நிறைவேத்தி வக்க றேன்...''

''வேணாம்மா விட்டுடுங்க.''

''இப்ப நீ சொல்லப் போறியா இல்லயா? நாம வணங்கற மைலம் முருகன் மேல ஆணையா சொல்றேன் — உன் விருப்பம் எதுவானாலும் கட்டாயம் முடிச்சு வைக்கறேன். நம்பிக்கையோட சொல்லுப்பா... நீ சிரிச்ச முகத்தோட என் முன்னால எப்பவும் இருக்கணும். அதான் எனக்கு வேணும்...''

தான் பூசிக்கும் முருகன் மேல் ரங்கம்மா ஆணையிட, அது தந்த தைரியத்துடன் ராஜா மெதுவாக அம்மா பக்கம்



திரும்பி, பார்வையைப் பூமியில் படரவிட்டு, ''மாலினிய பிரிஞ்சு என்னால இருக்க முடியலைம்மா... தாலி கட்டி பெண்டாட்டியா ஏத்துக்காத வரை இனி என்னை சந்திக்க மாட்டேன்னு பத்து நாள் முந்தி சொல்லிட்டா... எனக்கு அவ வேணும்மா... ப்ளீஸ்ம்மா... சரினு சொல்லுங்கம்மா...'' என்று பேசியபோது அவன் குரல் ரொம்பவும் கெஞ்சலாக வெளிப்பட்டது.

## 10

முழுசாய் ஒரு நிமிஷம் சென்றும் பிள்ளை கூறிய வார்த்தைகளுக்கு அர்த்தம் புரியாமல் ரங்கம்மா விழித்தாள்.

என்ன சொல்கிறான் ராஜா?

மாலினி இல்லாமல் இருக்க முடியாது என்கிறானே யார் அந்த மாலினி?

ஒருவேளை ஆனந்தி என்பதற்குப் பதிலாகத்தான் தவறிப் போய் மாலினி என்கிறானோ?

இருக்கும். அப்படித்தான் இருக்கும். தூக்கக் கலக்கத்தில் ஏதோ உளறி இருக்கவேண்டும்.

எதுவும் பதிலாகக் கூறாமல் நிற்க, ராஜா அவள் கைகளைப் பற்றிக்கொண்டான்.

''என்னம்மா ஒண்ணுமே பேசாம இருக்கீங்க? முருகன் ஆணையா நா ஆசைப்படறத நிறைவேத்தி வைக்கறேன்னு சொன்னீங்களேம்மா?'' கண்களும், முகமும் பரபரத்துப்போக அவன் கெஞ்ச, ரங்கம்மா பேசியவனை அழுந்தப் பார்த்தாள்.



K

"வழக்கமா ஆம்பிளை கல் நெஞ்சா இருப்பான், பொம்பளைதான் அவனை நினைச்சு உருகுவாளுனு சொல்வாங்க... ஆனா, நம்ம வீட்டு நிலைமை தலைகீழா இல்லை இருக்கு"

"ஏன்னம்மா சொல்றீங்க?"

"பின்னே என்ன தம்பி? அவனுக்கு இந்த வீட்டுல என்ன குறை? ராணியாட்டம் தானே அவளை வச்சிகிட்டு இருந்தோம்? அப்படி இருக்கறப்பவே தனக்கா ஏதோ குருட்டு யோசனை பண்ணிட்டு ஒரு முடிவுக்கு வந்திட்டா. அது சரினு ஆயிடுமா? அதவிடு. நீ சந்தோஷத்தோட இருக்கணும்னுதானே தன்மானத்தகூட நினைச்சுப் பாக்காம அவளை வரச்சொல்லி கலைக்கு கிட்ட சொல்லி அனுப்பினேன். அவ யாராயாவது மதிச்சாதானே?... ஹூம்... எல்லாம் என் தலை எழுத்து... சரி, போனதப்பத்தி பேசறதால யாருக்கு என்ன லாபம்? ஒண்ணுமில்லே... அவளைப் பிரிஞ்சு உன்னால இருக்க முடியாது. விஷயம் அதானே? உன் சந்தோஷம்தான் எனக்கு முக்கியம். அதனால் நாளைக்கு நானே போய் அவளை "வாடிம்மானு கெஞ்சியோ, கூத்தாடியோ கூட்டிகிட்டு வந்திடறேன்... இப்ப உனக்கு..."

"நீளமாக ரங்கம்மா பேச, ராஜா அவள் முடிக்கும் முன் குறுக்கிட்டான்.

"என்னம்மா என்னென்னமோ பேசிட்டுப் போறீங்க, நா எதையோ சொன்னா, நீங்க எதையோ பேசறீங்களே... நீங்க யார மனசுல வச்சுகிட்டுப் பேசறீங்க?"

"ஆனந்தியத்தான்"

ராஜா ஒங்கி நெற்றியில் அறைந்து கொண்டான்.

"சரியாப் போச்சு! அந்த மூதேவிய நா மறந்து எத்தனையோ மாசம் ஆயிடிச்சேம்மா"



"அப்போ? யாரைப் பிரிஞ்சு இருக்கிறது கஷ்டமா இருக்குனு சொன்னே?"

ராஜா, அம்மாளை ஒரு தரம் ஏறிட்டுப் பார்த்துவிட்டு பார்வையைத் தாழ்த்திக் கொண்டான்.

"மாலினிய..."

"மாலினியா? யார் அவ?"

"அவ தாம்மா... மாலினி..."

"அட, திரும்பத் திரும்ப அதையே சொல்லிட்டு இருந்தா எப்படி? அதான் யார் அவனு கேக்கறேனேப்பா?"

"பாண்டிச்சேரியில இருக்காம்மா. எனக்கு... எனக்கு ரொம்ப நாளா பழக்கம்..."

சட்டென்று ரங்கம்மாவுக்குள் இரண்டு வருஷங்களுக்கு முன், ராஜாவுக்கு முதன் முதலில் பெண் பார்க்கத் துவங்கின போது தரகர் நல்லுசாமி கூறின வார்த்தைகள் மின்னின.

"பாண்டிச்சேரியில் மாலினினு ஒரு நாட்டியக்காரியாம். தம்பி அவளோட ரொம்ப நெருக்கமா பழகறாராம்."

ஓ! அந்த மாலினியா?

இவளைத்தான் அன்று ஆனந்தி கூட குறிப்பிட்டாளா?

என்ன சொல்லிக் கத்தினாள் அவள்?

—ஒரு நாளைப்போல குடிச்சிட்டு வர்றதும் இல்லாம அந்த மாலினியோட என்னென்ன செஞ்சார்னு விளக்கமா சொல்லி, 'அவ இப்படிப்பண்ணுவா, அப்படிப் பண்ணுவா, நீயும் செய்'னு கட்டாயப்படுத்தி 'மாலினி இடுப்பு மாதிரி, உன்னுது இல்லே'னு சொல்லி, அவளைப்போல வெட்கம், மானம் இல்லாம நானும் நடந்துக்கணும்னு கட்டாயப் படுத்தி...

ஓ! அந்த மாலினியின் பழக்கம் இன்னமும் விடவில்லையா?

முன்பு தரகர் கூறினதையும், பின்னர் ஆனந்தி சுத்தியதையும் நான் எப்படி மறந்து போனேன்?

தவிர, மாலினியோடு தீவிரமாய் ராஜா தொடர்பு வைத்துக்கொண்டிருக்கலாம் என்பதை எப்படி உணராமல் போனேன்?

—மாலினியைப் பிரிஞ்சு என்னால இருக்க முடியலேம்மா... எனக்கு அவ வேணும்மா, சரினு சொல்லுங்க ப்ளீஸ்...

பிள்ளை என்ன சொல்ல வருகிறான் என்பது புரியத் தொடங்க, ரங்கம்மாவின் கால்கள் பயத்தில் வெல வெலத்துப் போயின.

நிற்க முடியாததுபோல கட்டிலில் உட்கார்ந்து கொண்டான்.

''என்னம்மா... மனசுல இருக்குறத சொல்லுனு கட்டாயப்படுத்தினீங்க... சொன்னப்புறம் எதுவுமே பேசாம உட்கார்ந்திட்டீங்க...''

ரங்கம்மா வறண்டுவிட்ட உதட்டை நாவால் ஈரப்படுத்திக் கொண்டாள்.

''என்ன சொல்லணும் தம்பி?''

''சம்மதம்னு சொல்லணும்...''

''எதுக்கு?''

''மாலினிய கட்டிக்க...''

கேட்டதை நம்ப முடியாமல் ரங்கம்மா கண்களை மூடிக் கொண்டாள்.



எடையாளத்துப் பெரிய பண்ணையின் பாரம்பரியம் என்ன, கௌரவம் என்ன? அத்தனையும் காற்றில் பட்டமாகப் பறக்க விட்டுவிட்டு பத்துப் பேர்களுடன் சகஜமாகப் பழகும் நாட்டியக்காரியை மருமகளாக ஆரத்தி சுற்றி வரவேற்பதா?

ம்ஹூம் இது நடக்காது... இந்த ஜன்மத்தில் நடக்காது.

''அம்மா...''

ரங்கம்மா கண்களைத் திறந்து, மகனை வெறித்தாள் பிறகு மாட்டேன் என்பதுபோல தலை அசைத்தாள்.

''என்னம்மா?''

''என்னால முடியாது...சம்மதம் தர முடியாது...''

''ஏம்மா முடியாது''

''என்னப்பா குழந்தைத்தனமா பேசறே? இது நடக்கற காரியமா?''

''ஏன் நடக்காது?''

''நம்ம ஜாதி என்ன, அந்தஸ்து என்ன? அத்தனையும் மண்ணோட மண்ணாக்கிட்டு வேத்து ஜாதிக் காரிய அதுவும் ஒரு நாட்டியக்காரியவா...அய்யய்யோ...கேக்கவே நல்லா இல்லே தம்பி...''

''பெரிய ஜாதி, அந்தஸ்து! அத்தனையும் குப்பைல போடுங்க...எனக்கு அவ வேணும். அவ இல்லாம இருக்க முடியாது. இத ஏன் புரிஞ்சிக்கமாட்டேங்கறீங்க?''

குரலை உயர்த்தி ராஜா கத்த, ரங்கம்மா 'ஷ்...ஷ்...' என்று அவனை அடக்கினாள்.

''என்னத்துக்காக இந்தக் கத்தல் கத்தறே? நாம பேசறது ஆளுங்களுக்குக் கேக்கணுமா? ஏற்கனவே நம்ம வீட்டு

K

விவகாரம் மூலை முடுக்கெல்லாம் சிரிப்பா சிரிக்குது .. இன்னும் தேவையா?"

ராஜா தன் குரலை தழைக்காமல் உறுமினான்.

"எனக்கு எதப்பத்தியும் கவலை இல்ல . மாலினி இல்லாம என்னால இருக்க முடியாது. இதான் நிஜம்."

விடாமல் அவன் சொன்னதையே சொல்ல, ஒரு தாய் தன் மகனிடம் இப்படிப் பேசலாமா என்று நிதானிக்காமல் ரங்கம்மா அவசரமாய் பேசினாள்.

"அதான் அவகிட்ட போய் வந்துகிட்டு இருக்கியே போதாதா? அப்புறமும் 'அவ இல்லாம என்னால இருக்க முடியாது, முடியாது'னு ஊளிப்பிள்ளையாட்டம் சொல்லிட்டே இருந்தா எப்படி ராஜா? என்ன பேசறோம்னு புரிஞ்சுதான் பேசறியா? இல்லே..."

"இப்ப உங்களுக்குத்தான் நா சொன்னது புரியல... தாலிகட்டி தன்னைப் பொண்டாட்டியா ஏத்துக்காதவரை அவள நா சந்திக்க முடியாதுனு மாலினி கண்டிப்பாகச் சொல்லிட்டாம்மா..."

"... ... ..."

"அம்மா...ப்ளீஸ்...சரினு சொல்லுங்கம்மா ப்ளீஸ்..."

"அதெப்படி முடியும் தம்பி?"

"ஏன் முடியாது.

"அவ நாட்டியக்காரிதானே?"

"ஆமா— அதனால என்ன;"

"அதனால என்னவா? சாதி ஜனங்க சிரிச்சிடுவாங்க தம்பி..."

"இப்ப மட்டும் சிரிக்கலியா?"



"குலம், கோத்திரம் பார்க்காம எப்படிப்பா கண்டவளை வீட்டுல சேர்க்க முடியும்? மேடை ஏறி ஆடறதோட கண்டபடி பிழைக்கிற பொண், குடும்பத்துக்கு ஏத்தவளா இருப்பாளா?"

இப்போது ராஜா நையாண்டியுடன் சிரித்தான்.

"ஏன் இருக்கமாட்டா? உங்க ஜாதிக்குள்ளயே நல்லவளா தேர்ந்தெடுத்து, ஊர் கூட்டி கட்டி வச்சீங்களே, அவ மட்டும் ரொம்ப ஒழுங்கா குடுத்தனம் பண்ணிட்டாளா? என்னம்மா நீங்க?"

இருந்தாலும்.. ஊர் பேர் தெரியாத நாட்டியக்காரிய..."

"போதும் நிறுத்துங்கம்மா... உங்களுக்கு இஷ்டம் இல்லேனு ஒரே வார்த்தையா சொல்லிடுங்க...அத விட்டுட்டு ஊர் உலகம் மேலயும், மாலினியோட நாட்டியத்து மேலயும் வீணா பழியப் போடாதீங்க..."

உணர்ச்சி வசப்பட்டு உரக்கப் பேசும் மகனுக்கு என்ன பதில் கூறுவது என்று புரியாமல் ரங்கம்மா அமர்ந்திருக்க, ராஜா தொடர்ந்து கத்தினான்.

"இதுக்குத்தான் நீங்க பத்துநாளா துருவித் துருவி கேட்டும் நா வாயத் திறக்காம இருந்தேன். இப்பக்கூட மைலம் முருகன் மேல ஆணை செஞ்சு கேட்டீங்களேனு தான் நம்பிக்கையோட என் விருப்பத்தைச் சொன்னேன். வேணாம், இஷ்டமில்லாம எனக்காக நீங்க எதுவும் செய்ய வேணாம். நா எக்கேடோ கெட்டுப் போறேன்... நீங்க நல்ல நிம்மதியா... இருங்க..."

அறைக்குள் இப்படியும், அப்படியும் நடந்தவன் ஆத்திரம் தணியாமலேயே "நா போறேன்...நீங்க போய் நல்லா படுத்துத் தூங்குங்க" என்று கூறியபடி, சட்டையை மாட்டிக் கொண்டான். 'என்னப்பா... இரு. தம்பி நா சொல்றதக் கேளேன்' என்று ரங்கம்மா கூற வந்ததை லட்சியம்

செய்யாமல் கார் சாவியை எடுத்துக்கொண்டு வேகமாய் வெளியேறினான்.

அடுத்து வந்த நாலுநாட்களும் ரங்கம்மாவைப் பொறுத்த வரையில் மிகவும் சங்கடமான நாட்கள்.

பிள்ளையின் விருப்பத்துக்கு இணங்கலாமா, வேண்டாமா? சம்மதித்தால் ஊர் உலகம் என்ன சொல்லும்? சரி என்று கூறாவிட்டால் பிள்ளை என்ன முடிவுக்கு வருவான் என்றெல்லாம் இரவு பகலாக யோசனை செய்தவளுக்கு, உற்றார் சுற்றாரின் அபிப்ராயத்தைவிட, பெற்ற மகன் சந்தோஷமாக வாழ்வதுதான் முக்கியம் என்பது தெளிவாக, ஐந்தாம் நாள் ராஜா வீடு திரும்புவதற்காகக் காத்திருந்து தன் சம்மதத்தைத் தெரிவித்தாள்.

சரியாக எட்டாம் நாள் வந்த முதல் முகூர்த்தத்தில் பாண்டிச்சேரி மணகுள விநாயகர் கோயிலில் வைத்து மாலினிக்குத் தாலியைக் கட்டி அவளை ராஜா தன் உடைமை யாக்கிக் கொண்டபோது, ரங்கம்மா, கணக்குப் பிள்ளை, ராஜாவின் நாலைந்து ஸ்னேகிதர்கள் மட்டுமே பிள்ளை வீட்டார் என திருமணத்துக்கு வந்திருந்தனர்.

தான் இவ்வளவு விட்டுக் கொடுத்தும்கூட தன் பங்குக்கு மாலினி நாட்டியமாடுவதை விடாததைக் குறித்தும் எடையாளத்துக்கு வந்து தன்னோடு சேர்ந்து வாழ மறுத்தது குறித்தும் ரங்கம்மாக்குக் கழுத்துவரை குறை.

ஆனால் அத்தனையும் 'என் பிள்ளை சந்தோஷமா இருந்தால் சரி' என்று கண்ணைக் கட்டி விட்ட குதிரையாக அவள் ஏற்றுக்கொள்ள, ஓடுகிறவனையே ஓட ஓட விரட்டும் கதையாய் ரங்கம்மா தன் பிள்ளை மீது வைத்திருந்த பாசத்தையும், ராஜா தன் மீது கொண்டிருந்த பித்தையும் சாதகமாக்கிக் கொண்டு, திருமணமான மூன்று மாசத்துக்குள் பாண்டிச்சேரியில் மாலினி தனிக்குடித்தனம் அமைத்ததுதான் கடைசியில் நடந்தது.

# 11

தில்லானாவை ஆடி முடித்த மாலினி "இன்னிக்கு போதும் மாமா" என்றபடியே குனிந்து தரையைத் தொட்டு தட்டிக் கும்பிட, கையிலிருந்த குச்சியைக் கீழே வைக்காமல் அவளுடைய மாமனும் நடன ஆசிரியருமான செந்தாமரை வியப்புடன் கேட்டார்.

"என்ன மாது அரை மணி நேரம்கூட ஆடல...அதுக்குள்ள போதும்னு தட்டி கும்பிட்டுட்டே!"

அவருக்குப் பதில் கூறப் பிடிக்காமல் மாலினி 'ப்ச்' என்று உச் கொட்ட, செந்தாமரை உட்பக்கமாய் திரும்பி "மோகனா" என்று குரல் கொடுத்தார்.

"இப்ப அம்மாவ எதுக்காக கூப்பிடறீங்க மாமா?"

"எல்லாம் காரணமாத்தான். மோகனா..."

இரண்டாவது முறை அழைத்ததும் 'என்னண்ணே' என்றபடி மோகனா எட்டிப் பார்த்தாள்.

குட்டியானைக்கு அலங்காரம் பண்ணின மாதிரியான தோற்றம்...இரட்டை பேட்டு பட்டுச்சேலை, கோட்ஸ்டாண்ட் கணக்காய் கழுத்தில் தொங்கும் செயின் வகையறாக்கள்.. பத்து காசளவு பொட்டு, உயர்த்தி போடப்பட்ட கொண்டை, கனகாம்பர வேணி, வாய் நிறைய வெத்தலை, புகையிலை...

"உன்னே என்ன செஞ்சிட்டு இருக்கே, கூப்பிடறது கூட காதுல விழாம?"

"அந்த வேணிப் பொண்ணு ராத்திரிக்கு என்ன சமைக்கட்டும்னு கேட்டா; நேத்தே பாப்பா பிரியாணி கேட்டுச்சு... ஆடி ஆடி.. களைச்சுப் போற பொண்ணுக்குத் தெம்பு

K

வேணாமா அதான் 'போய் நல்லதா கறி வாங்கிட்டு வந்து மணக்க மணக்க செஞ்சுவை'னு சொல்லிட்டு இருந்தேன்..."

செந்தாமரை கையிலிருந்த குச்சியால் தட்டு கட்டையில் ஒரு 'திக்திக்தை'யைத் தட்டினார். பின் மாலினியை ஒரு கரம் அழுத்தப் பார்த்துவிட்டு, தங்கை பக்கம் திரும்பிப் பேசினார்.

"ஆமா ரொம்ப ஆடித்தான் களைச்சிட்டா உம் பொண்ணு... கொஞ்ச நாளாவே இவ போக்கு சரியா இல்ல.. நாலு அயிட்டம் ஆடிட்டு 'போதும் மாமா'னு தட்டி கும்பிட்டுடறா. நா என்ன ஏதுனுகேட்டா, ஒண்ணு மில்லேனு சொல்றா.. வரிசையா கச்சேரி இருக்குறப்போ இப்படி அடம் பண்ணலாமா? உன் அருமைப் பொண்ணை நீயே விசாரி..."

இந்தப் பேச்சுக்கும், தனக்கும் சம்பந்தம் இல்லை என்கிற முக பாவனையோடு மாலினி ஒரு பக்கமாய் நிற்க, மோகனா அவளை நெருங்கிய பரிவுடன் கேட்டாள்.

"என்ன பாப்பா?... மாமா என்னமோ சொல்றாரே... நிசமா? காய்ச்சல் அடிச்சாகூட விடாம ஆடற பொண்ணாச் சேம்மா நீ! என்னாச்சு? உடம்பு கிடம்பு சரியில்லையா?"

பேசியபடியே கலைந்திருந்த முடியை ஒதுக்கி, நெற்றியில் துளிர்த்த வியர்வையைப் புடவைத் தலைப்பால் மோகனா துடைக்க, மாலினி அந்தச் செய்கை பிடிக்காத மாதிரி கையைத் தள்ளினாள். இரண்டடி தள்ளி நின்று கொண்டாள்.

"என்ன பாப்பா?"

"ஒண்ணுமில்ல...பிடிக்கலைனா விடுங்க..."

"என்ன பிடிக்கல? நாட்டியம் ஆடவா?"



"ம்.. ம்"

இது என்ன புது கூத்து என்பது போல மோகனா கையைத் தட்டி முகவாயில் வைத்துக் கொண்டாள்.

"என்ன பேச்சுப் பேசறோம்னு புரிஞ்சுதான் பேசறியா? 'டான்ஸ் ஆடாம என்னால இருக்க முடியாது... நாட்டியம் தான் என் உசிரு, உலகம்'னு பேசறவளா இப்ப ஆடப் பிடிக்கலைனு சொல்றே? என்ன ஆச்சு உனக்கும்...?"

மாலினி பதில் கூறாமல் தாவிச் சாட்டில் இருந்த பின்னைச் சுழற்றி நக இடுக்கில் சேர்ந்திருந்த அழுக்கை அகற்ற முனைய, லேசாகக் குரலை உயர்த்தி சற்றுமுன் கேட்டதையே மோகனா மீண்டும் கேட்டாள்.

"கேக்கறேனே...காதுல விழல? அது என்ன அலட்சியம்?"

இப்போது மாலினி கோபத்துடன் நிமிர்ந்தாள்.

"அவங்களுக்கு நா மேடைல ஆடறது பிடிக்கல.. அதான் இனிமே கச்சேரி கொடுக்கறத குறைச்சுக்கலாமானு யோசிக்கிறேன்."

"எவங்களுக்கு? மாப்பிள்ளைக்கா?"

"ம்"

"இது என்னடி புது தமாஷு! ஏன் பிடிக்கலையாம்?"

"கண்டவங்க பார்க்க மேடைல உடம்பைக் காட்டிகிட்டு நா ஆடறது அவங்களுக்கு எப்படியோ இருக்காம்"

அவள் முடிக்கும் முன்னர் சரக்கென்று மோகனா குறுக்கிட்டாள்.

"ஆறு மாசத்துக்கு முன்னால பிடிச்சது இப்ப பிடிக்கலியாமா? நீ நாட்டியக்காரி, பத்து பேர் முன்னால நாட்டிய

K

மாடறது உன் தொழில்னு தெரிஞ்சுதானே உன்னை கட்டிக்கிட்டார்—அப்புறம்?''

குரல் எழும்பி மோகனா வினவ, மாலினி உதட்டைக் கடித்தபடி பதில் பேசாது நின்றாள்.

''என்னண்ணே சும்மா இருக்கீங்க... இவ இந்த மாதிரி அசட்டு பிசட்டுனு உளர்றா, நீங்களும் கேட்டுக்கிட்டு இருக்கீங்களே?''

செந்தாமரை எழுந்துபோய் வாயிலிருந்த புகையிலைச் சாறை துப்பிவிட்டு வந்தார்.

''என்ன செய்யச் சொல்றே மோகனா? இவ சுய நினைவோட பேசினா நாம கண்டிக்கலாம்...ஆனா, அவன் தூண்டிவிட்டு இல்ல இவ பேசறா...''

புருஷனைச் சொன்னதும் ரோஷம் வந்துவிட மாலினி முறைத்தாள்.

''அத்தான வீணா தப்பாச் சொல்லாதீங்க மாமா... அவங்களுக்கு நா ஆடறதுல இஷ்டம்தான், ஆனா, அவங்க அம்மாதான்...''

''பெரிய்ய...அம்மா...ஊர் உலகத்துல இல்லாத அம்மா.. 'தாலி கட்டினவனோட திறமை, அழகு மண்மேடாப் போனா என்ன—அம்மாவும் தானும் நல்லா இருந்திட்டாப் போதும்'னு நினைக்கிறவன் எல்லாம் என்னத்துக்காக ஒரு கல்யாணம் கார்த்தினு செஞ்சிடணும்...நா தெரியாமத்தான் கேக்கறேன். வீட்டோட அம்மா தலைப்பைப் பிடிச்சிகிட்டு இருக்க வேண்டியதுதானே?''

அண்ணனின் பேச்சு புது பலத்தைத் தர மோகனா தன் பங்குக்குக் கத்தினாள்.

கல்யாணம் ஆன ஆறு மாசமாவே இதே ரோதனைதான்...முதல்ல அந்தக் கிராமத்தோட வந்திடணும்னு



பிடிவாதம்பண்ணாங்க.. அதை எப்படியோ சமாளிச்சோம். பாதி நேரம் மாப்பிள்ளைய இங்க வரவிடாம, தலைவலி, கால்வலினு ஏதேதோ சாக்கு சொல்லி தன்கூடவே நிறுத்தி வச்சுகிட்டாங்க... 'ஒழியுது போ — புருஷன் இல்லாத பொம்பளை இருக்குற ஒத்தைப் பிள்ளையையும் பிரித்த பாவம் நமக்கு வேணாம்'னு ஒதுங்கியே இருந்தோம். மூணு மாசம் போல ஆனதும் தாள முடியாம மாப்பிள்ளையா இங்க வீட்ட வாங்கி, தனிக் குடித்தனம் வச்சாரு.. அதுக்கு நாம என்ன பண்ணறது? அவரு இஷ்டம், செஞ்சாரு... ஆனா எம் பொண்ணு அவர கைக்குள்ள போட்டுகிட்டு, வீட்டைத் தன் பேருக்கு வாங்கிகிட்டதும் இல்லாம பிள்ளையையும் பிரிச்சிட்டானு வீணா பாப்பாபேர்லதான் அபவாதம் வந்துச்சு... எல்லாத்தையும் புருஷன் சந்தோஷத்துக்காக ஒதுக்கி, ஒதுக்கி என் பொண் வாழுறா... ஆனா, இப்ப என்னடான்னா அவளுக்குப் புடிச்ச நாட்டியத்தையே நிறுத்தப் பார்க்கறாங்க! இது நியாயமா? பாப்பா வருமானத்த வச்சிகிட்டுதான் நாம மானமா ஒரு வேளைக் கஞ்சியாவது குடிச்சுக்கிட்டு இருக்க முடியுது? அதையும் விட்டுட்டா... ஈரத்துணிய வயித்துல போட்டு படுத்துக்கச் சொல்றாளா அந்த மகராசி? ம்''

மூச்சிரைக்க மோகனா பேசி நிறுத்த மாலினி முகத்தைச் சுளித்துக் கொண்டாள்.

''என் வருமானம் ஒண்ணுலதான் குடித்தனம் நடக்குதுனு ஏம்மா அடாவடி பண்ணறீங்க? அத்தான் மாசம் ஆயிரக் கணக்கா கொண்டு கொட்டறத மறந்திட்டுப்பேசினா எப்படி?''

''ஆமாம்டிம்மா...கொண்டு வந்து கொட்டிட்டாரு... அள்ளி வைக்க எடம் இல்லாம நா திண்டாடறேன்... போடி போக்கத்தவளே ... உனக்கு இருக்குற அழகுக்கும் திறமைக்கும் லட்சக்கணக்கா சம்பாரிக்கவேண்டியவ நீ; அத விட்டுட்டு என்னமோ இவரு செஞ்சிட்டதைப் பத்தி பெரிசா பேச வந்திட்டே வைர வளை வேணும்னு ஆசையா கேட்டியே,

செஞ்சு கொடுத்தாரா? பெட்ரும்ல ஏ. ஸி. பண்ணறத்துக்குக் கூட நீ என்ன கெஞ்சல் கெஞ்ச வேண்டி வந்துச்சு... மறந்திட்டியா? ஏதோ பொன் வைக்கற எடத்துல பூவைச்சாலும் நீ சந்தோஷமா இருந்தா சரினு மனச தேத்திகிட்டு இருக்கோம். இப்ப என்னடான்னா மொதலுக்கே மோசமா இல்ல இருக்கு? என்னண்ணே?"

செந்தாமரை பலமாகத் தலையை அசைத்து ஆமோதித்தார்.

"பின்னே? எல்லார் வீட்லேயும் மகளை வளர்க்கும மாதிரியா நீ வளர்த்தே... அவள கண்ணுக்குள்ள வச்சு, காபந்து பண்ணி, ஊர் உலகம் புகழற நாட்டியக்காரியா ஆக்கணும்னு இல்ல நீ பாடு பட்டே! அடேயப்பா! இப்ப அத்தனையும் விழலுக்கு இறைச்ச தண்ணியாயிடுமோனு நினைச்சா, அடிவயிறு குபீர்ங்குது. போன மாசம் பம்பாய் தமிழ் சங்கத்துல ஆட கூப்பிட்டாங்க. போகல... சிங்கப்பூர்ல பத்து கச்சேரி செய்ய சான்ஸ் வந்தது... அது இதுனு வேண்டாத காரணங்களைச் சொல்லி மாப்பிள்ளை பையன் தடுத்திட்டான். இப்படி தடுத்துக்கிட்டே போறாரே இது எங்க போய் நிக்குமோனு பயந்தேன்—என் பயம் நிசமாயிட்டது... இன்னிக்கு அவரு ஆட வேணாம்னு சொல்றார்னு குண்டைத் தூக்கிப் போடறா..."

"அவரு சொன்னா நாம கேட்டுடணுமா? நல்லா இருக்கே கதை— ஆடறதுக்குனே பிறந்தவ நம்ப பாப்பா... அதை யார் தடை செஞ்சாலும் நா பொறுக்கமாட்டேன்... ஆமா..."

மாறி, மாறி மாமாவும், அம்மாவுமாகப் புகார் சொல்லிக் கத்த, அலுப்புடன் மாலினி எழுந்து நின்றாள்.

"இப்ப அவரு என்ன சொல்லிட்டாருனு இந்தக் கூப்பாடு போடறீங்க ரெண்டு பேரும்...? 'எனக்குத்தான் வேண சொத்து இருக்கே... நீ ஆடறதை விட்டுட்டு வீட்டோட இருக்கக்



கூடாதா... எதுக்காக வீணா கஷ்டப்படணும்'னு சொல்றாரு... இதுல என்ன தப்பு?"

மாலினி இப்படிக் கேட்டதும், மோகனா கண்களை இடுக்கிக் கொண்டு அண்ணாவைப் பார்த்தாள்... தான் நினைப்பதையே அவரும் எண்ணுவதைப் புரிந்து கொள்ள முடிய, அவசரமாய் ஒரு சின்ன சிரிப்பை உதட்டில் தவழ விட்டாள்...

"அட... மாப்பிள்ளை அந்த ரீதில... சொல்றாரா... அப்ப சரி... உன்னை உக்கார வச்சு ராணியாட்டம் பார்த்துக்கிட்டார்னா நா ஏன் கவலைப்படப்போறேன்... ஆனா அத முதல்ல காரியத்துல காட்டச் சொல்லு... வீட்டை உன் பேருக்கு வாங்கித் தந்தாரே தவிரவும், உனக்குனு பிரமாதமா வேற எதுவும் செஞ்சிடலை... வைர செட் ஒண்ணு வாங்கித் தந்து, பேங்க்குல உன் பேர்ல அஞ்சு லட்சம் போட்டுட்டார்னா நீ அப்புறம் கால்ல சலங்கையே கட்ட வேணாம்... இருக்க வீடாச்சு... இரண்டு வேளை மாணமா சாப்பிட வட்டிப் பணமாச்சு... என்ன புரியுதா பாப்பா?"

கூடவே இருந்து குளவிகளாக விடாமல் மாமாவும், அம்மாவும் கொட்டி புத்தியை மாற்ற, துளித்துளியாக மாறிய மாலினியும் சமயம் கிடைத்த போதெல்லாம் ராஜாவிடம் தனக்கு இதுவேண்டும், அதுவேண்டும் என்று கேட்க ஆரம்பித்ததும் அல்லாமல்கேட்டவை உடனடியாய் வரவில்லையென்றால் கிட்டத்தில் கணவனை நெருங்க விடாமல் முரண்டு பிடிக்கவும் செய்தாள். அவள் உடல் மேல் உள்ள மோகத்தின் காரணமாய் ராஜாவும், அம்மாவிடம் சண்டைபோட்டு நிலத்தில் ஒரு பகுதியை விற்று மாலினி பேரில் அந்த மூன்று லட்சரூபாயையும் டெபாஸிட் செய்தான். கூடவே—நின்றால், உட்கார்ந்தால் புடவை, நகை என்று அவளுக்கு வாங்கித் தந்து சந்தோஷித்தான். அப்புறம் வாரம் ஒரு நாள் அம்மாவோடு இருப்பது என்ற தீர்மானத்தில் ஆரம்பத்தில் உறுதியாக

K

இருந்தவன் போகப் போக மாசத்தில் இரண்டுதரம் போனால் போகிறது என்று எடையானத்துக்கு வந்து எட்டிப் பார்த்துப் போகத் துவங்கினான்.

ஆனால் இத்தனை நடந்தும்—

திருமணமான ஒரு வருஷகாலத்துக்குள் தான் விரும்பிய விதத்தில் மகள் பேரில் வீடும் பணமும் நகையும் சேர்த்து விட்டது நிறைவைத் தராமல் 'அகில இந்திய நட்சத்திரமாக பேர் வாங்கக்கூடியவள் என்மகள்' என்கிற வெறி மோகனாவுக்குள் ஆட்டம் போட்டதற்கேற்ப— "நீங்க மட்டும் 'ம்'னு சொல்லுங்க... ஒரே வருஷத்துல உங்க பாப்பாவை சூப்பர் ஸ்டாராக்கி காட்டுறேன்" என்று புதுமுகத்தைத் தேடி அலைந்த ஒரு டைரக்டர். வீட்டுப்படி ஏறி வந்து கேட்டதும் அந்த வலையில் மோகனா தடால் என்று தலை குப்புற விழுந்தாள்.

எப்படியோ இரண்டே மாசத்தில் கெஞ்சி, கூத்தாடி புகழ்ந்து, மகள் மனசை சுத்தமாகக் கெடுத்து அதில் பேராசையைத் தகதகக்க வைத்தவள், ராஜா அறியாமல் வீட்டை விற்று அவனிடம் ஒரு வார்த்தைகூட சொல்லாமல் இரவோடு இரவாக ஒரு நாள் அத்தனை பணம், காசு, மகள், அண்ணனுடன் சென்னைக்குக் குடியேறினாள்.

## 12

வாசல்பக்கத்திலிருந்து குரல்கள் உரக்க ஒலித்த ஓசையில் ரங்கம்மா விழித்துக் கொண்டாள்.

கழுத்தடியில் வியர்வை கசகசத்தது.



தலையைத் திருப்பி, படுத்தபடியே கூடத்துச் சுவர் கடிகாரத்தை ஏறிட்டபோது அது மணி நான்கு பத்து என்றது.

அதற்குள் மாலையாகிவிட்டதா?

சாப்பிட்டுவிட்டு ஒன்னரை மணிக்குப் படுத்தவள் அத்தனை நாழி அசந்து தூங்கிவிட்டது ரங்கம்மாவுக்கு வியப்பைத் தந்தது.

சாதாரணமாய் மதியம் ஓய்வு எடுக்கவென தலையைச் சாய்க்கும் ஜாதி அவள் இல்லை.

நாலுவகை இனிப்பு வகையறாக்களோடு மூக்கு முட்ட விருந்து சாப்பாடு சாப்பிட்டாலும் கூட வெற்றிலை வாயோடு ஊஞ்சலில் வந்து உட்கார்ந்து 'கணக்கு' அந்தப் பில்லுங்களை எல்லாம் கொண்டாங்க—ஒரு தரம சரி பார்த்திடலாம்' என்று அதட்டும் ரகம் தான்.

அல்லு அசலில் 'இரும்பு மனுஷி' என்று பட்டப் பேர் கொடுக்கப்பட்டிருப்பதை ரங்கம்மாவே அறிவாள்தான்.

—அதென்ன தேகம் மெஷின் கணக்கா? செத்த படுப்பம் உட்காருவம்னு இல்லாம!...

—இவ பொம்பளைதானா? இல்லை, பொம்பளை ருபத்ல இருக்குற ஆம்பிளையா?

—அ! ஆம்பிளைகூட தலைவலி, கால்வலினு படுப்பானேயா... இந்தம்மாக்கு அந்தச் சங்கடமெல்லாம் ஏது!

—அதுவும் சரிதான்—ஒத்தை ரங்கம்மா பத்து ஆம்பிளைங்களைத் தூக்கி கடவாய்ப் பல்லுல அடக்கிக்கிடுவா... அத்தனை தெம்பு... அத்தனை தகிரியம்... இல்லாட்டி புருஷன்காரன் கண்ணை மூடி இத்தனை வருஷம் ஆகியும், நிலம், நீச்ச ஒருத்தர் தவில்லாம இத்தன செம்மையா காபந்து பண்ண முடியுமா என்ன?

ஆளாளுக்குப் பக்கம் பக்கமாய் பேசினது காதில் விழுந்த போதெல்லாம், அந்தப் பேச்சுகளில் புதைந்திருந்த பாராட்டுக் களைப் புரிந்துகொள்ள முடியரங்கம்மா பூரித்துத்தான் போயிருக்கிறாள்.

ஆனால், யார் கண் போட்டார்களோ— அந்தத் தெம்பும், துளிச்சலும் கனவாகிப் போய் மூன்று வாரங் களாகிவிட்டன!

கல்லுகுண்டாய் இருந்தவளுக்குத் திடும்மென்று வயிற்றில் வலி. ஓயாது வலி...முழுசாய் ஒருநாள் போவதற்குள் வலியில், உசிர் போய்...போய்தான் வந்தது.

தாளமுடியாமல் ஆனதும், பாண்டிச்சேரியிலிருந்து பிள்ளையை போன் போட்டு வரவழைத்து, வண்டியில் கடலூர் பெரிய டாக்டரிடம் போனால், அவர் வாயில் நுழையாமல் 'அப்பெண்டிஸைடிஸ்'—என்று எதையோ சொல்லி, 'குடல்வால் சிதறிவிட்டது—உடனடியாய் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும்' என்கிற குண்டைத் தூக்கிப் போட்டார்.

மாற்றுப் புடவை கூட இல்லாத நிலையில் அந்த நிமிஷமே ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, அவசர சிகிச்சை நடந்து இன்றோடு மூன்று வாரங்கள் முடிந்துவிட்டன.

ஆஸ்பத்திரியில் ரங்கம்மா இருந்த இரண்டு வாரங்களும் சரியான திண்டாட்டம்தான்.

முதல் நாள்வரை தலைவலி என்றுகூட படுக்காத வளுக்கு அசையாமல் படுத்துக்கிடக்க வைத்ததும், கைகளில் மாற்றி மாற்றி ரத்தம், செலைன், க்ளூகோஸ் ஏற்றினதும் சகிக்க மாட்டாத வேதனையாகவே இருந்தது.

எப்படியோ அத்தனையும் பல்லைக் கடித்துத் தாங்கிக் கொண்டு, ஒன்பதாம் நாள் தையலைப் பிரித்து விடுவார்கள், அப்புறம் ஊருக்குப் போய்விடலாம் என்று நம்பியதும்



நடக்காமல் ஐந்தாம் நாளிலிருந்து நூற்றி இரண்டு மூன்று என்று காய்ச்சல்.

அது ஒரு வழியாய் அடங்கி, தையலைப் பிரித்து வீட்டுக்கு ரங்கம்மாவை வைத்தியர் அனுப்பினபோது பதினெட்டு நாட்கள் ஓடிவிட்டன.

எடையாளத்துக்கு வந்து கூடத்தை ஒட்டின அறையில் கட்டிலைப் போடச் சொல்லி, அங்கிருந்தபடியே வீட்டின் இதர பகுதிகளில் என்னென்ன நடக்கின்றன, யார் வருகிறார் கள், போகிறார்கள் என்பதைக் கவனித்தவள், நேற்றிலிருந்து மாலை வேளையில் மெள்ள நடந்து கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்து கலைக்குப் பிள்ளையை அழைத்து, நிலம் நீச்சில் நடப்புகளைக் கவனிக்க ஆரம்பித்திருக்கிறாள்.

வாசலில் ஒலித்த பிள்ளையின் குரல் இப்போது இன்னும் கூடிப் போன ஓசையோடு கேட்க, படுத்திருக்க முடியாமல் ரங்கம்மா மெள்ள எழுந்தாள்.

அடிவயிற்றை ஒரு கையால் பிடித்துக் கொண்டு மெது வாக நடந்து கூடத்துக்கு வந்தாள்.

ஊஞ்சலில் உட்கார்ந்து பார்வையை வாசல் பக்கமாய் வீசியபோது, சந்தானம், தற்சமயம் ராஜாவின் ஆப்த நண்ப னாக உடன் இருப்பவன் கண்களில் விழ, அவனுக்கு சைகை காட்டி அழைத்தாள்.

இந்த சந்தானம் ஏழு, எட்டு மாசங்களாகத்தான் ராஜாவின் நெருங்கின நண்பனாக இருக்கிறான். அதற்கு முன் இவன் இல்லை. முன்பெல்லாம் மணி, மணி என்று ஒரு பையன் இருந்தான். அவனோடுதான் ராஜா ரொம்ப நெருக்கமாக, நகமும் சதையும் என்கிற திருசில் பழகி வந்தான். ஆனந்தி வீட்டை விட்டுப்போனதும் மாலினியை மணக்க ராஜா தீர்மானித்த பிறகு, திடுமென ராஜா, மணியின் நட்பை விட்டுவிட்டான்.

"அந்த மாலினிப் பொண்ணு தம்பி கிட்ட பழகின மாதிரியே மணி கிட்டயும் நெருக்கமா இருந்துச்சாம்... அதான், கல்யாணம் கட்டிக்கிடறது தீர்மானம் ஆயிட்டப் புறம் ராஜா தம்பி, இனி மணியோட சகவாசம் வேணாம்னு வெட்டி விட்டுட்டாரு... அந்த மணி யார் கிட்டயோ சொன்னது காதுல விழுந்ததுங்க..."

ஒரு தரம், 'இந்த மணி எங்கே? கண்ணிலேயே காணோமே' என்கிற வியப்புடன் ரங்கம்மா வீரராகவனிடம் கேட்கப் போய், அவர் மென்று விழுங்கிச் சொன்ன சமாசாரம் இது.

கேட்டுவிட்டு ரங்கம்மா அவமானத்தால் குன்றித்தான் போனாள்.

என்ன அசிங்கம் இது!

மாலினி ஒரே சமயத்தில் ராஜா, மணி இருவரிடமும் நெருங்கி பழகினாளா?

நாய் ஜன்மங்கள் மாதிரி என்ன விவஸ்தை இல்லாத நடத்தை இது?

இரண்டு நிமிஷங்கள் அதிர்ந்து போனவளுக்கு வழக்கம் போல மகன்மேல் பழிபோட மனம் இல்லாமல் போக, 'அ... அந்த மணி வாயைத் திறந்தாலே பொய்தான்... என் பிள்ளை மேல் இருக்கும் கோபத்தில் கன்னா, பின்னாவென்று வேண்டுமென்றே கதை கட்டிவிடுகிறான்' என்று தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டு, விஷயத்தை அதோடு மறந்தாள்.

ஆனாலும், முதல் பார்வையிலேயே மாலினியையும், அவள் தாயார், மாமனையும் ரவை கூட ரங்கம்மாவுக்குப் பிடிக்காமல் போனது மட்டும் உண்மைதான்.

பொம்பிளை போலவா அவர்கள் இருக்கிறார்கள்! ஒரு பதவிசு, அடக்கம், துளி பண்பு, ம்ஹூம்... ஒரு மண்ணாங் கட்டியும் கிடையாது.



16964
3293501

அசல் பஜாரியாய் உரக்க பேசி, சிரித்து, அடாவடி பண்ணும் அம்மா; மகா மோசமாய் மினுக்கித் தளுக்கி கொஞ்சிக் கொஞ்சிப் பேசி புருஷனைக் கைக்குள் போட்டுக் கொள்ளும் மகள்.

என்ன சொக்குப் பொடி போட்டாளோ, ராஜா பழைய ராஜாவாகவே இல்லியே!

கழுத்தில் தாலி ஏறி வருஷம் ஒன்றாகவில்லை. அதற்குள் நிலத்தில் ஒரு பகுதியை விற்க வைத்து, அந்தப் பணத்தையும், வீட்டில் பணமாகப் பெட்டியில் வைத்திருந்ததையும், தன் பேருக்கு நகையாகவும், வீடாகவும் மாற்றிக் கொண்டு... தூத்தேறி... பெண்களா அவர்கள்?

எறும்பு ஊறப் பாறை தேயுமா — என்பது போல இவளுக்குக் கொடுக்கும், சொத்து இன்னும் வேண்டியதற்கு அதிகமாகவே இருப்பது மெய்தான் என்றாலும், புருஷனுக்கும், மாமியாருக்கும் ஏற்றபடி வளைந்து கொடுக்காமல், ஒரு குடும்பப்பாங்கான பெண்ணாக இருக்காமல் நாட்டியம், அது, இது என்று ஊர் மேயும் கழுதைக்கு எதற்காக அத்துமீறி வாரிக்கொடுப்பது?

ஆற்றில் போட்டாலும் அளந்து போடு என்று பழமொழியே இருக்கிறதே!

தனக்குள் சதா குமைந்து, பிள்ளைக்குப் புத்திவரும் வகையில் எப்படி பேசலாம். "உன் மனைவியை அடக்கி வை. இன்று ரொம்ப இடம் கொடுத்தால் நாளைக்கு உன் தலையிலேயே ஏறி உட்கார்ந்து கொள்வாள்" என்று பக்குவமாய் எப்படி எடுத்துச் சொல்லலாம் என்று ரங்கம்மா யோசனை பண்ணிக்கொண்டிருந்தபோதுதான், சற்றும் எதிர்பாராமல் உடம்புக்கு வந்தது.

கடலூரில் இருந்த பதினெட்டு நாட்களும், இந்தண்டை, அந்தண்டை நகராமல், கூடவே நின்று ராஜா, அம்மா அம்மா என்று மருகிக் கவனித்தபோது, ஒரு வருஷமாய் அவன் தன்னை

விட்டுப் பிரிந்திருப்பதும் எப்போதாவது மட்டுமே வந்து பார்த்துவிட்டுப் போவதும், உண்டாக்கி இருந்த வேதனை மறைய, 'ஆஹா என் பிள்ளைக்குத்தான் என் மேல் எத்தனை பாசம்' என்று ரங்கம்மா உருகித்தான் போனாள்.

அப்படி மனசு நெகிழ்ந்திருந்த ஒரு நாளில் "என் கூடவே ஆஸ்பத்திரிலே தங்கி உடம்பைக் கெடுத்துக்காத தம்பி ... வேணா பாண்டிச்சேரிக்குப் போய் அவளோட ரெண்டு நாள் தங்கிட்டு வாயேன்" என்று பிள்ளையிடம் தனியாகக் கூற "உங்களைவிட எனக்கு வேற யாரும் முக்கியம் இல்லேம்மா" என்று பதில் கூறின ராஜா, பேச்சை அதோடு முடித்து விட்டான்.

ஆனால், அவன் வெளியே எங்கோ போயிருந்த சமயத்தில் கூட இருந்த சந்தானம் "அண்ணனுக்கும், அண்ணிக்கும் லேசா மனஸ்தாபங்க... உங்களுக்கு உடம்புக்கு வந்த அன்னிக்கு வீட்டுல ஏக சண்டை... இவுரு ஆடக் கூடாதுனு கத்த, அவங்க ஆடுவேன்னு சொல்ல... ரகளையாயிடிச்சுங்க... அதான் போய் பார்க்கப் பிடிக்காம உங்கக் கூடவே இருக்காரு" என்று தயக்கத்தோடு கூறினான்.

இதைக் கேட்ட பிறகு குட்டியாய் ரங்கம்மாளினுள் 'பரவாயில்லை பையன் கறாராய் நடந்து கொள்கிறான்' என்கிற சந்தோஷம் பூக்கவே செய்தது.

"கூப்பிட்டீங்களாம்மா?"

வாராந்தாவில் நின்றிருந்த சந்தானம் இவள் சாடை புரிந்து கிட்டத்தில் வந்து வினவ, ரங்கம்மா கிசுகிசுப்பாய் கேட்டாள்.

"அங்க என்ன தகறாறு? கணக்கு கிட்ட, தம்பி ஏதாச்சும் சண்டை போடறானா என்ன?"

"பணம் கேட்டாரு... அவரு 'நாளைக்கு பாங்குலேந்து எடுத்துத் தரேன்'னு சொல்லிட்டு இருக்காரு... அதான்"



"எவ்வளவு வேணுமாம்?"

சந்தானம் கொஞ்சம் தயங்கினான்—பின் மெதுவாக "பத்தாயிரம்" என்றான்.

ரங்கம்மா அதிர்ச்சியில் கண்களை விரித்தாள்.

"பத்தாயிரமா? இப்ப, அத்தனை எதுக்கு?"

சந்தானம் பதில் கூறாமல் தலையைத் தொங்கவிட, 'அட சொல்லேன்' என்றாள் ரங்கம்மா எரிச்சலுடன்.

"மூணு வாரமா- அண்ணிய பாக்கல இல்லியா?... இனியும் பாக்காம இருக்க முடியலையாம். அதான் ஏழு மணி குமாருக்கு அண்ணன் பாண்டிச்சேரிக்குப் போகலாம்னு இருக்காரு..."

"பெண்டாட்டி கிட்ட போறத்துக்குப் பணம் எதுக்கு? தேவடியாகிட்ட போறவன்தான்..."

கோபத்தில் ஏதோ பேச முற்பட்ட ரங்கம்மா, தான் எல்லை தாண்டுவது புரிந்த மாதிரி சட்டென்று நிறுத்தினாள். உதடுகளை இறுக மூடி, மௌனித்து, தன்னை ஆஸ்வாசப் படுத்திக் கொள்ள முயன்றதும் குபுகுபுத்துக் கொண்டு எழுந்த கோபம் லேசாக அடங்கியது.

சின்னஞ் சிறிசுகள்...

மூன்று வாரமாய் பிரிந்திருந்து விட்டு சேரும்போது பரிசுகள் கொடுத்துக்கொண்டால் சந்தோஷமாகத்தானே இருக்கும்?

என் பிள்ளையின் மகிழ்ச்சிக்கு இல்லாத பணமா?

ஆஸ்பத்திரியில் என்னை எத்தனை அன்போடு, கவலையோடு பார்த்துக் கொண்டான்?

இந்தக் காலத்தில் எந்தப் பிள்ளை மனைவியை விட்டு விட்டு அப்படி பெற்றவளே கதி என்று இருந்திருப்பான்?

ஆயிரமானாலும் என் ராஜாவின் குணம் அலாதிதான்.

அவனுக்கு இல்லாத காசா, பணமா?

நாளைக்கு இத்தனையும் ஆளப்போகிறவன் அவன் தானே?

அவன் தன் மனைவிக்கு பணமோ, பரிசோ கொடுக்க விரும்பினால் எதற்காகத் தடுக்க வேண்டும்?

அவன் சந்தோஷம்தானே எனக்கு முக்கியம்?

யோசித்து முடிவுக்கு வந்துவிட்ட ரங்கம்மா ''கணக்க கூப்பிடு'' என்றாள் சந்தானத்திடம்.

வந்து நின்றவரிடம் ''தம்பி கிட்ட என்ன தகராறு?'' என்று கடுமையாகக் கேட்டு — அவர் 'அது இல்லீங்க... நாளைக்கு உரம் வாங்கணும்... அதான்' என்று கூற வந்ததைக் காதில் வாங்காமல் ''தம்பி என்ன கேக்குதோ அத முதல்ல கொடுத்த அனுப்புங்க... இனிமேலொருதரம் தம்பிக்குச் சரியா பேசாதிங்க ஆமா'' என்று அத்தனை பேர் முன்னிலையிலும் உரக்க உத்தரவு இட்டாள்.

## 13

வியாழன் மாலை ஏழுமணி சுமாருக்கு நண்பன் சந்தானத்துடன் பாண்டிச்சேரிக்குக் கிளம்பிப் போன ராஜா, வெள்ளி நடு இரவு ஒரு மணி தருவாய்க்கு, தனியாக வீடு திரும்பியது முதலில் ரங்கம்மாவுக்குத் தெரியாது.

சனிக்கிழமை விடிகாலை எழுந்து பல்விளக்கி, காபி சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, கணக்குப்பிள்ளை வீரராகவன் வாசப்படியில் நின்று மெள்ள தலையை நீட்டினார்.



சில நிமிஷங்கள் சென்றும் ரங்கம்மா அவரைக் கவனியாதிருக்க, மெதுவாகத் தொண்டையைக் கனைத்து அவள் கவனத்தை ஈர்த்தார்.

விழிகளை உயர்த்தின ரங்கம்மாவின் முகத்தில் அத்தனை காலை வேளையில் அவரை எதிர்பார்க்காத வியப்பு வெளிப்படையாகவே தெரிந்தது.

வீரராகவன் ஒண்டிக்கட்டை. கல்யாணம் பண்ணின நாலாம் வருஷம் தாலி கட்டினவள் குறைப் பிரசவத்தில் போய்ச் சேர்ந்துவிட, 'சீ போ—நமக்கு விதிக்கப்பட்டது இவ்வளவுதான்' என்கிற வைராக்கியத்துடன் பிரம்மச்சரியத்தைக் கடைபிடிப்பவர். பெரியபண்ணை வீட்டிலேயே தான் அவருக்கு ஜாகை, சாப்பாடு எல்லாம். என்றாலும் விடிகாலை எழுந்து குளித்து தயாராகி சிவன், விஷ்ணு இரண்டு கோயில்களிலும் தலா மூன்று பிரதட்சிணங்களை செய்துவிட்டே ரங்கம்மா எதிரில் அவர் எட்டு மணி வாக்கில் வந்து நிற்பது வழக்கமாதலால் அந்தக் காலைப் பொழுதில் அவரைக் கண்டதும் ரங்கம்மா என்ன விஷயம் என்று புருவங்களை உயர்த்தினாள்.

''உள்ளார வாங்க கணக்கு''

இரண்டடி வைத்து உள்ளே வந்தவர் ஓரமாய் நின்று கொண்டார். கையில் கத்தையாய் ரூபாய் நோட்டு.

''என்ன விஷயம் கணக்கு?''

''வந்து... வந்து ...''

''அட—காலங்கார்த்தால உங்க வந்து போயி ஆரம்பிச்சிட்டீரா? மளமளனு விஷயத்தச் சொல்லுங்க... எனக்குக் குளிக்கப் போகணும்...''

''ராத்திரி தம்பி வந்து...''

அவரை முடிக்க விடாமல் ரங்கம்மா குறுக்கிட்டு ''எந்தத் தம்பி?'' என்றாள்.

"நம்ம தம்பிதாங்க..."

"ராஜாவா?"

"ஆமாங்க"

"அவன் எங்க வந்தான்? பாண்டிக்குப் போயிருக்கிறத மறந்திட்டீங்களா?"

"இல்லம்மா... நம்ம தம்பிதான்... சுமார் இரண்டு மணி இருக்கும்... வந்து தூங்கிட்டு இருந்த என்ன எழுப்பி 'பணம் கொடுக்க மாட்டேன்னு சொன்னே இல்லே... இந்தா பணம்... வச்சிக்க'ன்னு கட்டா நோட்டுக்கள என்மேல விசிறிட்டுப் போனாரு... எனக்கு ஒண்ணும் புரியல... எழுந்து உட்கார்ந்து தண்ணி குடிச்சிட்டு, எடுத்துப் பார்த்தா முந்த நாளு நா அவருக்குக் கொடுத்த பத்தாயிரம்... அத எதுக்குத் திருப்பி விசிறிட்டுப் போனாரு? எனக்கு ஒண்ணும் புரியல... அதான் உங்ககிட்ட சொல்லலாம்னு..."

இழுத்த மாதிரி வீரராகவன் பேசி நிறுத்த, அவர் கூறிய செய்தியை ஜீரணிக்கும் பாவனையுடன் ரங்கம்மா முழுசாய் ஒரு நிமிஷம் வாளாதிருந்தவள் பின்னர் கண்களை இடுக்கிக் கொண்டு சின்னக் குரலில் வினவினாள்.

"தூக்கக் கலக்கத்தில் ஒண்ணுகிடக்க ஒண்ணு உளறலியே கணக்கு? நிசமா வந்தது நம்ப தம்பிதானா?"

தொடர்ந்து அவர் பதிலுக்காகக் காத்திராமல் அறையில் மெத்தையை உதறிப் போட்டுக் கொண்டிருந்த வேலைக்காரி தனம் பக்கம் திரும்பி வினவினாள்.

"ஏண்டி—தம்பி வந்திட்டாரா என்ன?"

"நா பாக்கலம்மா... இன்னும் அவரு அறைபக்கம் நா போகவேயில்ல".

"ம்ம்... பெருமாளக் கூப்பிடு"



அரை நிமிஷத்தில் வந்து நின்ற பெருமாளிடம் அதே கேள்வியைக் கேட்க அவன் "நா இன்னும் தம்பியப் பாக்கல, அம்மா... ஆனா, வாசல்ல தம்பி வண்டி நிக்குது..." என ரங்கம்மா மீண்டும் கணக்குப் பிள்ளையை ஏறிட்டாள்.

"அப்ப—நீங்க சொல்றது உண்மைதான். நட்ட நடு ராத்திரி ரெண்டு மணிக்கு தம்பி எதுக்காக அத்தனை அவசரமா வரணும்? எதுக்காகத் தூங்கிட்டு இருந்த உங்களை எழுப்பி, பணத்த கொடுக்கணும்? ம்?"

"எனக்கு எதுவும் விளங்கலம்மா... அதான் சரியா விடியக் கூட காத்திருக்காம உங்களைத் தேடிகிட்டு வந்திட்டேன்."

"தம்பி கோபமா இருந்தானா?"

"அப்படித்தான் தெரிஞ்சிது—முகமும் கண்ணும் ஜிவு ஜிவுனு..."

ரங்கம்மா எழுந்தாள். மெள்ள நடந்து ராஜாவின் அறைப் பக்கமாய் சென்றாள்.

மூடி இருந்த கதவைத் தள்ளினாள்.

ம்ஹூம்... கதவு உட்பக்கம் தாளிடப்பட்டிருந்தது.

கூப்பிடலாமா? வேண்டாமா?

இரவு இரண்டு மணிக்கு வந்த பிள்ளை அசந்து தூங்குகிறானோ?

நான் எழுப்புவது தொந்தரவாக இருந்துவிட்டால்?

தட்ட கையை ஓங்கிய ரங்கம்மா தன் நினைப்பை மாற்றிக் கொண்டு ஊஞ்சலில் வந்து உட்கார்ந்தாள்.

மனசுக்குள் ஆயிரம் சந்தேகங்கள் கோலம் போட்டன.

மூன்று வார இடைவெளிக்குப் பிறகு மனைவியைத் தேடிக்கொண்டு போனவன் ஏன் மறுநாளே திரும்பி விட்டான்?

அதுவும் இரண்டுங்கெட்டான் வேளை இரண்டு மணிக்கு?

கணக்குப் பிள்ளையை எழுப்பி, வாங்கிப் போன பணத்தை கோபத்துடன் விசிறி அடித்தது எதற்காக?

அந்த மாலினியோடு சண்டை என்று சந்தானம் சொன்னானே, அது இன்னமும் தீரவில்லையா?

வந்தவனை 'வா' என்று அழைக்காமல் அவள் அலட்சியமாய் நடந்து கொண்டுவிட்டாளோ?

அதுதான் கோபம் மூக்கில் ஏறி உட்கார, இவன் ரோஷத்தோடு திரும்பி வந்து இருப்பானோ?

இருக்கும். அதாகத்தான் இருக்கும்...

எதுவானாலும் ராஜா எழுந்துவிட்டால் தெரிந்து விடாதா?

ரங்கம்மா அருகில் நின்ற வீரராகவனை கிட்டத்தில் அழைத்தாள்.

"சின்னஞ்சிறுசுக... இடையில நாலும்தான் இருக்கும்... நீங்க பணத்தைக் கொண்டு இரும்புப் பெட்டியில வையுங்க... தம்பி எழுந்ததும் நா பேசிக்கிறேன்... நீங்க எதையும் கண்டுக்க வேணாம். என்ன?"

சரி என்று தலை ஆட்டிவிட்டு நகர்ந்தவரை ரங்கம்மா ஏதோ நினைத்துக் கொண்டு மீண்டும் அழைத்தாள்.

"அந்த சந்தானம் தம்பி எங்க? ஆள்விட்டு கூட்டிட்டு வரச் சொல்லுங்க... அவனும்தானே கூடப் போனான்... விசாரிச்சா விஷயம் தெரிஞ்சிடாதா?"



வீரராகவன் வாசலுக்குப் போக, ரங்கம்மா பிள்ளையின் அறை பக்கமாய் ஒரு தரம் பார்த்துவிட்டு 'குளிக்க வெந்நீர் விளாவி வை தாயி' என்று குரல் கொடுத்தபடி உள்ளே எழுந்து போனாள்.

ரங்கம்மா குளித்து, தயாராகி, சிற்றுண்டி சாப்பிட்ட பிறகும்கூட ராஜா எழுந்திருக்காமல் இருக்க, பெருமாளை அழைத்து பிள்ளையை எழுப்பச் சொன்னாள்.

கதவைத் தட்டியும்,ராஜா எழுந்திராமல் இருக்க, தானே எழுந்து போய் 'தம்பி ..ராஜா தம்பி...' என்று அன்போடு குரல் கொடுத்தாள்.

மூன்றாவது முறை குரல் கொடுத்ததும் ராஜா கத்தலாக பதிலளித்தான்.

' என்னை யாரும் தொந்தரவு பண்ணாம இருக்கீங்களா?"

"அலுப்பா இருந்தா எழுந்து காபி, டிபன் சாப்பிட்டு திரும்ப படுத்துக்க தம்பி..."

"எனக்கு ஒரு எழவும் வேணாம்... ஆள விடுங்க..."

கோபத்தோடு பிள்ளையின் குரல் ஒலிக்க, ரங்கம்மா தயக்கத்தோடு மீண்டும் தட்டினாள்.

"சொல்றதைக் கேளு ராஜா... பசியே அலுப்ப அதிகமாக்கும்... சூடா ரெண்டு இட்லியும், காபியும்..."

அவளை முடிக்கவிடாது ராஜா உள்ளிருந்து பயங்கரமாய் கத்தினான்.

"வேணா விஷம் கொடுங்க... குடிச்சிட்டு ஒரேயடியா தொலைஞ்சி போயிடறேன்... என்ன தனியா விடப் போறீங்களா? இல்ல, எங்காவது ஓடிப் போயிடட்டுமா?"

இப்போது நிஜமாகவே ரங்கம்மா பயந்துதான்போனாள்.

பிள்ளைக்கு மனசு சரியில்லை

அவன் உடைந்து போகும் அளவுக்கு ஏதோ நடந்திருக்கிறது...

என்ன?

தொடர்ந்து அவனைத் தொண தொணத்தால் சொன்னபடி எங்காவது போய்விடக்கூடும் என்கிற நிலை எழ, திரும்பி தான் ஆபரேஷன் ஆனவள் என்பதை மறந்து, வேகமாக நடந்து வாசலுக்கு வந்தாள்.

"கணக்கு அந்த.. சந்தானத்த வரச் சொன்னீங்களா இல்லியா? தம்பி அறைக்குள்ளார இருந்துகிட்டு, 'விஷத்தக் குடி, குடிச்சிட்டு போயிடறே'—னு நொந்து போய் பேசுது—நீங்க என்னடான்னா இங்க கணக்குப் புத்தகத்த வச்சிட்டு அக்கடானு உட்கார்ந்திருக்கீங்களே!"

ரங்கம்மா போட்ட அதட்டலில், வீரராகவன் தானே எழுந்து ஓடி 'வர மாட்டேன், என்னை விடுங்க' என்று கெஞ்சக் கெஞ்ச, சந்தானத்தை இழுத்து வந்தார்.

பேயறைந்த நிலையில் வந்து நின்ற சந்தானத்தைப் பார்த்ததுமே—சரி விஷயம் ஏதோ பெரிசுதான் என்பது ரங்கம்மாவுக்குப் புரிந்து போனது.

"என்னடா?"

"எ...என்னம்மா?"

"என்னடா நடந்துது?"

"என்னம்மா கேக்கறீங்க?"

எச்சிலை விழுங்கிக் கொண்டு சந்தானம் பதில் கேள்வி கேட்க, ரங்கம்மா அடித் தொண்டையில் சீறினாள்.

"எதிர் கேள்வி கேட்டா, மண்டையிலேயே போடுவேன்... ராஸ்கல்... போன எடத்துல என்னடா நடந்துது?"



"வந்து..."

"வந்து?"

"அண்ணி வீட்டுல இல்ல"

"எங்கயாவது கச்சேரிக்குப் போயிட்டாளா?"

"கச்சேரிக்கு இல்ல, ஊரை விட்டே போயிட்டாங்க."

"ஊரை விட்டா? பாண்டிச்சேரிய விட்டேவா?"

"ஆமா..."

"வெவரமா சொல்லித் தொலையேன்டா"

சந்தானம் மிகுந்த தயக்கத்துடன், எச்சரிக்கையாய் பேசினான்.

"நாங்க போனப்ப வீடு பூட்டியிருந்தது. தோட்டக்காரன் கூட காணோம். அண்ணி நாட்டியக் கச்சேரிக்குப் போயிட்டாலும் வீட்டுல யாராச்சும் இருக்குறதுதான் வழக்கம்... என்ன புதுக்கதையா இருக்கேனு சொல்லிட்டே எதிர் வீட்டுல விசாரிச்சா, 'வீட்ட வித்துட்டு மெட்ராஸுக்கு போயி ஒரு வாரமாகுது'னு அந்தாளு பெரிசா கல்லத் தூக்கிப் போடறான்..."

சட்டென்று நிற்க முடியாது கால்கள் தொய்ந்துவிட ரங்கம்மா படுக்கையில் உட்கார்ந்துகொண்டாள்.

"என்னடா உளர்றே... எழவு எடுத்தவனே..."

"உளறலம்மா...சத்தியமா நடந்ததத்தான் சொல்றேன்... அண்ணன் ஷாக் அடிச்ச மாதிரி நின்னுட்டாருனா பாத்துக்குங்க... என்ன தைரியம் இருந்தா அண்ணன் வாங்கிக் கொடுத்த வீட்ட, அண்ணனைக் கேக்காம வித்ததும் இல்லாம அண்ணன்கிட்ட ஒரு வார்த்தை கூட சொல்லாம போயிருப்பாங்க? அந்தாளு பேசப்பேச எனக்கு ரத்தம் கொதிச்சுப் போச்சும்மா... எனக்கே அப்படி இருந்துச்சுன்னா அண்ண

னுக்கு எப்படி இருந்திருக்கும்? ச்சே... ஏமாந்துப் போயிடுறீங்க மனுஷங்களா அவங்க... இல்லை மூன்று கூட்டம்...''

அதிர்ச்சியை விழுங்கிக் கொண்டு ரங்கம்மா அவசரமாய் கேட்டாள்.

''அப்புறம் என்னடா பண்ணீங்க?''

''டைரக்டர் சாமிக்கண்ணு படத்துல நடிக்கப் போயிட்டாங்கனு எதிர்வீட்டு ஆளு சொல்ல, நேரா வண்டிய மெட்ராஸுக்கு அண்ணன் விட்டாரு... நடு ராத்திரில டைரக்டர் வீட்டுக்கும் போயி, அவர மிரட்டி அண்ணி விலாசம் தெரிஞ்சுகிட்டு அங்க போனோம். வீட்டுக்குள்ளார ஒரே சத்தம்... கலாட்டா... கடைசில முகம் சிவக்க அண்ணன் வெளில வந்தாரு... 'வாடா'ன்னு கூறிட்டு வண்டில ஏறிட்டாரு... ஒரு வார்த்தை பேசல... என்னவோ முணு முணுத்துக்கிட்டே வந்தாரு... கிராமத்துல நுழைஞ்சு வீட்டு வாசல்ல வண்டில நிறுத்திட்டு உள்ளாரப் போறப்ப கூட ஒரு வார்த்தை பேசல... அண்ணன் உடைஞ்சிப் போயிட்டாரும்மா.''

ஆவேசத்தோடு துவங்கின சந்தானம் தொடர்ந்து குரல் கம்ம பேசப்பேச, மகனை விட்டு அந்த மாலினி போய்விட்டாள் என்கிற சேதி இடியாக தலையில் விழுந்த அதே சமயத்தில் சந்தோஷத்தில் அப்பாடா சனியன் விட்டது என்கிற நிம்மதியும் பெருக்கெடுப்பதை உணர முடிய, ஒருவித குற்ற உணர்வுடன் ரங்கம்மா தலையைக் குனிந்து கொண்டாள்.

# 14

சேதியைக் கேட்டவுடன் குழந்தைத்தனமாய் எட்டிப் பார்த்த குற்ற உணர்வு கலந்த மகிழ்ச்சி, எழுந்த வேகத்திலேயே மறைந்து போக, ரங்கம்மாவை பயமும், படபடப்பும் முழுமையாய் ஆட்கொண்டன.

இது உண்மைதானா?

அய்யோ?

ஊருக்குள் இந்தச் சேதி பரவினால்? அய்யய்யோ...

காதுக்குள் அலைகளின் பேரிரைச்சல்...

நெஞ்சுக்குள் நாலு பறவைகள் ஒரே சமயத்தில் இறக்கைகளை அசைக்கும் படபடா...

வயிற்றில் ஜிலீர் என்ற பயம் கோடு போட்டு சுழன்றது...

உள்ளங்கையில் வியர்வை...

நாக்கால் காய்ந்துவிட்ட உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டாள். இவள் மாதிரியே அருகில் விஷயத்தைக் கேட்டு அதிர்ந்து நின்றிருந்த வீரராகவனை ஏறிட்டு சின்னக் குரலில் ''என்ன கூத்து கணக்கு இது?'' என்றாள்.

கணக்கப்பிள்ளை நெற்றியை ஒரு தரம் உள்ளங்கையால் அழுந்தத் துடைத்துக் கொண்டார்.

''ஒ...ஒண்ணும் புரியலைம்மா...'' என்றார் பதிலுக்குப் பரிதாபமாக...

''இவன் ஒண்ணு கெடக்க ஒண்ணு உளர்றானா? இல்லை, நிசமாத்தான்...''

''நா சொன்னது அத்தனையும் சத்தியம்... என்ன நம்புங்க...''



K

வேகமாகக் குறுக்கே விழுந்து சந்தானம் பேச, இப்போது வீரராகவன் சுதாரித்துக் கொண்டார்.

"இரு...இரு...சந்தானம்...இப்ப குரல் எடுத்துக் கத்தறதால நீ சொல்லறத கூடுதலா நாங்க நம்பிடப் போறதில்ல... முதல்ல நா கேக்கற கேள்விகளுக்கு ஒழுங்கா பதிலச் சொல்லு...தம்பியும் நீயும் மூந்தாநாளு இங்கிருந்து புறப்பட்டதும் நேரா பாண்டிக்குதான் போனிங்க...அதானே?"

"ஆமாங்க..."

"போனப்ப...வீடு பூட்டி இருந்திச்சு. விசாரிச்சப்ப மாலினி, வீட்ட வித்திட்டு பட்டணத்தோட போயிட்டானு எதிர்வீட்டுக்காரர் சொன்னாரு?"

"ஆமாங்க..."

"இங்கேதானே உதைக்குது! அவனவன் கண்டதையும் தான் வம்புக்காகச் சொல்லுவான்—நம்பிடறதா?"

"அ!"

பதில் கூறத் தெரியாமல் சந்தானம் விழித்ததும், மீண்டும் அதையே வீரராகவன் கேட்க, எரிச்சலுடன் ரங்கம்மா குறுக்கிட்டாள்.

"அட! நீங்க ஒண்ணு—எனக்குனு வந்து வாச்சிருக்கிங்களே! ஆம்பளையா லட்சணமா, வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுனு விசாரிங்கனு சொன்னா, போனியா நின்னியானு உப்பு சப்பில்லாம கேள்வி கேட்டுகிட்டு நேரத்த வீண் பண்றிங்களே! அதான் உண்மையத் தெரிஞ்சுக்கிட்டு மெட்ராஸ் வரைக்கும் போயிட்டுகூட வந்திட்டம்னு சொன்னான் இல்ல?"

"சொன்னா? எல்லாத்தையும் அப்படியே நம்பிடணுமாங்க? வீட்ட பூட்டிகிட்டு சச்சேரி, கிச்சேரினு ஏதாச்சும் வேலையா பட்டணத்துக்கு போயிருக்கலாம் இல்ல?"



"தம்பிகிட்ட சொல்லாமலா?"

"தம்பிதான் இங்கேயே மூணு வாரமா தங்கிட்டானே! எப்படிச் சொல்றது?"

"ம்ம்?... அப்படியும் இருக்கும்னு சொல்றிங்களா?" யோசனையுடன் ரங்கம்மா இழுக்க, 'அய்யோ...அய்யோ' என்று சந்தானம் வாயில் அடித்துக் கொண்டான்.

"நாங்க பட்டிணம் போயி, அண்ணிய பாத்தோம்—அண்ணன் அவங்ககூட பெரிசா சண்டை போட்டாருனு வெவரமா சொல்றேன்...எதையும் காதுல வாங்காம நீங்க பாட்டுக்கு பேசிட்டே போறிங்களே!"

வீரராகவன் இரண்டே எட்டில் சந்தானத்தை நெருங்கினார்.

"அப்ப வீட்ட வித்துட்டு அந்த டைரக்டரோட போயிட்டது உண்மைதாங்கறே?"

"நிசம்...நிசம்...என்கிட்டயே சொன்னாங்களே..."

"யாரு?"

"அண்ணன் உள்ளார இருக்கறப்ப அண்ணியோட அம்மா என்னண்ட சொன்னாங்க...?"

"என்னனு?"

"ஏண்டா சும்மா தொரத்திக்கிட்டு வந்து தொந்தரவு தர்றிங்க...? அதான் உங்க சகவாசமே வேணாம்னு, ஊர விட்டே வந்திட்டம் இல்ல'...னு காட்டாம கேட்டாங்க..."

ரங்கம்மா கட்டிலிலிருந்து எழுந்து, வேகமாய் நடந்து சந்தானத்தை நெருங்கி, அவன் கன்னத்தில் இடித்தாள்.

"நாசமாப் போறவனே... ஒரு பொம்பிளைதான் அத்தனை திமிரா அப்படி பேசினான்னா நீயுமா வெட்கம் மானம் இல்லாம கேட்டுட்டு வந்தே?"

"நா வந்து நா..."

"ஆமா.. வந்து போயி.. மூணு வேளையும் திங்கச் சொல்லு, வண்டிக்கு பாரமா நம்பிகூட சுத்தச் சொல்லு, சொடி.. துப்புகெட்டவனே.. அப்படிப் பேசினவ வாயிலேயே பளிச்சுனு போட்டுட்டு வந்திருக்க வேணாம்!...ம்.. மேல என்ன சொன்னா சொல்லு..."

ரங்கம்மா தாடையில் இடித்து இன்னமும் வலிக்க, சந்தானம் கன்னத்தைத் தடவிக் கொண்டு பேசாமல் நின்றான்...

"சொல்லேண்டா.. வாயில என்ன கொழுக்கட்டையா? ...விசாரிக்க கணக்கு..."

"சொல்லு தம்பி...அந்தம்மா இன்னும் வேற என்ன சொல்லிச்சு?"

'இதோட எங்க பாப்பாவ அடியோட மறந்திடணும்.. மீறி வந்து இம்சை பண்ணிங்கன்னா, போலிஸ்ல சொல்றதத் தவிர வேற வழி இல்ல..'னு மிரட்டினாங்க..."

ரங்கம்மா இரண்டு கைகளாலும் மார்பில் ஓங்கி அறைந்து கொண்டாள்.

"பாவி.. பாவி ..எம்புள்ளைய மோசம் பண்ணி, அத்தன பணம், நகைய வாங்கிட்டயே...நல்லா இருப்பியா நீ? போலீஸ்ல சொல்லுவியா போலீஸ்ல... நாசமா போற வளே..."

ஆத்திரம் கொப்பளிக்க உரக்க ரங்கம்மா கத்தினாள். அந்தச் சத்தம் பின் கட்டுக்குக் கேட்டுவிட்ட மாதிரி பெருமாளும், ஏழுமலையும் என்ன நடக்கிறது இங்கே என்கிற கவலையுடன் எட்டிப் பார்த்ததும் கணக்கப்பிள்ளை அவசரமாய் அவளருகில் வந்து "அம்மா...கொஞ்சம் நிதானமா இருங்கம்மா ..." என்று சமாதானப்படுத்த முயன்றார்.



"என்னால தாங்க முடியலையே கணக்கு... இத்தனை தரங்கெட்டவங்களோடயா நாம சம்பந்தம் வச்சிகிட்டோம்னு பதறிப் போகுதே .. முருகா .. மைலம் பெருமானே.. என்ன சோதனையா இது...?"

ஆத்திரம் மறைந்து இப்போது அழுகை கொப்பளித்ததில் ரங்கம்மா மெதுவாகப் புலம்பி அழ ஆரம்பித்தாள்.

கணக்கப்பிள்ளை, பெருமாள் ஏழுமலைக்கு 'போங்க' என்று ஜாடை காட்டிவிட்டு அவர்கள் கண்ணை விட்டு மறைந்ததும் "வேற ஏதாச்சும் சொன்னாங்களா?" என்று தழைந்த குரலில் சந்தானத்திடம் கேட்டார்.

"திருப்பித் திருப்பி அதையேதான் சொன்னாங்க.. பட்டிணத்துல இருக்குற அத்தனை போலீஸ் அதிகாரிங்களும் அவங்களுக்கு வேண்டப்பட்டவங்களாம், விரல அசைச்சா நா, நீனு ஓடி வந்து அண்ணிமேல காத்துபடாம கட்டிக் காப்பாங்களாம். அதனால, அண்ணன தப்பித் தவறி அந்தப் பக்கம் வந்தா கூட நிலமை மோசமாயிடும்னு பத்து தரமாவது சொல்லி இருப்பாங்க.."

அவன் பேசிக் கொண்டிருக்கையிலேயே 'அடி செருப்பால' என்று ரங்கம்மா திட்டினாள்.

'சொல்லுவா... சொல்லுவா... என் பிள்ளை கொடுத்த பணம், போட்ட நகை எல்லாத்தையும் திருப்பிக் கொடுத்திட்டு, பத்து தரம் என்ன நூறுதரம் கூட வரவேணாம்னு சொல்லட்டுமே.. யார் வேணாங்கறாங்க?... சிறுக்கி... தெரு நாய்... திமிர் பிடிச்ச தேவ..."

ஆக்ரோஷமாய், அழுகையினூடே கத்தியவளின் வேதனை புரிந்த தினுசில் வீரராகவன் "அம்மா... எதுக்கும் கொஞ்சம் நிதானமாவே இருங்க.. பூரா விஷயமும் என்ன ஏதுனு தெரிஞ்சிக்காம வார்த்தய விட்டு, அது தம்பி காதுல விழுந்திருச்சின்னா வம்பு... கொஞ்சம் நிதானப்படுத்திக்கங்

கம்மா..." என்று கெஞ்சியவர், சந்தானத்தின் பக்கம் திரும்பினார்.

"நீ சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லிட்ட இல்ல? அப்ப கிளம்பு... யார் கிட்டயும் எதும் பேசிக்காத... பெரிய வங்க ஒரு முடிவுக்கு வர்ற வரைக்கும் நீ எதையும் கண்டுக் காதே... என்ன"—என்று கூறி அவனை அனுப்பி வைத்து விட்டு, அழுது கொண்டிருந்த ரங்கம்மாவிடம் வந்தார்.

"இப்படி அழுது புலம்பறதால யாருக்கும் எந்த லாபமும் இல்ல... முதல்ல தம்பியப் பாத்து, நடந்தது எல்லாம் நிஜம் தானானு விசாரிங்கம்மா..."

பதில் கூறாமல் கட்டிலில் வந்து அமர்ந்த ரங்கம்மா கைகளால் முகத்தைப் பொத்திக்கொண்டு 'முருகா... என்னப்பனே முருகா' என்று சன்னமா இரண்டு நிமிஷங்கள் போல அரற்றினாள்...

பின், தலையை நிமிர்த்தி வீரராகவனைப் பரிதவிப்போடு ஏறிட்டாள்.

"நா யாருக்கு என்ன கெடுதல் செஞ்சேன் கணக்கு? என் பிள்ளைக்கு என்ன குறைச்சல்? இந்த வீட்டதான் எடுத்துக் குங்க, இங்க பணத்துக்குப் பஞ்சமா இல்ல, வேற ஏதாச்சும் குறையா? மூத்தவதான் வெவரங்கெட்டத் தனமா எதையோ சொல்லிட்டு ஓடிப்போனா, இப்ப இவனுமா? அய்யோ... ஊர்க்காரங்க முகத்துல நா எப்படி விழிப்பேன், கணக்கு? சேதி ஊருக்குள்ள பரவிடுச்சுன்னா... அவ அவ நாக்கு பல்லுல பட கண்டபடி ஏசப்போறாளே... நா என்ன பண்ணுவேன்? உடம்பு உதறி உதறிப் போடுது கணக்கு..."

முகம் கோண ரங்கம்மா மீண்டும் அழ, அவளை என்ன சொல்லித் தேற்றுவது என்று விளங்காமல், கணக்கு தலை குனிந்தபடி நின்றார்.



ரங்கம்மா தலைப்பில் மூக்கைச் சிந்தி, கையைத் துடைத் துக் கொண்டாள்.

"நாட்டியக்காரியா இருந்தா என்ன, குணங் கெட்டவளா இருந்தா என்ன—ஊர் உலகம் என்ன பேசினா - என்ன-னு எதையும் லட்சியம் பண்ணாம எம்புள்ள ஆசை ஒன்னுதான் பெரிசுனு கட்டிவச்சேனே... இப்ப, பாராங்கல்லா தூக்கி போட்டுட்டாளே... யம்மாடி என் பெத்த வயிறு கொதிக்குதே... எனக்கே இப்படி இருக்குதே ராஜா தம்பி இந்த அவமானத்த எப்படித் தாங்குவான் கணக்கு? ஆயிரம் ஆனாலும் அவன் ஆம்பிளை இல்லியா? தலைய நிமிர்த்தி இனிமே தெருல எப்படி நடப்பான்? எனக்குத் தாங்கலியே... என் ராஜா...?

பிள்ளையின் தவிப்பைக் குறிப்பிட்டு ரங்கம்மா பேசின தும், வீரராகவன் சட்டென்று அதையே பிடித்துக் கொண்டார்.

"அப்ப பிடிச்சு இதத்தாம்மா நானும் யோசனை பண்ணிகிட்டே இருக்கேன்... தம்பிக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய நீங்களே இப்படி நிலை குலைஞ்சி போகலாமா? கண்ண தொடைச்சிக்கங்க... தம்பி அறைக் கதவ தட்டி, உள்ளாரப் போயி நைசா... பூரா விவரமும் தெரிஞ்சுக்குங்க... இந்த சந்தானம் சொல்லறத வச்சிகிட்டு நீங்க கலங்கறது எனக்குச் சரியா படல... எழுந்திரிங்கம்மா... முதல்ல தம்பி சரியா இருக்கிறாரானு பாருங்க... அவரண்ட பேச்சு கொடுத்து நடந்தத தெரிஞ்சுக்கங்க..."

தீர்மானமாக வீரராகவன் பேசினதும் ரங்கம்மா அதுவும் சரிதான் என்று நினைத்து, கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள்.

சமையல்கட்டுக்குள் சென்று ராஜாவுக்கு ஏற்ற மாதிரி, தானே போர்ன் விடா கலந்து எடுத்துக் கொண்டு பிள்ளையின்

K

அறைக் கதவைத் தட்டி, கெஞ்சிக் கொஞ்சி, எப்படியோ அவளை வெளிவரச் செய்தான்.

பேசுகிற விதமாய் பக்குமாய் பேசி, அவளை முதலில் போர்ன்விடா குடிக்கச் செய்தான்.

பின்னர், 'ஆடுற மாட்டை ஆடிக் கற...' என்கிற பழமொழியைப் பின் பற்றி, பிள்ளையின் போக்கிலேயே பேசி, முந்தினநாள் நடந்த அத்தனை விஷயங்களையும் ஒன்று விடாமல் தெரிந்து கொண்டாள்.

ராஜா கொதித்தபோது ரங்கம்மாவும் ஆத்திரப்பட்டு, அவன் நெகிழ்ந்தபோது அவளும் அழுது, அவன் வேதனைப் பட்டபோது அதே வலியில் அவளும் துடிக்க,

இரண்டு நாட்களுக்கு முன்னால் பாண்டிக்குப் போனதில் துவங்கி, முதல் நாள் சென்னையில் மாலினியின் வீடு தேடிச் சென்றது வரை ராஜா கூறினான். தொடர்ந்து அவளிடம் சண்டையான சண்டை போட்டதையும் சொன்னான். கடைசியில், எதையும் காதில் வாங்காத மாலினி "உன்னோட எனக்கு வாழப் பிடிக்கலை... இந்தா, நீ கட்டின தாலி... இத திருப்பி எடுத்துக்கிட்டுப் போயிடு... இது என்னண்ட இருக்குறவரையில்தானே நீ பொண்டாட்டி உறவு கொண்டாடுவே? இது புரிஞ்சு போனவாரமே இத கழட்டி வச்சிட்டேன்... இந்தா... எடுத்துக்கிட்டுப் போ... உப்பு போட்டுகிட்டு சாப்பிடற ஆம்பிளையா இருந்தா, இனியொரு தரம் என்னைத் தேடிகிட்டு வராதே..." என்று கூறி தாலிச் சரட்டை அலட்சியமாய் வீசியதையும் சொல்லி, அந்தப் பத்து பவுன் சரட்டை சட்டைப் பையிலிருந்து எடுத்து அம்மாவின் முன் வைத்து ராஜா, இதற்கு மேல் என்னை எதுவும் கேட்காதீர்கள் என்கிற மாதிரி படுக்கையில் குப்புற படுத்துக் கொண்டான்...

# 15

மூக்காலி மேல் கிடந்த தாலிச்சரடு தன்னைப் பார்த்து ஏளனமாய் சிரிக்கிற மாதிரி ரங்கம்மாவுக்குத் தோன்றியது.

அதை எடுக்கக் கை நீட்டியவள் தொட்டால் 'ஷாக்' அடித்து விடுமோ என்கிற பயத்துடன் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள்.

ஒரு நிமிஷம் அப்படியே நின்று சுருளாகக் கிடந்த அந்த தாலிச்சரட்டை, தைரியத்தை வரவழைத்துக்கொண்டு மெள்ள எடுத்தாள்.

பத்துபவுன் சரடு. ஒற்றப் பவுனை ஆசாரியிடம் தந்து அப்படியே தட்டிச் செய்யச் சொன்ன மாங்கல்யம். இரண்டு பக்கமும் தங்கக்குண்டுகள், அரை சவரன் காசுகள் தங்கக் கொப்பியில் கட்டப்பட்ட பவழங்கள். இத்தனையும் போதாது என்கிற எண்ணத்தில் ராஜா மிகுந்த ஆசையுடன் கடலூர் ஆசாரியிடம் ஸ்பெஷலாய் செய்யச் சொன்ன நவரத்தின கற்கள் பதித்த மாங்காய் டாலர்கள் பக்கத்துக்கு ஒன்றாய்...

பெரிய பண்ணை மருமகள் என்றால் சும்மாவா. கழுத்துத் தாலியே அலாதியாய் இருக்க வேண்டாமா என்ற இறுமாப்போடு, சரியாய் ஒரு வருஷம் முன்னால் செய்து போட்டது இன்றைக்கு அதன் புனிதம் கெட்டு, அர்த்தம் இழந்து கேவலம் பத்து சவரன் கருட்டப்பட்டு கையில் கிடக்க, ரங்கம்மாளினுள் கோபம் பட்டென்று வெடித்தது.

"எ... என்ன தம்பி சொல்றே. நீ? நீயும் வேணாம், நீ கட்டின தாலியும் வேணாம்னு விட்டெறிஞ்சிட்டாளா? ஒரு பொம்பள செறுக்கிக்கு அத்தனை இமிரா? மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு, புனிதமா நெஞ்சுல வெச்சு பாதுகாக்க வேண்டிய தாலிய, மனசறிஞ்சு, கழட்டி எறிஞ்சிட்டாளா? அய்யோ... அய்யய்யோ...

இவ பொம்பளையா, இல்ல பேயா? ஏன் தம்பி எனக்கு ஒண்ணுமே புரியலையே... உன்னண்ட என்ன குறை கண்டு அவ நீ வேணாம்னு ஒதுக்கிட்டா? ம்? உன் அருமை புரியாத அவ சத்தியமா பொம்பளையே இல்ல... ராட்சசி... அப்படித்தான் எனக்குப் படுது... போகட்டும்... கால சுத்தின பாம்பு ஒழிஞ்சிதுனு நிம்மதியா இரு... அன்னிக்கே எனக்கு... இந்த நாட்டியக்காரியாவது உன்னோட பொருந்தி குடித்தனம் பண்ணறதாவதுனு அடி நெஞ்சு பூரா சந்தேகம்தான்... பணத்தையும் காசையும் கணக்குப் பாக்காம தலையால கொட்டுனியே... அதுக்குப் பலனைப் பார்த்தியா விடு... விடு... இவ போயிட்டா உனக்கு வாழ்க்கையே அஸ்தமிச்சிடும்னு நினைச்சாளா என்ன? பூனை கண்ணை மூடிகிட்டா உலகம் இருண்டிடுமா? திமிர் பிடிச்ச நாயி... அவன கோர்ட்டுக்கு இழுத்து, சந்தி சிரிக்க வச்சா தான் ஏ[illegible] நெஞ்சு வேகும்... நாசக்கார பாவி... நல்லா இருப்பாளா அவ? என் கொழந்தை அருமை புரியாம, அவனைத் தவிக்க விட்டுட்டாளே, அவ மண்ணாத்தான் போவா... அவ..."

விரல்களைச் சொடுக்கி, தொடர்ந்து ஆக்ரோஷமாக ரங்கம்மா சபிக்கும் முன் படுத்திருந்த ராஜா சரக்கென்று எழுந்து உட்கார்ந்தான்.

"வேணாம்மா... என் காதுபட அவள ஒண்ணும் ஏசாதீங்கம்மா... ப்ளீஸ்..."

இரண்டு கைகளையும் கூப்பினவாறு பிள்ளை கெஞ்ச, ரங்கம்மா திகைத்துத்துத்தான் போனாள்.

"அந்த ஓடுகாலிய திட்டினா, உனக்கு ஏன் தம்பி பொத்துகிட்டு வருது?"

ராஜா பார்வையைத் தழைத்துக் கொண்டான்.



"அவ ஓடுகாலியோ, நாட்டியக்காரியோ எதுவானாலும் என் மனசு இன்னமும் அவதான் வேணும்னு சொல்லுதேம்மா..."

சின்னக் குரலில் தயக்கத்துடன் ராஜா பேசி நிறுத்தியதும் ரங்கம்மாவின் முகத்தில் அதிர்ச்சி வெளிப்படையாகத் தெரிந்தது.

"நீ...நீ... என்ன சொல்றே தம்பி?"

"மாலினி இல்லாம என்னால வாழ முடியாதுனு சொல்றேன்..."

ரங்கம்மா கையைத் தட்டி முகவாயில் வைத்துக் கொண்டாள்.

"உன் உறவே வேணாம்னு சொல்லி, நீ கட்டின தாலிய சுமட்டி எறிஞ்சவளயா திரும்பச் சேர்த்துக்க ஆசைப்படறே?"

வாய் வார்த்தையாகப் பதில் ஏதும் கூறாத ராஜா 'ஆம்' என்று தலை அசைக்க, அந்தக் கருத்தை ஏற்க இயலாமல் ரங்கம்மா படபடப்பாய் கத்தினாள்.

"என்ன பிள்ளையப்பா நீ? உன் ரத்தத்துல ரோஷம் கீஷம் இருக்குதா இல்லியா? ம்? உன்னை மதிக்காம உன்னண்ட ஒரு வார்த்தை சொல்லாம, வீட்டை விட்டு எவனோடையோ ஊரை விட்டே அவ போயிட்டா... நீ என்னடான்னா தொடர்ந்து அவளோட வாழ நா ரெடி-னு சொல்றியே... என்னாச்சு உனக்கு?"

இதற்கும் பதில் பேசாமல் ராஜா தோளைக் குலுக்கியபடி நிற்க, ரங்கம்மா ஆத்திரத்துடன் வீரராகவன் பக்கம் திரும்பினாள்.

"இடிச்ச புளியாட்டம் அப்படியே நிக்கவா உங்களையும் கூட்டிகிட்டு பேச வந்தேன்? தம்பிதான் குழம்பிப் போயி, ஏதேதோ பேசறான்னா, நீங்களும் கேட்டுட்டு நிக்கறீங்களே...

K

அந்த கழிசடையோட இனிமே நமக்கு சகவாசம் வேணாம்னு எடுத்துச் சொல்லுங்க கணக்கு..."

அவன் முடிக்கும் முன் ராஜா வள்ளென்று விழுந்தான்.

"நா சொல்றது உங்களுக்குப் பிடிக்கலைனா, என்னைத் தனியா விட்டுட்டு அந்தண்டப் போயிடுங்க... சும்மா என் காதுபடவே கழிசடை, அது இதுனு சொல்லி மனசை நோக அடிக்காதீங்க... ஆமா..."

"நானாப்பா உன் மனச நோக அடிக்கறேன்? உன்னைப் புழு மாதிரி மதிச்சு காலவ போட்டு தேய்ச்சிருக்கா, அது உனக்குச் சரியான காரணமா படுதா? என்ன தம்பி இது?"

அதட்டிக் கேட்க நினைத்தது நடக்காமல் ரங்கம்மாவின் குரல் கெஞ்ச ராஜா அலுப்புடன் எழுந்து நின்றான்.

"சும்மா திருப்பித் திருப்பி அதையே கேட்காதீங்கம்மா... எனக்கு மாலினி வேணும்... அதான் முக்கியம்... புரிஞ்சுக்குங்க..."

இரண்டடி எடுத்து வைத்தவனை 'நில்லு' என்று ரங்கம்மா தடுத்து நிறுத்தினாள்.

"உன் முடிவ நீ மாத்திக்கறதா இல்லியா?"

"ம்ஹூம்..."

"சரி இப்ப என்ன பண்ணப் போறே? திரும்ப அவ கால்ல விழுந்து என்னோட வாழ வாடின்னு கூப்பிடப் போறியா?"

ராஜா முகவாயைத் தேய்த்துக் கொண்டு யோசித்தான்.

"அப்படிக் கெஞ்ச என் கௌரவம் இடம் கொடுக்கல... அதனால, நாளைக்கே கணக்கப்பிள்ளைய மெட்ராஸுக்கு அனுப்பி பக்குவமா பேசி, அவ மனச மாத்தி கூட்டிட்டு வந்திடச் சொல்லுங்க..."



"இது நடக்குமா? தாலிய கழட்டி எறிஞ்சிட்டவ. திரும்ப கூப்பிட்டா வருவாளா?"

ராஜா அம்மாவை அழுத்தமாக ஏறிட்டான்.

"வருவா... நம்ம கரும்பு தோட்டத்த அவ பேருக்கு எழுதி வைக்கறதா சொல்லுங்க... தன்னால வருவா..."

மகன் பேசுவதை நம்ப முடியாமல் ரங்கம்மா கண்களை விரித்தாள்.

கரும்புத் தோட்டத்தையா? அந்தக் கூத்தாடி பேருக்கு எழுதி வைப்பதா?

லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள, வருஷா வருஷம் விரலை அசைக்காமல் ஐம்பதாயிரத்துக்கும் மேல் வருமானத்தை ஈட்டித் தரும் அந்தப் பொன்னான தோட்டத்தையா?

பைத்தியம், வைத்தியம் பிடித்துப் பேசுகிறானா?

பெண் பித்து இந்த அளவுக்கா தலையில் ஏறிவிடும்!

"என்னம்மா—பதில் பேசாம பிரமை பிடிச்சு நின்னுட்டீங்க? என் சந்தோஷம் உங்களுக்கு முக்கியம்னா நா சொல்றபடி செய்யுங்க... நா எக்கேடு கெட்டுப் போனா என்னனு நினைச்சா, உங்க இஷ்டம்... அதான் நா சொல்லுவேன்..."

கொஞ்சம் சுதாரித்துக்கொண்டு 'சுய நினைவோடுதான் பேசுகிறாயா?' என்று கத்த ரங்கம்மா வாயைத் திறந்த நிமிஷத்தில் ராஜாவுக்குப் பின்னால் நின்றிருந்த வீரராகவன் 'சரி' என்று சொல்லுங்கள். 'இப்போது தர்க்கம் வேண்டாம்' என்று சைகை காட்ட, ரங்கம்மா நிதானித்தாள். கை விரல்களை ஒரு தரம் இறுக மூடித் திறந்து தன் கோபத்தைக் கட்டுப்படுத்த முயன்றாள்...

K

''என்னம்மா?''

'ம்ம்... பார்ப்பம்... இப்பத்தானே புதுசா எதையோ கௌப்பி இருக்கே... யோசனை பண்ணிட்டு நாளைக்குச் சொல்றேன்.''

''யோசனை பண்ண ஒண்ணுமே இல்லம்மா... நாளைக்கு எல்லாமே எனக்கு வரப்போற சொத்துதானே? அதுல கொஞ்சம் தன் பேர்ல இருக்கணும்னு மாலினி ஆசைப்படறதுல தப்பு என்ன? நேத்து மெட்றாஸ்ல பாத்தப்பகூட 'என்னை பெண்டாட்டியா நீங்க எங்க நடத்தினீங்க? மனைவிங்ற நம்பிக்கை வந்திருந்தா சொத்துக்கள என்பேர்ல எழுதிவக்காம இருந்திருப்பீங்களா''னு சண்டை போட்டா... கரும்பு தோட்டத்த அவ பேருக்கு எழுதி வச்சிட்டா, மாலினியோட குறை நீங்கிடும்னே நா நினைக்கறேன்...

கண்ணைக் கட்டிவிட்ட குதிரையாய் ராஜா பேச, அவனோடு எதையும் விவாதிக்க மனமின்றி ரங்கம்மா மௌனமாய் நின்று பேச்சை அதோடு முடித்தாள்.

ஆனால், ராஜா தன் அறைக்குச் சென்றதும் தோட்டத்தில் சென்று உட்கார்ந்து இது குறித்துச் செய்யவேண்டிய காரியங்களை ரொம்ப நேரத்துக்கு வீரராகவனுடன் அலசினாள்.

கடைசியில், மகன் விருப்பப்படி கணக்கப் பிள்ளையைச் சென்னைக்கு அனுப்பி மாலினியோடு பேச வைப்பது. ஆனால் அங்குக் கரும்புத் தோட்டத்தை எழுதி வைப்பது பற்றி ஏதும் பேசாமல் நிலைமையைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு வரச் சொல்லுவது என்று தீர்மானித்து, அதையே செயலிலும் காட்டினாள்.

சென்னைக்குப் புறப்பட்டுப் போன வீரராகவன் இரண்டாம் நாள் மதியம் ஊருக்குத் திரும்பி வந்தபோது ராஜா தன் அறையில் இருந்தான்.



கூடத்தில் அமர்ந்திருந்த ரங்கம்மா 'என்ன கணக்கு?'' என்று தவிப்புடன் கேட்டதும் 'எல்லாம் உங்கமனசு போலத் தான் நடந்திருக்கு. கவலைப்படாம இருங்க' என்று தணிந்த குரலில் பதில் கூறினவர் 'தம்பி எங்கம்மா?' என்று உரக்கக் கேட்டுவிட்டு ராஜாவின் அறைக்குள் சென்றார்.

ஜன்னலருகில் நின்று சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த ராஜா இவரைக் கண்டதும் வேகமாய் அருகில் வந்தான்.

''மாலினியப் பாத்தீங்களா கணக்கு? தன் தப்பு புரிஞ்சு அழுதிருப்பாளே! அவ ஒரு குழந்தை மாதிரி. எனக்குத் தெரியும்... நல்லவிதமா எடுத்துச் சொன்னா, தன்னால நிலைமைய புரிஞ்சிக்கிடுவா... சரிதானே கணக்கு?''

உற்சாகத்துடன் பேசியவனை நிமிர்ந்து பார்த்த வீரராகவன் 'ப்ச்' என்று சூள் கொட்டினார்.

''நீங்கதான் உலகம் தெரியாதவரா இருக்கீங்க தம்பி... அங்க அம்மாவும், பொண்ணுமா போடற ஆட்டத்த திரும்பிச் சொல்லக்கூட என் நா கூசுது... 'கல்யாணம் எப்ப நடந்துச்சு? சாட்சி யாரு? சினிமால கூடத்தான் படத்துக்குப் படம் தாலி கட்றாங்க... அதனால அத்தனை பேரும் புருஷன்னு ஆயிடுமா? எத்தனையோ பேரோட பழகறோம்... அதுல உங்க தம்பியும் ஒருத்தர்... பழகினதுக்கு பரிசா பணம், நகை கொடுத்தாரு... அதுக்கும் இதுக்கும் சரியா போச்சு... இனியொருதரம் யாராச்சும் தூது வந்திங்கன்னா மரியாதை கெட்டுப் போயிடும்'னு முகத்தில் காறித் துப்பாத குறையா பேசிட்டாங்க தம்பி...''

''கரும்புத் தோட்டத்த எழுதி வைக்கறது பத்தி சொன்னீங்களா?''

''சொல்லாம? ஆனா, அத அவங்க காதுல வாங்கினா தானே! கேட்டுட்டு சிரிக்கிறாங்க தம்பி...'யாருக்கு

வேணும் உங்க கரும்புத் தோட்டம்! நா ஒரு படத்துக்கு வாங்கற சம்பளத்துல அந்த மாதிரி நாலு தோட்டம் வாங்குவேனே'னு அலட்சியமா பேசறாங்க .. எட்டு படத்துக்கு ஒப்பந்தம் ஆகி, அட்வான்ஸ் வாங்கிட்டாங்களாம்... அவனவன் 'என் படத்துல நடி'னு கையில லட்சக்கணக்கா பணத்தை வெச்சிக்கிட்டு கெஞ்சறானாம்... இனி உங்க பேர் சொல்லிகிட்டு வாசப்படி மிதிச்சா—'ஆள் வைச்சு கால வெட்டிடுவோம்'னு திட்டவட்டமா சொல்லிட்டாங்க... தம்பி.. மானம் பெரிசுனா இனிமே அந்தப் பொம்பளை பேரைக்கூட நம்ம வாயால சொல்லாம இருக்கறதுதான் சரி.. ''

நிஜமான வருத்தத்துடன், ஆனால் மிகத் தெளிவாக வீரராகவன் பேச, அந்தப் பேச்சுக்குக் கட்டுப்பட்டு ஒருவாரம் போல ராஜா பேசாமல் இருந்துவிட்டு பிறகு இரண்டு முறைகள் தானே சென்னைக்குச் சென்று மாலினியை சந்திக்க முயன்று அவள் 'அவுட்டோர்' போய் விட்ட காரணத்தால் பார்க்க இயலாமல் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தான்.

தொடர்ந்து, கொஞ்சம் கொஞ்சமாய் தெரிந்தவர்கள் நடுவில் சேதி பரவி ஊர் பூராவும் முகத்துக்கு எதிரிலேயே வம்பளக்கத் துவங்கினதும் இது வரை வீட்டுக்கு வெளியே மட்டும் என்றிருந்த குடிப்பழக்கம் மாறி, 'மனசு சரியில்லம்மா' என்று கூறி பகல் நேரத்துலேயே பாட்டிலை பகிரங்கமாகத் திறந்து வைத்துக் கொண்டு ராஜா உட்காருவது நடக்க ஆரம்பித்தது.

# 16

மரீட்டுத் தொழுவத்தில் அரைமணி போல நின்று காலையில் கன்று போட்டிருந்த சினைப் பசுவை கவனித்து, செய்ய வேண்டிய உபசாரங்களை ஆட்களைவிட்டுக் கச்சித மாய் செய்யச் சொன்னபின், கழுத்து வியர்வையை துடைத்த படி வீட்டுக்குள் நுழைந்த ரங்கம்மா கூடத்தைத் தாண்டும் போது நின்றாள். முகத்தைச் சுளித்தாள்.

பிராந்தி நெடி!

சிகரெட்டின் மணம்!

விழிகளை உயர்த்தி சுவர்க்கடிகாரத்தை ஏறிட, அது பதினொன்னரை என்றது.

காலை பதினோரு மணி அளவிலேயே ராஜா குடிக்க ஆரம்பித்துவிட்டானா!

என்ன அக்கிரமம் இது!

போனால் போகிறது, போனால் போகிறது என்று விட்டுக் கொடுத்துக் கொண்டே போனால் தலைக்கு மேலேயே ஏறி உட்கார்ந்துகொள்கிறானே?

இனியும் பொறுப்பது தவறோ?

தூணில் சாய்ந்து ரங்கம்மா கண்களை மூடிக் கொண் டாள். படபடத்த நெஞ்சத்தைக் கையால் நீவி, ஆஸ்வாசப் படுத்திக் கொள்ள முயன்றாள்.

பிள்ளைக்கு குடி, சிகரெட் பழக்கம் ரொம்ப வருஷங் களாக இருப்பது ரங்கம்மா அறிந்த சமாசாரம்தான்.

பள்ளிப் படிப்பை முடிக்கும் முன்னரே ராஜா சிகரெட் பிடிப்பதாக முதலில் தகவல் வந்தபோது அதை அவன்

சத்தியமாய் நம்பவில்லை. 'போடா போக்கத்தவனே ஆத்தாமையில் இல்லாததையும், பொல்லாததையும் பேசித் திரியாதே!' என்று சேதி சொல்ல வந்தவனையே மண்டையில் தட்டி அனுப்பி விட்டாள்.

மேற்கொண்டு ஒரு வருஷம் செல்வதற்குள் அதையே தொடர்ந்து கேள்விப்பட்டு, பிள்ளை புகைபிடிப்பது உண்மைதான் என்பது புரிந்ததும்—'சரி போ - ஆண் பிள்ளை என்றால் இது சகஜம். இந்தக் காலத்தில் எந்த வீட்டில் பிள்ளைகள் புகைப் பிடிப்பதில்லை' என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டு, ராஜாவிடம் இது சம்பந்தமாய் ஏதும் பேசாமல் இருந்தாள்.

பின்னர், கணவரை இழந்து, நிலபுலன்களைக் கவனிக்க மேல் படிப்பை நிறுத்திவிட்டு ராஜா வீட்டோடு வந்த சமயத்தில் அரசல் புரசலாக அவன் குடிக்கும் சேதி காதில் விழ ஆரம்பித்தது. கூடவே, வெளியே போய்விட்டு பிள்ளை திரும்புகையில் புளித்த வாடை!

ஓரிரு முறைகள் ராஜாவிடம் இந்தப் பேச்சை எடுக்கப் பார்த்து அவன் சின்னப் பையனைப்போல கண்கலங்கி நின்று 'நானா குடிக்கிறேன்? என்னம்மா இது' என்று பரிதாபமாய்க் கேட்க, 'ஐயோ—என் பிள்ளையைப் பற்றி நானே தவறாக நினைக்கலாமா?' என்று தன்னைத்தானே திட்டிக் கொண்டு பேச்சை அத்துடன் ரங்கம்மா மறந்ததுண்டு.

ஆனால் அந்தச் சுய திட்டலும், சுய சமாதானமும் கொஞ்ச நாட்களுக்குத்தான்.

ராஜா குடிப்பதும், கண்டபடி சுற்றுவதும் உறுதியான பிறகும்கூட இதுகுறித்து மகனைக் கண்டிக்கவோ 'என்னப்பா இது?' என்று விசாரிக்கவோ ரங்கம்மாவுக்குத் தைரியம் இல்லை. இல்லை, மனம் வராமல் போனதுதான் உண்மை. அம்மாவின் இந்தக் குணத்தைத் தனக்குச் சாதகமாக ஆக்கிக்



கொண்டு ராஜா இஷ்டப்படி வாழ்ந்ததும் உண்மை...

ஆனால், இங்கே ஒன்று கட்டாயம் சொல்லியே ஆக வேண்டும்.

சிகரெட்டை வேண்டுமானால் ராஜா வீட்டில் புகைப் பானே தவிரவும், குடிப் பழக்கத்தைப் பல வருஷங்களாக வெளியிலேயே வைத்துக்கொண்டிருந்தான். அது அம்மாவுக்கு அவன் காட்டிய மரியாதையோ, அல்லது அந்த அளவுக்குத் துணிச்சல் இல்லாமல் போனதோ — ஏதோ ஒன்று...

ஆனந்தி வீட்டை விட்டுப் போகும் முன்னர் 'அவர் குடிச்சிட்டு தினம் ராத்திரி என்னண்ட தாறுமாறா நடந்துக்கிறார்' என்று புலம்பியபோதுகூட, அது குறித்து அத்தனை மனக்கஷ்டப் பட்டவள் இல்லை ரங்கம்மா...

எந்தப் பணக்கார வீட்டில் இதெல்லாம் இல்லை? பணம் காசு தாராளமாகப் புழங்கினால் நாலு குணமுந்தான் இருக்கும்; இதைப்போய் யாராவது பெரிசு பண்ணுவாங்களா? — என்று வழக்கம் போல பிள்ளைக்காக அளவுக்கு மீறி பரிந்து, மனசைத் தேற்றிக்கொண்டவளால் ஏனோ, இப்போது வீட்டில் நடக்கும் அநியாயத்தைத் தாங்க முடியாமல்தான் இருக்கிறது.

வீட்டிலேயே குடிக்கிறான்!

அதுவும் பட்டப் பகலில்!

அம்மா, இதர ஊர்ப் பெரியவர்கள் என்ன சொல்வார்களோ என்கிற கவலை துளியும் இன்றி!

என்ன பிள்ளை இவன்!

அம்மா மனசு நோக நடக்கிறோமே என்கிற வருத்தம் கூடவா இல்லை?

ஒரு வாரமாய் குடிப்பழக்கம் அதிகமாகி வேளா வேளைக்குச் சாப்பிட வராமல், தூங்காமல், நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு அழுது, சிரிப்பது ஏகத்துக்கு ஏறிப்போக, முதல் முறையாகத்தான் இனியும் சும்மா இருப்பது தவறோ என்கிற பயம் ரங்கம்மாவுக்குள் முளைத்தது.

சின்னப் பையன்...

நாளைக்கு அமோகமாக வாழ வேண்டிய பிள்ளை...

இப்படி குடித்து குடித்துக் கண்முன் சீரழிந்தால், அதைப் பார்த்துக் கொண்டு இருப்பது சரியா? அப்புறம் பெற்றவள் நான ஒருத்தி இருந்துதான் பயன் என்ன?

ராஜாவிடம் பேசிப் பார்க்கலாமா?

பத்து நாட்களாக நெருங்கினாலேயே நாய் மாதிரி விழுகிறவனிடம், என்னவென்று எடுத்துச் சொல்வது?

சொன்னால்தான் கேட்பானா?

தன் நல்லதுக்குதான் அம்மா சொல்கிறாள் என்பதை கருத்தில் வாங்கிக்கொள்வானா?

இல்லை — மற்றவர்கள் மாதிரி அம்மாவும் என்னை புரிந்து கொள்ளாமல் பழிக்கிறாளே என்று வருந்துவானா?

நாளைக்குப் பேசலாம் — என்று ஒவ்வொரு நாளாக ஒத்திப் போட்டதுபோல இனியும் செய்ய முடியாது என்பது புரிய, கூடத்தில் நின்று கொஞ்சம் யோசனை பண்ணியவள் 'கணக்கு' என்று உரக்கக் குரல் கொடுத்தாள்.

''கூப்டீங்களாம்மா?''

''ம்...வேலையா இருக்கீங்களா?''



''முக்கியமா ஒண்ணும் இல்ல...எங்கயாவது போகிட்டு வரணுமா?''

''வெளி ஜோலி ஏதும் இல்ல...கொஞ்சம் பேசணும்; உள்ளார வாங்க...''

எஜமானியம்மாளின் முகம் கவலையில் கனங்கி இருப்பதைக் காண முடிய, மேற்கொண்டு எதுவும் கேட்காமல் வீரராகவன் அவள் பின் நடந்தார்.

அறைக்குள் சென்று, நாற்காலியில் அமர்ந்து கொண்ட ரங்கம்மா அவரோடு பேச நிமிர்ந்தபோது, அவள் கண்கள் வீங்கி இருந்தன. சுற்றி வளைக்காமல் பேசுவதுதான் நல்லது என்கிற நினைப்பில் நேரடியாக விஷயத்துக்கு வந்தாள்.

''இந்தப் பிள்ளையோட போக்கை நினைச்சாதான் கவலையா இருக்கு, கணக்கு...''

''.........''

''பத்து நாளா வீட்டுல நடக்கிற கூத்தை பாத்துகிட்டு தானே இருக்கீங்க?''

''.........''

''நாம இருக்கிறதோ சின்ன கிராமம்...இங்க ஒருத்தர் வீட்டுல தும்மினா கூட ஊர்பூரா நிமிஷமா பரவிடும்...இது தெரியாம தம்பி கன்னா பின்னானு நடந்துக்கறானேனு வேதனையா இருக்கு கணக்கு...''

நிஜமான வருத்தத்துடன், ஒருவித கையாலாகாத்தனம் ...ஆளைப் பிடிக்க ரங்கம்மா பேசியதும், அந்தச் சோகம் தன்னையும் தொற்றிக் கொண்டுவிட்ட அவஸ்தையுடன் வீரராகவன் தலையைக் குனிந்துகொண்டார்.

''தம்பி மனசு புண்பட்டுப் போயிருக்கு... அது எனக்கு நல்லாவே புரியறது... அதுக்கு இதமா நடந்துக்க என்னால

K

முடிஞ்சதை எல்லாம் முயற்சி பண்ணிப் பார்த்தும் எதுக்கும் பலன் இல்லாமே இருக்குதே. நா என்ன பண்ணட்டும் கணக்கு? வேணா ஒருநடை நானே பட்டணத்துக்குப்போய் அந்த கழுத காலலவிழுந்து கெஞ்சிப்பாக்கட்டுமா... அப்படி செஞ்சாலாவது...''

அவளை முடிக்கவிடாமல் வீரராகவன் பதறிக்கொண்டு 'அய்யய்யோ' என்றார்.

''என்ன வார்த்தைய சொல்லிட்டீங்கம்மா... நீங்க போய் அந்தப் பொண்ணு கால்ல...முருகா...என்ன அசிங்கம்மா இது... பெரிய பண்ணை வீட்டுக்கே முதலாளி நீங்க... நீங்க போயி... என்னம்மா, என்ன பேசறோம்னு புரிஞ்சுதான் பேசறீங்களா?''

ரங்கம்மா பரிதாபமாக விழித்தாள்.

''நா வேற என்ன பண்ணுவேன் கணக்கு? என்பிள்ளை படற வேதனை எனக்குத் தாங்கலியே...அவன் விருப்பப்பட்ட மாதிரியே கரும்புத் தோட்டத்த மாத்திக் கொடுத்திடலாமா? அப்படி செஞ்சாலாவது அவ மனசு மாறி வந்திடுவாளா?''

வீரராகவன் விரக்தியுடன் தலையை அசைத்தார்.

''புளியமரத்த விட்டுப் பேய் எறங்கினாலும், எறங்குமே தவிர அவங்க மனசு எறங்காதும்மா... பெண்ணாறுல வருஷம் பூரா கரையத் தொட்டுக்கிட்டு தண்ணி ஓடுதுனு யாராச்சும் சொன்னா நீங்க நம்புவீங்களா? அத எவ்வளவு நம்பலாமோ, அவ்வளவு அந்த மாலினிப் பொண்ணையும் நம்பலாம்... சரியான மண் குதிரைம்மா... அதோட, சுயநலம், வசதியான வாழ்க்கை இதுதானே அவங்க குடும்பத்துக்கே முக்கியம்... கரும்புத்தோட்டத்த இன்னிக்கு எழுதிக் கொடுத்தா, ஒரு பத்து நாள் சும்மா இருப்பாங்க... அப்புறம் திரும்ப வாலாட்டத் துவங்கி, அடிமடியிலே கைவைக்கத் துணிவாங்க... அவங்க



அப்படிப்பட்ட ஜாதி... விட்டது சனியன்னு இருக்கிறதுதாம்மா சரி... மனசை திடப்படுத்திக்கங்க... வேற வழி இல்லை...''

''அவளை நினைச்சுக்கிட்டே தம்பி சோழிஞ்சு போறானே கணக்கு, அதுக்கு ஒரு தீர்வு சொல்லுங்க...''

''நீங்க தம்பிகிட்ட மனசுவிட்டுப் பேசி பார்க்கக்கூடாதாம்மா?''

ரங்கம்மா நீளமாய் பெருமூச்சுவிட்டாள்.

''நின்னு பேசினாதானே கணக்கு. தம்பி இது தப்பு. இது ரைட்டுனு எடுத்துச் சொல்றதுக்கு? விடிய விடிய குடிக்கறான்...குடிச்சப்புறம் குணமே கெட்டுப் போயிடுது. முகமும் கண்ணும் ஜிவுஜிவுனு பார்க்கவே பயமா இருக்கு... இரண்டு மணியோ, மூணு மணியோ தூங்கப்போயிட்டு, காலைல பத்துமணிக்கு எழுந்துக்கறான். கண்ணை விழிக்கிறதுக்கு முன்னாலியே ஸ்னேகிதங்க கூட்டம் வாசல்ல வந்து நின்னுடுது...மறுபடி குடி...போதை... அரைமணியாவது தனியா பார்க்க முடிஞ்சாதானே பேச, சொன்னா?...''

கணக்குப்பிள்ளை துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார். எச்சிலைக் கூட்டி விழுங்கினார். தயக்கத்துடன் பேசினார்.

''ஊர்ல கண்ணா பின்னானு பேசறாங்கம்மா... அதெல்லாம் கேள்விப்பட்டா நீங்க உடைஞ்சிப் போயிடுவீங்க...''

''தம்பி குடிக்கறதைப் பத்திதானே பேசறாங்க?''

''அது மட்டும் இல்லம்மா... ஓடிப்போன சம்சாரங்கள பத்தி. தம்பியோட...ஆ...ஆண்மை குறைவு பத்தி—னு என்னென்னமோ இஷ்டத்துக்குப் பேசறாங்க...வெளில தலை காட்ட முடியல... நானே இன்னிக்கு உங்களண்ட இது பத்திப் பேசணும்னு இருந்தேன்... நல்ல வேளையா நீங்களே

K

பேச்ச எடுத்திட்டீங்க...உடனடியா இதுக்கு ஒரு வழி பண்ணனும்மா..."

நீர் வழிந்துவிட்ட விழிகளை விரல்களால் அழுந்தத் தேய்த்து விட்டுக் கொண்ட ரங்கம்மா அலுப்புடன் நிமிர்ந்தாள்.

"திருப்பித் திருப்பி ஏதாவது பண்ணுங்கறு இனிப் பிள்ளையாட்டம் சொல்லிட்டே இருந்தா எனக்குக் கோபம் வரும் கணக்கு...நானே மண்டைய உடைச்சிக்கிட்டிருக்கறது பத்தாதுனு நீங்கவேற எனக்கு வழி ஏதாச்சும் சொல்லறதுனா உருப்படியா சொல்லுங்க... இல்லாட்டி வாய மூடிக்கிட்டுப் போங்க...என் தலைவிதி இதுதான்னு அனுபவிச்சிட்டுப் போறேன்..."

மூன்று நாள் தாடியைப் பரக் பரக்கென்று சொறிந்து கொண்டு இந்தப் பிரச்சனைக்கு எப்படித் தீர்வு காணலாம் என்ற யோசனையுடன் வீரராகவன் நிற்க, ரங்கம்மா ஏதோ நினைப்பு வந்த மாதிரி பேசினாள்.

போன ரெண்டாம் மாசம் எனக்கு உடம்புக்கு வர்றதுக்கு முன்னால ஒருதரம் தம்பி என்ன சொல்லிச்சினு நினைப்பு இருக்கா கணக்கு? 'ஏம்பா அடிக்கடி வந்துபோக மாட்டேங்கறே?"னு நா கேட்டப்போ 'போங்கம்மா—இந்தக் பட்டிக்காட்டு கிராமத்துல என்ன இருக்குனு அடிக்கடி வரச் சொல்றீங்க? ஒரு நாள் வந்தாகூட பொழுது போகமாட்டேங் குது...ஒரு வி.சி.ஆர் உண்டா, கலர் டி.வி.உண்டா'னு அலுத் துக்கிட்டானே, நினைப்பு இருக்கா? வீட்டுலேயே படம் பார்க்குற மாதிரி அந்த டீ.வி., வி சி ஆர் ஐ வாங்கிட்டா என்ன கணக்கு? படங்கள்ல புத்திப் போச்சுன்னா, குடிக்கற தைக் குறைக்கலாம் இல்ல... என்ன சொல்றீங்க?"

"நல்ல ஐடியாவாத்தான் தோணுது.. தம்பி ரொம்ப ஆசைப்பட்டுதான் முன்னே சொன்னாரு..ஆனாலும்—"



"இழுக்காதீங்க... நறுக்குனு காரியத்த முடிங்க... இன்னிக்கே கடலூருக்குப் போயி நம்ப ரஹ்மான் பாய பார்த்து ரெண்டு நாள்ல கலர் டீவியும், வி சி ஆரும் வந்து சேரணும்னு சொல்லுங்க... தம்பிக்கு வெளிநாட்டு சாக்குனா பிரியம் அதிகம்.. நல்ல சாமானா கொண்டுவரச் சொல்லுங்க..."

"காசு எக்கச்சக்கத்துக்கு ஆகும்மா..."

"ஆனா ஆகட்டும்... என் பிள்ளை நிம்மதிய விட எனக்குப் பணம் முக்கியமில்ல..."

"அதுவும் சரிதான்..." ரங்கம்மாவை எதிர்த்துப் பேச துணிவில்லாமல் அப்படியே நின்ற வீரராகவன், பேச்சு முடிந்துவிட்டதைக் குறிக்கும் வகையில் "மசமசனு நிக்காதீங்க . போய் ஆகவேண்டியதைப் பாருங்க..." என்று ரங்கம்மா சொன்னதும்... வெளியில் போகத் திரும்பினார்.

இரண்டடி வைத்தவர் நின்றார்.

அருமையான யோசனை ஒன்று தலை எடுத்துவிட்ட மகிழ்ச்சி முகத்தில் வெளிச்சம் போட்டது.

"அம்மா... இப்படி பண்ணா என்ன?"

"எப்படி?"

"கடலூர் பாய்கிட்ட சொல்லறதுக்குப் பதிலா, நம்ப தம்பியையே சிங்கப்பூருக்கு ஒரு நடை அனுப்பி, வேண்டியத வாங்கிட்டு வாங்க... நாலு இடம் சுத்திப் பாத்தா மனசுக்கும் ஆறுதலா இருக்கும்னு அனுப்பி வச்சா?"

வீரராகவனின் வார்த்தைகள் புது உற்சாகத்தைத் தர ரங்கம்மா பளிச்சென்று எழுந்து நின்றாள்.

இது நல்ல ஐடியாவாக இருக்கிறதே!

K

போன வருஷமே போக ஆசைபட்டு பாஸ்போர்ட்கூட எடுத்து வைத்தான்; ஏனோ போகத்தான் முடியவில்லை.

சிங்கப்பூருக்குப் போகிறாயா என்றால் குதித்துக் கொண்டு ராஜா கிளம்புவான்—நிச்சயம்

பத்து, பதினைந்து நாட்கள் தங்கி ஊர் சுற்றிப் பார்த்து விட்டு, அப்படியே வேண்டிய சாமான்களையும் வாங்கி வா என்றால் யாருக்குக் கசக்கும்? ராஜா சந்தோஷத்தில் திளைத்துப்போக மாட்டானா?

வீரராகவனின் கணக்கும், ரங்கம்மாவின் எதிர்பார்ப்பும் சரியாகவே இருந்தன.

ரங்கம்மா பிள்ளையிடம் அன்றே "சிங்கப்பூருக்குப் போய் விட்டு வாயேன்—ஒரு மாறுதலாக இருக்கும்" என்றதும்—எதிர்பார்த்தபடி உடனே ராஜா மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டான். தவிர, அடுத்து வந்த பதினைந்து நாட்களில் டிக்கெட் — விசாவுக்காக அலைந்துவிட்டு, குஷியுடன் மூன்றாவது வாரம் திட்டமிட்டபடி புறப்பட்டபோது ராஜாவின் குடிப்பழக்கம் கணிசமான அளவுக்கு குறைந்து காணப் பட்டது என்றும் சொல்ல வேண்டும்.

## 17

எத்தனையோ படங்களில் பார்த்து, பத்திரிகையில் விவரமாய் படித்திருந்தாலும் நேரில் காணும்போது சிங்கப்பூர் ராஜாவை திக்குமுக்காடவே செய்தது.

சென்னையைப் போல் அல்லாமல் விமானத்தின் கதவிலேயே வந்து பொருத்தப்பட்ட குகை மாதிரியான



கூண்டு வழியே நடந்து, நகர்ந்து செல்ற வராந்தாவின் மேல், நின்று, துளி கால் வலியில்லாமல் ஒரு பர்லாங் போல பயணித்து, தானே இயங்கும் மாடிப்படிகளில் ஏறி இமிகிரேஷன் கூடத்தை வந்து அடைவதற்குள் ராஜா ஆச்சரியத்தில் மூழ்கித்தான் போனான்.

மாயா பஜார் படத்தில் வருகிற மாதிரி இது என்ன அற்புதம்!

இதெல்லாம் மனிதர்களின் வேலைதானா? இல்லை ஏதோ பூதம் மறைந்திருந்து செய்கின்ற 'ஜீபூம்பா' தந்திர சமாசாரமா?

கண்ணைப் பறிக்கும் விளக்குகள்; கண்ணாடியாய் ஜொலிக்கும் தரைகள்; நிமிஷத்திற்கு ஒன்றாய் வந்து இறங்கி, ஏறும் விமானங்களிலிருந்து கூட்டம் கூட்டமாய் வெளிப்பட்டு கால்களை அகல அகலமாய் வைத்து நடந்து செல்லும் வித விதமான வெளிநாட்டுப் பயணிகள்!

அறிவிப்புப் பலகைகளைப் படித்தபடியே பெட்டிகள் வந்து சேரும் கூடத்தைக் கடந்த ராஜா பிரமித்து நின்றான்.

நீள நீளமாய் அடுத்தடுத்து எத்தனை கன்வேயர் பெல்டுகள்! இதில் சென்னை விமானத்தில் வந்த பெட்டிகள் எந்த பெல்டில் வரும்?

யாரையாவது கேட்கலாமா என்று தயங்கியவன் பார்வையில் அவனோடு பயணித்த சில இந்தியர்கள் ஏழாவது கன்வேயர் பெல்டுகளில் நிற்பது விழ, அந்த இடத்தில்தான் தன் உடைமைகளும் வரும் என்கிற நம்பிக்கையோடு அருகில் சென்றான்

ஐந்து நிமிஷங்கள் போவதற்குள் பெல்ட் சுழல ஆரம் பித்து, பெட்டிகள் வலம்வர முற்பட்டன

எல்லாரும் செய்ததைப் போலவே இரும்புக் கை வண்டி யொன்றில் தன் இரு பெட்டிகளையும் வைத்த ராஜா, கங்க

பரிசோதனையை முடித்துக் கொண்டு, பிரும்மாண்டமாக நீண்டிருந்த கூடத்தில் நின்று, அடுத்து என்ன செய்யலாம் என்று யோசனை பண்ணினான்.

பாக்கெட்டில் பரந்தாமனின் விலாசம் இருந்தது. பரந்தாமன் ரங்கம்மாவுக்கு ஒன்றுவிட்ட தம்பி ஆக வேண்டும். ரொம்ப சின்ன வயசிலேயே சிங்கப்பூருக்குப் பிழைக்கவென வந்துவிட்டு, இங்கேயே ஒரு மலாய் பெண்மணியைக் கட்டிக் கொண்டு குடியும் குடித்தனமுமாக ஆகிவிட்டவர். நாலைந்து வருஷங்களுக்கு ஒரு முறை தாய் நாட்டு ஆசையில் தான் மட்டும் வந்து ஒரு பத்து நாட்கள் தங்கி, உறவுக்காரர்களைப் பார்த்துவிட்டு திரும்புபவர். அவரை ஒரு தரம் ராஜா பார்த்திருக்கிறான்.

சிங்கப்பூருக்குப் புறப்படுவது என்பது தீர்மானமான உடனேயே அலமாரியில் எங்கோ போட்டு வைத்திருந்த தம்பியின் விலாசத்தைத் தேடி எடுத்து வந்து ரங்கம்மா பிள்ளையிடம் நீட்டினாள்.

"நம்ம பரந்தாமனோட விலாசம். வச்சிக்க. போனதும் வீட்ட தேடிகிட்டு நீயாவே போயிடுவியா, இல்ல போன் போட்டு தம்பிய ஏர்போர்ட்டுக்கு வரச் சொல்லவா?"

"எந்தப் பரந்தாமன்? யாருக்குத் தம்பி?"

எதுவும் புரியாமல் ராஜா கேட்க, ரங்கம்மா விளக்கினாள்.

"அட...! என் தம்பி பரந்தாமனைத்தான் சொல்றேன்... விருத்தாசலம் சித்தப்பா மகன் பரந்தாமன்... நினைப்பு இல்ல உனக்கு?"

"அங்கேயே ஒரு மலாய்காரிய கட்டிகிட்டார்ன்றதால உறவு முறை விட்டுப் போச்சுனு சொல்லுவீங்களே. அவரு தானே?" — வெளிப்படையாக ராஜா விசாரித்ததும் ரங்கம்மா முகத்தைச் சுளித்தாள்.



"எப்பவோ நடந்தத இப்ப ஏன் ஞாபகப்படுத்தறே தம்பி? முதல்ல பரந்தாமனை பெத்தவங்க அவன் மலாய் காரிய கட்டிகிட்டதும் 'நீ எங்க பிள்ளையே இல்ல'னு... தலைக்கு முழுகிட்டாங்கதான். ஆனா, அத்தனை சுருக்க பந்தபாசம் விட்டுடுமா? கை நிறைய சம்பாரிச்ச பணம், பொருளோட பத்து வருஷம் முன்னால பரந்தாமன் வந்தப்போ எல்லா உறவு ஜனங்களும் நீ, நான்-னு அவனை ஏத்துக்கிட்டாங்களே... போன நாலாம் வருஷம் வந்தப்பக் கூட நம்பளை வந்துப் பாத்திட்டு, அந்த ஆறாந்தி பொண்ணுக்கு ஒரு நைலான் சேலை பரிசா கொடுத்திட்டுப் போனானே நினைப்பு இல்லே?"

இருந்தது.

கொஞ்சம் கட்டை குட்டையாய், முள்ளம் பன்றி முடி மாதிரியான கிராப்புடன் வந்த பரந்தாமனை ராஜாவுக்கு நன்றாகவே நினைவு இருந்தது.

"இப்ப அவரு விலாசத்த என்னண்ட ஏன் கொடுக்கறீங்கம்மா?"

"போய் தங்கிக்கத்தான்... அன்னிய தேசத்துல எடம் புரியாம நீ கஷ்டப்பட வேணாம் பாரு... அதான் தம்பிக்கு ஒரு 'போன்' போட்டுச் சொல்லிட்டா, உன்னைத் தன் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போய் தாங்குவானே!"

அந்த ஏற்பாட்டில் ராஜாவுக்கு அத்தனை விருப்பம் இல்லை.

தனியாய், ஜாலியாய், சுதந்திரமாய் இருப்பதைவிட்டு விட்டு, உறவுக்காரர் வீட்டில் போய் உட்கார்ந்து கொண்டு, அவர்களின் தொண தொணப்பை சகித்துக் கொண்டு... தத்... வேண்டாம்...

அன்றைக்கு அம்மாவிடம் "இதுக்காகக் காசு செல வழிச்சு போன் பண்ண வேணாம்மா... சிங்கப்பூருக்குப்

போனதும் நானே போய் பாத்திடறேன்" என்று எதையோ சொல்லி சமாளித்தவன், இப்போது அந்த பேச்சுக்கள் நினைவுக்கு வர, என்ன செய்யலாம் என்று யோசித்தான்.

மாமா வீட்டுக்குப் போன் போடலாமா?

போட்டு?

'இங்கு வந்துவிடு' என்று அவர் சொன்னால்?

வேண்டாம்.

மனசின் ஆறுதலுக்காக சிங்கப்பூர் வந்துவிட்டு இங்கும் உறவுக்காரர்கள், விட்டுப் பேச்சு என்று நடந்த நிகழ்ச்சிகளைக் கிளற வேண்டுமா?

ம்ஹூம் வேண்டாம்...

அக்கடா என்று ஒரு ஹோட்டலில் அறை எடுத்து தங்கி ஊர் சுற்றிவிட்டு, நாலைந்து நாட்கள் கழித்து வேண்டுமானால் ஒருதரம் மரியாதைக்கு மாமா வீட்டில் எட்டிப் பார்த்துவிட்டு வந்து விடலாம்...

நாலையும் யோசனை பண்ணி ஒரு தீர்மானத்துக்கு வந்த ராஜா, அந்தக் கூட்டத்திலேயே இருந்த ஹோட்டல் கவுண்டரை அடைந்து, தனக்குப் பிடித்தமான அறை ஒன்றைத் தேர்ந்தெடுத்து ரிசர்வ் செய்தான்.

வண்டியைத் தள்ளிக்கொண்டு வெளியே வந்து, வரிசையாகக் காத்து நின்ற டாக்ஸி ஒன்றில் ஏறிக் கொண்டு ஹோட்டல் பெயரைச் சொன்னான்.

ஹோட்டல் அறை அவன் எதிர்பார்த்ததைவிட படு வசதியாகவே இருந்தது.

ஏ.ஸி செய்யப்பட்ட அறை, கலர் டெலிவிஷன், ஃபிரிஜ், டெலிபோன் சலவைக்கல் பாத்ரூம், ஆள் உயரக் கண்ணாடி, ஸ்பிரிங் கட்டில், ரப்பர் மெத்தை, ஐஸ்பெட்டி



நிறைய மதுபான வகைகள், கூடவே கொறிக்க வறுத்த கடலை, உருளை வறுவல் போன்ற சமாசாரங்கள் மொத்தத்தில் ஏகதடபுடல்தான்.

பணத்துக்கு என்ன செய்வோமோ என்கிற கவலையும் இல்லாமல் கையில் கொணர்ந்திருந்த ஐநூறு அமெரிக்கன் டாலர்களைத் தவிர, கடலூர் ரஹ்மான் பாய் தன் நண்பர் ஒருவருக்கு ஐயாயிரம் சிங்கப்பூர் டாலர்கள் தரச் சொல்லி கடிதம் கொடுத்திருந்ததும் இருக்க, அடுத்து வந்த நாட்களில் ராஜா தேன் குடித்த நரியாகத்தான் பகல் இரவெல்லாம் தன் இஷ்டத்துக்கு அலைந்து திரிந்தான்.

சிங்கப்பூரை ஒட்டியிருந்த 'செந்தோஸா' என்னும் தீவிற்கு சமுத்திரத்துக்கு மேல் தொங்கும் கேபிள் காரில் பயணித்துச் சென்று, ஒருநாள் முழுவதையும் அதைச் சுற்றிப் பார்ப்பதில் கழித்தான்.

செந்தோஸாவின் அழகான கடற்கரையில் குளித்த நாழிகையில் அங்கு தனித்து வந்த ஒரு சீனப் பெண்ணின் நட்பு கிடைக்க, தொடர்ந்து வந்த நாட்களை அவளுடன் சேர்ந்து சிங்கப்பூரைப் பார்ப்பதில் செலவிட்டான்.

ஜூராங் பறவைகள் பூங்காவிற்குச் சென்று பேசும் மைனா, ஆடும் மயில்கள், சிகப்பு அலகு கொண்ட நாரைகள், இன்னும் பலவகைப் பறவைகளை கிட்டத்தில் நின்று சீண்டினான்.

துறைமுகத்தில் கட்டணம் கட்டி படகில் ஏறி, மதியம் பூராவும் கடலில் பயணித்தபடி தூரத்தில் தெரிந்த சிங்கப்பூரை ரசித்தான்.

டைகர்பாம் தோட்டத்துக்குப் போனான். தொந்தியும் தொப்பையுமாய் பற்களைக் காட்டிக் கொண்டு நின்ற வண்ண வண்ண சீனப் பொம்மைகள் நடுவே நின்று போட்டோ எடுத்துக் கொண்டான்.

மாலை நேரங்களில் சிங்கப்பூரின் தலை சிறந்த இரவு விடுதிகளுக்குத் தப்பாமல் சென்று உயர்ந்த மதுபானங்களைக் குடித்தபடி அழகிகளின் உடை உரிக்கும் நாட்டியங்களைக் கண்டு மகிழ்ந்தான்.

புகழ்பெற்ற சிராங்கூன் சாலை கடைகளுக்குச் சென்று கலர் டி.வி., வி.சி.ஆர்., வீடியோ காமரா, ஸ்டீரியோ போன்றவைகளை ஏகச்சக்க பணம் கொடுத்து வாங்கி வந்து அறை கொள்ளாமல் அடுக்கினான்.

ஆறு நாட்கள் போன விடாமல் அலைந்து, கண்விழித்து ஏகப்பட்ட பணத்தைச் செலவழித்து கண்டதையும் வாங்கி அனுபவித்து பிறகு, மனமும் உடம்பும் சோர்ந்து விட்டதாலோ, இல்லை, கையிலிருந்த பணம் கற்பூரமாய் கரைந்து போனதாலோ ஏழாம் நாள் காலை கண்விழித்தபோதே ராஜாவுக்கு ரொம்ப அலுப்பாக இருந்தது. கூடவே, அருகில் இருந்த சீனாக்காரியைப் பார்க்கவும் சலிப்பாக இருந்தது

வெள்ளைத்தோல் இருந்தால் ஆயிற்றா?

சப்பை மூக்கும், மஞ்சள் பற்களும்...

அத்தனை நாட்களாக தோன்றாத குற்றம் குறைகள் அன்று மனசு இருந்த இருப்பில் விஸ்வரூபம் எடுத்துவிட ஒரு நாளைக்கு நூறு சிங்கப்பூர் டாலர் என்ற ரீதியில் கொடுத்து 'என்ன ஆயிற்று? ஏன் போகச் சொல்கிறாய்?' என்று அவள் திருதிருத்துக் கொண்டிருக்கையிலேயே 'குட்பை' என்று சொல்லி வெளியே அனுப்பி கதவைச் சாத்தினான்.

கையில் பாக்கிப் பணம் அறுநூறு சில்லரை இருந்தது. ஊர் திரும்பும் செலவுக்கும் ஹோட்டலுக்கான பணத்தைக் கட்டவும் என்ன செய்வது என்று குழம்பியவனுக்குள் திடுமென மாமன் பரந்தாமனின் நினைவு எட்டிப்பார்த்தது அடா! இவரை மறந்து போனேனே! போன் செய்து பண உதவி கேட்டால் என்ன!



செய்தான்..

நல்ல வேளையாக பரந்தாமன் வீட்டில் இருந்தார். இவன் குரலைக் கேட்டவர் எகிறி குதித்தார்.

"ராஜா தம்பியா? என்ன தம்பி இப்படி செஞ்சிட்டீங்க. வந்து ஆறு நாளாச்சு, ஒரு போன்கூட பண்ணாம கம்முனு இருந்திட்டீங்களே! உங்கம்மாவான்னா தினமும் போன்போட்டு பிள்ளை வந்தானா, என் பிள்ளை எங்கனு தவிச்சுப் போறாங்க...வாங்க முதல்ல வீட்டுக்கு வாங்க... பாக்கிய நேர்ல பேசிக்கலாம்..."

பேசியவர் அதோடு நிற்காமல்... அரைமணிக்கெல்லாம் தானே வண்டியை எடுத்துக் கொண்டு ஹோட்டலுக்கே வந்துவிட்டார்.

மாமா என்றால் சாதாரணமாக இருப்பார் என்று எண்ணி இருந்த ராஜா வந்து நின்ற வண்டியையும், பின்னர் அவர் வீட்டையும் பார்த்து வியந்து போனான். பென்ஸ் கார், சகல நவீன வசதிகளையும் கொண்ட அழகான வீடு!

ஓ! மாமாவிடம் பணப்புழக்கம் அதிகமா! வியாபாரம் பிரமாதமாக நடக்கிறதா!

இத்தனை வசதிகள் இருக்கும் என்று தெரிந்திருந்தால் ஆறு நாட்களாக ஹோட்டலில் தங்க அத்தனை பணத்தை செலவழித்திருக்க வேண்டாமே...?

இந்தக் கேள்வி எழுந்த உடனேயே 'பணத்தைப் பார்த்தால் ஆயிற்றா? வீட்டில் தங்கி இருந்தால் சீனாக்காரியின் தொடர்பு சாத்தியமாய் இருந்திருக்குமா?' என்று மனசு எதிர்கேள்வி போட, ஆமாம் அந்த அனுபவம் அலாதி தானே! பணம் காசைப் பார்த்தால் ஆகுமா? இந்தியாவில் அப்படியொரு அனுபவத்தைப் பெற முடியுமா? என்று தனக்குத்தானே ராஜா சமாதானம் செய்து கொண்டான்.

ஆனால், இந்தச் சமாதானமெல்லாம் சரியாக ஐந்து நிமிஷங்களுக்குத்தான்.

உள்ளே போய் உட்கார்ந்த கொஞ்ச நேரத்தில் இது என் மனைவி, இது என் பிள்ளைப் பையன், இது என் மூணாவது மக புஷ்பா, என்று ஒவ்வொருவராக அழைத்து பரந்தாமன் அறிமுகம் செய்துவைக்க, கடைசியாக வந்து நின்ற புஷ்பாவை நிமிர்ந்து பார்த்த ராஜா நெற்றிப் பொட்டில் யாரோ ஓங்கி அறைந்துவிட்ட மாதிரி கதிகலங்கிப் போனான்.

இந்த குட்டை, கட்டை மாமாவுக்கு இப்படி ஒரு அழகான பெண்ணா?

ரவிவர்மா ஓவியத்தில் காணப்படும் விதமாய் உருண்டு திரண்ட உடம்பு, சந்தனப் பேலாவை கவிழ்த்த மாதிரி மார்பகங்கள்.

மாத்திரம்தான் ஆனாலும் வைத்தகண் வாங்காமல் புஷ்பாவை ஏறிட்ட கணத்தில அனாவசியமாய் ஹோட்டலுக்கும், சினாக்காரிக்கும் பணத்தைச் செலவழித்தோமே என்கிற குற்ற உணர்வு அதிகமாகி ராஜாவைப் பிராண்ட ஆரம்பித்தது.

## 18

ராஜாவின் மனதுக்குள் எட்டிப் பார்த்துவிட்ட மாதிரி பரந்தாமன் பேசினார்.

"பெரிய பொம்பளையா இருக்காளேனு பார்க்கறீங்களா தம்பி? சின்னப் பொண்ணுதான்... அவ மாமாகாரங்க மாதிரி மதமதனு வளர்ந்திட்டா. இந்த தை மாசம் வந்தா தான் பதினாறு முடியுது. அவ அம்மாவும் வளர்த்தியான



பொம்பளைதானே... அதால... மூத்தது ரெண்டும் என்னை கொண்டிருக்குங்க. இவ மட்டும் அம்மாக்காரி பக்கம் சாஞ்சிட்டா... என்ன பேபி?"

இவனிடம் விவரத்தைக் கூறிவிட்டு, பெண் பக்கம் திரும்பி அருமையாய் 'என்ன பேபி?' என்று கேட்டு பரந்தாமன் சிரிக்க, இந்த கடைப்பெண் என்றால் மாமாவுக்கு தனி பிரியம் என்பதை ராஜாவால் புரிந்துகொள்ள முடிந்தது.

பார்வையைப் புஷ்பாவிடமிருந்து பிடுங்கி அருகே நின்றிருந்த மாமாவின் மனைவி, பிள்ளையிடம் ராஜா வீசினான்.

பையனுக்கு ஏழு அல்லது எட்டு வயசு இருக்கும்...'பே' என்று விழித்துக் கொண்டிருந்தான்.

அத்தை—மலாய்க்கார பெண்மணி என்று சொல்ல முடியாத நிறுசில் புடவையும் மஞ்சள் பூச்சும், பெரிய குங்குமப் பொட்டுமாய் பளிச்சென்று தமிழ் வாசனையுடன் இருந்தாள்.

மறுபடியும் புஷ்பாவை ஏறிட்டபோது மீண்டும் ராஜாவினுள் மின்னல் ஒன்று மின்னியது.

உடம்பு வளர்ச்சிக்கு சம்பந்தம் இல்லாமல் முகத்தில் தென்பட்டது குறும்பா? வெகுளித்தனமா?

எது இப்படி ஆளை மயக்குகிறது?

சின்னப் பெண், பதினாறு வயசுதான் ஆகிறது. அதனால் புத்தியைக் கண்டபடி அலையவிடுவது தவறு என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டவன், பரந்தாமன் ஏதோ கேட்டதில் கவனத்தைச் செலுத்தினான்.

"சொல்லுங்க தம்பி..."

கேள்வியைக் காதில் வாங்காததால் அவர் என்ன கேட்டார், தான் என்ன பதில் கூற வேண்டும் என்று தெளிவாகப் புரியாமல் ராஜா திருதிருக்க பரந்தாமன் சிரித்தவாறு மீண்டும் கேட்டதையே கேட்டார்,

"ஆறு நாளா அதே ஹோட்டல்லதான் தங்கி இருக்கீங்களா? அறைல ஜாமான் நிறைய அடுக்கியிருந்துச்சே... அப்படின்னா ஷாப்பிங் எல்லாம் முடிச்சிட்டீங்களா? ஊர் சுத்தி பாத்தீங்களா? உங்கம்மாவானா தினமும் போன் போட்டு என் பிள்ளை என்ன பண்றான், எங்க இருக்கான்னு என்னைப் போட்டு புரட்டி எடுத்திட்டாங்க... இன்னிக்கும் உங்க கிட்டயிருந்து தகவல் வரலைனா 'காணோம்'னு பேப்பர்ல விளம்பரம் கொடுத்திடலாமனு இருந்தேன். என்ன தம்பி?"

ஜோக் ஒன்று அடித்துவிட்ட குஷியில் உடம்பு குலுங்க பரந்தாமன் சிரித்த நாழிகையில் ராஜா அவசரமாக யோசனை செய்தான்.

இப்போது இவரிடம் என்ன சொல்ல வேண்டும்?

ஊர் சுற்றிப் பார்த்துவிட்டேன் என்றால் யாரோடு போனாய், எங்கெங்கு சென்றாய் என்ற விவரங்களைக் கேட்பார்; சினாக்காரியுடன் போனதைச் சொல்ல முடியாது. தனியாகத்தான்' என்றால், 'நாங்கள் இருப்பதை மறந்து, எப்படித் தனியாகத் திண்டாடலாம்' என்று சண்டைக்கு வரலாம்...தவிர இப்போது எனக்குப் பணம் தேவைப்படுகிறது. தினமும் போனில் பேசும் அம்மா நான் செய்து கொண்டு வந்திருக்கும் பண ஏற்பாட்டைப் பற்றி ஏற்கனவே கூறி இருந்தால் 'அத்தனை பணத்தையும் எப்படிச் செலவழித்தாய்?' என்று கேள்வி மேல் கேள்விகள் கேட்கலாம்... ஆக, சில விஷயங்களை வெளிப்படையாகக் கூறாமல் பொய் சொல்லிச் சமாளிப்பதுதான் உதவியாக இருக்குமோ?

"என்ன தம்பி பேசாம இருக்கீங்க?"



ராஜா தீர்மானித்து விட்டான். அரை நிமிஷ தாமதத்திற்குப் பின் பேச வாயைத் திறந்த போது பொய் சரளமாக வந்தது.

"உங்ககிட்ட உண்மையச் சொல்றதுல எனக்குத் தயக்கம் இல்ல மாமா, ஆனா எக்காரணத்தைக் கொண்டும் எங்கம்மா வரைக்கும் விஷயம் போயிடக்கூடாது... அதான் என் கவலை...சேதி தெரிஞ்சா, மனசு பதறிப் போயிடுவாங்க...அதான் யோசிக்கிறேன்..."

பரந்தாமன் புருவங்களை உயர்த்தி,கண்களை விழித்தார்.

"என்ன தம்பி, பீடிகை பலமா போடறீங்க?"

"பீடிகை இல்லீங்க...முன்னெச்சரிக்கையா இருக்கேன்... ஒண்ணுமில்ல..."

"சரி...இப்ப நீங்க சொல்லப் போறத ரங்கம்மா கிட்ட சொல்லக்கூடாது அதானே? சொல்லலை...நீங்க முதல்லே என்ன நடந்துச்சுனு சொல்லுங்க...எனக்கு இப்பவே படபடனுது..."

ராஜா கை விரல் நகங்களை ஆராய்ந்தான். வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து, நிதானமாய்ப் பேசினான்.

"வந்து எறங்கின அன்னிக்கே ரஹ்மான் பாய் சொன்ன ஆளைப் பாத்து ஐயாயிரம் வெள்ளி பணம் வாங்கிக்கிட்டேன். இந்த ஏற்பாட்டப் பத்தி அம்மா சொல்லி இருப்பாங்களே!"

பரந்தாமன் பலமாய் தலை ஆட்டினார்.

"சொன்னாங்க... சொன்னாங்க... 'பண உதவி வேணுமா'னு நா கேட்டப்ப, 'வேணாம் அவன் வேற ஏற்பாடு செஞ்சுகிட்டுதான் வரான், பத்தலைனா கொடு'னு மட்டும் சொன்னாங்க..."

K

"அந்தப் பணத்தை வச்சுகிட்டு மறுநாள் சிராங்கூன் கடைகளுக்குப் போயி வேணுங்கற சாமான்களை வாங்கினேன். சாயங்காலம் ஆறு, ஆறரைமணி இருக்கும். பாக்கி பணத்தோட ஹோட்டல் கிட்ட இருந்ததால நடந்து வந்திட்டு இருக்கேன். நாலு தடியங்களா கையில கத்திய வச்சுகிட்டு வழிய மறிச்சு, 'பணத்தை எடு'னு அதட்டினாங்க மாமா... எனக்கு தேகம் வெடவெடத்துப் போச்சு... நா ஒண்டி ஆளு... அவங்க நாலு பேரு... கையில கத்தி... நா என்ன பண்ணுவேன்! நீங்களே நினைச்சுப் பாருங்க... இருந்தாலும் தைரியத்த வரவழிச்சுகிட்டு 'எங்கிட்ட பணம் எதுவும் இல்ல'னு சொன்னேன்... அவங்க நம்பலை. 'இப்பதான் கடைல கத்தையா பணம் கொடுத்திட்டு பாக்கிய பாக்கெட்ல வச்சுகிட்டியே, பாத்தமே... ம்ம்... எடு'னு மிரட்டினாங்க... என்ன பண்றது புரியாம ஓடிடலாம்னு திரும்பி நாலடி ஓடிட்டேன். கப்புனு பாஞ்சு பிடிச்சாங்க... செமத்தியா அறை கொடுத்தாங்க... பணப்பைய பிடுங்கிட்டு ஓடிட்டாங்க... எல்லாம் ரெண்டு நிமிஷத்துக்குள்ள நடந்திடுச்சு. இங்க பாருங்க — அவங்க அடிச்ச காயம்..."

முந்தினநாள் பாத்ரூமில் வழுக்கி விழுந்து பேஸின் இடித்து கருத்துக் கட்டி இருந்ததைக் தன் கூற்றுக்கு சாட்சியாக ராஜா காட்ட, பரந்தாமனும், அவருடைய மனைவியும் 'சொச் சொச்' என்று வருத்தமுடன் சூள் கொட்டினார்கள்.

"போலீஸ்ல சொல்லறதுக்கு என்ன தம்பி?"

"என்னனு சொல்றது? கையில இருந்ததோ கணக்குல வராத பணம்—என்னனு... எப்படினு... என் நிலைமை புரியலையா மாமா?

முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு ராஜா வினவ, பரந்தாமன் எட்டி அவன் தோளை தட்டி சமாதானம் செய்தார்.



"விடுங்க... நாசகாரப் பசங்க பணத்த எடுத்துட்டு உங்களை விட்டாங்களே... அந்த மட்டுக்கும் சந்தோஷப்பட வேண்டியதுதான். உங்களுக்கு ஏதாச்சும் ஆயிருந்தா உங்கம்மாக்கு யார் பதில் சொல்றது...ம்?... குமாரா எவ்வளவு பணம் போயிருக்கும்?"

ராஜா கண்களை இடுக்கிக்கொண்டு கணக்குப் போடும் பாவனையுடன் உட்கார்ந்திருந்து விட்டு மெள்ள "எப்படியும் மூவாயிரத்து ஐநூறு வெள்ளிக்கு குறைச்சல் இல்ல மாமா", என்றான்.

"முருகா"' என்று எங்கோ இருக்கும் கடவுளை அழைத்த பரந்தாமன் சில நிமிஷங்களுக்கு வாளாயிருந்துவிட்டு "அப்புறம்?" என்றார் வேதனையுடன்...

"அப்புறம் என்ன மாமா? ஹோட்டலுக்கு வந்து சேர்றதுக்குள்ளே உடம்புல கணகணனு ஜுரம்... வலி... ஏமாந்துட்டமேனு வேதனை... அன்னிக்குப் படுத்தவன்தான்... நாலு நாளா காய்ச்சல்ல அவதிப் பட்டுட்டு, இன்னிக்கு உடம்பு ஒரு மாதிரி இருக்கக் கொண்டு, சரி, உங்களையாவது பார்த்திட்டு வருவம்னு போன் போட்டேன்..."

"அடக் கடவுளே! சிங்கப்பூருக்கு வந்திட்டு பணத்தை தொலைச்சதும் இல்லாம, காய்ச்சலா வேற படுத்திட்டீங்களா? என்ன தம்பி இது... சொந்தக்கார மனுஷங்க நாங்க இருக்கிறப்போ அனாதையாட்டம் ஹோட்டல்ல தனியா தவிச்சு... சேச்சே... கேட்கவே கஷ்டமா இருக்கே... என்ன தம்பி இப்படிப் பண்ணிட்டீங்க... ரங்கம்மா கேட்டா..."

அவரை முடிக்க விடாமல்... ராஜா [illegible]ாய் குறுக்கிட்டான்.

16962 2.2.93 [illegible]

K

''அவங்களுக்குத் தெரிஞ்சா உடைஞ்சி போயிடுவாங்க... அது கூடாதுனிட்டுதானே உங்கக் கிட்ட வாக்கு வாங்கிகிட்டு விஷயத்த சொன்னேன் மாமா ...''

'ம்ம்...' முனகின பரந்தாமன் ராஜாவை ஏறிட்டு 'அம்மா மேல் உனக்குத்தான் எத்தனை அக்கறை' என்பது போல புன்னகைத்தார்.

''என் மூலமா ரங்கம்மாவுக்கு இந்த விவரம் போகாது... சந்தோஷமா தம்பி?... சரி... இன்னும் ஹோட்டல்ல என் தங்கனும்... போய் ஜாமானை எடுத்திட்டு வந்திடுவோம் வாங்க... நம்ம வீடு கடல்மாதிரி இருக்கறப்ப நீங்க ஹோட்டல்ல தங்கினா எனக்குத்தான் அவமானம்... இன்னிக்குப் பூரா நல்லா ரெஸ்ட் எடுத்துக்கங்க... நாளை வேந்து குடும்பத்தோட நாம ஒண்ணா ஊர் சுத்திப் பாக்கலாம்... பணம் இல்லையேனு வேதனைப்படாதீங்க... பெரிய பண்ணை ரங்கம்மாக்கா மகன் நீங்க... உங்களுக்கு இல்லாததா? எத்தனை வேணும்னு சொல்லுங்க,...நா தரேன்... எதுக்கும் கவலைப்படாதீங்க... என்ன தம்பி?''

எதிர்பார்த்ததைவிட விஷயம் சுலபமாக சமாளிக்க முடிந்து விட்டது ஏக மகிழ்ச்சி தர ''உங்க விருப்பம் போல செய்யலாம் மாமா'' என்று பணிவுடன் கூறியபடி ராஜா எழுந்து நின்றான்.

காரில் போகும்போது ரங்கம்மா சொன்ன இன்னொரு விவரத்தைப் பற்றி பரந்தாமன் கோடு போட்டுக் காட்டினார்.

''நீங்க மனசு நொந்திருக்கீங்க... எனக்குத் தெரியும் தம்பி... அம்மா எல்லாம் விளக்கமாச் சொன்னாங்க... அந்தப் பொண்ணுக்கு உங்க மாதிரி அருமையான புருஷனோட வாழ கொடுப்பினை இல்ல... அதான் நா சொல்லுவேன்... 'என் பிள்ளை மனசு ஒடிஞ்சு போயிருக்கான், தம்பி, நீதான் அவனுக்கு ஆறுதல் சொல்லனும்'னு அக்கா சொன்னப்போ அவங்களும் அழுதிட்டாங்க... நானும் கண் கலங்கிட்டேன்...''

தன் மணவாழ்க்கையைப் பற்றி திடுமென மாமா பேசுவது ராஜாவுக்கு சங்கடத்தை உண்டாக்கியது. என்ன பதில் கூறுவது என்று புரியாமல் மௌனிக்க, பரந்தாமன் தொடர்ந்தார்



''எத்தனை அருமையா வச்சிருந்தீங்க' போன ட்ரிப் வந்தப்ப நானே பாத்தேனே! அடக்க ஒடுக்கமா இருந்த பொண்ணுக்கு திடும்னு மூளை குழம்பிடும்னு யார்தான் எதிர்பார்க்க முடியும்? எல்லாம் விதி தம்பி... நா வேற என்ன சொல்றது?''

அவர் பேசப் பேச, ராஜா திடுக்கிட்டான்.

அடக்க ஒடுக்கமான பெண், போன முறை வந்தபோது பார்த்தேன், மூளை குழம்பிப்போயிற்று — என்று மாமா யாரைக் குறிப்பிடுகிறார்...

இவர் சந்தித்தது ஆனந்தியை... அப்படியென்றால்...

''வந்து... மாமா... மூளை குழம்பிடுச்சுனு... யாரை... நீங்க... வந்து...''

சின்னக் குரலில் தயக்கத்துடன் அவன் கேட்க, பரந்தாமன் ஒரு கையால் ஸ்டீரிங் வீலைப் பிடித்து, மறு கையால் அவன் தொடையில் தட்டினார்.

'அடடே, ஒரு பேச்சுக்குச் சொன்னதை பிடிச்சுகிட்டீங்களே தம்பி! மூளை குழம்பிடுச்சுனு நா சொன்னது தப்புதான்... அக்கா, ஆனந்திக்கு திடும்னு பிரமை பிடிச்சிருக்குனு தான் சொன்னாங்க... நாதான் ஆதங்கத்துல மிகைப்படுத்திட்டேன்... தப்பா எடுத்துக்காதீங்க... ஆனாலும் உங்களை நினைச்சா வருத்தமாதான் இருக்கு தம்பி... சரி... அந்தப் பேச்ச விடுங்க... இங்க இருக்குறப்பவாவது நிம்மதியா இருங்க... என்ன தம்பி?''

அவர் கூற்றை ஏற்கும் வகையில், தலை அசைத்து ஆமோதித்த போது ராஜாவின் மனசில் அப்பாடி என்று நிம்மதி பரவியது.

'ஆனந்திக்குப் பிரமை பிடித்துவிட்டது. அதனால் ராஜா அடிபட்டுப் போயிருக்கிறான். அவனுக்கு ஆறுதல் தரும் விதத்தில் நடந்து கொள்' என்று பக்குவமாய் அம்மா தம்பியிடம் பேசித் தயாரித்து வைத்திருக்கிறாரா?

மாலினியைப் பற்றி எதுவும் குறிப்பிடாமல் மறைத்து விட்டாரா?

என்ன இருந்தாலும் அம்மா, அம்மாதான். அவருடைய பாசம், பரிவு, அக்கறையே அலாதிதான்...

மனசில் சந்தோஷம் கும்மாளமிட, இட்டமிட்டபடி அன்று ராஜா தன் சாமான்களோடு சென்றான். மாமாவும் அவர் குடும்பமும் காட்டிய மரியாதை, கவனிப்பை வாய் இறக்காமல் ஏற்றுக் கொண்டான்.

மறுநாளிலிருந்து மாமா ஏற்பாட்டுக்கு பணிந்து அவர்களோடு மீண்டும் சிங்கப்பூரை வலம் வந்து, முதல் முறையாகக் காண்பது போல ஆச்சரியப்பட்டான்.

ஒரு வாரம் போவதற்குள் தனக்கு புஷ்பா மேல் பிரியம் உண்டானது போலவே, தன் ஆண்மை மிகுந்த தோற்றத்தால் அவளும் ஏகத்துக்கு கவரப்பட்டிருக்கிறாள் என்பதைப் புரிந்து கொள்ள முடிய, தனிமை கிடைத்த போதெல்லாம் அவளிடம் மெது மெதுவாய் நெருங்கிப் பழக ஆரம்பித்தான்.

பிறகு, பத்தே நாட்களில் 'நீ எதுக்கும் கவலைப் படாதே- நா ஊருக்குப் போய் அம்மாகிட்ட சொல்லி உன்னை கட்டிக்க ஏற்பாடு பண்ணறேன்' என்று சொல்லிப் புறப்படும் அளவுக்கு அந்த உறவு வளர காரணமானான்.

# 19

வெளிநாட்டிலிருந்து வரப்போகும் பிள்ளையை வரவேற்க ரங்கம்மா தடபுடலாய்த்தான் ஏற்பாடுகளைச் செய்திருந்தாள்.

கொண்டு வரும் சாமான்களுக்கு சுங்கவரி கட்ட வேண்டி இருக்கும் என்று தொலைபேசியில் ராஜா சொல்லி இருந்த சற்று ஏற்ப முதல் நாளே ரூபாய் இருபத்திஐந்தாயிரத்தோடு வீரராகவனை வண்டியில் சென்னைக்குப் போகச் சொல்லி விட்டாள்.

சுங்க இலாகாவில் வேலை பார்க்கும் ஒன்றுவிட்ட மாமா பிள்ளைக்குத் தகவல் கொடுத்து 'தம்பிய ரொம்ப கஷ்டப் படுத்தாம பாத்துக்க—வரி கட்டறதப் பத்தி ஒண்ணும் இல்ல, இதத் திற, அதை எடு—னு நாள் பூரா அதிகாரிங்க தம்பி உசிர வாங்காம கூடவே இருந்து செய்ய வேண்டியத செஞ்சு சுருக்க அனுப்பிடுப்பா' என்று தயார் செய்து விட்டாள்.

விமானம் மதியம் வருகிறது.

கஸ்டம்ஸ், எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு மூன்றுக்குக் கிளம்பினால் கூட ஆறு மணி சுமாருக்கு ஊர் வந்து சேர்ந்துவிடலாம்...

மணி இப்போது ஆறேகால்...

எந்த நிமிஷமும் வண்டி வந்துவிடும்.

வராந்தாவில் சாய்வு நாற்காலியைப் போடச் சொல்லி வழிமேல் விழி வைத்துப் பிள்ளைக்காகக் காத்திருந்த ரங்கம்மா சுற்றிலும் ஒருதரம் பார்த்து, எல்லா ஏற்பாடுகளும் கச்சிதமாக இருக்கின்றனவா என்று கவனித்தாள்.

பூக்கார அலமேலும்மாவிடம் சொல்லி விசேஷமாய் கட்டச் சொன்ன ஜாதிப்பூமாலையுடன் நிற்கும் பெருமாள்,

தூண் அருகில் வெள்ளித் தாம்பாளம்; பக்கத்தில் சொம்பில் கரைத்த ஆரத்தி நீர்.

திருஷ்டி சுற்ற கற்பூரம், தேங்காய் இத்யாதிகளுடன் இந்தப் பக்கமாய் ஏழுமலை..

ஓரமாய் அமர்ந்திருக்கும் நவநீதம்—ரங்கம்மாவால் சுற்ற இயலாது என்பதால் ஆரத்தி சுற்றவென வந்திருக்கும் தூரத்து உறவு சுமங்கலிப் பெண்மணி..

ரங்கம்மாவின் பார்வை தன் மேல் விழுவதை உணர்ந்து நவநீதம் எழுந்து நின்றாள்.

"ஏதாவது வேணுமாக்கா?"

"கோயில்ல அய்யர் தயாரா இருக்காரா? தம்பி வந்ததும் பிள்ளையாருக்கு ஒரு அர்ச்சனை பண்ணி பிரசாதத்த கொண்டு வரச் சொல்லிட்ட, இல்ல?"

"சொல்லிட்டேங்க்கா... கார் சத்தம் கேட்ட உடனேயே மணி அடிச்சு தீபாராதனை காட்டிட்டு, அர்ச்சனைய செஞ்சிடறதா சொல்லி இருக்காரு..."

பேச்சை அதோடு முடித்துக் கொண்டு கவனத்தை ரங்கம்மா சாலைக்குத் திருப்பியதும் நவநீதம் மறுபடி உட்கார்ந்து கொண்டாள்.

என்னமோ பிள்ளை சந்திரமண்டலத்துக்கே போய் விட்டு வருகிற தினுசில் அவனை வரவேற்க ரங்கம்மா ஊரையே கலக்க அடிப்பதை நினைக்கையில் ஏளனச்சிரிப்பு ஒன்று உதட்டை உட்புறத்திலிருந்து தீண்டியது.

கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

ரங்கம்மா பார்த்து விட்டால், இவள் எதற்காகச் சிரிக்கிறாள் என்பதை உணர்ந்து விட்டால், அவ்வளவுதான், வேறு வினையே வேண்டாம்.



—என் பிள்ளை அருமை உனக்கென்னடி தெரியும்?—என்பாள்.

—உங்களுக்கெல்லாம் வயத்துல பல்லுடி. நல்லா இருக்கறவங்களக் கண்டா உங்கக் கூட்டத்துக்கு ஆகாதுனுதான் தெரியுமே—என்பாள்

—நன்றி இல்லாத ஜன்மங்க..எங்கிட்ட வாங்கித் தின்னுட்டு, எங்கிட்டயே தன் திமிரக் காட்டுறீங்க...இதுங்களுக்கு செய்யறதக் காட்டிலும் நாய்ங்களுக்குச் செய்யலாம்.. நன்றியோடயாவது இருக்கும்—என்பாள..

நிறுத்தாமல் நாள் பூராவும் இதுதான் சாக்கு என்று புலம்பித் தீர்ப்பாள். வேண்டாம், எதற்கு வீண் வம்பு...

புலம்பலோடு போனால்தான் பரவாயில்லையே... ஆனால் அதோடு விவரம் நிற்காது.

அவ்வப்போது, தேங்காய் காய்கறி, மல்லாட்டை என்று போனால் போகிறது என்று ரங்கம்மா இவளுக்கு கொடுத்தனுப்புவதும் அல்லவா நின்றுவிடும்!

ஊர் என்ன பேசினால் என்ன?

உதவாக்கரை பிள்ளையின் திமிரான நடத்தைக்கு காரணமே அம்மாக்காரிகொடுக்கும் அதீதசெல்லம்தான் என்று ஒட்டு மொத்தமாக ஊர் பேசுவதை இந்தக் காதில் வாங்கி அந்தக் காதால் விட்டுவிட வேண்டும்; அப்போதுதான் பிழைக்க முடியும்.

ஏன்-இன்றைக்கும் கூட ஆரத்தி சுற்றி ராஜாவை வரவேற்றுவிட்டு வீட்டுக்குப் போனால், எதிர் பக்கத்து வீட்டுப் பெண்கள் 'என்னடி நவநீதம்—ஆரத்தி சுற்றினதுக்கு என்னென்ன வெகுமானம் கிடைச்சது?' என்று துளைக்கத் தான் செய்வார்கள்...

கேட்டால் கேட்கட்டுமே!

K

கேலி செய்தால் செய்யட்டுமே!

ரங்கம்மா நல்ல மன நிலையில் இருந்தால ராஜா வாங்கி வரும் சிங்கப்பூர் சாமான்களிலகூட ஏதாவது ஒன்று கிடைக்க லாம். மூத்தவள் நெக்லஸ் தாவணி வேண்டும் என்று ரொம்ப நாளாய் கேட்டுக்

மேற்கொண்டு நவநீதத்திடம் பிரச்னையைத் தொடர விடாமல், தெரு முனையில் வண்டியின் 'ஹெட் லைட்' வெளிச்சம் தெரிய, 'டேக்சி வருது தம்பி வந்திட்டான்' என்கிற சத்தமோடு ரங்கம்மா எழுந்தாள்.

வண்டி வந்து வீட்டு வாசலில் நிற்க, ராஜா கோட்டும், டையுமாய் இறங்கினான்.

பெருமாள் மாலையைப் போட்டான்.

நவநீதம் ஆரத்தி சுற்றி, ராஜாவுக்குப் பொட்டு வைத் தான்.

ஏழுமலை தேங்காயின் குடுமியில் ஏற்றின கற்பூரத்தை வைத்து திருஷ்டி கழித்தான்.

ரங்கம்மா மூன்று வாரங்களாக பிள்ளையைப் பிரிந் திருந்த ஏக்கத்துடன் 'வா தம்பி' என்றாள் வாய் நிறைய ..

அம்மாவின் அமர்க்களமான வரவேற்பு மகிழ்ச்சியைத் தர ராஜா தலையை பின்னுக்குத்தள்ளி சிரித்தான்

''என்னம்மா தடபுடல் பண்றீங்க நான் என்ன வருஷக்கணக்காவா வெளி நாட்டுல தங்கிட்டு வரேன்?''

''வருஷக்கணக்கோ, நாள் கணக்கோ—கடல் கடந்து போயிட்டு வந்திருக்கே...எவ்வளவு எந்த எந்த கொள்ளிக் கண்ண உன்மேல போட்டாங்களோ! திருஷ்டி கழிக்கறது நம்ப பழக்கம்தானே தம்பி ..''

பதில் பேசாமல் சிரிப்புடன் ராஜா உள்ளே போக, தம் தம் வீட்டு வாசலில் நின்று பெரிய பண்ணை பங்களா



வையே ஆர்வத்துடன் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த அல்லு அசல் ஜனங்கள் மேல் அலட்சியமாய் ஒரு பார்வையை வீசி விட்டு ரங்கம்மா பிள்ளையைப் பின் தொடர்ந்தாள்.

''என்ன தம்பி இப்படி சருகா இளைச்சி, கறுத்திட்டே? சோறு தண்ணி இல்லாம பட்டினி கிடந்த மாதிரி முகம் வாடிப்போயிருக்கே! பரமானந்தம் உன்னை நல்லா கவனிச்சுக் கிட்டான், ஏனே? ஏன், ஒரு வாரத்துக்கு முதல்ல ஹோட் டல்லயே தங்கிட்டே? எவனோட போன் பேசினப்ப கூட, 'வந்து விவரமா சொல்றேன்'னு முடிச்சு கட்டிட்ட... மொத்தத் துல கஷ்டம் ஒண்ணும் இல்லயே தம்பி! மூணு வாரமா உன்னைப் பிரிஞ்சு நாபட்ட வேதனை எனக்குத்தான் தெரியும்... வர்ற வெள்ளிக்கிழமை மலைல முருகனுக்கு பாலாபிஷேகம் செய்யணும்... நீ பத்திரமா வந்தப்புறம் செய்யறதா வேண்டிக்கிட்டு இருக்கேன்...டே ஏழுமலை... பிள்ளையார் கோவிலுக்குப் போய் அய்யரு அர்ச்சனை செஞ்சிட்டாரா, பிரசாதத்தோட வாச்சொல்லு . பெருமாளு ...தப்பிக்கு ஜூடா போர்ன்விடா போட்டு எடுத்திட்டுவா... ஜாமானெல்லாம் தம்பி அறையிலே இறக்கிடச் சொல்லுங்க கணக்கு ..''

ஒரே மூச்சில் அத்தனை பேர்களிடமும் அவள் பேசிய நாழிகையில் ராஜா தன் அறைக்குச் சென்று கோட்டைக் கழற்றி, மின்விசிறியை சுழல விட்டு, உட்கார்ந்தான்.

போர்ன்விடாவைக் குடித்த பின்னர் பெட்டிகளைத் திறந்து வாங்கி வந்திருந்த சாமான்களை வெளியில் எடுத்துப் பரத்தினான்.

'அம்மா—இதெல்லாம் உங்களுக்கு படுக்கை பக்கத்துல வச்சு கேக்க, ஒரு டூ பேண்ட் டிரான்ஸிஸ்டர்—கூடத்துல வைக்க, ஒரு டூ இன் ஒன் யார்ட்லி பௌடர்டின். சோப ...நீங்க போடற மாதிரி வெள்ளை ருபியா பீஸ் பீஸ்... அப்புறம் இரண்டு கிலோ பாதாம்பருப்பு இங்க கிலோ இருநூறு ரூபாயா? அங்க பத்து வெள்ளி, அதாவது அறுபது

ரூபாதான்...இந்தாங்க...ஆறு செலக்ட் நைலான் ஷிஃபான் புடவைங்க.. உங்க உறவுக்காரங்களுக்கு கொடுக்க வேணும்னு சொன்னீங்களே..."

தரை தொடாமல் ராஜா சாமான்களைப் பரப்ப ரங்கம்மா பூரித்துத்தான் போனாள்.

போன இடத்தில் தன் இஷ்டம் போல திரிந்து தனக்கு வேண்டியவைகளை மட்டும் காசு கொடுத்து வாங்கிக் கொண்டு வராமல், அம்மாவை நினைவில் கொண்டு 'இது அம்மாவுக்கு அது, அம்மாவுக்கு' என்று ராஜா வாங்கி வந்திருக்கிற மாதிரி எத்தனை வீட்டுப் பிள்ளைகள் செயல் படும்? இந்த அளவுக்கு அன்பு எத்தனைப் பிள்ளைகளுக்கு இருக்கும்?

நெகிழ்ந்து போய் ரங்கம்மா நின்ற நிமிஷத்தில் ராஜா மற்றவர்களுக்காக வாங்கி வந்த பொருட்களை ஒவ்வொரு வராக அழைத்து நீட்டினான்.

"கணக்கு—இந்த ஸிடிஸன் ரிஸ்ட்வாட்ச் உங்களுக்கு... பிடிச்சிருக்கா? பெருமாள்... எங்க அவன்? இந்தாடா டிரான்ஸிஸ்டர் வச்சிக்க.. எப்பப்பாரு ஸினிமா பாட்டு கேக்கற உனக்கு இதுதான் சரி...ஏழுமலை, இந்த டீஷர்ட் உனக்கு. புதுசா கட்டிகிட்ட உன் பெண்டாட்டிக்கு இந்த செண்டும், பவுடரும் என்னடா பிடிச்சிருக்கா?"

சந்தானத்துக்கு ஒரு வாட்ச், இன்னொரு நண்பனுக்கு கையடக்கமான 'டேப்ரிகார்டர்' ஆபீஸ் போகும் ஆனந்த னுக்கு ஃப்ரிப் கேஸ்.. தெருக் குழந்தைகளுக்கு சாக்லேட், பிஸ்கட்ஸ்.. இன்னும்...

அன்றும், அதற்கு மறுநாளும் அந்த எடையாளம் கிராமம் பூராவும் ராஜா சிங்கப்பூரிலிருந்து வண்டி சாமான் களை வாங்கி வந்து எல்லாருக்கும் தாராளமாய் விநியோ கிப்பது பற்றியே பேச்சாக இருந்தது.



மறுநாள் மதியம், சாப்பிட்டு, ஒரு குட்டித்தூக்கம் போட்டு எழுந்த பின்னர் 'மாமா கிட்ட நா நல்லபடியா வந்து சேர்ந்திட்டதச் சொல்ல வேணாமா?' என்றபடி சிங்கப்பூருக்கு ஒரு 'கால்' பதிவு செய்தான்.

மாமாவிடம் ஒரு நிமிஷமும், புஷ்பாவிடம் பத்து நிமிஷங்களும் பேசி தொடர்பை ராஜா துண்டித்ததும் அவன் அது நாழிகை பேசிய பேச்சுக்கள் வியப்பைத் தந்த ரீதியில் ரங்கம்மா புருவங்களை உயர்த்தினாள்.

"யார் கூட பேசின தம்பி? முதல்ல மாமன்கிட்ட... அப்புறம்?"

ராஜா அம்மாவை நிமிர்ந்து பார்த்தான்.

"ஏம்மா, உங்களுக்குப் புரியலையா?"

"எங்க? இங்கிலீஷ்லேயே பேசினது புரியாதக்கொண்டு தானே கேக்கறேன்... பரந்தாமனோட பையனோடயா?"

"ம்ஹூம்"

"அப்புறம்?"

முகத்தில் சந்தோஷம் வெளிச்சம் போட, ராஜா "புஷ்பாவோட" என்றான்.

"புஷ்பாவா?"

"மாமாவோட கடைசி மக..."

"ஓ! பதினாறு வயசோ என்னமோ ஆகுதுனு ஒருதரம் பரந்தாமன் சொன்னானே அந்தப் பொண்ணோடவா?"

"அவளேதான்..."

"அப்படி சிரிக்கச் சிரிக்க பேசிக்கொண்டு, ஏதோ ஆம்பிளை ஸ்னேகிதனோடத்தான் பேசறயாக் காட்டியும்னு பார்த்தேன்..."

ராஜா அம்மாவை நெருங்கினான். தழைந்த குரலில் வினவினான்.

"ஏம்மா, பொம்பளையோட ஸ்னேகிதமா இருக்கிறதும், சிரிச்சுப் பேசறதும் தப்பா?"

"அ!"

எதற்காக இப்படிக் கேட்கிறான் என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் ரங்கம்மா திருதிருத்தாள்.

மனசில் இருப்பதை அம்மாவிடம் சொல்ல இதைவிட சரியான தருணம் கிட்டாது என்பதை புரிந்து கொண்ட முடிய, ராஜா ஒரு தீர்மானத்துடன் எழுந்து நின்றான்.

"என் அறைக்கு வரீங்களாம்மா? உங்கக் கிட்ட கொஞ்சம் பேசணும்..."

பிள்ளை புதுசாக ஏதோ விவகாரத்தைப் பற்றி பேசப் போகிறான என்கிற உணர்வு அடிவயிற்றில் பட்டாம் பூச்சிகளை பறக்கச் செய்தது. ரங்கம்மா மெதுவாக எழுந்து அவன் பின்னோடு சென்றாள்.

படுக்கையில் அமர்ந்த ராஜா சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு 'உட்காருங்க' என்றான் தாயிடம்...

இரண்டு நிமிஷங்கள் சும்மா இருந்துவிட்டு பேசியபோது அவன் குரல் ரொம்ப சன்னமாய் வெளிப்பட்டது

"புஷ்பாவ நா விரும்பறேம்மா..."

மண்டையில் யாரோ அடித்துவிட்ட மாதிரி ரங்கம்மா இடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"எ...என்னது?"

"அவளும் என்ன விரும்பறாம்மா..."

"எ...என்னது...?"



"எனக்கு அவள கட்டி வைக்கறது பத்தி மாமாகிட்ட நீங்க பேசினா நல்லா இருக்கும்மா"

அடுத்தடுத்து மகன் கூறிய வார்த்தைகள் அதிர்ச்சியில் ஆளை செயலிழக்கச் செய்ய ரங்கம்மா வாயடைத்துப் போனாள்.

அப்புறம் எப்படியோ சமாளித்துக் கொண்டு "விளையாடுறியா தம்பி?" என்று கேட்டாலும், இதில் யாரும் விளையாடவில்லை; விஷயம் தலைக்கு மேல் போய்விட்டது என்பதை அடுத்த மாசம பரந்தாமனிடமிருந்து பதறிக் கொண்டு வந்த "என் மக முழுகாம இருக்கா... நா உடனே அங்க வரேன்..." என்கிற தகவல் மூலம் புரிந்து கொள்ள முடிந்தது...

## 20

ஆடாமல் அசங்காமல் அப்படியே அமர்ந்திருந்து விட்டு, கொஞ்சமாய் தன்னை சுதாரித்துக் கொண்டு எதிரில் நிற்கும் மகனை கேள்வி கேட்க ரங்கம்மா வாயைத் திறந்தபோது வார்த்தைகள் தொண்டையில் சிக்கிக் கொள்ள, அடிவயிற்றிலிருந்து இருமல் மட்டுமே வெளிப்பட்டது.

இரண்டு தரம் பலமாக இருமி, எச்சிலைக் கூட்டி விழுங்கினாள். பின்னர் செம்மிய குரலில் கேட்டாள்.

"விளையாடறியா தம்பி?"

ராஜா ஒற்றைப் புருவத்தை உயர்த்தி தன் வியப்பை வெளியிட்டான்.

"இதுல விளையாட என்னம்மா இருக்கு?"

அந்தப் பொண்ணுக்கு வயசு பதினாறோ என்னமோதான் இருதுப்பா..."

"அதனால என்ன?"

"உனக்கு இருபத்தி எட்டாகுது தம்பி .."

"தெரியும்மா .."

"பன்னிரண்டு வயசு வித்தியாசம் இருக்குறத மறந்துட்டியா?"

ராஜா கையிலிருந்த சிகரெட்டை வாயில் பொருத்தி, புகையை உள்ளுக்கு இழுத்து, வாயை வட்டமாகக் குவித்து, புகை வளையங்களை வெளியிட்டான்.

"உங்களுக்கும், அப்பாக்கும் பதினாறு வயசு வித்தியாசம இருந்ததை மறந்து பேசினா எப்படிம்மா?"

"அ? அது...அது அந்தக் காலம்... பெரியவங்க யாரைப் பார்த்து 'கழுத்தை நீட்டு'னு சொன்னாலும் வாயத் திறக்காம பொம்பளைங்க அடிபணிஞ்ச காலம் தம்பி அது"

"இப்ப புஷ்பா வாயத்திறந்துகிட்டு; தன் முழு சம்மதத் தோட என்கிட்ட கழுத்த நீட்ட வந்திருக்கா... அதாம்மா வித்தியாசம்..."

சிரிப்பு மாறாமல் அடாவடியாக ராஜா பேசிக் கொண்டே போக, ரங்கம்மா எழுந்து நின்றாள்.

அறையின் நீளத்தை அளக்கும் பாவனையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தாள். நின்றாள். பரிதாபமாய் விழித்தாள், மீண்டும் நடந்தாள். ஏதோ கேட்க வாயைத் திறந்துவிட்டு, கடைசி நிமிஷத்தில் மனசை மாற்றிக் கொண்டு, பெருமூச் சுடன் நாற்காலியில் உட்கார்ந்தாள்.

அவளுடைய அல்லாட்டம் சிறிதும் புரியாத மாதிரி ராஜா சிரித்தான்.



"இப்ப என்ன நடந்துட்டுதுனு நீங்க இந்தத் தவிப்பு தவிக்கறீங்க?"

"இன்னும் என்னப்பா நடக்கணும்? ஏதோ மனசு சரியில்லேனு சொன்னயே, கடல் கடந்து போய் பத்து நாள் தங்கிட்டு வந்தா உனக்கு ஆறுதலா இருக்கும்னு நினைச்சு அனுப்பி வச்சதுக்கு, இப்படி திடும்னு குண்டத் தூக்கிப் போடறியே?"

"குண்டும் இல்ல, கிண்டும் இல்ல...புஷ்பாவுக்கு என்னை யும், எனக்கு அவளையும் பிடிச்சிப் போச்சி... பெரியவங்களா லட்சணமா எங்களுக்குக் கல்யாணத்தப் பண்ணி வையுங்கனு கேட்ட நேர்மையப் பாராட்டாம என்னமோ நடக்கக்கூடாதது நடந்திட்ட மாதிரி எகிறி குதிக்கறீங்களே..."

"பரந்தாமன் வசதியானவன் தம்பி... அவன் பொண்ணை ரெண்டாந்தாரமா..." பேசின ரங்கம்மா கொஞ்சம் நிறுத்தி, குரலைத் தழைத்து, "மூணாந்தாரமா" என்று முணுமுணுக்க, ராஜா கையிலிருந்த சிகரெட்டை விசிறி எறிந்துவிட்டு கோபத்துடன் கத்தினான்,

"ஆமா... மூணாந்தாரம்தான்...வேணா ஒரு டமாரம் வாங்கித் தரேன்.. நீங்களே சிங்கப்பூருக்குப் போயி ஊர் பூரா அடிச்சுட்டு வாங்க .."

பிள்ளையின் குரல் கூடத்துக்குக் கேட்கும் வகையில் ஒலிக்க, ரங்கம்மா அவசரமாய் எழுந்தாள். நாலடியில் கதவருகில் சென்று அதைச் சாத்தினாள். பிள்ளையிடம் வந்து அவனைப் புண்படுத்தி விட்டோமோ என்கிற ஆதங்கத் துடன் தலைமுடியைக் கோதிவிட்டாள்.

"என்ன தம்பி இப்படிப் பேசறே... நடந்ததை அவங்க யார் மூலமாகவோ தெரிஞ்சுக்கிட்டாங்கன்னா என்ன பண்றதுன்ற வேதனைல அப்படிப் பேசினேனே காட்டியும்,

K

உன்னைப் புண்படுத்தணும்னு நா அப்படிச் சொல்வேனா?... என்ன தம்பி இது...''

''பின்னே என்னம்மா... நா சொல்றதை காதிலியே வாங்காம நீங்க பாட்டுக்கு வாதம் பண்ணிகிட்டே போனா, எனக்குக் கஷ்டமா இருக்கு...''

ரங்கம்மா அவன் அருகில் அமர்ந்தாள்.

''சரி, வாதம் பண்ணலை... ஆனாலும் விவரத்த பூரா தெரிஞ்சிக்கறதுக்காகக் கேக்கறேன்... ஆத்திரப்படாம என் கேள்விகளுக்கு பதில் சொல்லு... அந்தப் பொண்ணை நீ விரும்பறியா?''

''மனசார...''

''கட்டிக்கற அளவுக்கு?''

''ம்''

''அந்தப் பொண்ணும் உன்னை கட்டிக்கத் தயார்னு சொல்லிச்சா?''

ஊருக்குப் புறப்படற அன்னிக்கு, ஏர் போர்ட்டுக்கு கிளம்பறத்துக்கு முன்னால தனிமை கிடைச்சப்போ, 'நீங்க தான் இந்த ஜன்மத்துல என் புருஷன், நாதான் உங்க மனைவி... உடனடியா கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க'னு கையைப் பிடிச்சிகிட்டு அழுதாம்மா...''

''அந்தப் பொண்ணுக்கு ஆனந்தி பத்தி தெரியுமா?''

தெரியும்... நீங்க மாமாகிட்ட சொன்னமாதிரி—அவளுக்குத் திடும்னு பிரமை பிடிச்சிட்டதால, அவ பிறந்த வீட்டுக்குப் போயிட்டான்றது தெரியும்...''

''மாலினி விஷயம்?''

''ம்ஹூம்...''

''அத எப்படி சமாளிக்கப் போறே?''



''புஷ்பாவுக்கு இந்த விவரம் தெரிய சந்தர்ப்பமே இல்லம்மா... மாலினிய நா கட்டிகிட்டதுக்கு சாட்சி என்ன? தொடர்பு வச்சிருந்ததா வேணா யாராச்சும் சொல்லலாம்—அப்படி ஏதாவது பேச்சு வந்தாகூட 'மனசு சரியில்லாம, தனிமை தாங்காம தவிச்ச நாள்ல தெரியாம ஒண்ணு ரெண்டு தரம் மாலினிய சந்திச்சேன்... அவ்வளோதான்'னு சமாளிச்சிடுவேன். புஷ்பா என் வார்த்தைய நம்புவா... என் பேர்ல அத்தனை நம்பிக்கை அவளுக்கு...''

பத்து நாட்கள் ஒரு பெண்ணோடு பழகிவிட்டு இப்போது அவளுக்காக சத்தியம் பண்ணக்கூட தயாராக, மகன் இருப்பதைப் புரிந்து கொள்ள முடியா, ஒருவித கையாலாகாத்தனத்துடன் மீண்டும் ரங்கம்மா நீளமாய் பெருமூச்சு விட்டாள்.

பிள்ளையின் பழக்க வழக்கங்கள் சரியில்லை என்று நல்ல பெண்ணாய் நானே கட்டி வைத்தேன். அது வேண்டாத காரணங்களால் கோணிப் போயிற்று.

இவன் ஆசைப்படுகிறான் என்று நாட்டியக்காரியை ஊரைப் பகைத்துக் கொண்டு முடித்து வைத்தேன். அந்தத் திமிர் பிடித்த கழுதை, உறவை துச்சமாக மதித்து, அறுத்துக் கொண்டு ஓடிவிட்டது.

அது நடந்து மாசம் நாலுகூட ஆகவில்லை. அதற்குள் இன்னொருத்திமேல் காதல், உடனே கட்டி வை என்கிறான். இவனுக்கு இருப்பது என்ன மனசா, இல்லை தினமும் கழட்டிப் போடும் சட்டையா?

ஒருத்தியைக் காட்டி 'இவள் என் உயிர்' என்பதும்— மறு மாசமே இன்னொருத்தியை அழைத்து வந்து 'அவள் இல்லை, இவள்தான் என் உலகம்' என்பதும் இவனுக்குப் பழக்கமாகி விட்டதா?

இதற்கு நானும் உடந்தையாய் இருக்கிறேனோ?

K

'இது தப்பு தம்பி. ஒரு பெண்ணோடு உறவு கொள்ளும் திருமணம் என்பது விளையாடும் விவகாரம் இல்லை. அது ஆயிரங்காலத்துப் பயிர். உன் மனசை சரி பண்ணிக் கொண்டு, ஒழுங்காக வாழ முயற்சி பண்ணு' என்று அம்மாக் காரியாய் நான் எடுத்துச் சொல்ல வேண்டுமோ?

சரி, அப்படிச் சொன்னால் கேட்பானா?

'எனக்கா புத்தி சொல்கிறாய்... என் அவஸ்தை புரியாத நீயும் வேண்டாம், உன் பந்தமும் வேண்டாம்' என்று உறவை முறித்துக் கொண்டு போய்விட்டால்?

ராஜாவுக்கு ரோஷம் அதிகம். செய்தாலும் செய்வான்.

அப்புறம்?

ஐயய்யோ... ராஜா இல்லாத உலகில் எனக்கு மட்டும் என்ன வேலை?

வேண்டாம்...தப்பு, சரி என்று வேண்டாதவர்கள் சொல்லுவதை அலசி, பெற்ற மகனை பகைத்துக் கொள்வதைக் காட்டிலும், அவனுக்கு இதமாக நடந்து, அவன் அன்பைப் பெற்று வாழும் தாயாக இருப்பதுதான் எனக்கு சந்தோஷத்தைத் தரும்...

ஒரு நிமிஷம் நியாயம், தர்மம், என்று வாதாட முயற்சித்த புத்தியை, ஹிருதயத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பிய அஞ்ஞானம் ஒரேயடியாய் அமுக்கிவிட, அந்தக் கணம் ரங்கம்மாவின் புத்தி தோற்றுப் போனது. பாசம் நிறைந்த ஹிருதயம் வெற்றி பெற்றது.

"என்னம்மா எதுவுமே பேசாம அப்படியே உட்கார்ந்திட்டீங்க? உங்க சம்மதம் இல்லாட்டி வெளிப்படையா சொல்லிடுங்க... என் தலைவிதி இதுதான்னு நா..."

அவனை முடிக்க விடாமல் ரங்கம்மா குறுக்கிட்டாள்.



"இரு... இரு நல்ல காரியம் பேசறப்ப அபசகுனமா ஏதாச்சும் சொல்லிடாத... உனக்கு புஷ்பாவ கட்டிக்கணும் அதானே? இன்னிக்கே நெய்யூருக்கு 'கால்' போட்டு பார்த்தாமன் கிட்ட நா பேசிடறேன்... ஆமா, இந்த விவகாரம் புஷ்பாவைப் பெத்தவங்களுக்குத் தெரியுமா?"

தெரியாது என்று ராஜா தலை அசைத்தான்.

"இந்த மாதிரி ஒரு பிணைப்பு நிஜமா உருவாகும்னு நா நினைக்கவே இல்லம்மா... போன அந்த நாள் வரைக்கும் உடம்புக்கு முடியாம ஹோட்டல்ல படுத்திட்டேனா... அப்..."

"உடம்புக்கு முடியாம படுத்தியா? என்ன தம்பி... என்னண்ட நீ சொல்லவேயில்லியே!"

பதட்டமாக பேசிய அம்மாவின் கையைப் பற்றிக் கொண்டு ராஜா புன்னகைத்தான்.

"சாதாரண காய்ச்சல்மா... உங்களுக்குத் தெரிஞ்சா பதறுவீங்கனு தெரியும்... அதான் சொல்லலை... இப்பத்தான் நல்லா ஆயிட்டேனே... கேளுங்க, ஆரம்பத்தான் மாமாவைப் போய் பார்த்தப்ப, அவரு 'என் வீட்டோட வந்திடு'ன்னு சொன்னார்... சரின்னு அங்கப் போனேன். புஷ்பாவ முதல் முறை அந்த வீட்டுல சந்திச்சப்ப கூட மனசுல வேற மாதிரி எண்ணமும் எனக்கு இல்லதான். ஆனா, போகப் போக நெய்ப்பூர் சுத்திக் காட்ட மாமா, அத்தை வராத சமயங்கள்ல நாங்க ரெண்டு பேர் மட்டும் தனிச்சுப்போக ஆரம்பிச்சப்போ தான் 'இவ அனாதை பொண்ணு'ங்கற எண்ணம் எனக்கு வந்துச்சு... அவளுக்கும் அதே மாதிரி நினைப்பு உண்டாயிருக்குன்றது ஒரு நாள் 'உங்கள மாதிரி ஒருத்தர்தான் எனக்கு புருஷனா வாணும்னு நா ஆசைப்படறேன்'னு அவ வெளிப்படையா சொன்னதும் புரிஞ்சிக்க முடிஞ்சிது..."

ரங்கம்மா கண்ணகல, கையை ஆச்சர்யத்துடன் முக வாயில் வைத்தாள்.

K

"நிசமாவா தம்பி? அந்தப் பொண்ணு தானா வந்தா உன்னண்ட சொல்லிச்சு..?"

"முருகன் மேல சத்தியமா சொன்னாம்மா..."

"அப்புறம்?"

"பத்து நாள்ல பழக்கம் ரொம்ப நெருக்கமாயிட்டதும் 'உங்களைத்தான் கட்டிப்பேன்'னு அவ சொன்னா. நானும் 'ஊருக்குப் போயி அம்மாகிட்ட சொல்லி ஏற்பாடு பண்ணறேன் அதுவரைக்கும் இங்க யாருக்கும் எதுவும் தெரிய வேணாம்'னு சொல்லிவிட்டு வந்தேன். பிள்ளை வீட்டுலேந்து பெண் கேக்கறதுதானே மரியாதைனு நீங்க சொல்லுவீங்க?"

வெட்டு ஒன்று துண்டு இரண்டாக ராஜா பேசியதும் இனி இது குறித்து வாதிப்பதில் அர்த்தம் இல்லை என்று ரங்கம்மா புரிந்து கொண்டாள்.

தெரிய வேண்டிய விவரங்கள் தெரிந்ததும், அன்றே ரங்கம்மா சிங்கப்பூருக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள்.

சம்பிரதாய பேச்சுக்களைப் பேசிவிட்டு "ஒரு நல்ல சமாசாரம் தம்பி நம்ப ராஜாவுக்கு உன் மக புஷ்பாவ ரொம்ப பிடிச்சுப் போச்சாம்... அதனால சம்பந்தம் பேச நா அங்க வர்றதா இருக்கேன்" என்று அவள் தொடங்கினதும், சற்றும் எதிர்பாராத விதத்தில் அந்தப்பக்கம் பரந்தாமன் எகிறி குதித்தார்.

"என்னது என்னக்கா சொல்றீங்க? சுயநினைப்போடத் தான் பேசறீங்களா? புஷ்பா பச்சைப் பிள்ளை அவளைப் போயி ராஜாவுக்கு... என்னக்கா விளையாடறீங்களா?"

"சத்தியமா விளையாடலை தம்பி... ராஜா உன் மகளைக் கட்டிக்க விரும்பறான். அதான்..."



அவளைப் பேசவிடாமல் பரந்தாமன் ஆத்திரத்துடன் பேசினார்.

"நல்லா விரும்பினான்...வயசு நிலமை, எதையும் நினைச்சுப் பாக்காம அவன்தான் உளர்றான்னா, பெரியவங்க நீங்களும் புத்தி சொல்லறத விட்டுட்டு, கன்னா பின்னானு நடந்துக்கறீங்களே? அண்ணன் . தங்கச்சி மாதிரினு நினைச்சு பழகவிட்டது என் தப்புதான்...புரிஞ்சிகிட்டேன்...இனியொரு தரம் இந்தப் பேச்ச பேசாதீங்க... ஆமா..."

அவள் பதிலுக்காகக் காத்திராமல் தொடர்பை அவர் துண்டித்தாலும், பிள்ளையின் சந்தோஷம்தான் முக்கியம் என்பதை நினைவில் கொண்டு இரண்டு தரம் மீண்டும் பரந்தாமனோடு பேசவும், 'உன் பெண்ணும் அவனை விரும்பறாளாம், தம்பி' என்றும் கூற முயற்சித்து ரங்கம்மா தோல்வியே அடைந்தாள்.

ஆனால் இது நடந்து சரியாக முப்பத்தி ஐந்தாம் நாள் பரந்தாமனே அவளைத் தொலை பேசியில் கூப்பிட்டார்.

"படுபாவி, முழுகாம இருக்காளாம்... இன்னிக்குத் தான் சேதி தெரிஞ்சுது...நல்ல பாம்ப வீட்டுல பத்துநாள் தங்க விட்டதுக்கு பலன்கிடைச்சிடுச்சு... இனிமே பேசறதுல ஒண்ணும் இல்ல... நாலு நாள்ல என் பெண்ணோட அங்க வரேன். ஆக வேண்டியதைப் பார்ப்போம்..."

சொன்னபடி பரந்தாமன் புஷ்பாவோடு அடுத்த வாரம் எடையாளத்துக்கு வந்தார்.

கடலூர் பாடலீஸ்வரர் கோவிலில் எளிமையாக அவர் களுக்குத் திருமணத்தை நடத்தின பரந்தாமன் புஷ்பாவுக்குச் செய்திருந்த நகைகளைத் தந்து, வங்கியில் அவள் பேருக்கு லட்ச ரூபாய் டெபாஸிட்டாக போட்டு விட்டு 'என் கடமையைச் செய்துவிட்டேன் – இனி ஆயுசுக்கும் என் முகத் தில் விழிக்காதீர்கள்' என்று கூறிய கையோடு அடுத்த

விமானத்தில் ஏறி சிங்கப்பூருக்குப் போய்ச் சேர்ந்தார்

## 21

தோட்டத்திலிருந்து எழுந்த சிரிப்பு காதில் விழுந்த போது மனசுக்குள் அது மகிழ்ச்சியைப் பாய்ச்சியது.

சாய்வு நாற்காலியில் அமர்ந்து கம்பராமாயணம் படித்துக் கொண்டிருந்த ரங்கம்மா புத்தகத்தைத் தழைத்தாள் கவனத்தைத் தோட்டத்துப் பக்கம் வீசினாள்.

"தோ... ராஜாத்தான், நீங்க அழுகுணி ஆட்டம் ஆடறீங்க..."

"இந்த மாதிரி 'தண்ணி' காட்டினா நா விளையாட மாட்டேன், ராஜாத்தான்"

"யப்பாடி... இந்த ஓட்டம் ஓட இப்ப நம்மாலே ஆகாது... ராஜாத்தான்... இருங்க... இருங்க... இன்னும் நாலுமாசத்துல உங்கப்பிள்ளைய பெத்துகொடுத்துப்புறம்... உடம்ப தேத்திக்கிட்டு உங்கள இதே ஆட்டத்துல, இதே இடத்துல தோற்க அடிக்கலைனா, என் பேர் புஷ்பா இல்ல..."

மூச்சிரைக்க புஷ்பா பேசியதற்கெல்லாம் ராஜாவின் உரத்த சிரிப்பு மட்டுமே பதிலாகக் கிடைக்க, தோட்டத்தில் நடப்பதை ரங்கம்மாவால் நன்றாகவே ஊகிக்க முடிந்தது.

பிள்ளையும் மருமகளும் பூப்பந்தாட்டம் ஆடிக்கொண்டிருக்கிறார்கள்

வழக்கம்போல கோர்ட்டுக்கு இந்தப் பக்கம் ஒரு பந்து, அந்தப் பக்கம் ஒரு பந்து என்று ராஜா அடித்து அவளை



அலைக்கழித்திருப்பான்; பொய்க் கோபத்துடன் புஷ்பா[illegible]த்த, மனைவியின் சிணுங்கலை ராஜா ரசிப்பான்...

கொஞ்சநேரம் அருமைப் பெண்டாட்டியை அழவிட்டுவிட்டு, அப்புறம் மனசு கேட்காமல், தோற்பது மாதிரி ராஜா விட்டுக் கொடுத்துவிடுவான்...

ஆறு, ஏழு மாசமாகவே தினம் நடக்கும் சமாசாரம் தானே இது!

அருமை பெண்டாட்டி...

ஆமாம்... அருமைதான்... முதல் இரண்டு மனைவிகளிடம் காட்டாத பாசத்தை, நெருக்கத்தை இவளிடம் ராஜா நிறையவே காட்டுவதையும், புஷ்பாவைவிட்டு இந்தண்டை அந்தண்டை நகராமல் அவளையே வளைய வருகிறான் என்பதையும் நினைக்கையில் பிள்ளையிடம் காணப்படும் இந்த மாற்றம் ரங்கம்மாவுக்கு ஆச்சர்யத்தையே தந்தது.

ராஜாவை இந்த அளவுக்கு மாற்றியது எது?

புஷ்பாவின் வெகுளித்தனமான, ஆனால் 'நீதான் எனக்கு எல்லாம்' என்கிற வெளிப்படையான அன்பா?

பெற்றோர், உற்றோர் என்னை வேண்டாமென்று கூறினாலும் நீ இருக்கிறாயே. அது போதும் எனக்கு உன் உறவின் முன்னால் அந்த உறவுகள் எனக்குத் துச்சம் என்கிற இறுதியில் பிறந்த வீட்டைப் பற்றி ஒரு வார்த்தைகூட முணுமுணுக்காமல், அவர்களை நினைத்து ஏங்காமல், சிரித்த முகத்தோடு காணப்படும் புஷ்பாவின் வைராக்கியமா?

ராஜாவுக்கு ஈடு கொடுக்கும் விதத்தில் வாசலில், வெளியில், சென்று வரும் அவளின் இளமைத் துடிப்பா?

நாகரிக பழக்க வழக்கங்களா?

K

ராஜாத்தான், ராஜாத்தான்—என்று மூச்சுக்கு முப்பது தரம் பெயரோடு, உறவையும் இணைத்து, எல்லார் நடுவிலே யும் இயல்பாக இருக்கும் அந்தக் கலகல குணமா?

எது?

யோசித்த வரையில் ஒன்று மட்டும் காரணம் அல்ல, அத்தனையுமேதான் என்பதை ரங்கம்மாவால் புரிந்துகொள்ள முடிந்தது.

கோபத்தோடு பெண்ணுடன் சிங்கப்பூரிலிருந்து வந்து, திருமணத்தை வெறுப்பாக முடித்து, 'இனி— எங்களைப் பொறுத்தவரை நீ செத்துப் போனவன்தான்' என்று தீர்மானமாகக் கூறிவிட்டு, பரந்தாமன் புறப்பட்டுப் போனதும் 'என்ன செய்யப்போகிறோம்' என்று ரங்கம்மா பயந்தது உண்மைதான்.

பிள்ளையோ ஸ்திர புத்தி இல்லாதவன்...

இன்றைக்குத் தலையில் வைத்துக் கூத்தாடுவதை நாளைக்கு 'தொப்'பென்று கீழே தள்ளி, எட்டி உதைக்கத் தயங்காதவன்.

இவனை நம்பி இந்தப் பெண்ணைத் தாலி கட்டி இங்கு அழைத்து வந்தாகிவிட்டது நாளைக்கு ஏதேனும் தகராறு என்றால் போக்கிடம் இல்லாத பெண்ணை வைத்துக்கொண்டு எப்படிச் சமாளிப்பது?

ஆனால்—

நூறு கேள்விகள் சதா மனசில் குடைய என்ன நடக்கப் போகிறதோ—எப்படி நிலைமையை எதிர்நோக்கப் போகிறோமோ என்கிற பதட்டத்தோடு ரங்கம்மா தவித்ததெல்லாம் கொஞ்ச நாட்களுக்குத்தான்...

தேனிலவுக்கு காஷ்மீர் போய்விட்டு பதினைந்து நாள் கழித்து திரும்பின பிள்ளையிடம் மேற்கொண்டு பத்து



நாட்கள் செல்வதற்குள் சன்னமாய் மாற்றங்கள் இருப்பதை அவளால் பார்க்க முடிந்தது.

சாயங்காலம் ஆனால் நித்தமும்—பாட்டிலைத் திறந்து வைத்துக் கொண்டு உட்காருவது இல்லை, சதா சர்வ காலம் கையில் சிகரெட்டுடன் வளைய வருவது இல்லை, எந்நேர மும் காணப்பட்ட நண்பர்கள் கூட்டமும் இல்லை...

என்னாயிற்று?

கணவன் கல்லூரியில் 'பாட்மின்டன்' சாம்பியனாக இருந்தான் என்பதைக் கேள்விப்பட்ட புஷ்பா, தனக்கும் அதில் விருப்பம் இருந்ததால் உடனடியாய் தோட்டத்தில் ஒரு கோர்ட் தயாரிக்கச்சொல்லி, நித்தமும் மாலையில் அவனோடு அதில் விளையாடத் துவங்கியதில், பாட்டிலோடு உட்காருவது குறைந்தது...

மசக்கைக் காரணமாய் சிகரெட்டின் புகை புஷ்பாவுக்கு நிஜமாகவே வயிற்றுப் பிரட்டலை அதிகமாக்குவதை ராஜா வால் புரிந்துகொள்ள முடிந்ததால், மனைவி அருகில் இருக்கும் வேளையில் சிகரெட் குடிப்பதை தானாகவே குறைத்தான்...

அப்புறம்—

'ஸினிமாவுக்குப் போகலாமா'—பாண்டி, சென்னைக்கு ஒரு நடை சென்று ஜாலியாய் சுற்றிவிட்டு வரலாமா'— என்று ராஜா கேட்டபோதெல்லாம் எள் என்றால் எண்ணை யாக புஷ்பா நின்றதோடு மட்டுமல்லாமல் அவனுக்குப் பிடித்தமாதிரி ஜீன்ஸ், சல்வார், சூரிதார் என்று விதவிதமாக அலங்காரம் பண்ணிக் கொண்டு நாகரிக யுவதியாக கிளம்பி, 'கம்பனி' கொடுத்ததில், சந்தானம் போன்ற இதர நண்பர் களின் நெருக்கமும் குறைந்து போகாமல் வேறு என்ன செய்யும்'

நுலகத்தில் இப்படி கண்ட கண்ட உடைகளை மாட்டிக் கொண்டு, வீட்டிலும் கிராமத்துத் தெருக்களிலும் கூச்சமில் லாமல் புஷ்பா நடமாடியதும்,

K

அந்த வரிசையே இல்லாத அதிசயமாய் பூப்பந்து விளையாட முற்பட்டதும்,

பெரியவர்கள் மற்றவர்கள் முன்னிலையிலேயே ராஜா என்று பெயரையும் சேர்த்து 'ராஜாத்தான்' என்று அழைத்ததும்,

அவனைத் தொட்டுப் பேசி சீண்டுவதும்,

இரவு கணவனுக்குச் சரியாக வெகு நேரத்துக்குக் கண் விழித்து வீடியோ பார்த்து, வெளியே போய்வந்து விட்டு காலையில் ஏழு, எட்டுக்கு எழுந்திருத்தலும்—

ரங்கம்மாவுக்குக் கோபத்தையும், வேதனையையும் நிறையவே தந்தன.

சரி, இவளும் அந்த தந்தாரி மாலினி மாதிரிதான். உல்லாசமாக இருப்பது ஒன்றுதான் வாழ்க்கையில் குறிக்கோளாகக் கொண்டவள். போதாத குறைக்கு சிங்கப்பூர் நாகரிகமும் சேர்ந்து கொண்டிருக்கிறது. அதனால் எந்த நிமிஷமும் தாம்பத்தியத்தில் விரிசல் உண்டாகக்கூடும்—என்றே நம்பினாள்.

ஆனால், எண்ணி மாசம் ஒன்று போவதற்குள் துளித் துளியாய் மாற்றம் தென்படத் தென்பட, ரங்கம்மா சந்தோஷமாக ஏமாந்து போனாள்.

கடைசியில் ராஜாவுக்கு ஏற்ற மனைவியைக் கடவுள் கொடுத்துவிட்டாரா!

உனக்குப் பிறகு உன் மகனைக் கண்ணுக்குள் வைத்து பார்த்துக்கொள்ள இவள்தான் சரியானவள் என்று சூசகமாய் சொல்லிக் காட்டுகிறாரா?

நாகரீக உடையும்; பேர்சொல்லி அழைக்கும் பழக்க வழக்கமுமாய் இருந்தாலும் புஷ்பா வாஸ்தவத்தில் அருமையான பெண்தானோ?



அதுதான் உண்மையான அன்பால் ராஜாவைத் தன்பால் ஈர்ப்பது அவளுக்குச் சாத்தியமாகி இருக்கிறதோ?

மனசுக்குப் பிடித்த விதத்தில் தாலி கட்டினவள் நடந்து கொள்வதால், ராஜாவும் நல்லவிதமாய் வாழத் தீர்மானித்து விட்டானோ?

யோசிக்க... யோசிக்க ரங்கம்மா நெகிழ்ந்துதான் போனாள்...

ராஜா தன் வேண்டாத பழக்கங்களைக் குறைத்துக் கொண்டதோடு இன்னொரு ரீதியிலும் மாறத் துவங்கியது ரங்கம்மா சற்றும் எதிர்பார்க்காத ஒரு திருப்பம் என்றே சொல்ல வேண்டும்.

பகல் நேரங்களில் "எனக்குப் பொழுது போகல ராஜாத்தான் ... வாங்க நிலத்துப்பக்கம் போயி அறுவடை நடக்கறத ஒரு பார்வை பார்த்திட்டு வருவோம்" என்றும்,

"கரும்ப வெட்டி ஆலைக்கு அனுப்பறத பார்க்க ஆசையா இருக்கு ராஜாத்தான்... வாங்க... ஒரு நடை போயிட்டு வருவோம்" என்றும்...

"பருத்திச் செடிய நா பார்த்ததே இல்ல ...நம்ப நிலத்தில போட்டிருக்கோம்னு கணக்குப்பிள்ளை சொல்றாரே ...என்ன அழைச்சிட்டுப் போயி காட்டறீங்களா, ராஜாத்தான்?" என்றும்...

கள்ளமில்லா குழந்தைத்தனமான ஆர்வத்துடன் புஷ்பா கேட்டதைப் பூர்த்தி செய்யவென அவளை ராஜா அழைத்துப் போக ஆரம்பித்தது. அத்துடன் நிற்காமல், வாரத்துக்கு இரண்டு தரம் நிலம், தீர்வை எட்டிப் பார்த்து அங்கே என்ன நடக்கிறது என்று தெரிந்துகொள்வதில் வந்து நிற்பது மூக்கில் விரலை வைக்கும் சமாசாரம் இல்லாமல் வேறு என்ன?

ஊருக்குள் கூட,

"தேவலையே... இந்த சிங்கப்பூர் குட்டி கெட்டிக்காரி தான். கோவில் காரியமா பொறுப்பில்லாமத் திரிஞ்சிட்டிருந்தவனை, வீட்டுல தங்க வைக்கிறா, நிலத்தை கவனிக்கச் செய்யறா, சாமி பூசத்துல நம்பிக்கை இல்லாம ஏடாகூடமாகப் பேசினவனை, வெள்ளிக்கிழமைகள்ல தன்னோடு கோவிலுக்குக் கூட வர பண்ணிட்டாளே?" — என்று பேசிக் கொள்வதாக வீரராகவன் ரங்கம்மாவிடம் தெரிவித்தபோது, கடைசியில் மைலம் முருகன் கண்ணைத் திறந்து விட்டான் என்று அவள் பூரித்துத்தான் போனாள்.

புஷ்பாதான் மாற்றினாளோ, இல்லை அவள் வயிற்றில் வளரும் பேரன்தான் தந்தையை மாற்றினானோ...

எப்படியோ—கஷ்டகாலம் முடிந்து எல்லாம் நல்லதாய் நடக்கிறது... இந்த ராசியே தொடர்ந்து, மனைவி, குழந்தைகளோடு, ஆயுசுக்கும் ராஜா மகிழ்ச்சியுடன் வாழ்ந்தால் சரி...

உணர்ச்சி வசப்பட்டுவிட்டதில், கண்கள் கலங்கிப் போக ரங்கம்மா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

தோட்டத்தில் மகன், மருமகள் பந்து விளையாடும், அழகைக் காண வேண்டும்போல ஆசை எழ, ஜன்னல் அருகில் சென்று எட்டிப் பார்த்தாள்.

ஏழுமாத கர்ப்பம் பளிச்சென்று தெரிய, ஓட முடியாமல் பந்தை மருமகள் அடிப்பதை காணகையில், 'போதும் புஷ்பா ஆடினது; உள்ளே வந்து ஓய்வெடுத்துக் கொள்' என்று கூற வேண்டும் போல இருந்தது.

ஆனால், இவள் அப்படிச் சொன்னால் புஷ்பாவா காதில் வாங்குவாள்!

"போங்க அத்தை... வீணா ஏன் பயப்படறீங்க... கடைசி மாசம் வரைக்கும் நல்லா எக்ஸர்ஸைஸ் செஞ்சாதான்



பிள்ளைய சுலபமா பெத்துக்க முடியும்... மேல நாட்டுல இதுதான் வழக்கம்" என்பாள், பத்து குழந்தைகளைப் பெத்துவிட்ட கிழவி மாதிரி...

அவளுடைய துணிச்சலான பேச்சை ரசித்து ராஜாவும் சிரிப்பான்...

நல்ல பிள்ளை, நல்ல மருமகள்...

புன்னகைத்தபடி மீண்டும் சாய்வு நாற்காலியில் வந்து அமர்ந்தபோது, கடந்த இரண்டு மாசங்களில் மட்டும் பரந்தாமனுக்குத் தானே கைப்பட இரண்டு கடிதங்கள் எழுதியதும், அதற்குப் பதில் வராமல் போனதும், ரங்கம்மாவுக்கு நினைவில் ஆடியது.

ஐந்தாம் மாசம் ...சம்பிரதாயப்படி பூச்சூடல் செய்வதை விட்டுவிட்டால் எப்படி—அவர்கள் விட்டேத்தியாக இருந்தாலும், நம் கடமையை சரிவர நாம் செய்ய வேண்டாமா என்கிற எண்ணத்துடன், போனது போகட்டும் கோபத்தை மறந்து பெண்ணைப் பார்க்க வா... என்ன இருந்தாலும் மாமாவைத்தானே மணந்து கொண்டிருக்கிறாள், அவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள். இதுதானே பெற்றவர்களாகிய நமக்கு முக்கியம்' என்று விளக்கமாக எழுதின இரண்டு கடிதங்களுக்கும் காற்றில் போட்ட கல்லாக, பதில் ஏதும் வராது போனதும் 'பூச்சூட்டலுக்கு ரங்கம்மா தானே நாள் பார்த்தாள்.

ஆச்சாரியிடம் சொல்லி வளையலை தயார் பண்ணினாள்.

அழைப்பிதழ் அச்சடித்து ஊரை அழைத்தாள்.

வைபவத்துக்கு நாலு நாட்கள் இருக்கையில் மனசு கேளாமல், சிங்கப்பூருக்கு போன் போட்டுப் பேசினாள்.

"நா தான் தம்பி ரங்கம்மா ...வர்ற புதன் கிழமை நம்ம புஷ்பாவுக்கு பூச்சூட்டல் நடத்..."

K

அவனை முடிக்க விடாமல் பரந்தாமன் வள்ளென்று குறுக்கிட்டார்.

நீங்கள்ளாம் உப்பு போட்டுகிட்டு சோறு திங்கற ஜன்மம்தானே? உறவு வேணாம்னு வந்தும் இப்படி, தம்பி கிம்பினு சொந்தம் கொண்டாடறீங்களே, வெக்கமா இல்ல? என்று நாக்கைப் பிடுங்கிக் கொள்கிற மாதிரி கேட்டுவிட்டு தொடர்பைத் துண்டித்தபோது ரங்கம்மா அதிர்ந்து போனாலும், தைரியமாகப் பேசி அவளைத் தேற்றியது புஷ்பா தான்...

"விடுங்க அத்த... அந்த மனுஷருக்கு அத்தனை ரோஷம் இருந்தா, அவர் பெத்த மக எனக்கு மட்டும் இருக்காதா? எனக்கு இனிமே எல்லாமே ராஜாத்தானும், நீங்களும்தான். இன்னியோட நானும் என்னப் பெத்தவங்களை மறந்திட்டேன்".

ஆணித்தனமாகப் பேசியதும் அல்லாமல், பூச்சூட்டல் அன்றும், அதைத் தொடர்ந்து வந்த நாட்களிலும் பெற்றவர்களை நினைத்து ஏங்காமல், விவேகத்துடன் அவள் இருந்ததைப் பார்த்து, ரங்கம்மா மட்டுமில்லை, அந்த எடையானமே தானே வியந்தது!

## 22

''அம்மா... வென்னீ விளாவிடவா?''

குழந்தைக் காரியங்களைக் கவனிக்கவென ஏற்பாடு பண்ணி இருந்த கிருஷ்ணவேணி, அறைக் கதவருகில் நின்று குரல் கொடுப்பது காதில் விழாமல், ரங்கம்மா பேரனைக் கொஞ்சுவதில் ஈடுபட்டிருந்தாள்.



தென் கடல் மாணிக்கம்
திரட்டி அடுப்பாக்கி
வடகடல் மாணிக்கம்
வாரி உமி பரப்பி
தெய்ப் பவழம் போல் நடுவே
நிமிரும் தணல் வளர்த்து
வானத்தைப் பார்த்து
வளரும் பிறை பார்த்து
சங்கு கழுவித்
தனிகையிலே பாலாற்றி
சங்குப்பால் குடித்திடுவாய்—என் கண்ணே
உங்கள் குலம் பேர் சொல்ல
பால்குடித்துக் கண்வளராய்—என் கண்ணே
பாட்டன் குலம் பேர் சொல்ல!

நாட்டுப் பாடல் மெட்டில் இழுத்து இழுத்துப் பாடி, ஒவ்வொரு வரிக்கும் பேரனைக் குனிந்து ரங்கம்மா முத்தமிட, அப்போதுதான் எழுந்து வந்த ராஜா அந்தக் காட்சியை வாய்விட்டுச் சிரித்து ரசித்தான்.

''போதும்மா... நீங்க குடுக்கற முத்தத்துல புள்ளைக்கு எச்சத்தழும்பு வந்திடப் போகுது...''

ராஜாவின் குரல் கேட்டு நிமிர்ந்த ரங்கம்மா போலி கோபத்தில் முகம் சுளித்தாள்.

''அட... அதுக்குள்ள புள்ளைக்காகப் பரிஞ்சிகிட்டு, வர்றதைப் பாரேன். உனக்கு அவன் புள்ளைன்னா, எனக்கு தவமிருந்து வந்த பேரன் தம்பி... நினைப்பு இருக்கட்டும்''

அம்மாவின் கிண்டலுக்கு சிரிப்பையே பதிலாகத் தந்த ராஜா அருகில் அமர்ந்தான்.

சம்மணமிட்டு அமர்ந்து கொண்டான்.

''என்கிட்ட கொஞ்சம் கொடுங்கம்மா, அந்தக் திருட்டுப் பயல...'' என்று கையை நீட்ட, ''பத்திரம் மெதுவா...

மெதுவா... தலைக்கடியிலே ஒரு கையக் கொடுத்திக்க" என்றவாறு ரங்கம்மா பேரனை அவனிடம் தந்தாள்.

அப்பாவின் மடிக்கு வந்துவிட்டது புரிந்த மாதிரி குழந்தை பொக்கை வாயைத் திறந்து அழகாய்ச் சிரித்தான்.

"டேய்... ராஜாப்பயலே... பாட்டி மடிய விட என்மடி இன்னும் ஷோக்கா இருக்குது இல்ல? சொல்லு, இந்தப் பாட்டிகிட்ட... பாட்டி... பாட்டீ... எனக்கு உன்னையவிட அப்பா மேலதான் பிரியம் அதிகம்'னு சொல்லறியா... கண்ணு?"

லாவகமாய் குழந்தையைக் கையில் தூக்கிக் கொண்டு, கன்னத்தோடு கன்னம் வைத்து ராஜா கொஞ்ச, மகனிடம் காணப்பட்ட அந்த நிதானம் ரங்கம்மாவுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

குழந்தை பிறந்துவிட்ட ஒரு மாசமாகவே ராஜா இத்தனை இதமாகத்தான் இருக்கிறான்.

இவன் என் பிள்ளை, என் ரத்தத்தில் உருவானவன் என்கிற பெருமிதம் முகத்தில் வெளிச்சம் போட, 'என் கையிலே குடு' என்று முதல் நாளிலிருந்தே லாவகமாய் பிள்ளையைத் தூக்க, எடுக்க முன்வந்தபோது அந்த ஆசையைக் கண்டு ரங்கம்மா பிரமித்துதான் போனாள்.

சாதாரணமாக குழந்தைகளை அணைத்துக் கொஞ்சும் ரகம் ராஜா இல்லை, விசேஷ நாட்களில் வீட்டுக்கு வரும் உறவினர் பிள்ளை குட்டிகள் அவன் அறைக்குள் நுழைந்தாலே முகத்தைத் தூக்குவான்.

"அந்த வானரங்களை என் அறைக்குள்ள விடாதீங்கம்மா - கையும், காலையும் வச்சிகிட்டு சும்மா உட்காராம, ரேடியோவைத் திருகுதுங்க... கடிகாரத்துக்கு சாவி கொடுக்குதுங்க...தத்...சரியான வாலுங்க..."



இப்படி அவன் அலுத்துக்கொள்ளும் போதெல்லாம், இவனுக்கென்று நாலு பிறந்தாலும் அதைத் தொடாதே— இங்கே வராதே என்று சதா சிடுசிடுத்துக் கொண்டேதான் இருப்பானோ, என்று நினைத்தது பொய்யானதும் அல்லாமல், எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக தலையில் வைத்துக் கொண்டு 'ஆஹா என் பிள்ளை!' என்று கூத்தாடுவது நடக்கிறது!

இதைத்தான் பெரியவர்கள், 'தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்' என்று குறிப்பிட்டார்களோ!

"அம்மா அம்மா... இங்க பாருங்க சிரிக்கிறான் என் பிள்ளை...பாருங்க"

தொப்பையில் வாயை வைத்து 'பர்ர்ர்' என்று ராஜா ஓசைப்படுத்த, குழந்தை 'க்கு' என்று சிரிக்க, அந்த அழகில் சில கணங்களுக்கு மயங்கின ரங்கம்மா சட்டென்று தன்னை சுதாரித்துக் கொண்டாள்.

"போதும் தம்பி ரசிச்சது...நம்ம கண்ணே பட்டுடப் போகுது... இப்படிக் கொண்டா... ரொம்ப சிரிக்க வச்சா, புள்ளைக்கு வயித்து வலி கண்டுடும்...கொண்டா..."

ராஜாவின் கையிலிருந்த பிள்ளையை ரங்கம்மா வாங்கிக் கொண்டபோது பொறுமை இழந்து கிருஷ்ணவேணி மீண்டும் குரல் கொடுத்தாள்.

"வெந்நீ விளாவட்டுமாம்மா?"

அவள் நிற்பதை ரங்கம்மா அப்போதுதான் பார்த்தாள்.

"நீ எப்படி வந்தே"

"நா எப்பவோ வந்திட்டேன்...பேரனைக் கொஞ்சற ஜோர்ல உங்களுக்குத்தான் உலகமே புரியல..."

"சரி...சரி... நீ போய் வெந்நீ விளாவு... நா குழந்தைய எடுத்திட்டுப் பின்னாலியே வரேன்..."

அவன் நகர்ந்ததும் ரங்கம்மா ராஜா பக்கம் திரும்பினாள்.

"புஷ்பா எழுந்திட்டாளாடா தம்பி?"

"இன்னும் .. இல்லம்மா.. ராத்திரி பூரா அவளுக்கு காய்ச்சல் அதிகமா இருந்த மாதிரிதான் தோணிச்சு .."

"பச்சை உடம்புக்காரி — பூவாட்டம் உட்கார்ந்திரும்மானு சொன்னா கேட்டாதானே? அமெரிக்கால இப்படி, சிங்கப்பூர்ல அப்படினு எனக்குச் சரியா வாயாடினா .. இப்ப? நாலு நாளா காரணமே புரியாம காய்ச்சல் பால் கட்டிகிட்டு குழந்தைக்குக் குடுக்க முடியல .. ஹூம் .. எல்லாம் திருஷ்டி தாம்மா... சாயங்காலமா முச்சந்தி மண்ணை எடுத்திட்டு வந்து உங்க மூணு பேருக்கும் கோவாலுவ விட்டு திருஷ்டி கழிக்கச் சொல்லணும் .. எவ எவ எந்தெந்தக் கொள்ளிக் கண்ணப் போட்டாளோ... அவ நாசமாப் போக..."

யோசனையுடன் உட்கார்ந்திருந்த ராஜா மெதுவாக எழுந்து நின்றான்.

"வேணா பாண்டி ஜிப்மர் ஆஸ்பத்திரிக்குப் போயி, காண்பிச்சிட்டுப் வந்திடுவமா, ம்மா?"

"தாராளமா அழைச்சிட்டுப் போயேன்... தம்பி, இதுக்குக் கூடவா என்னக் கேக்கணும்?"

"இல்லே .. வந்து ... உங்கக் கிட்ட சொன்னாளோ, இல்லையோ... புஷ்பாக்கு ப்ளீடிங் வேற ஆயிட்டே இருக்கும்மா.. "

ரங்கம்மா திடுக்கிட்டாள்.

'உதிரப் போக்கா?"

"ம்"

"எப்பலேந்து தம்பி?"



"ஒரு வாரம். பத்துநாளா இருக்கும்."

"அட, கஷ்ட காலமே ..இப்படிக்கூட ஒரு பொண்ணு, கல்லுளிமங்கத்தனமா இருப்பாளா? என்னாண்ட வந்து உடனே சொல்றத்துக்கு என்னப்பா?"

"தீட்டு வந்திருச்சுனு நினைச்சு சும்மா இருந்திட்டாம்மா..."

"தீட்டா? பிள்ளை பெத்த இருவது நாள்லியா? என்ன தம்பி இது! சரியான அடாவடியா இருக்கே! .. நாங்கள்ளாம் பிரசவம் ஆனாக்க அறைய விட்டு வெளில வரமாட்டோம்... நாப்பத்தைஞ்சு நாள் சட்டிய கையால தொட்டு ஒரு வேலை பண்ண மாட்டோம். வேளா வேளைக்கு எண்ணைய்க் குளியல் குளிச்சிட்டு, பத்தியமா சாப்பிடுவோம், பெரியவங்க பேச்சுக்குக் கட்டுபட்டு மூணு மாசம் வரைக்கும் புருஷன் இருக்கற திசைக்கே போக மாட்டோம் .. இவ என்னடான்னா மேல் நாட்டுல இந்த அசட்டு வழக்கம் எல்லாம் இல்லேனு ஆஸ்பத்திரிலேந்து வீட்டுக்கு வந்த நாள்லேந்து பச்சைத் தண்ணில கை வக்கறா, நடமாடறா, உன் அறையிலேயே படுக்கறா... என்ன தம்பி இது—னு நா கேட்டப்போ ... நீயும் அவளுக்கு பரிஞ்சு பேசி, என் வாய அடைச்சிட்ட... இப்ப பாரு... அவஸ்தைப்படறது அவதானே? தெரியாமலா பெரியவங்க சில பழக்க வழக்கங்களை வச்சிருக்காங்க .."

அம்மா மனைவி மேல் புகார் சொல்லவில்லை, அக்கறையின் காரணமாகவே புலம்புகிறாள், என்பதைப் புரிந்து கொள்ள முடிய, ராஜா பதில் ஏதும் பேசாமல் நின்றான்.

ரங்கம்மா இடக்கையில் குழந்தையை அணைத்து, வலக்கையை தரையில் ஊன்றியவாறு எழுந்தாள்.

"நா குழந்தையைக் குளிப்பாட்டி எடுத்திட்டு வரேன்... புஷ்பா எழுந்தாச்சுன்னா, அவளைப்பாண்டிக்கு கூட்டிட்டுப் போற வழியப் பாரு ..."

K

ரங்கம்மா பின் தாழ்வாரத்துக்குச் சென்றபோது கிருஷ்ணவேணி அங்கு குளியலுக்குத் தேவையான அத்தனை சாமான்களுடன் காத்திருந்தாள்.

நாலு வாளி நிறைய பதமாக விளாவி வைக்கப்பட்ட வெந்நீர், அதில் மிதந்த வேப்பிலைகள், உடம்புக்குத் தேய்க்க வீட்டிலேயே ஆட்டின தேங்காய் எண்ணெய், ஒரு கிண்ணத்தில் நைசாக அரைக்கப்பட்ட பச்சை முழுப்பயிறு மாவு, இன்னொன்றில் கடலை மாவு, அவைகளைத் திட்டமாக எடுத்துப்போட்டு கரைக்க காலி கிண்ணம், உட்கார மணைப் பலகை, துவட்ட தலைக்கொன்று, உடம்புக்கொன்றாய் இரண்டு துண்டுகள், சாம்பிராணி காட்ட தூபத்தட்டு, மட்டிப்பால் கலந்த வாசனை சாம்பிராணி.

ரங்கம்மாவைக் கண்டதும் கிருஷ்ணவேணி மணையை எடுத்துப்போட்டாள்.

அதில் அமர்ந்து, குழந்தை அணிந்திருந்த சட்டையை அகற்றி, கால்களை குத்திட்டுக்கொண்ட ரங்கம்மா பேரனை அந்தச் சரிவில் படுக்க வைத்தாள்.

"நீங்க ஏம்மா சிரமப்படறீங்க... ஆசையா இருந்தா கூட நில்லுங்க... நா எண்ணெய் தடவி தலைக்கு ஊத்த மாட்டேனா?"

கிருஷ்ணவேணியின் பேச்சுக்கு சிரிப்பைப் பதிலாகத்தந்து ரங்கம்மா தேங்காய் எண்ணெயை கையில் விட்டுக் கொண்டு குழந்தையின் உடம்பு, கை,கால்களை நீவி தேய்த்தாள்.

இப்படியும், அப்படியும் புரட்டி ஒரு இடம் பாக்கியில்லாமல் உருவி விட்டதும், பேரனை மல்லாக்கக் கிடத்தி "மளமளனு தண்ணிய ஊத்து" என்றாள்.

தண்ணீர் உடம்பில் பட்டதும் யாரோ அடித்துவிட்ட மாதிரி குழந்தை வீறிட்டு அழ ஆரம்பிக்க, அவன் கவனத்தை



ஈர்க்கும் நோக்கத்துடன் அடி உதட்டை மடித்து 'ஏஏஏ' என்று ஒலி எழுப்பியவாறே கடலை மாவை பேரன் உடம்பில் தேய்த்தாள்.

ஐந்து நிமிஷங்களில் ஒரு வழியாய் குளியல் அமர்க்களம் ஆயிற்று.

சடைசிச் சொம்பு நீரைக் குழந்தை தலையைச் சுற்றி ஊற்றி, சொம்பைத் தரையில் கவிழ்த்துவிட்டு கிருஷ்ணவேணி நீட்டின துண்டில் குழந்தையைச் சுற்றி மார்போடு ரங்கம்மா அணைத்துக் கொண்டாள்.

இதற்குள் பெருமாள் தணல் கரண்டியோடு வந்து விட்டான்.

குழந்தையைத் துடைத்து, தலைக்குப் புகை காட்டி, கண்ணுக்கு மையெழுதி, பொட்டிட்டு, புது சட்டை மாட்டுவதற்குள் ரங்கம்மாவுக்கு மூச்சு வாங்கத் தொடங்கியது.

ஆனாலும் அதை லட்சியம் பண்ணாமல் "குழந்தைக்குனு பசும்பால்ல தண்ணிவிட்டு தனியா வச்சிருக்கேன். மசமசனு நிக்காம உள்ளார போயி அத காச்சி, ஒரு ஸ்பூன் சர்க்கரைப் போட்டு, பதமா ஆத்தி எடுத்துக்கிட்டுவா... ஓடு..." என்று பெருமாளிடம் உத்தரவு போட்டவள் அழும் குழந்தையை சமாதானம் பண்ணும் நோக்கத்தோடு மெதுவாகத் தாலாட்டு ஒன்று பாட ஆரம்பித்தாள்.

'ஆரிரரோ... ஆராரோ...ஆராரோ ஆரிரரோ...
தம்பி அழுத கண்ணீர்
ஆறாகப் பாய்ந்து ஆனை குளித்தேறி
கடலாகப் பாய்ந்து காளை குளித்தேறி
இஞ்சிக்குப் பாய்ந்து எலுமிச்சை வேரோடி
மஞ்சளுக்குப் பாய்ந்து மருதோன்றி வேரோடி
வாய்க்காலில் பாய்ந்து வழிப்போக்கர் வாய் கழுவி
தாழைக்குப் பாய்கையிலே தழும்பியதாம் கண்ணீரும்
வாழைக்குப் பாய்கையிலே வற்றியதாம் கண்ணீரும்
ஆரீரரோ... ஆராரோ...

எழுந்து நின்று குறுக்கும், நெடுக்கும் நடந்து, லேசாக குழந்தையைக் குலுக்கியவாறே ரங்கம்மா பாடின நிமிஷத்தில் 'அமமா' என்று பதட்டமாக அழைத்துக் கொண்டு ராஜா வந்து நின்றான்

ரங்கம்மா தாலாட்டை நிறுத்தினாள்.

''என்ன தம்பி?''

''குழந்தைய கிருஷ்ணவேணிகிட்ட கொடுத்திட்டு நீங்க வந்து புஷ்பாவைப் பாருங்க.''

அவன் குரலில் தென்பட்ட பரபரப்பு ரங்கம்மாவை பயமுறுத்தியது.

''என்ன விஷயம்பா?''

''தெரியலம்மா... தூங்கிட்டிருந்தவள எழுப்பினேன்... கண்ணைத் திறந்தவ 'மயக்கமா இருக்கு'னு சொல்லிட்டு மறுபடி கண்ண மூடிகிட்டா..''

பேசிக் கொண்டே போன ராஜா குரலைத் தழைத்தான்.

''படுக்கை பூரா ஒரே ரத்தமா இருக்குமா...''

''ஆண்டவனே!''... பயத்தோடு கூவின ரங்கம்மா குழந்தையை கிருஷ்ணவேணியிடம் நீட்டினாள்.

''புரை ஏறாம பாத்து பாலக்கொடு; தூங்கிட்டான்னா ஏணைல போட்டுடு ''என்று சொல்லிக் கொண்டே உள் அறைக்கு ஓடினாள்.

உள்ளே நுழைந்து புஷ்பாவை நிமிர்ந்து பார்த்தபோது குடல் முடிச்சுப் போட்டுக் கொண்டது.

சோகை பாய்ந்து வெளிறின முகம், மயக்கத்தில் செருகின கண்கள்.



என்னாயிற்று?

கிட்டத்தில் போய் 'புஷ்பா .. அம்மாடி புஷ்பா' என்று அழைத்தபோது ஏதோ பெரிசாய் வந்து விட்டது என்கிற உணர்வு ஆளை ஆட்டி வைத்ததில் ரங்கம்மாவின் ஹிருதயம் வாய் வரை எகிறி குதிக்கவே செய்தது.

# 23

ஒரு மாசம்...

சரியாக ஒரு மாசம்...

ராஜாத்தான் ராஜாத்தான் என்று மூச்சுக்கு முன்னூறு தரம் அழைத்து, முகமெல்லாம் சிரிப்பில் மலர பட்டாம்பூச்சியாக அந்த வீட்டில் வளைய வந்த புஷ்பாவைக் கொண்டு வைத்து, எரித்து, பிடி சாம்பலாக்கி, நீரில் கரைத்தது நடந்து ஒரு மாசமாகிவிட்டது.

செவந்திப் பூவாக மலர்ந்து சிரித்து மகிழ்ந்த அந்த ஆத்மா இன்று இல்லை என்றால், அதை நம்புவது கஷ்டமாகத்தான் இருக்கிறது.

ஆனாலும் யார் நம்பினால் என்ன, நம்பாவிட்டால் என்ன என்ற இறுமாப்புடன் காலம் அதன் காரியமே கண்ணாய் ஓடிக்கொண்டுதானே இருக்கிறது?

அருமை மனைவியைப் பிரிந்து ராஜா தவிக்கிறானா; தாயை இழந்த பச்சிளம் பிள்ளை பரிதவிக்கிறதா; மருமகளை பறிகொடுத்து விட்டதில் ரங்கம்மா துடிக்கிறாளா? என்கிற கரிசனம் எல்லாம் காலத்துக்கு ஏது?

நீ அழுதாலும் சரி, தேற்றிக் கொண்டாலும் சரி— எனக்குக் கவலை இல்லை, என் கடமையைத்தான் நான்

செய்வேன் என்று அந்த நாட்டுக்குத் தன் போக்கில் போய்க் கொண்டுதானே இருக்கிறது!

இரண்டு நாட்கள் முன்புகூட வேதனை தாளமாட்டாமல் ராஜா வாய்விட்டுப் புலம்பவே செய்தான்.

"நாளையோட புஷ்பா போயி ஒருமாசம் ஆயிடும்மா... இனி; போனமாசம் இத்தனைநேரம் புஷ்பா இப்படிச் செஞ்சா... புஷ்பா அப்படிப் பேசினாளு சொல்லமுடியாது... இரண்டு மாசத்துக்கு முன்னால னு சொல்லணும்... ஐயோ... நான் வேகமா ஓடுதே... அதை இழுத்து நிறுத்தி வச்சிக்க முடியலையேம்மா... என் புஷ்பாவைப் பிரிஞ்சி ஒரு மாசம் இருந்திட்டேனே பாவி..."

கண்ணில் நீர் பெருக ராஜா வாய்விட்டுக் கதறியபோது அருகில் இருந்த அத்தனை பேர்களும் உடைந்துதான் போனார்கள்.

தறிகெட்டு திரிந்து கொண்டிருந்த பிள்ளையைத் தன் அன்பினால் நிதானப்படுத்தி, மகிழ்ச்சியோடு வாழவைத்துக் கொண்டிருந்த பெண்ணை இத்தனை அவசரமாய் எதற்காக தெய்வம் அழைத்துக் கொள்ள வேண்டும்?

பாழும் தெய்வம்...

அதற்குக் கண்ணில்லையா?

நெஞ்சில்லையா?

மைலம் முருகன் சக்தி வாய்ந்த கடவுள் என்று நம்பியது பொய்யா?

கடைசியில் கருணை, அன்பு, பரிவு என்று ஏதும் இல்லாத கல்சிலைதானா அதுவும்?

மீண்டும் மீண்டும் அதே கேள்விகள் இப்போதும் மனசுக்குள் சுழன்று ஆளை விரட்டியதில் படுத்திருந்த ரங்கம்மாவின் கண்ணில் நீர் கொப்பளித்துக் கொண்டு



ஊறி, கன்னத்தில் கோடு போட்டு இறங்கி, தலைகாணியை நனைத்தது.

அழுகை அதிகமானதும் மூக்கை அடைத்தது.

மூச்சுவிடுவது சிரமமாக, ரங்கம்மா, எழுந்து உட்கார்ந்தாள்

பொருந்தி உட்கார முடியாதபடி தலை விறுவிறுவென்று சுற்றியது.

இருக்கிற துன்பம் போதாது என்று இந்தக் கழுத்தறுப்பு வேறு...

ரத்த அழுத்தம் அதிகமாக இருக்கிறதாம், உப்பு குறைத்துச் சாப்பிட்டு, படுக்கையில் படுத்து உடம்பைப் பார்த்துக்கொள்ள வேண்டுமாம் கடலூர் வைத்தியர் கறாராய்க் கூறிவிட்டார்.

நாலு நாட்கள் முன்பு குழந்தை குளிப்பாட்டிக் கொண்டு எழுந்தவளுக்குத் திடுமென கண்களை இருட்டிக் கொண்டுவர, அப்படியே சாய்ந்துவிட்டாள், நல்லவேளை யாக கிருஷ்ணவேணி அருகில் இருந்தாளோ, அன்றைக்கு ரங்கம்மாவும், குழந்தையும் மண்டை உடையாமல் பிழைத் தார்களோ...

இப்படி நடந்தது என்று கிருஷ்ணவேணி கணக்குப் பிள்ளையிடம் கூற, அவர் ராஜாவிடம் சொல்ல, உடனடி யாய் வைத்தியர் வரவழைக்கப்பட்டார்,

அவர் ரங்கம்மாவை பரிசோதித்துவிட்டு "ரத்த அழுத்தத் தோட, ரத்தச் சோகையும் அதிகமா இருக்கு... கடலூருக்கு அழைச்சிட்டு வந்து ஆஸ்பத்திரிலே சேர்த்திடுங்க... ஒருவாரம் போல பரிசோதனை பண்ணி சிகிச்சை அளிக்கலாம்" என்றதைப் பிடிவாதமாய் ரங்கம்மா செய்ய மறுத்துவிட்டாள்.

K

"மஹாலட்சுமி மாதிரி மருமகளைப் பறிகொடுத்திட்டு வீடே கதி கலங்கிப் போயிருக்கு. இப்ப என்னைக் கொண்டு ஆஸ்பத்திரிலே சேர்த்து வைத்தியம் பார்க்கறதுதான் முக்கியமாக்கும்... போங்கப்பா கெடந்து அலையாதீங்க... என் புள்ளை நிலைகுலைஞ்சு போயிருக்கான்; என் பேரன் அனாதரவா தவிக்கறான்... இவங்களுக்கு ஆறுதலா வீட்டுல இருக்காமா, நா எங்கயும் வரமாட்டேன்... 'கெடக்கிற தெல்லாம் கிடக்கட்டும் கிழவியத் தூக்கி மனைல உட்கார வை'—ன்ற மாதிரி, வீடு படற அவஸ்தை புரியாம எதனாச்சும் பேத்தாதீங்க... போங்க..."

குரல் எடுத்து ரங்கம்மா கத்தினதும் யாரும் கிட்டத்தில் வர பயந்து கொண்டு விலகித்தான் போனார்கள்.

வைத்தியரும் மருந்துகளை எழுதித்தந்துவிட்டு 'விடாம சாப்பிடுங்க' என்று ஒரு தரத்துக்கு இரண்டுதரம் கூறிவிட்டு புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தார்.

அதோடு அன்று அந்தக் கூத்து முடிந்தாலும் தலைசுற்றல் இன்றும் ஏனோ நிற்கவேயில்லை.

அறையின் மூலையில் இருந்த மேஜைமேல் ரங்கம்மாவின் பார்வை படர்ந்தது.

சின்னதும் பெரிசுமாய் பாட்டில்கள், மாத்திரைகள் மருந்துகள்...

வேளைக்கு ஏழு, எட்டு மாத்திரைகள், தின்பண்டம் மாதிரி கையில் வைத்துக்கொண்டு கிருஷ்ணவேணி நீட்டு கையில் கோபம் பொத்துக்கொண்டுதான் வருகிறது.

'மனசு அடிபட்டுப் போயிருக்கு...முதல்ல அதுக்கு ஏதாச்சும் மருந்து கொடுத்திட்டு, பிற்பாடு உடல்நோய்க்கு வைத்தியம் செய்யுங்க' என்று கத்தியபடி அந்த மாத்திரை களை விசிறி அடிக்கவே தோன்றுகிறது...

ஹூம்...



நீளமாய் பெருமூச்சு ஒன்று வெளியிட்ட ரங்கம்மா மறுபடியும் படுக்கும் உத்தேசத்தோடு படுக்கையில் சாய நினைத்த நொடியில், உள் அறையில் பேரன் அழுவது காதில் விழ தன் நினைப்பை மாற்றிக்கொண்டாள்.

மெள்ள எழுந்து, ராஜாவின் அறையைப் பார்க்க நடந்தாள்.

புஷ்பாவின் மறைவுக்குப் பிறகு குழந்தையைத் தன் னோடுதான் பெரும்பகுதி ரங்கம்மா வைத்துக் கொண்டிருக் கிறாள். அவன் தொட்டில் கூட இவள் கட்டிலுக்கு பக்கத்தில், எட்டி ஆட்டும் தூரத்தில்தான் இருக்கிறது.

முன்பெல்லாம் காலையில் வந்து மாலையில் வீடு திரும்பின கிருஷ்ணவேணி இப்போது இருபத்து நாலு மணிநேரமும் கூடவே இருக்கிறாள்.

சம்பளம் இரட்டிப்பாக்கப்பட்டதோடு, அவள் சாப்பாடு தூக்கம் எல்லாம் பெரிய பண்ணை வீட்டில்தான்.

ரங்கம்மாவின் அறைக்குள்தான் அவளுடைய படுக்கை யும். குழந்தை துளி சிணுங்கினாலும் எழுந்து அவனைத் தூக்கி, சமாதானப்படுத்தி, பார்த்துக் கொள்வதெல்லாம் கிருஷ்ணவேணியின் வேலைதான்.

பேரனைக் கையை விடாமல் வைத்துக்கொள்ள ரங்கம்மா வுக்கு ஆசைதான். ஆனாலும் முடியவில்லையே!

சேர்ந்த மாதிரி பத்து நிமிஷம் தூக்கி வைத்துக் கொள் வதற்குள் கை நரம்புகள் கொரக்களி வாங்குகின்றன; விலாவில் இழுத்துப் பிடித்துக் கொள்கிறது.

இவற்றோடு தலைசுற்றல் வேறு, எங்காவது குழந்தையைக் கீழே போட்டு விடுவோமோ என்று நெஞ்சு

திக்திக்கென்று அடித்துக்கொள்வதில் கடந்த சில நாட்களாகப் பேரனை ரங்கம்மா அதிகம் தூக்குவதில்லைதான்.

ஆனால், இதற்கு ஈடுசெய்கிற மாதிரி முடிந்த போதெல்லாம் ராஜா பிள்ளையோடு இருப்பதும், அவனை சமாளிக்க முற்படுவதும் ரொம்பவும் இதம் தருகிற விஷயம்...

நிறைய பாவங்களுக்கு நடுவில் துளி புண்ணியமும் செய்திருக்க வேண்டும், இல்லாவிட்டால் மனைவியை இழந்த வேதனையை சில கணவன்மார்கள் பெற்ற குழந்தையிடம் வெறுப்பாகக் காட்டுவது போல அல்லாமல், ராஜா வாஸ்தவத்திலேயே பிள்ளையிடம் மிகவும் அன்பாக இருப்பானா?

சரியாகச் சொல்லவேணும் என்றால், 'இனி என் குழந்தைக்கு அப்பா மட்டுமில்லை. அம்மாவும் நான் தான்' என்பது போல ராக்கண்விழித்து, அழும் குழந்தையை சமாதானம் செய்யும் அளவுக்கு அல்லவா ராஜா மாறிப் போயிருக்கிறான்!

இப்போதும்கூட 'அம்மா கொஞ்சம் தூங்கட்டும்' என்கிற நினைப்போடு பிள்ளையைத் தன் அறையில் அவன் வைத்துக் கொண்டிருக்க, மெதுவாக அறைக்குள் நுழைந்த ரங்கம்மா அழும் பிள்ளையை ராஜா சமாதானப்படுத்த முனையும் காட்சியைக் கண்டு நெகிழ்ந்து போய் நின்றாள்.

ஹோ...ஹோ... என்று சின்னதாய் குரல் கொடுத்தவாறு பிள்ளையைத் தோளில் சாய்த்து இப்படியும் அப்படியும் நடந்தவாறு தட்டிக்கொண்டிருந்த ராஜா அம்மாவைப் பார்த்ததும் நின்றான்.

ஏம்மா எழுந்து வந்தீங்க? இவனோட அழுகை உங்களை எழுப்பிடுச்சா?... போய் படுங்கம்மா .. நீங்க நல்லா ரெஸ்ட் எடுக்கணும்னு டாக்டர் சொல்லி இருக்கார் இல்லே?... இவன் அழுதா நான பார்த்துக்க மாட்டேனா?"



அக்கறையுடன் ராஜா பேசவும், அடங்கி இருந்த துக்கம் மீண்டும் கண்ணீராக ரங்கம்மாவிடம் வெளிப்பட்டது.

புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டவள், கட்டிலில் உட்கார்ந்தாள்.

ராஜா தாயின் அருகில் வந்து நின்று "என்னம்மா..." என்றான மெதுவாக ...

அழும் குழந்தையுடன் நின்று பரிதவிக்கும் மகனை காண்கையில் வேதனை சட்டென்று அதிகமாக, ரங்கம்மா ஓங்கி மார்பில் அறைந்து கொண்டாள்.

"நா ரொம்ப பாவம் பண்ணி இருக்கேன்... தம்பி... இல்லாட்டி உன்னை இந்தக் கோலத்துல பார்ப்பேனா? குடியும் குடுத்தனமுமா நீ நல்லா இருக்கறப்பவே நா போயிருக்கக் கூடாதா? இப்படி ஒத்தை மரமா, பச்சைப் பிள்ளைய வச்சிட்டு நீ லோல் படறதப் பார்க்கணும்னு என் தலையில எழுதிட்டானே! நா என்ன பண்ணுவேன் தம்பி... நெஞ்சு வெடிச்சிடும் போல இருக்கே... எநதப்பாவி எந்த கொள்ளிக்கண்ண போட்டானோ... இன்னிக்கு நம்ம குடும்பம் சிரழிஞ்சு நிக்குதே... அந்த ஆண்டவனை நம்பினேனே... மோசம் பண்ணிட்டானே..."

வாய்விட்டு ரங்கம்மா அழ, ராஜா அவள் பக்கத்தில அமர்ந்து கொண்டான்.

"இப்படிக் கலங்கினா அது உங்க உடம்புக்கு நல்லதில்லம்மா... நீங்க உணர்ச்சி வசப்படக்கூடாதுனு வைத்தியர் சொல்லியிருக்கார் இல்லே? பையனும் அழுது, நீங்களும் அழுதா நா யாரைனு தேத்தறது ..? அம்மா... ப்ளீஸ்— கொஞ்சம் நிதானப்படுத்திக்கங்க... பாருங்க .. உங்க பேரன்

கூட தன் அழுகைய நிறுத்திட்டு உங்களை வேடிக்கை பார்க்கிறான் பாருங்க..''

குழந்தையை முன்னால் நீட்டி ராஜா வேண்ட, ஒரு நிமிஷத்தில் ரங்கம்மா கொஞ்சம் சமாதானமானாள்.

மூக்கை உறிஞ்சி கண்களைத் துடைத்துக்கொண்டவள் ''குடு என்னண்ட'' என்று கையை நீட்டினாள்.

பேரனை ஆரத்தழுவி உச்சி முகர்ந்தபோது வேதனை குறைந்த மாதிரி தோன்றியது.

மடியில் குழந்தையைப் படுக்க வைத்தவள் ராஜாவை நிமிர்ந்து பார்த்தாள்.

''வீடு நிறைய ஆள் நிக்கறாங்க... அழுற பிள்ளைய சமாதானப்படுத்த நீ ஏம்பா கஷ்டப்படறே?...''

''இதுல கஷ்டம் என்னம்மா? என் பிள்ளைய கவனிக்கறது எனக்கு சந்தோஷமா இருக்கு... அதான் செய்யறேன்...''

''ஆனாலும்? வர வர நீ ரொம்பத்தான் குழந்தையோட மன்னாடறே... ராக்கண் விழிச்சா உடம்புக்கு என்னாகும்? சொல்லு?''

ராஜா அலட்சியமாய் சிரித்தான்.

''ராக்கண் விழிக்கறது எனக்கொண்ணும் புதுசு இல்லேம்மா... முதல்ல குடிச்சிகிட்டு இருந்தேன். அப்புறம் புஷ்பாவோட வீ.ஸி. ஆர்ல படம் பார்த்திட்டு இருந்தேன்... இப்ப இவனுக்காக விழிக்கிறேன்... அதானே? என் பிள்ளைக்காக நா இதக்கூட செய்யாட்டி எப்படிம்மா?''

இதற்கு என்ன பதில் கூறுவது என்று புரியாமல் ரங்கம்மா மௌனிக்க இரண்டு நிமிஷங்களில் ராஜா, 'அம்மா' என்றான் மென்ன...

''என்ன தம்பி?''



''இவனுக்கு இன்னும் பேர் வைக்காம சின்ன தம்பினு கூப்பிடறது எனக்குப் பிடிக்கல... புஷ்பா பிள்ளைக்கு மகேந்திரன்னு பேர் வைக்கணும்னு ஆசைப்பட்டா... இனிமே அப்படியே கூப்பிட ஆரம்பிப்போமா?''

''.........''

''அப்புறம்.. ரெண்டு நாள் முன்னால கணக்கு சொன்னார்—ஊருக்குள் 'தாய விழுங்கிட்ட அதிருஷ்டக் கட்டை!'—னு இவனைப் பத்தி பேசறாங்களாம்.. இந்தப் பேச்சை உடனே நிறுத்தணும்மா... புஷ்பாவோட தலைவிதி, அவ போய்ச் சேர்ந்திட்டா... அதுக்கு இவன் மேல் பழி போடறது எந்த விதத்துல நியாயம்? ம்? இந்த மாதிரி வம்பு பேச்சு பேசறது எனக்குக் கட்டோடப் பிடிக்கல ..?என் பிள்ளை எனக்கு உசத்தி.. இனி இவன்தான் என் உலகம்... அதனால அவனை அதிருஷ்டக் கட்டை, தோஷி, இப்படினு யாராச்சும் ஏசினாங்கன்னா, நா பொல்லாதவனா ஆயிடுவேன்... நீங்க மத்தவங்களை கண்டிச்சு வையுங்க... என்னம்மா?''

தெளிவாக, இட்டவட்டமாகப் பேசியதும் அல்லாமல் அடுத்து வந்த மாதங்களில், சொன்னதைச் செயலிலும் ராஜா காட்டியது உண்மைதானே!

## 24

வாசலில் பாட்டும் கூத்தும் எட்டு ஊருக்கு அமர்க்களப்பட்டது.

சாதாரணமாய் அந்த அமர்க்களங்களை ரசிக்கும் நிறுசில் ரங்கம்மாவால் இன்று எடுத்துக் கொள்ள முடியவில்லை.

இன்று என்று இல்லை... நாலைந்து நாட்களாகவே மனசில் சிடுசிடுப்பும், உடம்பில் இயலாமையும் குடி கொண்டு விட்டதில் எந்த ஒரு காரியத்திலும் உற்சாகத்துடன் ஈடுபட முடியவில்லை என்பது உண்மை.

மூன்று மாசம் முன்னால் ஹார்ட் அட்டாக் வந்து படுக்கும் வரை நிலைமை இத்தனை மோசம் இல்லை.

என் பிள்ளைக்கும் பேரனுக்கும் என்னை விட்டால் வேறு யார் என்கிற தீர்மானத்துடன் அத்தனை பொறுப்பையும் இழுத்துப் போட்டுக் கொண்டு வளைய வந்தவளை சொல்லாமல் கொள்ளாமல் வந்து நெஞ்சில் ஏறி உட்கார்ந்து கொண்ட ஹார்ட் அட்டாக்தான் துளிதுளியாக மாற்றி விட்டது.

அதுவும் நாலு நாளாய் சுத்த மோசம்.

நிமிர்ந்தால், படுத்தால் தலை சுற்றல். சதா வியர்வை. மூச்சு விடுவது கூட சிரமமாகிப் போன ரீதியில் மார்பில் ஓர் பிடிப்பு.

அரை நாள் வரை வாயுப் பிடிப்பு. என்று ரங்கம்மாவும் சும்மா இருந்து பார்க்கவே செய்தாள்.

மூன்று வார ஆஸ்பத்திரி வாசமும், மூக்கில் ஆக்ஸிஜன் ரப்பர் குழாயை நுழைத்து துன்புறுத்தியதும், மாறி மாறி கைகளில் ஊசி மூலம் மருந்து ஏற்றினதும் நினைவில் எட்டிப் பார்த்து ஆளை மிரட்டியதில் இது கண்டிப்பாய் ஹார்ட் அட்டாக் இல்லை, அதனால் வீணான பயம் கூடாது என்று தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டது போற கொண்டு அரை நாள் போவதற்குள் மறைந்து போக, மறு நாள் தயக்கத்துடன் பிள்ளையை அழைத்தாள்.

"என்னனு புரியல தம்பி...நேத்துலேந்து நெஞ்சு திம்முனு இருக்கு... கை குடையுது...இந்த மாதிரி அறிகுறி இருந்தா



உடனே தன்னைக் கூப்பிடணும்னு வைத்தியர் சொல்லி இருக்காரே...வேணா அவருக்கு ஆள் விட்டு அனுப்புறியா?" என, மதியத்துக்குள் கடலூர் டாக்டர் வந்தார்.

ஈ.ஸி.ஜி. அது இது என்று பரிசோதித்தபின், 'பயப்பட ஒண்ணும் இல்லை களைப்புதான். ரெஸ்ட் எடுத்தா நல்லாயிடும்' என்று தைரியம் சொல்லி விட்டு அவர் போய்ச் சேர்ந்தார்.

அதிலிருந்துதான் இந்த ஓயாத சோர்வு—எந்த சத்தத்தைக் கேட்டாலும் மளுக்கென்று எரிச்சல், கோபம்...

இப்போதும் கூட வாசலில் இருந்து வந்து காதில் அறைந்த ஓசை நாராசமாக இருக்க, ரங்கம்மா சலிப்புடன் ஒருக்களித்துப் படுத்து ஒரு கையால் காதை மூடிக் கொண்டாள்.

வாசலில் நடக்கும் அமர்க்களத்துக்கான காரணம் அவளுக்குத் தெரியும்தான்—இத்தனை நாட்களாக அந்தக் கூத்தை ரசித்தவள்தான் ரங்கம்மாவும்.

வேறு ஒன்றுமில்லை. அவளுடைய அருமைப் பேரன் மகேந்திரனை சாப்பிட வைக்கத்தான் வீட்டு வாசல் அத்தனை தடபுடல் படுகிறது.

ஆறுமாசக் குழந்தையாய் இருப்பதிலிருந்தே சாப்பிட ஏகத்துக்கும் படுத்துவான்தான். அப்பனைப் போல பிள்ளை. கேட்க வேண்டுமா அடத்துக்கு?

வேளா வேளைக்கு ஆளாளுக்கு குழந்தையைத் தூக்கிக் கொண்டு காக்கா பாரு. குருவி பாரு. தோத்தோ பாரு என்று மாடிக்கும், கிழக்குர், தோட்டத்துக்கும் ஓடுவார்கள்.

ஒருத்தன் உருண்டு காட்டுவான். ஒருத்தன் பிராண்டு காட்டுவான்... இன்னொருத்தன் மாடு மாதிரி நாலு கால்களில் நடந்து போவான்.

இத்தனை அமர்க்களங்கள் செய்தால் போனால் போகிறது என்று இரண்டு வாய் மகேந்திரன் சாப்பிடுவான்.

இப்படிப்பட்டவன் போன தை மாசத் திருவிழாவின் போது எதேச்சையாய் கரடி வித்தைக்காரன் செய்த வித்தைகளைப் பார்த்து தன்னை மறந்து கிண்ணம் பருப்பு சோற்றையும் சாப்பிட்டுவிட, அன்றைக்குத் தொடங்கியது வீட்டில் மிருகங்களை வைத்து வித்தை காட்டும் ஆட்டம்.

இதற்கென ஒரு வித்தைக்காரனை ராஜா எங்கிருந்தோ வரவழைத்து நிரந்தரமாய்த் தங்களோடு தங்க வைத்தான்.

இரண்டு வேளையும் வாசலில் மேளம் கொட்டி, கறுப்பாய் கரடியை வைத்துக் கொண்டு அவன் வித்தை காட்ட, சிரித்தபடி மகேந்திரன் நன்றாக சாப்பிடத் துவங்கினான்.

பத்து நாட்கள் போய் திரும்பத் திரும்ப கரடி ஆடுவது பையனுக்கு போர் அடிக்க உடனே ராஜா குரங்கு, கிளி, பாம்பு என்று வித்தைக்காரர்களை மாற்றினான்.

நாட்கள் செல்லச் செல்ல இவற்றோடு ஒரு நாள் காவடி, அதற்கும் மறுநாள் மயில் ஆட்டம் என நித்தமும் வீட்டு வாசல் மகேந்திரன் சாப்பிட்ட நாழிகையில் இரண்டு பட்டுதான் போயிற்று.

"மூன்று வயசுக் குழந்தையை சாப்பிட வைக்க இத்தனை அமர்க்களமா?" என்று யாரோ வியந்தது காதில் விழுந்தபோது ராஜா எகிறி குதித்தான்.

"என்கிட்ட பணம் இருக்கு. ஆள், படை இருக்கு. பிள்ளையத் திருப்தி பண்ணணும்ன்ற ஆசை இருக்கு...நீ எவன்டா நாக்கு பல்லுல பட பேச? என் பிள்ளை இந்த வீட்டு இளவரசன். அவனை இப்படித்தான் நா வளர்க்கப்



16966 3293601

போறேன்...வக்கு இல்லாத எவன்டா என்னைப்பத்தி பேசறது? எங்க...ஆம்பிளையா இருந்தா [illegible] வந்து நின்னு இன்னொருதரம் சொல்லு பார்க்கலாம் பொட்டை ராஸ்கல்..."

அன்று தெருவில் நின்று ராஜா போட்ட சத்தத்தில் ஏடையாளம் கிராமமே வாய் அடைத்துத்தான் போனது.

"நீயும் உன் பிள்ளையும் எக்கேடு கெட்டால் எங்களுக்கென்ன?"—என்கிற விட்டேத்தியான குணம் பலரிடம் தலை எடுத்தாலும், அதை வெளியே காட்டிக்கொள்ளாமல் இரண்டு வேளையும் தம் தம் குழந்தை குட்டியோடு பெரிய பண்ணை வீட்டு வாசலில் வந்து வித்தை ஆட்டத்தை வேடிக்கை பார்ப்பதை மட்டும் அவர்கள் தொடர்ந்தார்கள்.

மேள சத்தம் காது ஜவ்வில் வந்து இடிக்க, படுக்க முடியாமல் ரங்கம்மா எழுந்து உட்கார்ந்தாள்.

மெல்ல நடந்து ஜன்னலருகில் சென்று எட்டிப் பார்த்தாள்.

பொய்க்கால் குதிரை! விசேஷமாய் தஞ்சையிலிருந்து வரவழைக்கப்பட்ட நிகழ்ச்சி. அதான் இத்தனைக் கூட்டமா?

ஆணும் பொண்ணுமாய் இரண்டு குதிரைகள்.

ஜிலுஜிலுவென்று ஜிகினா உடைகள். முகத்தில் எக்கச்சக்க அரிதாரம்.

வராந்தாவின் சாய்வு நாற்காலியில் அட்டஹாசமாய் ராஜா. மடியில் பேரன் மகேந்திரன்.

ஆட்டத்தை ரசித்து மகன் கை கொட்டி சிரித்தபோது ராஜாவின் முகத்தில் தோன்றின 'என் மகன்' என்ற இறுமாப்பை அரை நிமிஷம் உற்றுப் பார்த்தபோது

பழைய ஞாபகம் ரங்கம்மாவினுள் கலவரமாய் முடிச்சுப் போட்டது.

அன்று என் பிள்ளைக்காக நான் காக ஆட்டத்தை ஏற்பாடு செய்தேன்—இன்று ராஜா கரடி வித்தை, பொய்க் கால் குதிரை என்று பத்து வகை செய்கிறான்—அதுதானே வித்தியாசம்!

என் பிள்ளை போல உலகில் உண்டோ என்கிற கர்வம்...

என் பிள்ளை எனக்கு உசத்தி— எவன் என்னைத் தட்டிக் கேட்பது? என்கிற திமிர்.

எனக்குப் பணம் இருக்கிறது, அதை என் இஷ்டம் போல எப்படி வேணுமானாலும் செலவழிப்பேன், இது அதிகம் என்று சொல்வதற்கு எவனுக்கு உரிமை இருக்கிறது என்கிற அகம்பாவம்...அதானே?

ஏனோ தெரியவில்லை...சில நாட்களாகவே—ராஜாவின் உருவில் அவ்வப்போது தன்னைக் காணமுடிவதை நினைத்த மாத்திரத்தில் ரங்கம்மாவுக்குள் பயம் மின்சாரமாய் வெட்டியது.

கூட விளையாடிய பையன் மேல் மகேந்திரன் எச்சல் துப்பி விட, அந்தப் பிள்ளையை பெற்றவர் ராஜாவிடம் வந்து 'மகேந்திரனைக் கண்டிச்சு வையுங்க' என்றதும் 'அ— என் பிள்ளையக் கண்டிக்கறதா? ஏன்? கொஞ்சம் எச்சல் பட்டா உன் பிள்ளை தேய்ஞ்சிடுவானா?' என்று ராஜா இறுமாப்புடன் சிரித்த போதும்—

பிள்ளை பெரிய சிகப்பு கலர் காரில் போக வேண்டும் என்று ஆசைப்பட்டான் என்பதற்காக ராவோடு ராவாக சென்னைக்கு சென்று மூன்று லட்ச ரூபாய் கொடுத்து வெளி நாட்டு வண்டி ஒன்றோடு இரண்டாம் நாள் வந்து நின்ற போதும்—



பையன் பயப்படுகிறான் என்பதால் அம்மை வடுக்கள் நிறைந்த முனுசாமியை 'டேய், எதிர்ல வந்தே தொலைச்சிடுவேன்' என்று மிரட்டிய போதும்—

மூன்று வயசுப் பிள்ளைக்கு இத்தனை விளையாட்டுப் பொருட்கள் தேவைதானா என்று யோசிக்காமல் வாரா வாரம் பாண்டிச்சேரிக்குச் சென்று கார் சீட் கொள்ளாமல் பொருட்களை வாங்கி வரும்போதும்—

'உனக்கென்னடா நீ ராஜா வீட்டுக் கன்னுக் குட்டி... என்ன வேணும் சொல்லு... செஞ்சிடுவோம்' என்று அந்த சின்னப் பையனிடமே சொல்லி அவனுக்கு பணம், மனிதர்களின் அருமை துளி தெரியாமல் வளர்ப்பதை உணர்கிற போதும்—

ரங்கம்மாவின் அடிவயிற்றில் கவலை கோடு போடவேச் செய்கிறது...

கண்ணாடியில் சின்ன வயசு ரங்கம்மாவைப் பார்த்து விட்ட மாதிரி உடம்பு உதறி உதறிப் போடுகிறது...

இத்தனை ஆட்டங்களை அவளும் பிள்ளைக்காக ஆடியவள்தானே?

ஊர் உலகம் என்ன சொல்லும், என்பதையோ புருஷன் கண்டிப்பதையோ காதில் போட்டுக் கொள்ளாமல் தன் இஷ்டத்துக்கு கோவில் காளையாய் பிள்ளையை வளர்த்த பெருமை அவளுக்குத்தானே!

ஒரு வாத்தியார் 'ஏன் வீட்டுப் பாடத்தைப் படித்துக் கொண்டு வரவில்லை?' என்று ராஜாவைக் கேட்டுவிட்டார் என்பதற்காக கணவனிடம் அழுது புலம்பி, பேச வேண்டியவர்களிடம் பேச வைத்து அந்த வாத்தியாரை வேறு ஊருக்கு மாற்றினவள்தானே!

ஏழைப் பையன் ஒருவன் 'வாடா...' என்று ராஜாவை 'டா' போட்டு அழைத்து விட்டதைக் கேட்டுவிட்டு அந்தப்

K

பிள்ளையை புளிய மரத்தில் கட்டிப் போட்டு நாள் பூராவும் அழப் பண்ணியவள் தானே!

ராஜா அணிந்த இறுதியிலேயே உறவுப் பிள்ளை ஒருவன் சட்டை அணிந்து விட்டதற்காக உடனே தன் மகனை சட்டையை அவிழ்க்க வைத்து அத்தனை பேர் முன்னிலையிலும் 'கண்ட கழிசடைங்க போடற துணி உனக்கு எதுக்குத் தம்பி— கழட்டி எறி' என்று கூறி அடுப்பில் அந்த சட்டையைப் போட வைத்தவள் தானே!

'பிள்ளைய இப்படி வளர்க்கறது தப்பு ரங்கம்மா. அருமை பெருமையா பிறந்தவனா இருந்தாலும் பக்குவமா நல்லது கெட்டத எடுத்துச் சொல்லி வளர்க்குறதுதான் அவனுக்கு நல்லது; நமக்கும் பெருமை" என்று அக்கறையுடன் கணவன் எடுத்துச் சொன்னபோது "எவனோ போக்கத்தவன் பொறாமையில சொன்னதைக் கேட்டுட்டு என்தான் புகார் படிக்கிறீங்களோ.. வெக்கமா இல்லே?" என்று அதட்டி அவர் வாயை அடைத்தவள் தானே?

சரி— அப்போதாவது சின்ன வயசு தெரியாத்தனம் என்று விட்டு விடலாம்...ஆனால் பிற்பாடு?

வாலிப வயதில் வேண்டாத சகவாசப் பழக்கத்துடன் குடித்து ராஜா ஆட்டம் போட்ட போதும்.

ஆனந்தி மேல் இல்லாத புகார் சொல்லி அவளை வீட்டை விட்டு விரட்டாத குறையாக அனுப்பி வைத்த நேரத்திலும்,

நாட்டியக்காரியை கூட்டி வந்து கூத்தடித்த சமயத்திலும்,

பத்து நாட்கள் விடுமுறைக்கென போன இடத்தில் ரொம்பச் சின்னப் பெண்ணான புஷ்பாவுடன் தகாத முறையில் பழகி அவளை கர்ப்பவதியாக்கின சந்தர்ப்பத்திலுங்கூட வாயைத் திறந்து பிள்ளையைக் கண்டிக்கத் தவறியதும், இன்னும்...இன்னும்



ஏதேதோ கேள்விகள் மனசுக்குள் எழுந்ததில் திடுமென படபடப்பு அதிகமாக, ரங்கம்மா மெள்ள நடந்து வந்து படுக்கையில் உட்கார்ந்து கொண்டாள்.

அன்று நான் என் அகம்பாவத்தில் ராஜாவை உருப்படாமல் அடித்த மாதிரிதான் இன்று ராஜாவும் தன் பிள்ளையை ஆக்கிக் கொண்டிருக்கிறானோ?

யோசித்த வரைக்கும் அப்படித்தானே தோன்றுகிறது?

இது தவறு அல்லவா?

நம்முடைய தெரியாத்தனத்துக்கு, கர்வத்துக்கு பிள்ளையை பலி ஆடாக்குவது அநியாயம் அல்லவா?

படபடப்பு அதிகமாக ரங்கம்மா கண்களை மூடிக் கொண்டாள்.

வலித்த நெஞ்சை ஒரு கையால் நீவி விட்டுக் கொண்டாள்.

ரொம்ப குழப்பமாக இருந்தது.

பயமாக இருந்தது.

ஏதாவது செய்யவேண்டும்போல இருந்தாலும் அது என்ன என்று புரியாமல் மனசு பரிதவித்தது.

படுத்தாள்... ஒன்றும் முடியாமல் மீண்டும் எழுந்து உட்கார்ந்தாள்.

இருப்புக்கொள்ளாமல் அல்லாடினாள். மாலை, இரவை, கஷ்டப்பட்டு எப்படியோ தள்ளினாள். ஆனால்....

அளவுக்கு மீறி அதிகமாக உணர்ச்சி வசப்பட்டு, புலம்பி, தவித்ததாலோ என்னமோ அன்று இரவுதான் மாபாரமாய் இரண்டாவது முறையாக ஹார்ட் அட்டாக் ரங்கம்மாவின் இருதயத்தில் குடி புகுந்தது.

K

## 25

கண்களைத் திறக்க முடியாமல் யாரோ பசை போட்டு ஒட்டி விட்ட மாதிரி இருந்தது.

நெஞ்சின்மேல் பாறாங்கல்லைத் தூக்கி வைத்துவிட்ட தினுசில் மூச்சு விடுவது சிரமமாக இருந்தது.

கை, கால்களை ஆணி வைத்து அறைந்துவிட்ட ரீதியில் அசைக்க முடியாமல் இருந்தது.

என்னாயிற்று?

மூளையைச் சுற்றிப் படர்ந்திருந்த கருத்த போர்வை கொஞ்சம் விலகிக் கொள்ள, மிகுந்த பிரயத்தனத்துடன் ரங்கம்மா கண்களைத் திறந்தாள்.

நிழல்களாக உருவங்கள் மசமசத்தன.

பேயுருவங்களாக வெள்ளைச் சீருடை உடுத்தின டாக்டரும், நர்ஸும் பய முறுத்தினார்கள்.

சிரமப்பட்டு நிலையுறுத்தின பார்வையில் தெளிவில்லாமல் ராஜா விழுந்தான். அவன் கையில் மகேந்திரன்.

பிள்ளையையும், பேரனையும் இனம் கண்டுகொள்ள முடிய, அவர்களை அருகில் அழைக்கும் உத்தேசத்துடன் ரங்கம்மா வாயைத் திறந்தாள்.

வார்த்தைகளுக்குப் பதிலாக காற்றுதான் வெளிப்பட்டது.

வறண்டுவிட்ட உதடுகளை நாவால் மெதுவாக ஈரப் படுத்திக் கொண்டு மீண்டும் 'ராஜா' என்று அழைக்கப் பார்த்தாள்.

ம்ஹூம்—மறுபடியும் ஓசை சதி செய்தது.



அவள் பரிதாபமாக விழிப்பதும், வாயைத் திறந்து திறந்து மூடுவதும் ராஜாவுக்கு அவள் எதையோ சொல்ல விரும்புகிறாள் என்று உணர்த்தி இருக்கவேண்டும்.

பிள்ளையை இறக்கி விட்டுவிட்டு அம்மாவின் அருகில் குனிந்தவன் "என்னம்மா ஏதாச்சும் வேணுமா? நா ராஜா... என்ன புரியுது இல்ல?" என்றான் இதமாக...

புரிகிறது என்று தலை அசைக்க விரும்பினதை செய்து காட்ட முடியாமல் மீண்டும் ஒருவித மயக்கம் ஆளை ஆக்ர மிக்க, ரங்கம்மா பிள்ளையைப் பார்த்தபடியே கண்களை மூடிக் கொண்டாள்.

அருகில் நின்றிருந்த டாக்டரைப் பார்த்து ராஜா கவலை யுடன் கேட்டான்.

"ஏன் டாக்டர் இப்படி இருக்காங்க? மயக்கமாயிட்டாங் களா, இல்ல தூக்கமா? பயப்பட ஒண்ணும் இல்லியே?"

டாக்டர் பக்கத்து ஸ்டூல் மேல் இருந்த மானிட்டர்மேல் பார்வையை ஒட்டியபடியே, லேசாக உதட்டைப் பிதுக்கினார்.

"காலைலேந்து நீங்களும் இதையே கேட்டுட்டு இருக் கீங்க, நானும் சொன்ன பதிலையேதான் சொல்லிட்டு இருக்கேன்... ஷி ஈஸ் வெரி க்ரிடிகல், ஆபத்தான நிலைமை இன்னும் தாண்டல... நாற்பத்தி எட்டு மணிநேரம் போனா தான் ஏதாச்சும் சொல்ல முடியும்..."

"வாயத்திறக்கறாங்க . ஆனா பேச முடியல... ஏன் டாக்டர்?"

"இருதயம் பழுதாகி இருக்கு. உடம்புல ரத்த ஓட்டம் சீரா இல்லாதப்ப எந்த அவயமும் ஒழுங்கா வேலை பண்ண முடியாது... இப்போ இவங்களுக்கு பூரண ஓய்வு தேவை... நீங்ககூட நின்னுட்டு இருந்தீங்கன்னா அவங்க கண்ண

K

திறக்கறப்போ உணர்ச்சி வசப்பட்டுப் போயிடறாங்க. தயவு பண்ணி வெளியே இருங்க... அப்பப்ப வந்து எட்டிப் பார்த்திட்டுப் போங்க... ப்ளீஸ்...:"

கொஞ்சம் கெஞ்சல், நிறைய கண்டிப்புடன் டாக்டர் பேசியதும் ராஜா பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வெளியில் வந்து வராந்தாவில் உட்கார்ந்து கொண்டான்.

அம்மாவுக்கு எந்த நிமிஷமும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என்கிற எண்ணம் நெஞ்சில் தணலாக விழுந்து உடம்பைப் பதற வைத்தது.

சின்ன வயசு முதற்கொண்டு ஒவ்வொரு கட்டத்திலும் தான் செய்த எந்தக் காரியத்திலும், பிள்ளையின் மகிழ்ச்சி ஒன்று மட்டுமே முக்கியம் என்ற உறுதியுடன் அம்மா துணையாக நின்றது மின்னலாய் வெட்டியது.

கண்கள் நிறைய அன்பை ஏந்திக் கொண்டு 'தம்பி... தம்பி' என்று உலகமே பிள்ளையாக வாழ்ந்தது ஞாபகத்தில் எட்டிப் பார்த்து, நெகிழ வைத்தது.

அம்மாவோடு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியும் கண்முன் திரைப்படம் போலக் காட்சி, காட்சியாய் ஓடி கண்களில் நீரை ததும்பச் செய்தன...

எத்தனை உயர்வான அம்மா!

யாருக்குக் கிடைப்பாள் இத்தனை அருமையான அம்மா!

வைத்தியர் குறிப்பிட்ட நாற்பத்திஎட்டு மணி நேரத்துக்குள் ஏதாவது அசம்பாவிதம் நடந்து விட்டால்?

ஐயோ!

அம்மா இல்லாத வாழ்க்கையை கற்பனை கூட பண்ண முடியாத மாதிரி மனசு குலுங்க, ராஜா இருப்புக் கொள்ளாமல் எழுந்து நின்றான்.

இப்படியும் அப்படியும் நடந்தான்.



அறைக்குள் எட்டிப் பார்த்தான்.

மயக்கத்தில் ஆழ்ந்து கிடந்தவளை அரை நிமிஷம் நின்று உற்றுப் பார்த்தான்.

வெடித்துக்கொண்டு எழுந்த அழுகையை உதட்டை அழுந்தக் கடித்து அடக்கிக் கொண்டான்.

கையாலாகத்தனத்துடன் பரிதவித்தான்.

மாலை ஏழு மணி சுமாருக்கு ரங்கம்மாவின் நிலைமையில் எந்த முன்னேற்றமும் தெரியாமல் போக, உடன் அழைத்து வந்திருந்த கிருஷ்ணவேணியிடம் பிள்ளையை ஒப்படைத்து ஊருக்கு அழைத்துப்போய், சாப்பாடுபோட்டு தூங்க வைத்து, காலையில் மீண்டும் அழைத்து வரச் சொன்னான்.

அவர்களைத் தனியாக வண்டியில் அனுப்ப மனமின்றி கணக்கப் பிள்ளையையும் உடன் அனுப்பி, பத்திரமாக விட்டு விட்டுத் திரும்ப வைத்தான்.

பத்தரை மணி போல இருக்கும்.

வீரராகவன் கொணர்ந்த சோற்றைத் தொடாமல், பாலை மட்டும் குடித்துவிட்டு அம்மாவின் அறைக்குள்ளேயே நாற்காலியில் உட்கார்ந்த நிமிஷத்தில் ரங்கம்மா லேசாக அசைந்தாள்.

இரண்டுதரம் பெரிதாக மூச்சு விட்டு அவள் முனக, நர்ஸ் அருகில் சென்று குனிந்த நாழிகையில், ராஜாவும் கிட்டத்தில் வந்தான்.

ரங்கம்மாவின் கண்கள் கீறாகத் திறந்திருந்தன.

மூச்சு வாயிலிருந்து ஓசையோடு வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

ஆக்ஸிஜனை சரி செய்து, மணிக்கட்டைப் பிடித்த நர்ஸ் நாடித்துடிப்பை பார்த்தபோது ரங்கம்மாவின் பார்வை மிகுந்த சிரமத்துடன் பிள்ளைமேல் விழுந்தது.

இடக்கை விரல்களை மிக லேசாக படுக்கையில் தட்ட, அம்மா தன்னை உட்காரச் சொல்வதை புரிந்து கொண்டவனாய் ராஜா அவள் அருகில் அமர்ந்தான்.

ரங்கம்மா மெதுவாக 'கிட்டத்தில் வா' என்பது போல தலையை அசைத்தாள்.

ராஜா இன்னும் நெருங்கி, தாய் மேல் கவிழ்ந்த மாதிரி உட்கார்ந்து கொண்டான்.

நர்ஸ் பதட்டத்துடன் மருந்து எடுப்பதோ, ரத்த நாளத்தில் ஏற்றுவதோ புரியாத மாதிரி ரங்கம்மா பிள்ளையையே வைத்த கண் வாங்காமல் பார்த்தாள்.

தன் பலமெல்லாம் திரட்டிக் கொள்வது போல மூக்கை ஒரு தரம் இழுத்துக் கொண்டவள் கிசுகிசுப்பாய், குழறலாய் பேசினாள்.

"த..தம்பி...நா...போக வேண்டிய நேரம் வ... வந்திடுச்சு..."

பேச முடியாமல் அவள் திணறி உணர்ச்சி வசப்பட ராஜாவின் கண்களும் கலங்கிப் போயின.

தாயின் தலை முடியைக் கோதி, முகத்தை கையில் ஏந்திக் கொண்டான்.

"வேண்டாததை எல்லாம் ஏம்மா பேசறீங்க...இப்ப இந்தப் பேச்சு அவசியமா?"

'ஆம்' என்று சொன்னதாக ரங்கம்மா தலையை ஆட்டினாள், பிள்ளையின் கையை மெதுவாக பற்றிக் கொண்டாள்.

"கொ...கொழுந்து எங்கே?"



"வீட்டுக்கு அனுப்பிட்டேன்... பார்க்கணுமா? கணக்க அனுப்பி கூட்டிட்டு வரச் சொல்லட்டுமா?"

"வே...வேணாம்... நீ... அ... அவனை நல்லா, சிறப்பா வளர்க்கணும்..."

தொண்டையில் கபம் போல எதுவோ சிக்கியதில் தொடர்ந்து தெளிவாய் பேச முடியாமல் இன்னும் குரல் கம்மியது.

செருகத்துடிக்கும் கண்களைப் பலவந்தமாய் திறந்து வைக்கும் முயற்சியோடு ரங்கம்மா அவசரமாய் முணுமுணுத்தாள்.

"அவன் குணவானா, தாத்தா மாதிரி வரணும்... உன்னை அ...அம்மா பிள்ளையா வளர்த்து நா...கெ... கெடுத்த மாதிரி செஞ்சிடாதே...ஆனந்தி நல்லபொண்ணு... அவளை, அவளை மறுபடி கூ...கூ..."

மேற்கொண்டு வார்த்தைகள் வராமல் நாக்கு இழுத்துக் கொள்ள, சில நொடிகளுக்கு பரிதாபமாக விழித்த ரங்கம்மா 'நான் சொன்னதைப் புரிந்து கொண்டாயா?' என்கிற அர்த்தம் தொனிக்க பிள்ளையின் கையை அழுத்தினாள்.

பின்னர் 'என்னால் முடிந்ததைச் செய்து, சொல்லி விட்டேன் இனி இது உன் வாழ்க்கை' என்பது போல மயக்கமாகி அன்றிரவு பன்னிரெண்டே கால் மணிக்கு இறந்து போனாள்.

முதலில் ஜடமாய் இறுகிப்போய், பின்னர் அழுகையினூடே கவனிக்க வேண்டியவைகளை வீரராகவனுடன் சேர்ந்து கவனித்து, அம்மாவின் சடலத்தை ராஜா வண்டியில் ஏற்றி வீட்டுக்குக் கொண்டு வந்தபோது விடிகாலை மணி நான்கு.

அரை மணியில் சேதி பரவி, ஊர் முழுவதும் திரண்டு விட, வெளியூர்களுக்கு ஆள் அனுப்பிவிட்டு, இதர காரியங்

K

கனை வீரராகவன் முன்நின்று வலித்த நேரத்தில், உள் அறைக்கு வந்து உறங்கிக் கொண்டிருந்த மகனை அள்ளி அணைத்துக் கொண்டு ராஜா வாய்விட்டு அழுது தீர்த்தான்.

பின்னர் கொஞ்சம் தெளிந்து யோசனை செய்தான்.

அம்மா இல்லாமல் இந்த சின்னஞ்சிறுசை எப்படி வளர்க்கப் போகிறேன்?

அதுவும் அம்மா விரும்பிய விதத்தில் 'சிறப்பாக'?

ஆமாம்—அம்மா ஏன் குறிப்பிட்டு 'சிறப்பா தாத்தா மாதிரி வரணும்!' என்றார்?

நான் இவனைச் சரியாக வளர்க்க மாட்டேன் என்ற பயத்தாலா?

'நான் உன்னை அம்மா பிள்ளையாக வளர்த்துக் கெடுத்து விட்ட மாதிரி நீயும் செய்து விடாதே' என்றாரே, அதற்கு என்ன அர்த்தம்?

என்னை வளர்த்ததில் என்ன கோளாறு?

எனக்குக் கொஞ்சம் பிடிவாதம், பணத்திமிர், சுயநலம் அடுத்தவரை மதிக்காத குணங்கள் உண்டே, அவைகளையா அம்மா குறிப்பிட்டார்...?

சின்ன வயசிலிருந்து அடாவடியாகத் தான் செய்திருந்த காரியங்கள் தனித் தனியாகப் போராட்டம் போட, ராஜாவின் மனசு முதல் முதலாகக் கூசியது.

அறியாத பருவத்தில் மட்டும்தானா!

வடக வந்த பிறகு செய்தது எத்தனை எத்தனை?

குடித்தது, பணத்தைக் கண்டபடி வாரி இறைத்தது, ஆனந்தியை சரிவர நடத்தாதது—மாலினிக்கு ஏகத்துக்கு



இடம் கொடுத்து மரியாதையை இழந்தது—என்று நடந்தவைகளை, வரிசையாக நினைத்தபோது அத்தனை நடந்த போதும் அம்மா தன்னைப் பார்த்து 'சீ' என்று முகம் சுளிக்காததும் அல்லாமல் ஊர் நடுவில் விட்டுக் கொடுக்காததும் ஞாபகத்துக்கு வர, அடக்கி இருந்த அழுகை மீண்டும் பொங்கியது.

எத்தனை அன்பான அம்மா!

அந்த அம்மா வாழ்ந்த நாட்களில் அவர் விருப்பப்படி ஒன்றைக்கூட செய்யத் தவறியது உண்மைதானே!

புஷ்பாவோடு வாழ்ந்த நாட்களிலும், இந்த மூன்று வருஷங்களிலும் நான் பழையபடி அத்தனை கூத்தடிக்கவில்லை, மாறித்தான் இருக்கிறேன் என்றாலும், அம்மா உயிரோடு இருந்தபோது பொறுப்புடன், நிதானமாய் செயலாற்றும் பிள்ளையாய் நடந்து காட்டியிருந்தால் சாவதற்குமுன் 'நான் உன்னைக் கெடுத்த மாதிரி உன் மகனை ஆக்கிவிடாதே' என்று கேட்டுக் கொள்வாரா?

எத்தனை ஆதங்கம், வேதனை, கவலை இருந்தால் அப்படியொரு வேண்டுகோள் வரும்?

ஐயோ அம்மா...

அந்த நிமிஷத்தில் கூட இரண்டு வார்த்தை இதமாகப் பேசி உனக்கு சந்தோஷத்தை நான் தரவில்லையே...

இப்போது நீ இல்லையே-உன் விருப்பம் போல செய்து காட்டுகிறேன், அம்மா—என்று உனக்கு எப்படிக் கூறுவேன்?

அழுகை, பரிதவிப்புகளூடே, 'ஆனந்தி நல்ல பொண்ணு அவளை நீ மறுபடி... கூ...' என்று அம்மா கடைசியாய் கூறியது தலை நீட்ட, ராஜா சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்தான்.

K

அழுகையை மறந்தான்.

அம்மா என்ன சொல்ல வந்தார்?

ஆனந்திய மறுபடி கூட்டிக்கொள் என்றா?

அவளோடு சேர்ந்து வாழ்ந்து, நல்லவிதமாய் மகேந்திரனை வளர்க்க வேண்டும் என்பதுதான் அம்மாவின் கடைசி விருப்பமா?

இதைச் செம்மையாய் செய்து காட்டுவதன் மூலம் இத்தனை வருஷங்களாக அம்மாவுக்கு என்னால் உண்டான வேதனைக்குப் பரிகாரம் காண்பது சாத்தியமா?

இன்று வரை அம்மாவிடமிருந்து 'பெற்றே' பழக்கப் பட்ட நான் முதலும், கடைசியுமாக அம்மாவுக்கு ஒன்றைக் 'கொடுக்க'—இதுதான் சந்தர்ப்பமா?

யோசிக்க, யோசிக்க, குழம்பி இருந்த மனசு தண்ணென்று தெளிந்து போக, குழந்தையைத் தோளில் போட்டபடி ராஜா வெளியில் வந்தான்.

கூடத்தில் நிரம்பி இருந்த அத்தனை ஜனங்களுக்கும் கேட்கிற தொனியில் "கணக்கு, வண்டிய ரெடி பண்ணச் சொல்லுங்க... திருவண்ணாமலைக்குப் போகணும்... நானே போய் என்னிக்குக் கூப்பிட்டாலும் திரும்ப வந்து என்னோட வாழரெடினு ஆனந்தி சொல்லி இருக்கா: 'நா பழைய ராஜா இல்ல. திருந்திட்டேன்— எனக்கு மனைவியாவும் என் பிள்ளைக்கு அம்மாவாகவும், இந்த வீட்டுக்கு எஜமானியாவும் இருக்க வா'னு நானே போய் கூப்பிட்டா அவ கண்டிப்பா வந்திடுவா... அவ வந்தப்புறம்தான் அம்மாவ அனுப்பணும்... அதனால நா உடனே கிளம்பறேன். வண்டி எடுக்கச் சொல்லுங்க" என்றவன் அந்த அறையில் இருந்த அனைவரும் ஸ்தம்பித்து நிற்பதை லட்சியம் பண்ணாமல் தெற்கு வடக்காய் கிடத்தியிருந்த அம்மாவின் அருகில் வந்து நின்றான்.

K



இவன் தீர்மானத்தைக் கேட்ட அம்மாவின் உதடுகளில் அழகான ஒரு புன்னகை தெரிகிற மாதிரியும், 'ஆயிரம் சொன்னாலும் நீ அம்மாபிள்ளைதான் தம்பி' என்று பெருமை யுடன் அந்த உதடுகள் முணுமுணுக்கிற மாதிரியும் தோன்ற, ஒரு வித நிறைவில் ராஜாவின் கண்களில் மீண்டும் நீர்ப் பூக்கள் பூக்க முற்பட்டன.

(முற்றும்)

16965
3293501